
# எட்டு திசை நான்குவாசல்

இந்திரா சௌந்தர்ராஜன்



முதற் பதிப்பு : ஏப்ரல், 2010
உரிமை : ஆசிரியருக்கு

ETTU THISAI NANGU VAASAL

By : Indra Soundarrajan

First Edition : April - 2010

No.of Pages : 208
Paper Used : 11.6 N.S. Book Print

விலை : ரூ.72.00

Thirumagal Nilayam
New No. 16, Old No. 55,
Venkatnarayana Road,
T.Nagar, Chennai - 600 017.

Laser at : Goodwill Computers, T.Nagar, Chennai - 17.
E-mail : goodwilltngr@yahoo.co.in Cell:9444006583

Printed at :

# ஏட்டு திசை நான்கு வாசல்

## 1

'ஒரு மனிதனுக்கு தன்னைப் பற்றித் தெரிந்திருப்பது என்பது மிக முக்கியமான ஒன்றாகும். இந்த உலகில் நூற்றுக்கு தொண்ணூறு பேர் தங்களைப் பற்றியே அறியாதவர்கள்தான். இவர்களை கூர்ந்து கவனித்தால் ஒரு உண்மை புலனாகும்! இவர்கள் பசித்தால் சாப்பிடுவார்கள், வலித்தால் அழுவார்கள். அழகிய இயற்கை கண்ணில்படும் போது ஓரளவு ரசிப்பார்கள். தூக்கம் வரும்போது தூங்கிப் போய் விடுவார்கள். சர்க்கஸ் மிருகங்களைப் போல பழகிக் கொண்டதை அப்படியே செய்வார்கள்.

ஆனால், தன்னைப் பற்றி அறிந்துகொண்ட ஒரு மனிதன் இவர்களுக்கு நடுவில் எல்லா விதத்திலும் இவர்களுக்கு நேர்மாறாக நடந்து கொள்வான். தன்னை அறிந்த ஒருவன் எதையும் பார்க்கும் விதமே அலாதியானது. இவன் கண்ணுக்கு நேரில் தெரிந்திருப்பது மட்டுமல்ல, ஒளிந்திருப்பதும் தெரியும்!'

பெட்டி நிறைய சலவைத் துணிகளை அடுக்கி வைத்தபடி 'பாண்டியம்மாள் கோட்டை' என்கிற ஒரு வித்தியாசமான ஊருக்குப் புறப்பட தயராகிக் கொண்டிருந்தான் கணேஷ்! சிறிய பெட்டி-இரண்டு நாள்தான் அங்கே தங்கப் போகிறான். அவன் தங்கை ரஞ்சிதம் அவனது ஷேவிங் கிட்டை எடுத்து வந்து தந்தவளாக- "இதை மறந்துட்டியேண்ணே..." என்று சிரித்தாள். "அட, ஆமாம்ல..."-என்று அதை வாங்கி ஒரு ஓரத்தில் வைத்தவனாக பெட்டியை மூடினான். ரேஷன் அரிசியில் கல் பொறுக்கியபடி வராண்டாவில் உட்கார்ந்து கொண்டிருந்தாள் பிரபாவதி. கணேஷின் அக்கா! அரிசியை விட பொறுக்கிப் போட்டிருந்த கல் அதிகமாக இருந்தது. அவள் கண்களிலும் ஒரு மெல்லிய சோகம். கழுத்தில் ஒரு ரோல்டு கோல்டு சங்கிலியோடு மஞ்சள் தாலிக்கயிறும் இருந்து அவள் திருமணமாகி விட்டவள் என்றது.

Uploaded by Naghu

பக்கத்து சுவரில் கணேஷின் அப்பா மாலை போடப்பட்ட ஒரு படமாக காட்சி தந்து கொண்டிருந்தார். அம்மா சமையல் கட்டில் இருந்து புடவை முந்தியால் கைகளைத் துடைத்தபடியே வந்து நின்றாள்.

"என்ன தம்பி, அதுக்குள்ள ரெடியாயிட்ட போல இருக்கு..."

"பின்னே என்னம்மா? சரியா ஒரு மணிக்கு ரயிலைப் பிடிக்கணும். ராத்திரி பதினோரு மணிக்கு அது மானாமதுரை போகும். அப்புறம் அங்க இருந்து பாண்டியம்மாள் கோட்டைக்கு கிடைக்கற வண்டிய பிடிச்சி போகணும். விடிஞ்சா நிச்சயதார்த்தம் வேற..."



"இப்படி நடு ராத்திரிக்கா ஒரு ஊருக்கு போவே? அதுலயும் பாண்டியம்மாள் கோட்டை பழையனூர் நீலி மாதிரி ஆவி நடமாட்டமுள்ள இடம்னு கேள்வி..."

"ஆவியாவது கீவியாவது... இந்த நாட்டுல நிறைய பாவிங்க இருக்காங்கன்னு சொல், ஏத்துக்கறேன். ஆவி கீவின்னு எதையாவது சொல்லாதே..."

"அண்ணே... பெரிய சூரன் மாதிரி பேசாதே, நீ பாண்டியம்மாள் கோட்டைங்கற ஊருக்குப் போகப் போறேன்னு நம்ம பக்கத்து வீட்டம்மா கிட்ட சொன்னதுதான் தெரியும். அவங்க பேயப் பார்த்த மாதிரி ஆயிட்டாங்க. 'ஐயோ' மோசமான ஊராச்சே.. அங்க எதுக்கு உங்கண்ணன் போகுது... அந்த ஊருக்கு மந்திரவாதிகளும், மாந்திரீகம் பண்றவங்களும்தான் போவாங்கன்னு ஒரே புலம்பல்.. அவங்க சொந்தக்காரங்கள்ல ஒருத்தர் அந்த ஊருக்குப் போய்ட்டு திரும்பி வரவே இல்லையாம்."

-ரஞ்சிதம் சொன்னதைக் கேட்டு கணேஷின் தாயான கனகவல்லி முகம் வெளிற ஆரம்பித்தாள்.

"கணேஷ்... நீ இந்த கல்யாணத்துக்கு அவசியம் போய்த்தான் தீரணுமா?" என்று குரல் நடுங்கக் கேட்டாள்.

"அம்மா! பார்த்திபன் என் கூட வேலை பார்க்கிறவன். அவனுக்கு நிச்சயதார்த்தம். நான்தான் மாப்பிள்ளைத் தோழன். பொண்ணுக்கு அந்த ஊர் தான் சொந்த ஊர்! நான் கட்டாயம் வந்தே தீரணும்னு சொல்லிட்டாம்மா. அவன் ஒரு பிடிவாதம் பிடிச்சவன். அடுத்து எனக்கு அவன் எவ்வளவோ உதவிங்கள்லாம் செய்துருக்கான். 'டேய், நீ பொண்ணு எடுக்கப் போற

ஊர்ல பேய் பிசாசுங்க நிறைய இருக்குதாம். அதனால எனக்கு வர்றதுக்கு பயமா இருக்கு'ன்னா சிரிக்கறதோட முகத்துல காறியும் துப்பிடுவான்."

-என்று ஒரு விஸ்தாரமான பதிலைச் சொன்ன கணேஷ், பெட்டியை மூடி லாக் செய்தான். கடிகாரத்தையும் பார்த்தான். மணி பன்னிரண்டரை!

புறப்பட்டால் சரியாக இருக்கும் என்று தோன்றியது.

"சரிம்மா, நான் கிறம்பறேன்... கவலைப்படாதே இரண்டு நாள்ல வந்துடுவேன்..." என்றபடி கிளம்பினான். கனகவல்லி பீதி விலகாத முகத்தோடு பார்த்தபடியே நின்றாள்.

"பார்த்துண்ணே... எதுக்கும் நம்ம கருப்பு கோயில் திருநீறு உன் பாக்கெட்ல இருக்கட்டும்..." என்று ஒரு மார்க்கமாகவே பேசி வழி அனுப்பினாள் ரஞ்சிதம்.

இறுதி வரை அவன் அக்காவான பிரபாவதி வாயே திறக்கவில்லை. அரிசியில் கல் பொறுக்குவதில் இருந்து பார்வையை விலக்கவும் இல்லை.

வாசலை தாண்டும்போது நின்று திரும்பிப் பார்த்த கணேஷ், பிரபாவதியிடமும் சொல்லிக் கொள்ள விரும்பினான்.

"அக்கா! போய்ட்டு வரேன்"-என்றான்

அவளும் "உம்"... என்று ஒரு சிறிய சப்தமிட்டாள்.

"பிரபா... வாயத் திறந்து நல்லபடியா போய்ட்டு வான்னு சொல்ல மாட்டியா?" எனக் கேட்டாள் கனகவல்லி.



"அதான் நீங்கள்லாம் சொல்லிட்டீங்களே... நான் வேற தனியா சொல்லணுமா?" என்று மெல்லிய குலவில் திருப்பிக் கேட்டாள்.

"அதுக்கில்லம்மா... ஒரு பழனிக்கோ திருப்பதிக்கோ போனா அந்த சந்தோஷமே வேற. இவன் ஒரு பேய் பிடிச்ச ஊருக்குல்ல போறான். மனசு படபடங்குதே...?

"எதுவும் ஆகாதும்மா.... கணேஷ் உன்னையும் என்னையும் மாதிரி கிடையாது. அவன் புத்திசாலி! நான் என் புருஷனை கல்யாணத்துக்கு முந்தி காதலிச்சப்போ, 'அக்கா! இந்த ஆள் சரியில்லாதவன்-இவன் உன்னை ஒழுங்கா வெச்சு வாழ மாட்டான்'னு பளிச்சின்னு சொன்னவன். அதே மாதிரி நான் அந்த ஆளோட [illegible]ட்டப்போ துணிச்சலா என்னைக் கூட்டிக்கிட்டும் வந்துட்டவன். என் தம்பி எப்பவும் சரியான முடிவுதான் எடுப்பான். நீ தைரியமா இரு...."என்றாள்

கணேஷுக்கு அவன் தலைக்கு மேலே யாரோ பன்னீர் தூவி கிரீடம் வைத்தது போல இருந்தது!

மானாமதுரை ரயில் நிலையம்...

இரவு மிகச் சரியாக 11.30!

சைரன் பிடித்தபடி நின்ற ராமேஸ்வரம் பாசஞ்சரில் இருந்து உதிரத் தொடங்கினான் கணேஷ்.

ஸ்டேஷனில் அங்கும் இங்குமாய் விளக்குகள்! அந்த ஒளியில் ஏராளமான பூச்சிகள் பறந்தபடி இருந்தன. பரவாயில்லை... நிறைய பேர் இறங்கினார்கள்.

வெளியே சென்ற கணேஷுக்கு ஒரு ஆட்டோ பிடிப்பதுதான் உசிதம் என்று தோன்றியது.

Uploaded by Naghu

ஆனால், அந்த இரவு நேரத்துக்கு இருந்த சில ஆட்டோக்களும் 'பாண்டியம்மாள் கோட்டை' என்ற உடனேயே பின்வாங்கி விட்டன.

ஒரு குதிரைவண்டிக்காரன் நிறைய இருமியபடி இருந்தான். கணேஷை அருகில் அழைத்து "இந்த நேரத்துல அந்த ஊருக்கு யார் வீட்டுக்குப் போகணும்?" என்று கேட்டான்.

"திரிசூலக்காரர் வீடுன்னா ஊர்ல எல்லாருக்கும் தெரியும்னாங்க..."

"ஓ... ஊர் நாட்டாமை வீட்டுக்கா?"

"அப்ப அவர்தான் நாட்டாமையா?"

"ஆமாம் தம்பி! உக்காருங்க. நான் கொண்டுகிட்டு போய் சேர்க்கறேன்."

-பதிலைச் சொன்னதோடு திரும்ப ஒரு நீளமான இருமல். தொண்டைக் குழிக்கு நடுவில் விசில் ஒன்று அகப்பட்டுக் கொண்டு அது ஒலி எழுப்புகிறாற் போல் இருந்தது.

கணேஷ் அந்த குதிரைவண்டியை ஒரு தினுசா பார்த்தான். சற்று தொத்தலான குதிரை.. வெளுப்பும் கறுப்பும் கலந்த நிறம். முகத்துக்கு முன் கட்டித் தொங்க விடப்பட்டிருந்த கொள்ளுத் தோல் பையை உதறி உதறித் தின்றுகொண்டிருந்தது.

"என்ன தம்பி பாக்கறீங்க.. இருவது வருஷமா ஓடற குதிரை இது. அடிச்சுகிட்டும் ஓடாது. அதுக்கின்னு அன்ன நடையும் போடாது. சும்மா ஜலங் ஜலங்குன்னு ஒரே வேகத்துல போகும்."

- என்றான்.

Uploaded by Naghu



"அதுக்கில்ல. நான் குதிரைவண்டில எல்லாம் போனதில்ல..."

"இப்ப நீங்க இதுல போனாதான் அந்த ஊருக்கு போய்ச் சேர முடியும். வழியில் சுடுகாடு வேற-நாளைக்கு அமாவாசைங்கறதால சுத்து வட்டாரத்துல இருந்து குடுகுடுப்பக்காரனுங்க மாந்திரீகம் பண்றவங்கல்லாம் வருவாங்க. இப்பல்லாம் கோடாங்கிகாரனும் ஏதேதோ பூசைன்னு வர்றாங்க..."

"இந்தக் காலத்துலயும் இப்படி எல்லாம் சுடுகாட்டு பூசை எல்லாம் நடக்குதா என்ன?"

"அது சரி.... அது என்ன சாதாரண சுடுகாடா என்ன...?"

"முந்நூத்தி அம்பது வருசத்துக்கு முந்தி பஞ்சம் அந்தப்போ குடிக்க தண்ணிகூட இல்லாத நிலைல ஒரே நாள்ல மூவாயிரம் பேருக்கு மேல தற்கொலை பண்ணிகிட்டு செத்துப்போன இடம் அது. இப்பவும் பசி பசின்னு குரல் கொடுத்துக்கிட்டு அலையற பேயுங்க ஏராளம்...."

-குதிரைவண்டிக்காரன் தகவலாக சொல்கிறானா, இல்லை கணேஷை பயமூட்டுவது அவன் நோக்கமா என்று தெரியவில்லை.

கணேஷுக்கு சிரிப்பு வந்துவிட்டது.

"என்ன தம்பி, நீங்க நான் சொன்னதை எல்லாம் நம்பாத ஆளா... நல்லது. அப்படியே இருங்க... வண்டில ஏறுங்க...."

"கூலி..."

"ராத்திரி நேரம்... பத்தும் பத்தும் இருவது மைல் தூரம் என் குதிரை ஓடணும். ஆட்டோகாரங்க முந்நூறு ரூவாய்க்கு குறைய மாட்டாங்க. நீங்க அதுல பாதி கொடுங்க போதும்..."

"நூத்தம்பது ரூபாயா... நான் எங்க ஊர்ல இருந்து ரயில்ல 350 கிலோ மீட்டர் கடந்து வந்ததுக்கே தொண்ணூறு ரூவாதான் தந்தேன்...."

"அது ஊருக்காக ஓடற ரயிலு தம்பி. அரசாங்க சொத்து. இது உங்களுக்காக மட்டுமே ஓடப்போற குதிரை வண்டி. ரெண்டுக்கும் வித்தியாசம் இருக்குல்ல...."

"எனக்கு கட்டுப்படியாகணுமே..."

"சரி, உங்க நோக்கம் போல தாங்க. முதல்ல உக்காருங்க. நடு ஜாமமா வேற இருக்குது. கவனமா போவோம்...."

-கணேஷும் குதிரை வண்டியில் ஏறி அமர்ந்தான். கீழே பச்சைப் புல்லை கொட்டி மேலே சாக்கை விரித் தான். உட்காரவும் - ஒரு புதுவித அனுபவமாக இருந்தது.

குதிரையும் ஒருவித கனைப்புடன் ஓடத் தொடங் கியது.

"தம்பி! எங்க வேலை பாக்கறீங்க?" -அவனிடம் அரட்டையின் ஆரம்பம்!

"நான் ஒரு மருந்து கம்பெனில ரெப்ரசென் டேடிவா இருக்கேன்..."

"ஓ! இந்த தோல் பை ஒண்ணை தூக்கிட்டே திரியற வேலையா?"

-கணேஷுக்கு அவன் கேட்ட விதமே சிரிப்பை தந்தது.



சிரித்தபடியே, "அதே தான்..." என்றான்.

"மருந்து கம்பெனில வேலை பாக்கற புள்ளைங்க நல்லா கைய வீசி செலவு செய்வாங்களே... கைல சிகரெட் இல்லாமலும் இருக்கமாட்டாங்களே...."

"அப்ப உங்களுக்கு ரெப்ரசென்டேடிவ்ஸ் பத்தி நல்லா தெரியும்னு சொல்லுங்க...."

"என்ன தெரியும்... ஊருக்கு வண்டி ஓட்டறோம். நாலு நல்லவன் ஏறுனா நாலு கெட்டவனும் ஏறறான். சிகரெட் தண்ணின்னு வாரி இறைக்கறவங்க என்கிட்ட மட்டும் சுட்ட நியாயம் பேசறாங்க. எங்க போய் அழுவறது...?"

"இந்த மாதிரி குதிரையை வெச்சுகிட்டு கஷ்டப் படறதுக்கு ஒரு ஆட்டோ வாங்கி ஓட்டலாம்ல...."

"அதெல்லாம் சரியா வரல தம்பி... அப்புறம் இந்தக் குதிரையை என்ன பண்றது? பாவம் இது... இன்னிக் கெல்லாம் இதை யாரும் வாங்க மாட்டாங்க. நான் இதை தெருவுலதான் விடணும்".

-குதிரைக்காரனிடம் ஒரு பரிவு வெளிப்பட்டது. சிலரை நாம் மிகச் சாதாரணமாக நினைத்து விடுகிறோம். ஆனால், அவர்கள் பேசும் போதுதான் அவர்கள் இதயம் எப்படிப்பட்டது என்பது தெரிய வருகிறது.

அந்தக் குதிரைவண்டியும் தார் சாலையை விட்டு விலகி கருவேலஞ் செடிகள் மண்டிக் கிடக்கும் ஒரு காட்டுக்குள் செல்லும் மண் பாதையில் ஓடத் தொடங் கியது. நல்ல இருட்டு...! அதில் அவன் குதிரை எப்படி பாதையை உணர்ந்து ஓடுகிறது என்பதே ஆச்சரியமாகத் தான் இருந்தது.

“ஆமா நாட்டாமை வீட்டுக்கு வந்திருக்கீங்களே. அவர் என்ன உங்களுக்கு உறவா?”

“உறவெல்லாம் இல்ல...என் நண்பன் பார்த்திபன், அவர் மகள் அனுசுயாவைதான் கல்யாணம் பண்ணிக்கப் போறான். நாளைக்கு நிச்சயதார்த்தம்...”

“ஓ.... அந்த பொண்ணுக்குகூட கல்யாணமா?”

-குதிரைக்காரன் கேட்ட தொனியே சரியில்லை.

“அந்த பொண்ணுக்குகூட கல்யாணமான்னா.. புரியலியே?”

-கணேஷும் அவனை விடவில்லை. குதிரை வண்டிக்காரனும் நாக்கை கடித்துக் கொண்டான்.

“இல்ல, தம்பி அந்த பொண்ணுக்குதான் கல்யாண மான்னு கேட்க நினைச்சேன். நாக்கு பெசகிடிச்சு...” என்று சமாளித்தான். கணேஷும் அதை புரிந்துகொண்டான். அப்போது சாலையில் கறுப்பு வேட்டி கட்டி தலைக்கும் முட்டாக்கு போட்டுக் கொண்டு போய்க் கொண்டிருந்த ஒருவர் குதிரைவண்டி சப்தத்தை கேட்டு நடுச்சாலையில் நின்றபடி திரும்பிப் பார்த்தார்.

குதிரைவண்டிக்காரனுக்கும் புரிந்து விட்டது!

அந்த நபர் ஒரு மந்திரவாதி. சுடுகாட்டுக்கு போய்க் கொண்டிருப்பவன்....

## 2

**த**ன்னை நன்கு அறிந்தவர்கள் முதலில் பதட்டம் இல்லாதவர்களாக இருப்பார்கள். எது நடந்தாலும் அதற்கு பின்னால் நிச்சயம் ஒரு சரியான



காரணம் இருக்கும் என்பதை புரிந்தவர்களாகவும் இருப்பார்கள். கூடியவரை கோபப்பட மாட்டார்கள். ஏன் என்றால் கோபப்படும்போது ஒருவன் பெரிதும் பலவீனமடைகிறான். நிஜமாலுமே கோபப்படுவதற்கும், கோபப்படுவது போல் நடிப்பதற்கும் நிறைய வித்தியாசம் உள்ளது. எனவே இவர்களும் கோபப்படுவது போல நடிப்பார்கள் ஒருபோதும் நிஜமாக கோபப்பட மாட்டார்கள். அதே போல எவரிடம் உதவிகள் கேட்பது என்பதிலும் மிகத் தெளிவாக இருப்பார்கள். உதவிகள் புரிவதிலும் தெளிவுடன் இருப்பார்கள்!

அந்த மந்திரவாதி தானும் குதிரைவண்டியில் வர விரும்புவதாக கூறினான். வண்டிக்காரன் தயங்கியவனாய் சாமி வண்டில கிராக்கி இருக்குதுங்க. இடம் இல்லீங்க....” என்றான், அதை அந்த மந்திரவாதி நம்பாதவன் போல உள்ளே எட்டிப் பார்த்தான். கணேஷ் மட்டும் தெரிந்தான்

“ஒரு ஆள்தானே இருக்கு?”

“ஆமாம் சாமி....”

“உன் வண்டிலதான் நாலு பேர் உக்காந்துகிட்டு வர முடியுமே....”

“இது அப்படி வண்டி இல்லீங்க... ஒரு நேரத்துல ஒருத்தருக்குதான் நான் ஓட்டுவேன்....”

“ளவளன்னு பேசாம வண்டிய ஓட்டு. இந்தாப்பா தள்ளி உக்காரு...”-என அதட்டலான குரலில் கணேஷை தள்ளச் சொல்லிவிட்டு அந்த நபர் ஏறி அமர்ந்தான். கறுப்பு வேட்டி, கறுப்பு துண்டு. உடம்பில் எல்லா இடங்களிலும் கருகருவென்று முடி வளர்ந்திருந்தது. சற்று

பெரிய முட்டை விழிகள். அவை வெகுவாக சிவந்திருந்தன. நெற்றியில் கறுப்பு பொட்டு.... ஒரே கறுப்பின் ஆதிக்கம். தோளில் ஒரு துணிப்பை. அதனுள் இரண்டு எலும்புத்துண்டுகளுடன் வெற்றிலைப் பெட்டி போல ஒரு பெட்டி. கூடவே பழுப்பேறிப் போன பழைய புத்தகம் ஒண்ணு! அதற்கு அட்டை போட்டு மூடப்பட்டிருந்ததால் அது எத்தகைய புத்தகம் என்பது தெரியவில்லை.

அந்த மந்திரவாதியின் கையில் டார்ச்லைட் இருந்தது. அதை அடித்துக் கொண்டே வந்தான். குதிரை வண்டிக்காரனிடம் இப்பொழுது சுத்தமாய் பேச்சே இல்லை. அவனிடம் இறுக்கம் சூழ்ந்திருந்தது. அந்த மந்திரவாதி, கணேஷை அவ்வபோது பார்க்கும் விதமே சரியில்லை. கணேஷுக்கு அவனது அடாவடியான போக்கு எரிச்சலை ஏற்படுத்தியிருந்தது.

"ஆமா... உங்க சொந்த வண்டி போல சொல்லச் சொல்ல கேக்காம வண்டில ஏறிக்கிட்டீங்களே." உங்களுக்கென்ன மனசுல பெரிய தாதாங்கற நினைப்பா?"

-தன் கோபத்தை அடக்க முடியாமல் கேள்வி ஆக்கினான். அந்த மந்திரவாதி அதற்கெல்லாம் பதில் சொல்ல விரும்பாதவன் போல மௌனமாகவே வந்தான்.

"வண்டிக்காரரே! கொஞ்சம் வண்டியை நிறுத்துங்க"

"ஏன் தம்பி..."

"அட, நிறுத்துங்கன்னு சொல்றேன்."

-அவனும் வண்டியை 'ஹோஹோ' என்று இழுத்து நிறுத்தினான். கணேஷ் கவனம் மந்திரவாதி பக்கம் ஆழமாக திரும்பியது.



"யோவ்... இறங்குய்யா வண்டிய விட்டு..."

"என்னப்பா, நான் யார் தெரியுமா?"

"நீ எவனா இருந்தா எனக்கென்ன- முதல்ல இறங்கு."

"வேண்டாம் தம்பி... நான் ரொம்ப பொல்லாதவன்..."

"நீ பொல்லாதவன்னா நான் ரொம்ப கெட்டவன். இப்ப இறங்கறியா இல்லையா?"

-கணேஷ் மிரட்ட, அவனும் இறங்கினான்.

"நடந்து போ- இல்ல வேற வண்டி பிடி. என் கூட வரணும்னா என்கிட்ட அனுமதி கேட்கணும்...."

"நான் அந்த கடவுளுக்கே பயப்படாதவன்..."

"அது உன் இஷ்டம். என்கிட்ட மரியாதை முக்கியம்."

"வேண்டாம். இங்கயே இப்பவே நான் உன்னை ரத்தம் கக்க வெச்சுடுவேன்..."

"என்ன பீலா விடறியா? இந்த ரத்த வாந்தி டுப்பை எல்லாம் இப்பல்லாம் மோடி மஸ்தானுங்ககூட விடற இல்ல. நீ என்னய்யா- போய்யா வேலைய பாத்துக்கிட்டு..."

-கணேஷின் அலட்சியமும் தைரியமும் குதிரை வண்டிக்காரனையும் ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது. அந்த மந்திரவாதியோ நடுச்சாலையில் நின்று அவனை எரித்து சாம்பலாக்கிவிடுவது போலவே முறைத்துக் கொண்டிருந்தான்.

குதிரை வண்டியும் தொடர்ந்து ஓட ஆரம்பித்தது.

சில நிமிடங்கள் சென்றிருக்கும். வண்டிக்காரன் அமைதியாகவே வந்தான். அது கணேஷையும் பாதித்தது.

"என்ன வண்டிக்காரரே எதுவும் பேசாம வந்தா எப்படி?"

"என்னத்த தம்பி பேச.... அந்த மந்திரவாதி கிட்ட போய் முறைச்சுகிட்டீங்களே தம்பி!"

'நான் எங்க முறைச்சேன்-அவன்தான் தப்பா நடந்துகிட்டான். நான் அதை தட்டி கேட்டேன்...."

"என்னத்த தட்டி கேட்டீங்களோ போங்க.. நான் இன்னிக்கு ராத்திரி இதே வழில மானாமதுரை திரும்ப முடியாது. வேற மார்க்கமாதான் போகணும்."

"இவங்களுக்கெல்லாம் பயப்படக்கூடாதுங்க வண்டிக்காரரே.. இவங்க மாய மந்திரமெல்லாம் சும்மா கப்சா.."

"இப்படிப் பேசுன ரொம்ப பேர் இப்ப உயிரோடு இல்ல தம்பி. பல பேருக்கு இவங்களாலயே பைத்தியம் பிடிச்சிருக்கு. இவங்க செய்வினை செஞ்சா எப்பேர்ப் பட்ட குடும்பமும் ஒண்ணுமில்லாம போயிடும். உங்களுக்கு அனுபவமில்ல. அதோட இந்த காலத்துப் பிள்ளை வேற-ஆகையால நீங்க இப்படி எல்லாம்தான் பேசுவீங்க...."

-குதிரைவண்டிக்காரன் அலுத்துக் கொண்ட அதே நேரம் அந்த குதிரைவண்டியும் பாண்டியம்மாள் கோட்டை மயானத்தை எட்டியிருந்தது.

பெரிய மயானம்! இடுகாடும் சுடுகாடும் சேர்ந்தே இருந்தது. இடுகாட்டு சமாதிகள் பலவற்றில் சிறிய அளவில் கோவில்கள்கூட கட்டப்பட்டிருந்தன. சில சமாதிகள் பளிங்கு மேடையாக காட்சியளித்தன. தூங்கு மூஞ்சி மரங்களும் நொணா மரங்களும் ஏராளமாய் வளர்ந்திருந்தன. எரிமேடையில் ஒரு பிணம் வெந்து



கொண்டிருந்தது. பனிமூட்டம் போல அதன் புகை மூட்டம்

குதிரைவண்டிக்காரன் தன் தலைப்பாகை துண்டை அவிழ்த்து முகத்தை மூடிக் கொண்டான்.

"தம்பி..சுடுகாட்டுப் புகை.. உடம்புக்கு நல்லதில்லை. பின்னால சாக்குப் படுதாவை இறக்கி விடுங்க.." என்றான்.

கணேஷும் சாக்கு படுதாவை இறக்கிவிட முனைந்த போதுதான் அந்த காட்சியைப் பார்த்தான். ஒரு சமாதி அருகில் சமாதி மேல் ஒரு பெண் நிர்வாணமாக அமர்ந்திருக்க, அவளது தலை, தோள், தொடை முழங் கால் என்று எல்லா பக்கங்களிலும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

அவள் முன்னால் ஒரு மந்திரவாதி உட்கார்ந்து கொண்டு ஏதோ மந்திரம் கூறி அந்த பெண்ணையே ஒரு கோயில் சிலை போல கருதி அள்ளி பூவைப் போட்டு பூஜித்துக் கொண்டிருந்தான்.

ஓடிக் கொண்டிருந்த வண்டி வளைந்து திரும்பவும் அந்த காட்சி அவன் கண்களை விட்டு மறைந்தும் போனது.

"வண்டிக்காரரே... என்ன இது அநியாயம். ஒரு பொண்ண நிர்வாணமா உக்கார வெச்சு பூஜை மாதிரி ஏதோ பண்ணிக்கிட்டிருக்காங்களே..."

"ஆமாம் தம்பி... இந்த மாதிரி சமாசாரமெல்லாம் இங்க சர்வ சாதாரணம்."

"இதைஎல்லாம்யாரும்தட்டிகேட்கமாட்டாங்களா?"

"என்னத்த கேக்கறது. இதெல்லாம் அவங்க பூஜை முறை."

"ச்சே...இதை விட முட்டாள்தனம் எதுவும் இருக்க முடியாது..."

"வேண்டாம் தம்பி. நீங்க எதுக்கு வந்தீங்களோ அந்த வேலையை முடிச்சுக்கிட்டுப் போங்க."

"ஏங்க இப்படிப் பயப்படறீங்க. எவ்வளவோ விஞ்ஞானம் வளர்ந்துட்ட இந்த காலத்துலயுமா இப்படி?"

-கணேஷிடம் நரம்பு புடைத்தது. குதிரைவண்டிக்காரன் சற்று வண்டியை இழுத்து நிறுத்தியவனாக திரும்பிப் பார்த்தான்.

இருட்டில் அவன் முறைப்பது தெரியாவிட்டாலும் முறைக்கிறான் என்பதை கணேஷால் அனுமானிக்க முடிந்தது.

"எதுக்கு இப்ப வண்டியை நிறுத்தினீங்க?"

"இல்ல விஞ்ஞானம் வளர்ந்துட்ட இந்த காலத்துலயும்னு ஏதோ சொன்னீங்களே..."

"உண்மைதானே... இது விஞ்ஞானம் வளர்ந்துட்ட காலம்தானே?"

"விஞ்ஞானம் வளர்ந்துட்ட காலம்னு சொல்லாதீங்க. விஞ்ஞானம் எல்லாத்தையும் கெடுத்துட்ட காலம்னு சொல்லுங்க..."

"என்னத்த கெடுத்துச்சு.. உங்களுக்கு விஞ்ஞானத்தை பத்தி என்ன பெரிசா தெரியும்?"

"தம்பி! நான் குதிரைவண்டிக்காரனா இருக்கலாம். ஆனா, எனக்கும் உலக அறிவு உண்டு. எனக்கு எழுபது வயசாகுது. தியாகராஜர் பாகவதர் காலத்துல இருந்து இப்ப அஜீத், விஜய் காலம் வரை எல்லாத்தையும் பாத்தவன் நான்.



குடிக்கிற தண்ணி ஒரு பாட்டில் 12 ரூபா விக்குது! அந்த நாள்ல வீட்டுக்கு வீடு வாசல்ல பானைல வெட்டி வேரை போட்டு ஜிலுஜிலுன்னு வெச்சிருப்பாங்க. போக வர சும்மா குடிக்கலாம்...

சத்திரம் சாவடியிலயும் அப்படித்தான்... எப்ப போனாலும் வயிறார சாப்பிடலாம். அப்படியே மரத்தடில கட்டில் மேல் சாஞ்சா தூக்கம் சும்மா சுனாமி அலை மாதிரி சுருண்டுகிட்டு வரும். இப்ப தலைக்கு மேல ஃபேன் சுத்தாம ஒரு நாள் ஒரு பொழுது இருக்க முடியுதா?

இந்த காலத்துலயும் எவ்வளவு அசுத்தம்!

முன்னெல்லாம் சாக்கடைகிட்டதான் கொசு இருக்கும். இப்ப கொசு இல்லாத இடம்னு ஒண்ணை காட்ட முடியுமா?

பிச்சைக்காரன்கூட பிளாட்பாரத்துல தான் தூங்கும்போது. தலைகிட்ட ஒரு கொசுவத்தியை ஏத்தி வெச்சுக்கிட்டு தூங்குனாதான் தூங்க முடியும். அவ்வளவும் விஷக்காத்து. இதுதான் விஞ்ஞான சாதனை! ஒரு புள்ளிகணக்கா இருக்கற கொசுவுக்கு 120 கோடி பேரும் தினசரி தலைக்கு இரண்டு ரூவா செலவு செய்யறோம் தம்பி. இந்த பணம் இருந்தா தினசரி நூறு ஊருக்கு மூணு வேளை விருந்தை இலவசமா போட முடியும். இது போக இந்த பணத்துக்கு 50 காலேஜ் கட்டலாமாம்... இதை நினைச்சா சிரிப்பு வரல. ராக்கெட்லாம் அப்புறம் விட்லாம் - கொசுவை அழிக்கலாம்ல? உன் விஞ்ஞானத்தால முடிஞ்சுதா? கட்டுப்படுத்தவே போராடறீங்களே..,

சாப்பிடற சாப்பாட்டுலகூட உரம்கற பேரால விஷத்தை கலந்து விஷத்தைல்ல உணவா சாப்பிடறோம்.

காரு, பஸ், மோட்டார் பைக்குன்னு வாகனங்களை தெரு ஓரத்துலயே கடையா போட்டு கூவிக் கூவி விக்கறாங்க. நான் தெரியாமதான் கேக்கறேன்-ஓடறதுக்கு ரோடு இருக்கா? எத்தனை பேர் வீட்டு வாசல்ல ஐம்பத்துக்கு காருங்க சும்மா நிக்குது தெரியுமா?

ஏதோ நின்ன இடத்துல இருந்துகிட்டு எங்க வேணா பேசலாம்-ஒரு வினாடிக்கே ஒரு பைசாதான்னு இந்த செல்போனைப் பத்தியும் சொல்றாங்க. இது இல்லாத காலத்துல பேசிக்க முடியாம எல்லாரும் செத்தா போய்ட்டோம்? இதுல விஷயம் மட்டுமா பேசறோம்... எவ்வளவு வம்பு தும்பு? போதாக்குறைக்கு ஆபாசப் படம், ஆபாச செய்தி பரிமாற்றம் எத்தனை கண்றாவிங்க...

எல்லாத்துக்கும் மேலா எப்ப எங்க எப்படி குண்டு வெடிக்கும்னு தெரியாது. அவ்வளவு தீவிரவாதம்! நிம்மதிக்கு கோவிலுக்குப் போகலாம்னா அங்கேயும் உடம்பை எல்லாம் தடவிப் பார்த்துதான் உள்ளே விடறாங்க. இதுதான் உங்க விஞ்ஞான வளர்ச்சி... உண்மைல இது வளர்ச்சியா சிதைவான்னு நல்லா யோசிச்சு பார்த்து சொல்லுங்க..."

குதிரைக்காரன் பிச்சு உதறி விட்டான். கணேஷுக்கும் அவன் பேச்சிலுள்ள நியாயங்கள் புரிந்தன.

வண்டிக்காரனுக்கோ அப்போதுதான் தன் ஆற்றாமை அடங்கியது போல் இருந்தது.

"நல்லா பேசினீங்கய்யா... எல்லாமே நியாயமான கருத்துங்கதான். ஆனா... இதனால எல்லாம் இந்த சுடுகாட்டுச் சமாசாரங்கள் நல்லதுன்னோ அர்த்தம் உள்ளதாவோ ஆயிடாது. ஞாபகம் வெச்சிக்குங்க..." என்றான்.



அவர்கள் வாக்கு வாதங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கிறாற் போல 'பாண்டியம்மாள் கோட்டை' எனும் ஊரின் தொடக்கமும் வந்தது.

பக்கவாட்டில் ஒரு பெயர்ப் பலகை!

"ஊர் வந்துடிச்சு... கோட்டையைக் கடந்துட்டா அப்புறம் தெருதான்..."-என்றான் வண்டிக்காரனும்.

முதுகை வளைத்து கணேஷும் வெளியே பார்த்தான்.

இருளோடு இருளாக கோட்டை தெரிந்தது! அங்கங்கே சிதைவுகள்... கோட்டை மதிலிலேயே ஒரு பெரிய அரசமரம் வளர்ந்து ஒரு அசுரன் தலை போல ஆடிக் கொண்டிருந்தது. ஊன்றிப் பார்த்த கணேஷை வண்டிக்காரன் தடுக்கப் பார்த்தான்.

"தம்பி... இந்த கோட்டையைப் பாக்காதீங்க... இது ஒரு சாபம் புடிச்ச கோட்டை. எட்டு திசைலயும் கோட்டைக்கு மேலே மண்டபங்கள் இருக்கும்-ஆனா நாலு பிரதான திசை வழியாதான் உள்ள போய் வர முடியும். இதுல எந்த வாசல் வழியா உள்ள போறோம் கறத பொறுத்து ஆளுக்கு தகுந்த மாதிரி நல்லது கெட்டதெல்லாம் நடக்கும்னு சொல்வாங்க. பாண்டியம்மாங்கற ஒரு பொண்ணு நினைப்பா இந்த ஊர் பாளையக்காரர் பங்காரு நாயக்கர்ங்கறவர் கட்டின காதல் கோட்டை இதுன்னுகூட சொல்லுவாங்க... இன்னிக்கு பாழ்பட்டு கிடக்குது. ஆனாலும் பாண்டியம்மாள் ஆவி இந்த கோட்டையை இப்பவும் சுத்திச் சுத்தி வந்துகிட்டுதான் இருக்குது. அதோட கண்ணுல வாலிபப் பசங்க மட்டும் பட்டுடக் கூடாது. பட்டுட்டா அவ்வளவுதான்-ஒரே அடி! சுருண்டு வாயுல மூக்குல ரத்தம் கக்கி நாம சாக

வேண்டியதுதான்....." வண்டிக்காரன் சொன்ன விஷயங்கள் கணேஷுக்குள் பரபரப்பை ஏற்படுத்தி விட்டிருந்தன.

அந்த கோட்டையும் அவன் கண்களை விட்டு விலகி ஊரின் தெருக்கள் தெரிய ஆரம்பித்தன. தெருவை அடைத்து ஒரு வீட்டு வாசலில் பந்தலும் போடப்பட்டிருந்தது. அதில் தாமரைப் பூ சீரியல் செட்டும் இரண்டு ட்யூப் லைட்டுகளும் எரிந்து கொண்டிருந்தன.

"தம்பி! இந்த வீடுதான் திரிசூலக்காரர் வீடு...."

-என்று குதிரைவண்டிக்காரரும் குதிரையை இழுத்து நிறுத்தினார். பந்தலில் யாரும் இல்லை. ஓரமாக கிடந்த மரப்பெஞ்சின் மேல் ஒருவர் மட்டும படுத்திருந்தார். நிச்சயம் மைக்செட்காரரராகத்தான் இருக்க வேண்டும் என்று நினைத்தான் கணேஷ்!

வண்டிக்காரன் குதிரை முதுகை தடவி விட்டு அதை ஆசுவாசப்படுத்திக் கொண்டிருந்தான். கணேஷ் அவன் கையில் இருநூறு ரூபாய் திணித்தபோது பெரிதாக கும்பிடு போட்டான். அப்படியே, "திரும்பிப் போகும்போது கவனமா போங்க தம்பி. எதுக்கும் கொஞ்சம் கோபத்தை குறைச்சுக்குங்க....." என்றான்.

கணேஷுக்கு அவன் நண்பன் பார்த்திபன் எங்கே இருக்கிறான் என்று தெரியாத நிலை. யாரைக் கேட்பது என்பதும் தெரியவில்லை.

நல்ல வேளையாக இன்னொரு மரப்பெஞ்சும் கிடந்தது.

அதில் சூட்கேஸை தலைக்கு அண்டக் கொடுத்து காலை நீட்டிப் படுத்தான். இரண்டு நிமிடம்கூட சென்றிருக்காது. கொசுக்கள் பீறாயத் தொடங்கி விட்டன.



சற்று தள்ளிப் படுத்திருந்தவனும் கொசுக்கடி தாளாமல் புரண்டு புரண்டுதான் படுத்திருந்தான். குதிரைவண்டிக்காரன் சொன்ன கொசுக்கணக்கு சட்டென்று ஞாபகத்துக்கு வந்தது. கிராமம், நகரம் என்று எங்கேதான் இதன் ஆதிக்கம் இல்லை? இதை அடக்குவதற்கு ஒரு நாளைக்கு தலைக்கு இரண்டு ரூபாய்... மொத்தமாய் 120 கோடி மக்கள்-240 கோடி ரூபாய்! ஒரு ராத்திரிக்கு 240 கோடி ரூபாய்....ஐயோ! எவ்வளவு பெரிய கொடுமை இது! இந்த புள்ளி விவரக் கணக்கு தனக்குத் தெரியாமல் போனதே என்றுகூட தோன்றியது. வெட்கமாகவும் இருந்தது! கூடவே அந்த நினைப்பும் வந்தது....

தூங்காமல் தூக்கம் வராதபடி கொசுக்கடியோடு போராடுவதற்கு அப்படியே காலாற அந்த கோட்டைப் பக்கமாக போய்விட்டு வந்தால் சுவாரஸ்யமாக இருக்கும் என்று தோன்றியது. எதற்கும் இருக்கட்டுமே என்று எடுத்து வந்திருந்த டார்ச் லைட்டை பெட்டியில் இருந்து எடுத்துக் கொண்டான். மரப்பெஞ்சிற்கு கீழே சற்று ஒளிவாக வைத்துவிட்டுப் புறப்பட்டான்!

# 3

**'கண்ணால காண்பதும் பொய்-காதால் கேட்பதும் பொய். தீர விசாரிப்பதே மெய்யாகும்' என்று ஒரு கருத்து உண்டு. இப்படி தீர விசாரிப்பதால்கூட சமயங்களில் குழப்பங்கள் வரும். இதைக் கடந்து அனுபவ ரீதியாக உணர்வதே மெய் என்பதுதான் தன்னை நன்கு அறிந்தவர்களின் கருத்து. எனவே தன்னை அறிந்த ஒருவன் எந்த விதமான அனுபவங்**

**களுக்கும் அஞ்ச மாட்டான்... குறிப்பாக வலி மிகுந்த அனுபவங்களைத்தான் மிகவும் விரும்பு வான். ஏனென்றால், அவனுக்கு நன்றாகத் தெரியும் வலிதான் வலிமையானது! என்று....'**

தெருவில் தன்னந்தனியாக கைகளை வீசிக் கொண்டு நடந்து செல்வது என்பது நடுநிசியைப் பொறுத்தவரையில் ஒரு வித்தியாசமான அனுபவம் ஆகும். அதிலும் பாண்டியம்மாள் கோட்டை போன்ற திகிலூட்டும் ஊருக்குள் முதன்முதலாக பிரவேசித் திருக்கும் வேளையில் அந்த ஊரின் கிழக்கு மேற்கே தெரியாத நிலையில் ஊருக்குள் நடந்து செல்ல ஒரு தனி தைரியம் வேண்டும்.

அது கணேஷிடம் நிறைய இருப்பதாகத்தான் தோன்றியது. பொதுவில் எல்லா ஊர்களிலுமே தெரு நாய்கள் ஏகத்துக்கும் இருக்கும்.... எதனாலோ கணேஷ் நடந்து செல்லும் பாண்டியம்மாள் கோட்டையில் ஒரு நாய்கூட கண்ணில் படவில்லை அதுவே கணேஷ் வரையில் பெரும் ஆச்சரியம்தான். பொதுவாய் கிராமத்துத் தெருக்களில் வீட்டு வாசலில் கட்டிலைப் போட்டு படுத்துத் தூங்குவதெல்லாம் ஒரு சகஜமான விஷயம். வண்டிக்காரன் சொன்னது போல கொசுக் கூட்டம் கிராமங்களையும் விடவில்லை. எனவே தெருவே வெறிச்சோடிக் கிடந்தது.

ஒரு ஆச்சரியம் போல எல்லா வீட்டு முகப்பிலும் ஏதோ ஒரு விதத்தில் திரிசூலச் சின்னம் கண்ணில் பட்டது. சிலர் அந்த சின்னத்துக்கு மஞ்சள் தடவி குங்குமப் பொட்டெல்லாம் வைத்திருந்தனர்.



ஒரு வீட்டில் பெரிதாய்... ஒரு வீட்டில் சிறிதாய்....

எதற்கு இந்த திரிசூலம் என்கிற கேள்வியோடு தொடர்ந்து நடந்தான் கணேஷ்!

சில் வண்டு சப்தம் காதைக் கரித்தது.

ஒரு கட்டத்தில் தெருவிளக்குகளின் ஒளியும் மட்டுப்பட்டு ஊரைவிட்டுப் பிரிந்து கோட்டை நோக்கி செல்லும் பாதை அடர்வாக கண்ணில் தெரிந்தது. டார்ச் லைட்டை உருட்டிக் கொண்டே நடந்தான் கணேஷ்.

அதிகம் மனித நடமாட்டம் இல்லாத சாலை அது என்பது அடர்ந்து வளர்ந்திருக்கும் புதர்களை பார்க்கை யில் புரிந்தது. ஒரு இடத்தில் பெரிய பாம்புப் புற்று! நல்ல வேளை... பாம்புகள் எதுவும் கண்ணில் படவில்லை. பக்கவாட்டில் நிறைய மரங்கள்.. டார்ச்லைட் ஒளி ஒரு மரக்கிளை மீது பட்டபோது அதில் அமர்ந்திருந்த ஆந்தையின் கண்களில் பட்டு பிரதிபலித்தது. ஒரு விநாடி கணேஷ் நடுங்கித்தான் போனான்.

சரேலென்று ஒரு புதருக்குள் இருந்து ஏதோ ஒன்று ஓடிப் போனது... அனேகமாய் பன்றியாகவோ நரியாகவோ இருக்கலாம் என்று நினைத்துக் கொண் டான். இருந்தும் துளிகூட தைரியத்தை இழக்கவில்லை. ஒரு இடத்தில் தரைமேல் நீளமான கம்பு ஒன்று கிடந்தது. அதை எடுத்துக் கொள்வது பாதுகாப்பானதாக தோன்றியது. எடுத்துக் கொண்டு நடந்தான். கோட்டை சமீபமாக தெரிந்தது. கோட்டையின் எந்த வாசல் பக்கத்தில் இருக்கிறோம் என்று தெரியவில்லை. பகல் பொழுதாக இருந்தால் சூரியனை வைத்து திசையை அறிந்திருக்க முடியும்.

இரவில் எதை வைத்து எதை அறிய முடியும்?

அப்படியே கோட்டை மதில் அருகே போய் நின்று விளக்கை அடித்துப் பார்த்தான். தெற்கு ஆழி வீதி என்று சுவரில் உதிர்ந்த எழுத்துகள் கண்ணில் பட்டன. அதை வைத்தே அது தெற்குப்புறம் என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டான்.

அப்படியே மதில் சுவரை ஒட்டியே நடந்தான்.

பல இடங்களில் காட்டுச் செடிகள் குறுக்கிட்டு காலுக்குள் மாட்டி செருப்பை அவிழ்த்துவிட்டு உதறும் படி செய்தன.

கிட்டே நெருங்க நெருங்கஅவனுக்குளே மெல்லிய அளவில் ஒரு மாற்றம். அவன் கணேஷ் என்பதே மறந்து போய் தன்னையே அவன் ஒரு அந்த கால வீரன் போல பாவிக்கத் தொடங்கினான். குறிப்பிட்ட ஒரு இடத்தில் தெற்கு வாசல் வழிக் கதவு தாழிடப்பட்டிருந்தது.அதை துளிகூட லட்சியம் செய்யாமல் பக்கவாட்டில் உள்ள சுவர் மேல் ஏறி அப்படியே ஊர்ந்து சென்று மதில் உச்சிக்குப் போய் அங்கே அருகில் இருந்த மதில்மேல் உள்ள மண்டபத்தில் போய் நின்றான். ஒரு நபர் நிற்க முடிந்த சிறிய மண்டபம். அனேகமாக வீரர்கள் காவலுக்கு அதில்தான் நின்றுகொண்டிருக்க வேண்டும். அங்கே போனபோது அவன் காதுகளில் எங்கிருந்தோ கட்டியம் ஒலிப்பது போன்ற சப்தம் கேட்க ஆரம்பித்தது.

'ராஜாதி ராஜ....

ராஜமார்த்தாண்ட.....

ராஜ குல சேகர

நாயக்க பராக்ரம பங்காரு நாயக்கர் பராக்...



பங்காரு நாயக்கர் பராக்...'

-அங்கிருந்தே கீழே பார்த்தபோது திமுதிமு வென்று வந்து நின்ற புரவிகளில் ஒரு வெள்ளைப் புரவி மேல் இருந்து பங்காரு நாயக்கர் என்பவர் இறங்குகிறார். கோட்டை மேல் நிற்பவர்கள் எட்டுப்பேர்-அவ்வளவு பேரும் கொம்பு ஊதி சப்தம் எழுப்பிட, திறந்து கொண்டிருக்கும் கோட்டை கதவு வழியாக அவரும் உள்ளே நுழைகிறார். பின்னாலேயே தளவாய் ஒருவரின் புரவியும் காப்பாளன் ஒருவனின் புரவியும் செல்கிறது!

ஒரு நேரில் பார்த்த காட்சியை போல அந்த காட்சியும் தோன்றி மறைந்தது. அங்கே இருந்து அப்படியே தென்மேற்கு மூலையிலுள்ள மண்டபம் நோக்கி மதில் மேலேயே நடந்த கணேஷ், அங்கே சென்ற நிலையில் தன்னையே மறந்தான்.

அங்கிருந்து நேர்எதிரில் மதில் சுவருக்கு நேர்எதிர் சாரியில் ஒரு இடிந்த வீடு... அந்த வீட்டு சாளரம் வழியாக ஒரு பெண் அவனைப் பார்த்து புன்னகை பூக்கிறாள். அந்த புன்னகை கணேஷை கிறங்க வைத்தது. அப்போது அவள் வீட்டு முன் ஒரு கோச்சு வண்டி வந்து நின்றது. அந்த வண்டியில் இருந்து இறங்கியவன் பார்க்க ஒரு படைவீரன் போல இருந்தான். அவன் வாசலில் இருந்த படியே 'பாண்டியம்மா... பாண்டியம்மா' என்று குரல் கொடுக்க, அவன் அழைத்த பாண்டியம்மாளை அந்த வீட்டில் உள்ள சிலர் வலுக்கட்டாயமாக இழுத்து வந்து கோச்சுக்குள் தள்ளி அதன் மரக் கதவை மூடவும், அந்த கோச்சு வண்டி திரும்ப புறப்பட்டது.

மேலே மதில் மண்டபத்தில் இருந்து பார்த்தபடி இருந்த கணேஷுக்குள் அந்த இருண்ட நிலையிலும்

அந்த வீட்டு முன் இருந்து கோச்சு வண்டி புறப்பட்டு செல்வது போலவே ஒரு பிரமை- இது பிரமையா, இல்லை வேறு விதமான ஏதாவது நினைப்பா...? அவனால் அதை பிரித்து உணர முடியவில்லை. அந்த இடிந்த வீடு அவன் எதிரில் ஒரு நினைவுச் சின்னம் போல காட்சியளித்துக் கொண்டிருந்தது. தனக்குள் ஏன் இப்படி எல்லாம் தோன்றுகிறது என்பதும் கணேஷுக்கு விளங்கவில்லை!

அந்த கோட்டைக்கும் அவனுக்கும் இதற்கு முன்பே ஏதோ ஒரு சம்பந்தம் இருப்பது போலகூட ஒரு உள்ளுணர்வு அவனுக்குள் தோன்றி மறைந்தது.

அண்ணாந்து பார்த்தான்.

கழுவி விடப்பட்டது போல வானம்-அதில் ஜிகினாக்களை தூவினாற் போல நட்சத்திரங்கள். சிலு சிலுவென்று காற்று-கரியை அரைத்து பூசினாற் போல் இருட்டு...

நடுநடுவே 'தேவகணபதி... தேவகணபதி' என்று யாரோ அவனை அழைக்கிறார்கள் போலவும் பிரமை.

தனது பெயர் கணேஷ்!

இது என்ன புதிதாக தேவகணபதி என்று...?

அவனுக்கு எல்லாமே புதிராகவும் குழப்பமாகவும் இருந்தபோது வெகுதூரத்தில் ஒரு தீப்பந்தச் சுடரொளி அவன் கண்ணில் பட்டது.

கூர்ந்து கவனிக்கத் தொடங்கினான்!

அந்த சுடரொளி மெல்ல மெல்ல பெரிதாகிக் கொண்டே வந்தது... அவனும் அந்த மண்டபத் தூணோடு ஒட்டிக் கொண்டு கவனிக்க ஆரம்பித்தான்.



தீப்பந்தம் ஏந்தியபடி சற்று முன் வரும் வழித் தடத்தில் கணேஷ் பார்த்த அதே மாந்திரீகன்தான் வந்து கொண்டிருந்தான்.

அவன் கையில்தான் தீப்பந்தம்-அவன் கழுத்தில் இரண்டு கோழிகள் மாலை போல் தொங்கிக் கொண்டிருந்தன. அவனுக்கு முன்னாலே ஒரு எலுமிச்சம் பழம் வழிகாட்டுவது போல முன்னால் உருண்டு கொண்டிருந்தது. அப்படி ஒரு காட்சியே கணேஷ் வரையில் அதிசயமாகத்தான் இருந்தது. அந்த மாந்திரீகனும் அந்த எலுமிச்சம் பழத்தையே பிடித்துக் கொண்டு நடந்து வருபவனாகத்தான் தெரிந்தான்.

அவன் கண்களிலும் அப்படி ஒரு கூர்மை.

அந்த எலுமிச்சம் பழம் தெற்கு கோட்டையின் பிரதான வாசல் வழியாக உள்பக்கமாக உருளத் தொடங்கியது. அவனும் பின்தொடர்ந்தான். உள்ளே உருள ஆரம்பித்த அதை திடீரென்று எங்கிருந்தோ ஓடி வந்த நாய் பாய்ந்து வந்து கவ்விக் கொண்டது. அது அந்த மாந்திரீகனை அதிர்ச்சியடையச் செய்தது. அவன் அந்த நாயை தீப்பந்தத்தை வைத்தே துரத்த முயன்றான். ஆனால், அது அவன் மேல் பாய்ந்து அவனை கடித்துக் குதற முயன்றது. அவன் கழுத்தை ஒரு கட்டத்தில் அப்படியே கவ்விக் கொண்டது. அவன் வலி தாங்காமல் ஓலம் எழுப்பத் தொடங்கினான். அந்த ஓலம் அந்த இரவுப் பொழுதையே உலுக்கி எடுத்துவிடுவது போல இருந்தது... ஒரு கட்டத்தில் அவன் பலத்தை எல்லாம் திரட்டி அந்த நாயை அப்படியே பிடித்து தூக்கி எறிந்து விட்டு திரும்பி ஓடத் தொடங்கினான். அதுவும் அவனை விடாமல் துரத்திக் கொண்டு ஓடியது.

கணேஷுக்கு தான் அதுவரை பார்த்த காட்சியானது ஒரு அசலான சம்பவமா-இல்லை ஏதாவது கற்பனையான எண்ண ஓட்டமா என்றெல்லாம் சந்தேகமாகி விட்டது. அப்படியே அவனுக்கு கிறுகிறுவென்று மயக்கமும் வர ஆரம்பித்தது. நின்ற இடத்தில் அப்படியே விழுந்தான்!

விடிந்து விட்டது.

பந்தலுக்கு கீழே படுத்திருந்த நபர் கண்களை கசக்கிக் கொண்டு எழுந்தான். எழுந்திருக்கும்போதே மரப்பெஞ்சுக்கு கீழே கணேஷ் வைத்துவிட்டுச் சென்றிருந்த அந்த சூட்கேஸ் பெட்டியைப் பார்த்தான். அப்போது பார்த்து ஒருவர் வெளியில் வந்தார். பருத்த மீசையும் ஜரிகை வேட்டியுமாய் பெரிய மனித தோரணை காட்டிய அவரைப் பார்த்தான். சூட்கேஸை அவர் முன்னேயே வெளியே எடுத்தான்.

"யாருதுய்யா இது சூட்கேஸ்?"

"தெரியலீங்க... நானே இப்பதான் பாக்கறேன்."

"நடு ராத்திரிய போல மாப்பிள்ளையோட நண்பர் ஒருத்தர் வருவார்னு மாப்ளை வீட்ல போன் பண்ணியிருந்தாங்க... ஒருவேளை அவரோடதோ?"

"அட, என்னங்க நீங்க" அப்படி ஒருத்தர் வந்தா அவரைக் கவனிச்சுக்கதானே என்னையே வெளிய படுக்கச் சொன்னீங்க. எனக்கு தெரிஞ்சு யாரும் வரலீங்களே...?"

"அப்ப பொட்டி மட்டும் எப்படி வந்துச்சு.. அதுக்கு திடீர்னு கால் முளைச்சிடிச்சோ...?"



-அவன் தலையைச் சொறிந்தபோது தெருவில் கணேஷ் வந்தபடி இருந்தான். முகத்தில் தூக்கக் கலக்கம் அப்பட்டமாய் தெரிந்தது.

"அய்யா! புதுசா ஒருத்தர் வந்துகிட்டிருக்கார் பாருங்க." அவரும் கவனிக்க, கணேஷ் அருகில் வந்து சேர்ந்தான். சூட்கேஸை பார்த்துவிட்டு முதலில் அதைத் தான் வாங்கிக் கொண்டான்.

"நீங்க?"

"என் பேர் கணேஷ். விழுப்புரத்துகிட்ட இருந்து வரேன்..."

"ஓ... மாப்ள தம்பியோட சிநேகிதர் கணேஷ் நீங்க தானா...?"

"ஆமா!"

"என்ன தம்பி பொட்டி இங்க இருக்கு. ஆனா, நீங்க இப்பதான்வர்றீங்க?"

"அது.... நான் நைட்டே வந்துட்டேன்: அப்ப யாரும் இங்க இல்லை. இவரும் நல்லா தூங்கிக்கிட்டு இருந்தார். எனக்கு எழுப்பி விசாரிக்க மனசு வரலை. அதனால அப்படியே ஊரை சுத்திப் பார்ப்போம்னு புறப்பட்டுட்டேன்.."

"என்னது, நடு ராத்திரியில ஊரைச் சுத்திப் பார்க்க போனீங்களா?"

"ஆமாங்க.. தூக்கம் வரலை. படுத்தா கொசுவோட தொல்லை வேற-நான் என்னத்த பண்ண?"

"முதல்ல உள்ள வாங்க... நான் ஒரு மடையன் வெளியிலயே நிக்க வெச்சு பேசிக்கிட்டு இருக்கேன்...." -

அவர் அவனுடன் வீட்டினுள் நுழைந்தார். அவனும் பெட்டியோடு அவரை பின்தொடர்ந்தான். வீட்டின் உள்பாகம் மிரட்டலாய் இருந்தது. நிச்சயம் நூறு வருடங்களுக்கும் மேலான கட்டடம் என்பது பார்த்த மாத்திரத்தில் தெரிந்தது. ஹாலின் நடுவில் கூரைமேல் சூரிய ஒளி விழுவதற்கு தோதாகவும் நாலாபுற காற்றுப் போக்கும் உள் நுழையத் தோதாகவும் பிரம்மபாகம் திறந்திருந்தது. இன்று இப்படி எல்லாம் கட்டுவது என்பது போயே போய் விட்டது. ஒரு வீட்டிற்குள் பிரம்மபாகம் என்று ஒன்று இருந்தாலே மற்ற பாகங்கள் எல்லாம் மிகச் சரியாக இருந்தே தீரும் என்பதுதான் அடிப்படையான ஒரு உண்மை. ஏன் என்றால் பிரம்ம பாகத்தை வடிவமைக்கும்போதே மற்ற நான்கு வித சதுரப் போக்கும் ஒரு ஒழுங்குக்கு வந்து விடும். இதை பற்றி எல்லாம் ஓரளவிற்கு கணேஷும் தெரிந்து வைத்திருந்தான். எனவே, உள்ளே நுழைந்த மாத்திரத்தில் சற்று ஆச்சரியப்பட்டான். ஹால் நடுவே பெரிய மரப்பலகையால் ஆன ஊஞ்சல்! ஊஞ்சல் என்பது செல்வத்தின் அடையாளம்!

இன்று நகரத்து வீடுகளில் அது வழக்கொழிந்து போய் விட்டது.

ஊஞ்சலில் அமர்ந்தபடி முன்னும் பின்னுமாக அது அசைந்தபடி இருக்க, நாம் பேசுவதும் தேநீர் அருந்துவதும் ஒரு நல்ல அனுபவம், ஊஞ்சல் கடந்த காலம். நிகழ்ந்த காலம், எதிர்காலம் என்னும் மூன்று காலங்களுக்கும் நம்மை அழைத்துச் செல்லும். அதுமட்டுமல்ல... அது மூன்று காலங்களையும் ஒரு குடும்பத்துக்குள் விளங்கவும் செய்யும். கணேஷ் ஆச்சரியத்தில் ஆழ்ந்து விட்டான்.



"என்ன தம்பி அப்படிப் பாக்கறீங்க... உக்காருங்க"...-என்றார் அந்தப் பெரியவர். அவனும் ஊஞ்சலில் அமர்ந்தான். "வீடு நல்லா இருக்கு... ஜில்லுன்னு காற்றோட்டமா, அதே சமயம் வெளிச்சத்தோட..."

"நூத்தம்பது வருஷத்து வீடு தம்பி... நான் அப்பப்ப டச்சப் பண்ணி வெள்ள மட்டும் அடிப்பேன்-அவ்வளவு தான்! இந்த வீடுன்னு இல்ல, இந்த பாண்டியம்மாள் கோட்டைல எல்லா வீடுங்களுமே இப்படித்தான் பழைமை மாறாம இருக்கும். இந்த காலத்து சிமெண்டு பிளாஸ்டிக் சமாசாரங்களையே எங்கேயும் பார்க்க முடியாது."

-அவர் பேச்சோடு மீசையை நீவிக் கொண்டார்.

அப்போது கொலுசு சப்தம் கேட்டது. எதிரில் அவர் மகள் தேன்மொழியைத்தான் கணேஷின் நண்பன் பார்த்திபன் கட்டப் போகிறான்.

"காபி குடிங்க தம்பி... இது என் மக தேன்மொழி. இதுக்கும் உங்க சிநேகிதருக்கும்தான் இன்னிக்கு நிச்சயதார்த்தம். மாப்ள வீட்டுக்காரங்க இன்னேரம் முக்கு ரோட்டுக்கு வந்திருப்பாங்க. ஒரு அரை மணி நேரத்துல இங்க வந்துடுவாங்க...."-என்று அவர் சற்று மூச்சு விடாமல் பேசினார்.

"இப்ப காபி வேணாம். பல் விளக்கி குளிச்சிட்டு பிறகு..."

-அவன் சொல்லி முடிக்கு முன் அவள் கொண்டு வந்த காபியோடு திரும்பிச் சென்றாள்.

அவள் முகத்தில் ஒரு இனம் புரியாத இறுக்கம்-பார்த்த அந்த சில நொடிகளிலேயே அவளிடம் ஏதோ

ஒரு பிரச்சினை இருப்பது போல ஒரு எண்ணம் கணேஷுக்கு ஏற்பட்டது.

"நீங்க வாங்க தம்பி... நான் நீங்க பெட் காபி குடிக்கறவர்னு நினைச்சுட்டேன். ஆமா! நீங்க, நம்ம மாப்ளை எல்லாம் ஒண்ணா படிச்சவங்களா, இல்ல ஒண்ணா வேலை பாக்கறவங்களா?"

"ஒண்ணா படிச்சு ஒண்ணா வேலையும் பார்க்கறோம். பார்த்திபன் என்வரைல 18 வருஷ நண்பன். இதுல 12 வருஷம் ஸ்கூல், காலேஜ்ல கழிஞ்சிடிச்சு. இந்த 6 வருஷமாதான் நாங்க மெடிக்கல் ரெப்பா இருக்கோம்..."

-அவன் சொல்ல, ஒரு சிறு அறை வந்திட சரியாக இருந்தது. உள்ளே நிறைய நெல் மூட்டைகளும், கடலை மூட்டைகளும் அடுக்கப்பட்டிருந்தன.

"தம்பி! இந்த அறை இப்படி மூட்டை முடிச்சோட இருக்கேன்னு நினைக்காதீங்க. கிராமத்து வீடு-இப்படித்தான் இருக்கும். அதோ பாத்ரூம். உள்ளே எல்லா வசதிகளும் இருக்கு. வேகமா தயாராகுங்க. உங்க நண்பரான என் மாப்ளையும் வந்திடுவாரு..."

-அவர் அவனை அறைக்குள் விட்டுவிட்டு விலகிக் கொள்ள, அவனும் அறை கதவை தாழிட்டு கொண்டான். அவன் பார்க்க ஒரு பெரிய எலி ஒன்று வெகுவேகமாக கூரை மரப்பலகை ஒன்றில் ஓடி மறைந்தும் போனது!

## 4

**'இந்த உலகில் எவ்வளவோ விஷயங்கள்! அவை அவ்வளவுமே புரிந்துவிடுவதில்லை.... காரணம், நமக்கு அறிவு போதவில்லை என்பதாலா இல்லை அறிவின் பிடிக்குள் அது அகப்படாத ஒன்று என்பதாலா என்பதெல்லாம் ஆய்வுக்குரிய விஷயங்களை சராசரி மனிதர்கள் சந்திக்கும்போது அந்த விஷயங்களைப் பார்த்து பிரமித்து போய் அப்படியே ஏற்றுக் கொள்வார்கள் அல்லது அதை முற்றாக மறுதலித்து ஒதுங்கி விடுவார்கள். ஆனால், தன்னை அறிந்த ஒருவன் அதை எப்படியாவது விளக்கிக் கொள்ள போராடுவான்!"**



மிகச் சரியாக எட்டு மணி!

கணேஷ் குளித்து முடித்து தயாராகி விட்டிருந்தான்.

திருமணம் போன்ற சடங்குகளில் பங்கு கொள்ளும்போது வேஷ்டிதான் பொருத்தமான உடை. அவனும் வேஷ்டிக்குள் இருந்தான். அறைக்குள் அவன் குளித்தபடி இருந்தபோது குதிரை கனைக்கும் சப்தம் அவனுக்கு கேட்டிருந்தது. அது அவனை புதியதொரு உலகிற்கே மனதளவில் கூட்டிச் சென்றிருந்தது.

அறைக்கு வெளியே வந்தவனை அந்த பெரியவரும் 'வாங்க'...

என்று ஹாலில் ஊஞ்சல் நோக்கி அழைத்துச் சென்றார்.

"என்னன்னு தெரியில....மாப்ள தம்பியையும் அவங்க குடும்பத்தையும் இன்னும் காணல...." என்றார் சற்று சோகமாக.

"போன் பண்ணிப் பாருங்களேன்..."

"பண்ணாம இருப்பேனா..பண்ணேன்-முதல்ல ரிங் போயிச்சு. அப்பால ஸ்விட்ச் ஆஃப்னு வருது. எனக்கு குழப்பமா இருக்கு."

"ஆச்சரியமா இருக்கே.. ஆமா அவங்க வீட்ல பார்த்திபன் தங்கை ஸ்ரீலேகா கிட்டயும் ஒரு போன் இருக்கு. அந்த நம்பருக்கு ட்ரை பண்ணீங்களா?"

எனக்கு அந்த நம்பர் தெரியாதுங்களே. நீங்க வேணா முயற்சி பண்ணிப் பாருங்களேன்.."

-அவர் குரலில் ஒரு வித பதட்டம் வெளிப்பட்டது. வீட்டுக்குள் ஊர்க்காரர்களும் ஒவ்வொருவராக வந்தபடி இருந்தனர்.

கணேஷ் தன் செல்போனை எடுத்து ஸ்ரீலேகா எண்ணுக்கு முயற்சி செய்தான். உள்ளே டவர் கிடைக்காததால் வெளியே சென்று வீதியில் இறங்கினான். ரிங் போனது.

அவனையே பார்த்துக் கொண்டு நின்றார் அந்த பெரியவர். முன்போல அவரால் இப்போது மீசையை நீவமுடியவில்லை.

மறுபுறம் லேகா குரலும் ஒலிக்கத் தொடங்கியது.

"ஹலோ.."

"லேகா! நான் கணேஷ் பேசறேம்மா.."

"அண்ணா! நீங்களா.. இருங்க அண்ணன் கிட்ட தரேன்...."

-அவள் போனை அவள் அண்ணன் பார்த்திபனிடம் தந்த நிலையில் அவன் குரல் ஒலிக்கத் தொடங்கியது.

"கணேஷ்! நீ இப்ப எங்க இருந்து பேசறே?"

"மண்ணாங்கட்டி... ஏன்டா என்னை வரச் சொல்லிட்டு நீ என்னடா பண்ணிக்கிட்டிருக்கே? நான் இப்ப உன் மாமனார் வீட்லதான் இருக்கேன்! ஆமா, ஏன் நீ இன்னும் இங்க வரலை... வழியில ஏதாவது பிரேக் டவுனாயிடிச்சா?"



"............................."

"உன்னைத்தண்டா" இப்படிப் பேசாம இருந்தா எப்படிடா... ஆமா எதுக்கு செல்போனை ஆஃப் பண்ணி வெச்சிருக்கே."

"கணேஷ்! நீ முதல்ல அங்க இருந்து புறப்படு. நான் இன்னிக்கு அங்க வரப்போறதில்ல. நிச்சயமும் நடக்கப் போறதில்ல. ஐ ஆம் ஸாரிடா.. உனக்கு நான் அநாவசிய சிரமம் நிறைய கொடுத்துட்டேன். இப்பதான் நான் உன் வீட்டுக்கு போன் பண்ணேன். உன் அம்மா நீ நேத்து மதியமே புறப்பட்டுட்டதா சொன்னாங்க. எனக்கு அடடான்னு ஆயிடிச்சு...."

"போடா ஃபூல்! இங்க எல்லா ஏற்பாடும் செய்து வெச்சுட்டு உங்களுக்காக காத்துக்கிட்டிருக்காங்க. நீ என்னடான்னா நிச்சயதார்த்தம் நடக்கப் போறதில்லேங்கறே என்னடா ஆச்சு உனக்கு?"

"ஸாரிடா... அந்த ஊரைப் பத்தி நான் சரியா தெரிஞ்சிக்காம நான் அந்த பொண்ணை கட்டிக்க சம்மதிச்சுட்டேன். அது ஒரு பேய் பிடிச்ச ஊர். அங்க எந்த ஒரு பெண்ணுமே கல்யாணமாகி நிம்மதியாகவே வாழ்ந்ததில்லையாம்."

"என்னடா புதுசு புதுசா அவுத்து விடறே.... ஆமா இதை எல்லாம் பொண்ணு பாக்கறதுக்கு முந்தியேல்ல நீ யோசிச்சிருக்கணும். நிச்சயம் பண்ற அன்னிக்கு கடைசி நிமிஷத்துல இப்படி பல்டி அடிச்சா எப்படிடா...?"

"தப்புதான்... ஆனா நேத்து ராத்திரிதானே எனக்கு எல்லா உண்மையும் தெரிய வந்தது."

"என்ன பெரிய உண்மை .... பேய் பிசாசுன்னு நீ எங்கிட்டயே பீலா விடறியா? ஏண்டா இப்படி ஒரு

பாமரன் மாதிரி நடந்துக்கறே.. நாமல்லாம் படிச்சவங்க. சொல்லப் போனா இப்படிப் பைத்தியத்தாரத்தனமா, முட்டாள்தனமான நம்பிக்கை உள்ள ஊர்லதான்டா நாம பொண்ணே எடுக்கணும். அப்பதான் அதை பார்த்துட்டு மத்தவங்களும் முன்வருவாங்க... இன்ஃபாக்ட் நேத்து ராத்திரி நானும் இங்க விதவிதமான அனுபவங்களுக்கு உள்ளானேன். ஆனா, கொஞ்சம்கூட பயந்துடல, நீ வந்த பிறகு உன்கூட சேர்ந்துகிட்டு நிறைய ஆராய்ச்சி எல்லாம் பண்ணணும்னுதான் நினைச்சேன்."

"கணேஷ்... தனிப்பட்ட முறைல நாம ஒரு அட்வென்ச்சருக்காக ரிஸ்க் எடுக்கறதுக்கும், வாழ்க்கையே ரிஸ்க்கா போறதுக்கும் நிறைய வித்தியாசம் இருக்குடா. நீ முதல்ல அங்க இருந்து கிளம்பு. நான் மற்ற விஷயங்கள நேர்ல சொல்றேன்..."

"பார்த்திபா... நீ பேசறது கொஞ்சம்கூட சரியில்ல. யாரோ ஏதோ சொன்னதுக்காக நீ இப்படி முடிவெடுக்கறதும் தப்பு. இங்க இந்த பொண்ணோட வாழ்க்கை என்னாகும்னு கொஞ்சம் யோசிச்சு பார்..."

"....................................."

"என்னடா திரும்ப மௌனமாயிட்டே... பதில் சொல்லுடா... இங்க பெண்ணோட அப்பா அப்படியே தவிச்சிட்டு நிக்கறாருடா...."

"ஐ ஆம் ஸாரிடா... நான் இப்ப உன்கிட்ட ஒரு உண்மைய சொல்றேன். தயவுசெய்து இதை யார்கிட்டேயும் சொல்லாதே. குறிப்பா பெண்ணோட அப்பாகிட்ட கட்டாயம் சொல்லக் கூடாது-சரியா?"

"என்னடா விஷயம்-முதல்ல விஷயத்த சொல்..."



"'இந்த கல்யாணத்துல எனக்கு விருப்பம் இல்லை. என்னைக் கல்யாணம் செய்துகிட்டா நீங்க நிச்சயமா இறந்துபோயிடுவீங்க. நீங்க நல்லா இருக்கணும்கற ஆசைல சொல்றேன். தயவுசெய்து என்னைப் பிடிக்கலைன்னோ இல்ல வேற ஏதாவது காரணங்களைச் சொல்லியோ இந்த நிச்சயதார்த்தம் நடக்காதபடி பண்ண வேண்டியது உங்க பொறுப்பு'ன்னு சொன்னதே நான் கல்யாணம் பண்ணிக்கறதா இருந்த தேன்மொழிங்கற அந்த பொண்ணுதான்..."

-பார்திபனின் பதில் கணேஷை செல்போனை அணைக்க வைத்தது. பார்த்துக் கொண்டே இருந்த அந்த பெரியவர் வேகமாக ஓடி அருகில் வந்தார். அவர் முகத்தில் அப்படி ஒரு எதிர் பார்ப்பு

"தம்பி..."-அவர் குரலில் ஒரு கேவல்.

"ஸாரிங்க.. பார்திபனால இப்ப இங்க வர முடியாத நிலை.."

கணேஷ் புத்திசாலித்தனமாக அவரை சமாளிக்கத் தயார் ஆனான்.

"என்ன தம்பி சொல்றீங்க.. வரமுடியாத நிலைன்னா...?"

"அது.... அது நேத்து ராத்திரி மாடிப்படி ஏறும்போது கால் தடுக்கி விழுந்து எலும்பு முறிவு வரை அது போயிடிச்சு...."-ஒரு நல்ல பொய்யை துணிந்து சொன்னான்,

"ஐயோடா.... தம்பி நிஜமாத்தான் சொல்றீங்களா.... வேற காரணம் எதுவும் இல்லையே...?"

"இல்லீங்கய்யா... அதுதான் காரணம். அவன் குடும்பமே இப்ப ஆஸ்பத்திரியிலதான் இருக்கு..."

“இதை அவர் எனக்கு நேரா போன் பண்ணி சொல்லலாம்ல?”

“எப்படிங்க... உங்க கிட்ட எப்படிப் பேசறதுன்னே அவனுக்கு தெரியல. அவங்க அம்மா அப்பாவும் கொஞ்சம் சென்டிமெண்ட்டா யோசிச்க ஆரம்பிச்சுட்டாங்க...”

“சென்டிமெண்ட்டான்னா- ஐயோ! இவங்களும் என் தேன்மொழி விஷயத்துல தப்பா முடிவெடுத்துட்டாங்களா?”

“இவங்களும்னா புரியல-அப்ப இதுக்கு முந்தியே பல பேர் தேன்மொழியைப் பெண் பார்க்க வந்துருக்காங்களா...?”

-அவர் உணர்ச்சி மிகுதியில் விட்ட ஒரு வார்த்தையை கணேஷ் சிக்கென்று பிடித்து மடக்கவும், அவரிடம் ஒரு திணறல்

“அது வந்து தம்பி...”

“சும்மா சொல்லுங்க...”

“அ- ஆமா தம்பி.. வீட்ல பொண்ணு இருக்குன்னா பல பேர் கேட்டு வருவாங்கதானே?”

“கேட்டு வர்றது வேற-நிச்சயதார்த்தம்கறது வேற-நிச்சயதார்த்தம் நடந்திருக்கா...?”

-அவன் குரலில் சற்று கடுமை கூடியது. கேட்ட தொனியும் ஒரு மாதிரிதான் இருந்தது. அவர்கள் இருவரும் இப்படி பரஸ்பரம் பரிதவிப்போடு பேசிக்கொள்வதை அந்த வீட்டின் ஒரு ஜன்னலுக்கு பின்னால் நின்றபடி பார்த்துக் கொண்டே இருந்தாள் தேன்மொழி. கணேஷ் அதையும் கவனித்தான்.

அவர் சட்டென்று அவன் கையைப் பிடித்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தார்.



“எங்கங்க இப்ப நாம போறோம்...?

“வாங்க சொல்றேன்... அதுக்கு முந்தி இருங்க வந்துடறேன்.”

-என்றவர் ஓடிப்போய் யாரிடமோ எதையோ சொல்லிவிட்டு வந்தார். வந்த வேகத்தில்

“பந்தலை பிரிக்கச் சொல்லிட்டேன்... நிச்சயதார்த்தம் வர்ற வெள்ளிக்கிழமை. மாப்ளை அவசர வேலையா வெளிநாட்டுக்கு போய்ட்டார்னு ஒரு பொய்யும் சொல்லிட்டேன் ஆபத்துக்கு பாபமில்லல்ல?”-என்று கேட்டார்.

அவனுக்கும் அவரைப் பார்க்க பாவமாக இருந்தது.

“தம்பி... நான் இப்ப உங்களை எங்க ஊர் பாண்டியம்மா கோவிலுக்கு கூட்டிகிட்டுப் போறேன்... எங்க ஊர் ஓஹோன்னு இருந்ததும் பாண்டியம்மாளால தான். இப்ப எந்த ஒரு நல்ல காரியம் நடக்கும்போதும் தடை வர்றதும் பாண்டியம்மாளாலதான்... இந்த பாண்டியம்மாளுக்கு பின்னால ஒரு கதை இருக்கு தம்பி. அது தெரிஞ்சா நீங்களே ஆச்சரியப்படறது மட்டுமில்ல... அடடான்னு வருத்தமும் படுவீங்க.”

-என்றபடியே நடந்தார். எதிரில் தெருவில் அவரைப் பார்த்த சிலர், “என்ன சிவஞானம்.. பொண்ணுக்கு நிச்சயதார்த்தம்னு கேள்விப்பட்டு உங்க வீட்டுக்குதான் வந்துகிட்டிருக்கோம்... ஆனா, நீங்க எங்க கிளம்பிட்டீங்க?” -என்று கேட்டனர். அப்போது தான் அவனுக்கே அவர் பெயர் சிவஞானம் என்பது தெரிய வந்தது.

“அது வந்து பெருசுங்களா... எதிர்பாராதவிதமா நிச்சயதார்த்தம் தள்ளிப் போயிடுச்சு. வர்ற வெள்ளிக்கிழமை நிச்சயதார்த்தம். இதோ இவர் யாரோ இல்ல..

நம்ம மாப்ளயோட சிநேகிதர்தான். மாப்பிளைக்கு திடீர்னு அவசரமா வெளிநாட்டுல ஒரு வேலை. போய்ட்டு நேரா நிச்சயத்துக்கு நம்ம ஊருக்குதான் வர்றாரு. இப்ப நாங்க பாண்டியம்மா கோவிலுக்குப் போய்க்கிட்டிருக்கோம். ஒரு நல்ல காரியம்னா அங்க போய் நின்னாதானே ஊனம் இல்லாம நடக்கும்?"

-அவர் கணேஷ் சொன்ன பொய்யை ஒரு வேத வாக்காக கருதி அவர்களிடம் சொன்னதும் அவர்கள் அவர் பேச்சை நம்பாதவர்கள் போல தங்களுக்குள் பார்த்து சிரித்துக் கொண்டதையும் கணேஷ் துல்லியமாக கவனித்துக் கொண்டான். அவரும் தொடர்ந்து நின்றால் வாயைப் பிடுங்குவார்கள் என்று உணர்ந்தவர் போல, "நீங்க வாங்க தம்பி! நாம கோவிலுக்குப் போவோம்..." என்று பாண்டியம்மாள் கோவில் நோக்கி நடந்தார்.

**ஊ**ருக்கு கிழக்கில் ஒரு பெரிய கண்மாய்! கண்மாயில் அவ்வளவாக நீரில்லை கண்மாயில் குறிப்பிட்ட ஒரு பாகத்தில் தாமரையும் அல்லியும் ஏராளமாய் பூத்திருந்தன.. அவைகளைப் பறிப்பதற்கு தோதாக பானைப் பரிசல் ஒன்று நீண்ட மூங்கிலோடு ஒரு மூலையில் காட்சி தந்தது. கண்மாய் கரையில் ஒரு பெரிய ஆலமரம்.. நீருக்கு பஞ்சமில்லாத இடம். எனவே ஊட்டமாக வளர்ந்திருந்தது. நாலாபுறமும் கிளைகள்... கிளைகளை தாங்கி நிற்கும் விழுதுகள்.. தரை முழுக்க ஆலம் பழங்கள் சிதறிக் கிடந்தன. அந்த மர நிழலில் ஒரு சிறிய கோவில்... கூம்பு வடிவிலும் கலசத்தோடும் இல்லாமல் தட்டையாக ஒரு கொட்டாய் போல் காட்சி தந்தது. அதன் சுவர்களில் பூசப்பட்டிருந்த காவிப்பட்டை மட்டும் அதற்கு கோவில் அந்தஸ்தை உருவாக்கித் தந்திருந்தன.



முன்னால் ஒரு கல்மேடை.. அதன் மேல் நிறைய அகல் விளக்குள் எரிந்தபடி இருந்தன. பெரியவர் சிவஞானமும் கணேஷ்"ம் அந்த இடத்தை எட்டியபோது ஒரு இளம்பெண் விளக்கேற்றிவிட்டு அந்த சிறிய கோவிலை சுற்றி வந்து கொண்டிருந்தாள். இருவர் வருவதையும் பார்த்தவள், சிவஞானத்தைப் பார்த்து பணிவாக வணங்கிவிட்டு கும்பிட்டது போதும் என்பது போல ஒதுங்கிக் கொண்டாள்.

"இந்த பொண்ணு கிட்டத்தட்ட பதினஞ்சு வருஷமா இந்த கோவிலுக்கு வந்து சுத்துது. இந்த கோவிலுக்கு வர்ற எல்லா பெண்டு பிள்ளைகளுக்கும் ஒரே ஒரு கோரிக்கைதான் தம்பி. அது தனக்கு நல்ல இடத்துல கல்யாணம் ஆகணும்கற ஒரே கோரிக்கைதான்.." என்று அந்த பெண் கோவிலை சுற்றி வந்ததற்கான காரணத்தை கணேஷ் கேட்காமலே கூறினார் பெரியவர் சிவஞானம். கணேஷ்"க்கோ அந்த இடம் அந்நியமாகவே தெரியவில்லை. அந்த கோவிலுக்கு நேர் மேலான மரக் கிளையை பார்த்தான். அந்த கிளையில் ஒரு பெண்ணின் உடம்பு தூக்கிலிடப்பட்டு தொங்கிக் கொண்டிருப்பது போல ஒரு பிரமை அவனுக்குள்.. அவன் கண்களிலும் சரசரவென்று கண்ணீர் பெருக்கெடுத்தது. அதை பெரியவரும் கவனித்துவிட்டு,

"என்ன தம்பி... எதுக்கு அழுவறீங்க?" என்றார் மிகச் சன்னமான குரலில்.

"என்னமோ தெரியில... இங்க ஒரு பெண்ணோட உடம்பு தூக்குல தொங்குவது போல ஒரு எண்ணம். அதான் என்னையும் அறியாம என் கண் கலங்கிடிச்சு" என்றான் கணேஷ்.

"என்னது... இங்க ஒரு உடம்பு தூக்குல தொங்கின மாதிரி உங்களுக்கு தோணிச்சா.. ஆச்சரியமா இருக்கே!"

"ஆச்சரியப்பட என்னங்க இருக்கு?"

"என்ன தம்பி அப்படி கேட்டுட்டீங்க... உங்களுக்கு தோணின விஷயம் உண்மைங்க. முந்நூறு வருசத்துக்கு முந்தி இதே இடத்துல இதே மரக்கிளையிலதான் தம்பி பாண்டியம்மா தூக்குல தொங்கினா.. அப்படி தொங்கின தாலேயே அவ தெய்வமாகவும் ஆனா.. ஆனா, அவளை தூக்குல தொங்கவிட்ட பாவத்துக்குதான் இந்த ஊர் பெண்கள் அவ்வளவு பேரும் ஒரு நல்ல கணவன் கிடைக் காமலும், மீறி கிடைச்சாலும் அவனோட சேர்ந்து வாழ முடியாமலும் இன்னிக்குவரை கஷ்டப்பட்டுக்கிட்டு இருக்காங்க..."

-பெரியவர் சொன்ன விஷயம் கணேஷை ஒரு ஊசி போல குத்தியது.

"என் பாண்டியம்மா ரொம்ப நல்லவய்யா. அவ ளுக்கு வாழ்க்கை கொடுக்க மட்டும்தான் தெரியும். யார் வாழ்க்கையையும் அவளுக்கு கெடுக்கத் தெரியாது ..."- என்றான் கணேஷ் மிக வேகமாக...

அவன் பேச்சைக் கேட்டு பெரியவர் சிவஞானம் கண்களில் ஒரு ஆச்சரியக் கீற்று...

"என்ன தம்பி சொன்னீங்க.. என் பாண்டி யம்மாவா?"-அவர் கேள்வி அவனையும் சற்று திணறச் செய்தது.

"நான் அப்படியா சொன்னேன்...?"

"ஆமாம்... இப்ப உங்க வாய்ல இருந்து அப்படித் தான் வந்தது. தம்பி.. உங்களுக்கு எங்க ஊர் பாண்டி யம்மாவோட வரலாறு தெரியுமா தம்பி..."



"ஐயா.. எனக்கு ஒரே குழப்பமா இருக்கு.. இங்க இன்னும் கொஞ்ச நேரம் நான் இருந்தா எனக்கு பைத்தி யமே பிடிக்கலாம்.

அப்புறம் நான் வீரன் கிணத்துலதான் போய் விழுந்து உயிரையே விடும்படியாயிடும்" என்றான்.

"வீரன் கிணத்துலயா..எங்க ஊர்லவீரன் கிணறுன்னு ஒரு கிணறு இருக்கிறது. உங்களுக்கு தெரியுமா?"

-திரும்பவும் அவரிடம் ஆச்சரியம். திரும்பவும் கணேஷிடமும் திணறல்.

"நான் இப்ப அப்படியா சொன்னேன்?"

"என்ன தம்பி-பேசிட்டு பேசிட்டு இப்படி திருப்பிக் கேட்கறீங்க.. நிஜமா சொல்லுங்க.... உங்களுக்கு பாண்டி யம்மா வரலாறு தெரியும்தானே?"

"ஐயா... நிஜமா சொல்றேன், எனக்கு எதுவும் தெரியாது. ஆனா, எனக்கு இந்த ஊருக்கு வந்ததுல இருந்தே நான் இந்த ஊருக்கு பலமுறை வந்தது போல ஒரு உணர்ச்சி. ராத்திரி நான் கோட்டைப் பக்கம் போனப்ப அங்க என் காதுல கணேஷ்ங்கற என்னை யாரோ தேவகணபதின்னு கூப்பிடற மாதிரியும் ஒரு பிரமை.. எனக்கு எதுவும் புரியல..."

-கணேஷ் கலக்கமுடன் பேசியதைக் கேட்டு பெரி யவர் சிவஞானம் விக்கித்து நிற்க, பாண்டியம்மாளின் கொட்டாயினுள் இருந்து ஒரு கிழட்டு உருவம் வெளிப் பட்டது. அதுவரை அது உள்ளடக்கமாக இருந்தது அவர்களுக்கே தெரியவில்லை.

தேனம்மாள் என்கிற அந்த கிழவி நடுங்கும் உடலோடு கணேஷை நெருங்கி, "வந்துட்டியா ராசா...

என் பிரார்த்தனை வீண்போகல....நான் கும்பிட்ட தெய்வங்களும் என்னை கைவிடலை..."என்று நடுங்கும் குரலோடு பேசினாள்.

"பாட்டி! நீங்க என்ன சொல்றீங்க?"-என்று பெரியவர் சிவஞானமும் கேட்டார்.

"சிவஞானம்...இந்த ஊருக்கு விமோசனம் பொறக்கப் போகுதுய்யா. அதான் இந்தப் புள்ளையும் வந்துருக்கு. நீ இந்த புள்ள கிட்ட பாண்டியம்மா வரலாற்றை எல்லாம் சொல்லவே வேண்டாம். நீ சொல்லாமலே இதுக்கு எல்லாமே தெரியவரத்தான் போகுது. இதை யாருன்னு நினைச்சே...?"

-பாட்டி ஒரு கேள்வியைக் கேட்டு முடித்தாள்.

"யாரு பாட்டி...?"

"தேவகணபதிய்யா... தேவகணபதி..."

"பாட்டி நிஜமாவா சொல்றே?"

"அடப்பாவி... உனக்கே தெரியலியா? போன வருஷம் திருவிழாவில் அக்னி மிதிச்ச அருந்ததிங்கறவ மேல பாண்டியம்மா வந்து அருள்வாக்கா சொன்னது உனக்கு மறந்து போச்சா?"

-பாட்டி சொல்லி முடிக்க, சிவஞானம் மனது அந்த அக்னி மிதித்த நாளுக்குள் அருந்ததி என்கிற ஊர்க்காரப் பெண் அருள்வாக்காய் பேசிய பேச்சில்தான் போய் நின்றது.

'பெண்டுகளா, பெருசுகளா... கூடி வந்து கும்பிட்டு நிக்கற உங்களுக்கெல்லாம் என் மங்களமான ஆசீர்வாதம்... நான் பொறந்த இந்த மண்ணுல நான் வாழாமலே போய்ட்டேன். என்னை விடாம நினைச்சு



கோவிலும் கட்டி தெய்வமாவே ஆக்கிட்ட உங்களுக்காக நான் திரும்ப வந்து வாழப்போறேன். எனக்கும் முன்னால என் ராசா வருவாரு-அவரைத் தொட்டு நானும் வருவேன். அன்னிக்கு நடந்த தப்பை எல்லாம் சரிபண்ணி நாங்களும் வாழ்ந்து ஊரையும் வாழ வைப்போம்... இது சத்தியம்!'

-அன்று அந்தப் பெண் வாக்கில் வந்த வரிகள் சிவஞானமய்யா மனதில் திரும்ப ஞாபகமெடுத்தன. அவர் முகத்திலும் ஒரு குபீர் பிரகாசம்.

"எனக்கும் முன்னால என் ராசா வருவாருன்னு சொன்னாளே பாண்டியம்மா... மறந்து போச்சா?"-கிழவி தேனம்மாள் திரும்ப கேட்டாள்.

"இல்ல பாட்டி.... ஞாபகம் இருக்கு. ஞாபகத்துல தான் இருக்கு. அப்ப இந்த தம்பிதான் தேவ கணபதியா?"

"அதுல என்ன சந்தேகம்... இது வாயாலேயே தன்னை அடையாளம் காட்டிக்கிச்சே..."

"வாஸ்தவத்துல இவர் என் மாப்ளையா வரப் போறவரோட நண்பர்...."

"காலம் விளையாட்டு காட்ட முடிவு செஞ்சிடிச்சு... அது எப்படி வேணா விளையாடும்.. நண்பன்னும் சொல்லிக்கிட்டும் வரும், எதிரின்னும் சொல்லிக்கிட்டும் வரும்..."

-இருவரும் பேசிக் கொள்வது கணேஷ் வரையில் விசித்திரமாக இருந்தது.

"ஐயா! நீங்க என்ன பேசிக்கிறீங்க... எனக்கு எல்லாமே புதிரா இருக்கு..."

"புதிர்தான் தம்பி... எங்க ஊர் விஷயம் எல்லாமே பெரிய புதிர்தான்..."

"புதிர் மட்டுமா... இது அதுக்கெல்லாமும் ஒரு படி மேலன்னும் சொல்வேன். யானை கட்டி போரடிச்ச பூமி தம்பி இது. இதுல எட்டுத் திசைலயும் வெற்றிக்கொடிய பறக்கவிட்ட மாவீரன் நீ..."

"என்ன பாட்டி சொல்றீங்க... நான் மாவீரனா?"

"மாவீரனேதான்.. வந்துகிட்டே இருக்கா நீ கை பிடிக்க வேண்டிய பாண்டியம்மா. அவளும் நீயும் சேரும் போது யாரும் சொல்லாமலே எல்லாம் புரியப் போகுது பார். நான்லாம்கூட காதுல விழுந்ததை கேட்டவதான். ஆனா, ரத்தமும் சதையுமா வாழ்ந்தவங்க நீங்க... வாழ்ந்த உங்களுக்குள்ள யாரும் சொல்லாமலே எல்லாம் அர்த்த மானாதான் இந்த கேவில் இங்க இருக்கறதுக்கும் அர்த் தம். ஒரு கல்யாணம் காட்சின்னு எதுவுமே இல்லாம காலம் பூரா நானும் இங்கேயே இப்படியே இருந் துட்டேனே... எனக்குதான் விடியில... இனியாவது இந்த ஊருக்கு நல்ல காலம் பொறக்கட்டும்."

-பாட்டியின் பதிலுக்குள் பலவிதமான வண்ணங் கள் மர்மமாயும் சோகமாயும் அதனுள் ஏதேதோ இருக் கிறது என்பது மட்டும் அந்த வினாடியில் கணேஷுக்கு புரிந்து போனது!

# 5

'**த**ன்னையறிந்த ஒருவனுக்கு மற்ற உயிர் களை அறிந்துகொள்வது ஒரு பெரிய விஷயமே யில்லை.. .தன்னை அறிந்துகொண்ட அதே



பரிமாணத்தில் மற்ற உயிர்களையும் அதன் அவ் வளவு பரிமாணங்களையும் அவனால் அறிந்து கொள்ள முடியும். தன்னையறிதல் என்றால் என்ன என்பதிலேயே பல பேருக்கு குழப்பம் இருக்கிறது... தன்னையறிவதில் ஒரு நடு நிலை வேண்டும். பாரபட்சமில்லாத அணுகுமுறை வேண்டும்-நான் இன்னாருக்கு மகன், எனக்கொரு பெயர் உண்டு, நான் ஐந்தரை அடி உயரமும் ஒரு குறிப்பிட்ட அளவு எடையும் உடையவன் என்பதெல்லாம் தன்னை யறியும் ஒன்றாகி விட்டது. உண்மையில் இதில் எதிலும் தான் இல்லை என்பதை அறியும்போதே ஒருவர் தன்னையறியும் விஷயத்தில் முன்னேறத் தொடங்குகிறார்.

ஒருவருக்கு மகனாக, மகளாக இருப்பது நாம் கேட்டு நிகழ்ந்த ஒன்றில்லை, அதே போல பெற்றிருக்கும் உடம்பு, அதன் நிறை மற்றும் உயரம் எதுவும் நம் விருப்பத்தில் கிடையாது... பசிக்கிறது-அதனால் சாப்பிடுகிறோம், சாப்பிடுவதால் உடம்பும் வளர்கிறது. உடம்பின் பிடியில்தான் மனம் இருக்கிறது. உடம்புக்கு ஒரு பாதிப்பு ஏற்படும்போது மனமும் சேர்ந்து பாதிப்புக்குள்ளாகிறது. உடம்பு விபத்தை சந்திக்கும் போது மனம் பிரக்ஞையை இழந்து விடுகிறது. இப்படி எல்லாம் நிகழும்போது நான் உண்மையில் எங்கே இருக்கிறேன். நான் என்றால் யார்?

தன்னையறிதலுக்கு பின்னாலே இப்படிப் பெரிய பெரிய கேள்விகள் உள்ளன! இந்த கேள்விகளே சற்று குழப்பமானவைதான். பதில்களோ அதைவிட குழப்பமானவையாக இருக்கின்றன...'

**வா**னதி பத்திரிகை அலுவலகத்தில் ஒரே பரபரப்பு!

காரணம் ஒரு கடிதம்.

'பாண்டியம்மாள் கோட்டை' என்னும் ஊருக்கு போயிருந்த நான் அங்கே பாழடைந்த கோட்டையில் ஆவி நடமாட்டம் இருப்பதாக சொன்னதை வைத்து அங்கே சென்றேன். நிறைய மந்திரவாதிகளின் நடமாட்டத்தோடு அந்த கோட்டைக்குள் நிறைய தவறுகள் நடக்கின்றன. இதை தங்கள் பத்திரிகை ஆய்வு செய்து உண்மை நிலையை உலகுக்கு உணர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்' என்று ஒரு வாசகர் எழுதியிருந்த கடிதம் ஆசிரியரின் மேஜை மேல் இருந்தது.

ஆசிரியர் பிரம்மராஜன் எதிரில் அவரது உதவி ஆசிரியர்களும் அமர்ந்திருந்தனர். அவர்களில் பாண்டிமா தேவியும் இருந்தாள். சரித்திர கால ராணிப் பெயராக அவளது பெயர் இருப்பினும் தேவி என்று சுருக்கமாகவே அவளை எல்லோரும் அழைத்தனர்.

"என்ன தேவி... இந்த கடிதத்தை படிக்கும்போது உங்களுக்கு என்ன தோணுது?"-ஆசிரியர் ஆரம்பித்தார்.

"சிரிப்புதான் சார் வருது..."

"அப்ப நீங்க இந்த ஆவி பேய் பிசாசு எல்லாம் பொய்ங்கற கருத்து கொண்டவர்னு சொல்லுங்க..."

"நான் இவைகளை பத்தி யோசிச்சதே இல்லை சார். யோசிக்க வேண்டிய சந்தர்ப்பமும் இந்த சிட்டி லைஃப்ல எனக்கு ஏற்பட்டதில்லை."

"ஏன் தேவி... கதைகள் சினிமாக்கள்ல இந்த மாதிரி விஷயங்கள பார்த்ததில்லையா?"

"சினிமா-கதை-எல்லாமே கற்பனை. எனவே, நான் சீரியஸா யோசிச்சதில்ல..."



"இப்ப யோசிக்கலாம்தானே?"

"தாராளமா... அதுல எனக்கு ஆட்சேபம் இல்லை..."

-தேவி சொல்லி முடித்தாள். பக்கத்திலேயே இன்னொரு உதவி ஆசிரியர் பெயர் பூபாலன்.

"பூபாலன் உங்க கருத்து..."

"நான் இந்த விஷயத்துல சம்திங் ஏதோ இருக்குன்னு நம்பறேன் சார்..."

"அப்ப நீங்க பேய் பிசாசு இருக்குங்கற கட்சியா?"

"கிட்டத்தட்ட அப்படித்தான்..."

ஆசிரியர் மூன்றாவதாய் புதிதாய் சேர்ந்திருந்த ராஜபாண்டியன் என்பவரிடம் கேட்கத் தொடங்கினார்.

"மிஸ்டர் ராஜபாண்டி! உங்க கருத்து?"

"சார்... இந்த லெட்டரை தூக்கிப் போட்டுட்டு உருப்படியா வேற ஏதாவது வேலை இருந்தா பார்ப்போம் சார். இது ஒரு வீணாப் போன மேட்டர் சார். இருக்குன்னும் சொல்ல முடியாது. இல்லேன்னும் சொல்ல முடியாது. சரியான ரெண்டும்கெட்டான் விஷயம் சார் இது..."

"இது இரண்டும் கெட்டானோ மூணும் கெட்டானோ, ஒரு பத்திரிகையாளனா இதை நான் ஒரு சுவாரஸ்யமான விஷயமா பாக்கறேன்... இந்த மாதிரி விஷயத்துல இறங்கும்போது பல சுவையான புதுப்புது விஷயங்கள் நமக்கு கிடைக்கலாம்கிறது என் அபிப்பிராயம்..."

"அதே சமயம் இதை ரொம்ப கவனமா கையாளணும்... இல்லேன்னா ஆபத்து...."

-பூபாலன் என்கிற நம்பிக்கை சார்ந்த சப் எடிட்டர் சொல்லவும் 'க்ளுக்'கென்று சிரித்துவிட்டாள் பாண்டிமாதேவி. அது பூபாலனையும் கோபப்படுத்தியது.

"என்ன தேவி! நான் பேசினது உங்களுக்கு சிரிப்பா இருக்கா?"

"சிரிக்காம என்ன சார் பண்ண... நீங்க இதை தீவிரவாதிகள் விஷயம் மாதிரி நினைச்சு ஆபத்துங்கற வார்த்தையைப் பயன்படுத்தவும் எனக்கு சிரிப்பு வந்துடுச்சி..."

"உங்களுக்கு அனுபவமில்ல தேவி... அதான் நான் ஆபத்துன்னு சொன்னதை உங்களால சரியா புரிஞ்சுக்க முடியல. என் குடும்பத்துல என் அத்தை ஒருத்தருக்கு பேய் பிடிச்சு அவங்க பட்ட பாட்டை நான் என் கண்ணால பார்த்தவன். கடைசில அவங்க கிணத்துல குதிச்சு தற்கொலை செய்துகிட்டாங்க."

-பூபாலன் குரலில் வருத்தம் இழையோடியது.

"மிஸ்டர் பூபாலன்... அவங்களுக்கு ஏன் மென்ட்டல் டிசாட்ரா இருந்திருக்கக் கூடாது. நீங்க டாக்டர்கள் கிட்ட காட்டினீங்களா?"

"போதும் மேடம்... ஒரு டாக்டர் கிட்ட இல்ல ஒன்பது டாக்டர் கிட்ட காட்டினோம். யாராலயும் எதுவும் பண்ண முடியல. அவங்களே 'இது வினோதமான கேஸ். எங்க மெடிக்கல் ஹிஸ்டரிலேயே இந்த மாதிரி ஒரு கேஸை நாங்க பார்த்தது கிடையாது'ன்னு சொல்லிட்டாங்க..."

"அவங்க நிஜமாலுமே டாக்டர்கள்தானா... இல்ல சும்மா போர்டு போட்டுக்கிட்டு ஊரை ஏமாத்திக்கிட்டிருக்கிற குருப்பா...?



"போதும் மேடம்.. இதுக்காகவாவது உங்களுக்கு பேய் பிடிக்கணும் மேடம்! அப்பதான் உங்களுக்கு என் வருத்தமும் நான் சொல்றதுல இருக்கற உண்மைகளும் புரியும்..."

-அவர்கள் இருவருக்கும் வாக்குவாதம் முற்றி சண்டையில் போய் முடியும் போல் இருக்கவே, ஆசிரியர் குறுக்கிடத் தொடங்கினார்.

"ஸ்டாப்... ஸ்டாப்.. பேச்சு எப்பவும் பேச்சாவே மட்டுமே இருக்கணும். கருத்து மாறுபாடு இருக்கலாம். ஆனா, சண்டை கூடாது.

"பின்னே என்ன சார்... இவங்க அசட்டு தைரியத்துல பேசறாங்க சார்! எப்பவும் அனுபவம்கறது பெரிய விஷயம் சார். நான் அனுபவப்பட்டவன் சொன்னா கேட்டுக்கணும். அதை விட்டுட்டு..."

"ஸாரி மிஸ்டர் பூபாலன்... நீங்க இவ்வளவு தூரம் ஃபீல் பண்ணுவீங்கன்னு எனக்கு தெரியாது. ஐ ஆம் வெரி ஸாரி..."

-பாண்டிமாதேவி மன்னிப்பு கோரினாள்.

"தேவி.. நீங்க மன்னிப்பெல்லாம் கேட்க வேண்டாம். இந்த விஷயத்துல களத்துல இறங்குங்க. இப்பவே நீங்க அந்த பாண்டியம்மா கோட்டைக்குப் போங்க. ஒரு பத்திரிகையாளரா அங்க உங்களோட சாதுர்யத்தை காட்டி உண்மை நிலவரம் என்னங்கறத வாசகர்களுக்கும் எழுதுங்க..."

-ஆசிரியரின் கட்டளையை பாண்டிமாதேவியாலும் தட்ட முடியவில்லை.

"ரைட் சார்... இன்னிக்கே நான் கிளம்பறேன்" என்றாள்.

"துணைக்கு நீங்க பூபாலனை கூட்டிக்கிட்டுப் போங்க..."

"ஐயோ! வேண்டாம் சார்.. இவர் சொன்ன மாதிரி நான் தைரியமா இந்த விஷயத்துல இறங்கி நல்ல அனுபவத்துக்கு ஆட்பட விரும்பறேன்."

"இல்ல தேவி... என்ன இருந்தாலும் நீங்க ஒரு பெண். உங்களுக்குன்னு சில ரெஸ்ட்ரிக்ஷன்ஸ் இருக்கு.."

"சார்.. இப்படி ஆண் பெண்ணுன்னு பிரிச்சுல்லாம் வேலை விஷயத்துல பார்க்க வேண்டாம். உங்களால முடியற அவ்வளவும் எங்களாலயும் முடியும். பர்ட்டிகுலரா எப்ப நீங்க இப்படிப் பேசிட்டீங்களோ இனி நான் தனியா போய் என் கடமையைச் செய்யறதுலதான் எனக்கு மதிப்பும் மாயாதையும் இருக்கு."

-பாண்டி மாதேவி தீர்மானமாக பேசினாள்.

"மேடம்... தயவுசெய்து நான் சொல்றத கேளுங்க. அந்த பாண்டியம்மாள் கோட்டை ஒரு விவகாரமான ஊர்! பழையனூர் நீலியை மிஞ்சின விஷயங்கள்லாம் அங்க இருக்குன்னு நான் கேள்விப்பட்டிருக்கேன்..."

"மிஸ்டர் பூபாலன்... ப்ளீஸ்-நீங்க இங்க உங்க டேபிள் ஒர்க்கைப் பாருங்க சார்-நான் நாளைக்கு அங்க இருக்கேன். எனக்கு ட்ரெய்ன் டிக்கெட்டுக்கு ஏற்பாடு செய்யுங்க..."

"ரைட்... இரும்மா இப்பவே ட்ராவல் ஏஜெண்ட் கிட்ட கேட்டுட்றேன்..."-ஆசிரியர், மேனேஜர் மூலமாக ட்ராவல் ஏஜெண்ட்டை தொடர்பு கொள்ளவும், ஏஜெண்ட் 11 மணிக்கு ராமேஸ்வரம் புறப்படும் ஒரே ஒரு ரயிலை சொல்லி, அதிலும் ஒரே ஒரு டிக்கெட் மட்டுமே



இருக்கிறது. விரைவாக சொன்னால் டிக்கெட் புக் செய்து விடுவதாக கூற, "இது என்னய்யா கேள்வி.. புக் பண்ணிடுங்க" என்றார் எடிட்டர். அந்த ரயில் முதல் நாள் கணேஷ் மானாமதுரைக்கு வந்த அதே ரயில்! அதே நள்ளிரவு நேரம். அதே ஆட்டோக்காரர்கள். குதிரை வண்டிக்காரன் என்கிற நிலைப்பாடு. இது எதையும் பற்றி விசாரிக்காமல் ஆசிரியர் டிக்கெட் போட்டுவிடச் சொல்ல, அப்போதே பாண்டிமாதேவியும் ஆபீஸை விட்டு கிளம்பினாள்.

"தேவி.. எப்பவும் செல்போன் ஆன்ல இருக்கட்டும். டவர்ல ஏதாவது பிராப்ளம்னா லேண்ட் லைன்ல தொடர்பு கொள்ள தவறக்கூடாது உங்கிட்ட நம்ம பத்திரிகையோட அடையாள அட்டைல இருந்து டிஜிட்டல் ரெக்கார்டர், கேமிரான்னு எதுவும் மிஸ் ஆகக் கூடாது. கவனம்..." என்றார்.

"நோ ப்ராப்ளம் சார்.. நான் பார்த்துக்கறேன் சார்..."

என்றவளாக பூபாலனையும் ஒரு பார்வை பார்த்து ஒரு சிரிப்பு சிரித்துவிட்டு கிளம்பினாள் பாண்டிமாதேவி!

பூபாலன் முகத்தில் ஒரு பெருமூச்சு!

**வீடு திரும்பிய கணேஷுக்கு காலை டிபன் காத்திருந்தது.**

"தம்பி! டிபன் சாப்ட்டுட்டு பிறகு மத்த விஷயங்கள் பத்தி பேசுவோமே..." என்று சிவஞானமும் சொன்ன போது கணேஷால் மறுக்க முடியவில்லை.

அவர்கள் திரும்பியிருந்த நிலையில் பந்தல் முழுவதுமாக பிரிக்கப்பட்டிருந்தது. வீட்டிலும் நிச்சயதார்த்தக் கூட்டம் என்று பெரிதாக யாரும் இல்லை.

எல்லாமே வெகு இயல்பாக காட்சி தந்தது. யாரிடமும் நிச்சயதார்த்தம் நின்றுபோன பதட்டமோ வருத்தமோ தெரியவில்லை. அதுவே கணேஷ் வரையில் வெகு ஆச்சரியமான ஒன்றாகத்தான் இருந்தது.

வீட்டின் அக்னி மூலைப் பக்கத்தில் தரையிலேயே அமர்வதற்கு ஒரடி அகலப் பாய் விரித்து தையல் இலையைப் போட்டு அதில் எள் உருண்டைகள் சிலவும் வைக்கப்பட்டிருந்தன. கணேஷை அங்கே சென்று அமர்த்தி தானும் அருகில் அமர்ந்து கொண்டார் சிவஞானம்.

"தம்பி! இனிப்பு எடுத்துக்குங்க. அப்புறம் பால் வரும்! பாலைக் குடிச்ச பிறகுதான் பலகாரம்" என்று அவர் சொன்னது மேற்கொண்டு ஆச்சரியம் தந்தது.

"இது என்னங்க வழக்கம்?"

வீடுங்களுக்கு உறவுக்காரங்களோ வேண்டப்பட்டவங்களோ வந்தா முதல்ல எள் உருண்டை. அப்புறம் சும்மா ஒரு மடங்கு பால்-பொறவுதான் திடமா பலகாரம்... அது வழக்கம் போல."

"எள்ளு பாலுங்கறது என்ன கணக்கு?"

"தெரியல தம்பி... பாண்டியம்மாளைதான் கேட்கணும். அவ தெய்வமாயிட்டா. அவதான் அப்பப்ப யார்மேலயாவது வந்து அருள்வாக்கும் சொல்வா. அப்படி அவ சொன்னதுதான் இப்பவும்.

எள்ளையும் பாலையும் எங்க கையால சாப்பிட்டவங்க எங்களுக்கு தப்பு நினைக்க மாட்டாங்கங்கறது ஒரு நம்பிக்கை. அடுத்து எங்க ஊர் சாபம் அவங்களையும் எதுவும் செய்துடக்கூடாதே..? அதுக்காகவும் இப்படி இருக்கலாம்..."



அவர் சொல்ல, அவன் சாப்பிட்டு முடித்தான். நடுவில் வயல்காட்டில் ஏதோ தகராறு என்று அவரை மட்டும் சிலர் அழைத்துச் சென்றனர்.

புறப்பட்டுப் போகும்போது, "தம்பி கொஞ்சம் ஓய்வு எடுங்க. இதோ வந்துடறேன்" என்றவராக அவர் கிளம்பிச் சென்றார்.

அவனுக்கும் இரவெல்லாம் கண்விழித்த களைப்பும் அடுத்தடுத்து ஏற்பட்ட சம்பவங்களின் அதிர்வாலும் மனதும் உடம்பும் அசந்து போயிருந்தன. வீட்டுக்குள்ளும் யாரும் இல்லாத ஒரு நிலை.

அப்போது அவனைக் கலைப்பது போல கால் கொலுசு சப்தம்.

அவன் எதிரில் தேன்மொழி வந்து நின்றாள். ஏனோ நேரே பார்க்க திராணியில்லாதவள் போல தலையைக் குனிந்து கொண்டாள். பேச்சு மட்டும் வெளிப்படத் தொடங்கியது.

"உங்களுக்கு ரொம்ப நன்றி-இந்த உதவியை நான் எப்பவும் மறக்க மமாட்டேன்...."

"அப்படி நான் என்ன இதவி செய்துட்டேன்..."

"நிச்சயத்தை சாமர்த்தியமா தடுத்துட்டீங்களே..."

"நான் தடுக்கலை.... சில பொய் சொல்லி தள்ளி தான் போட்டுருக்கேன்."

"தள்ளினா என்ன... தள்ளாட்டி என்ன.... அது நடக்காதுங்கறதுதானே யதார்த்தம்...."

"இந்த யதார்த்தம் உங்க அப்பா அம்மாக்கு தெரியாதா? அப்புறம் ஏன் அவங்க மட்டும் ஏற்பாடு செய்தாங்க...."

"அவங்களுக்கு ஒரு குருட்டு நம்பிக்கை. ஆனா, பாவம்ல அந்த மாப்பளைக்காரரு..."

"எந்த வகைல?"

"எல்லா வகையுலம்தான்... என் கூட படிச்சவங்க மொத்தம் நாலு பேர்... நாலு பேர்ல ஒருத்திகூட இப்ப புருசன்கூட வாழலை! அதுல இரண்டு பேர் புருசங்க விபத்துலயே செத்துப் போயிட்டாங்க. ஒருத்தன் ஓடியே போய்ட்டான். இன்னொருத்தன் ஜெயில்ல இருக்கான். இதுதான் எங்க ஊர் பொண்ணுங்களோட கல்யாண ராசி-அதனாலதான் உங்க நண்பருக்கு போன் பண்ணி, தயவுசெய்து வந்து என்னை கட்டிக்கிட்டு உங்க வாழ்க் கையைக் கெடுத்துக்காதீங்கன்னு சொல்லி போன் செய்தேன். சொன்னாரா?"

"போன் செய்து பேசினேன்னு சொல்லலை- ஆனா உனக்கு விருப்பமில்லேங்கறத சொன்னான்..."

"எப்படியோ அவர் தப்பிச்சார்... அது போதும் எனக்கு?"

"அதெல்லாம் இல்ல... வெள்ளிக்கிழமை அவன் வரத்தான் போறான். நிச்சயமும் நடக்கத்தான் போகுது."

"ஐயோடா... வேண்டாங்க. நீங்களும் இங் இருக்காதீங்க. கிளம்பிப் போயிடுங்க."

"ஏன்- எனக்கும் ஏதாவது ஆயிடும்கற பயமா?"

"ஆமாம்- எனக்கு நினைவு தெரிஞ்சு இந்த ஊருக்கு பொண்ணு பார்க்க வந்தவங்க யாரும் உருப்படியா திரும்பிப் போனதேயில்ல..."

"அப்ப உன் அப்பா எந்த நம்பிக்கையில இந்த நிச்சயதார்த்தத்தை ஏற்பாடு செய்தார்... உனக்கு இருக்கற பயம் அவருக்கு இல்லையா?"



"அப்பாவுக்கு பாண்டியம்மா காப்பாத்துவாங்கற நம்பிக்கை. நான்கூட பாண்டியம்மாவை அந்த அளவு கும்பிட்டிருக்க மாட்டேன். தினம் அவர் பாண்டியம்மா கோவிலுக்குப் போயிடுவார். அவருக்கு அவ மேல அவ் வளவு நம்பிக்கை."

"அந்த நம்பிக்கை ஏன் உனக்கு மட்டும் இல்லை..."

"அப்பாவை பொறுத்தவரை என்னைக் கட்டிக் கொடுத்து இந்த ஊரை விட்டே அனுப்பிடணும்கற வெறியில இப்படி எல்லாம் நடந்துக்கறாரு. எனக்கோ அப்படி இந்த ஊரை விட்டுப் போயே தீரணும்கற எண்ண மெல்லாம் இல்லை. என் ஊர்ப் பெண்கள் யாருமே வாழாதபோது நாம் மட்டும் எப்படியாவது வாழ்ந் துடணும்னு நினைக்கறது தப்பில்லையா?"

-தேன்மொழியின் கேள்வியில் உள்ள நியாயமும் கணேஷை சற்று சிலிர்க்க வைத்தது. அவளை முதல் முறையாக மிகுந்த ஈடுபாட்டுடனும் மதிப்பாகவும் பார்த்தான்.

"என்னண்ணே! அப்படிப் பாக்குறீங்க... நான் சொல்றதுல ஏதாவது தப்பு இருக்குதா?"

-அவள் அண்ணன் என்று அவனை உறவுமுறைப் படுத்திக் கொண்டதும் அவன் மனதைத் தொட்டது.

"நீ சொல்றதுல ஒரு தப்பும் இல்லம்மா... ஆனா உங்களோட இந்த நம்பிக்கையை இந்த உலகம் எவ்வளவு பெரிய முட்டாள்தனமா நினைக்கும்கறத யோசிச்சு பார்த்துருக்கீங்களா?"

"அப்படி நினைக்கறவங்கள எங்க ஊர்ல வந்து பார்க்கச் சொல்லுங்க. அப்பதான் அவங்களுக்கும் உண்மை புரியும்..."

"நானும் அப்படி நினைக்கற ஒருத்தன்தான். நேத்து ராத்திரி எனக்கும் இந்த ஊர்ல சில அனுபவங்கள். அவ்வளவு ஏன்? என்னையே நான் வித்தியாசமா உணர்ந் தேன். அதெல்லாம் பிரமையா? இல்ல எனக்கு ஏற்பட்ட மனபாதிப்பான்னு என்னால பிரிச்சு பார்க்க முடியல.

எனக்கு தெரிஞ்சு இப்பதான் நான் இந்த ஊருக்கே வந்திருக்கேன். ஆனா, இங்க உள்ள பல இடங்கள் எனக்கு முந்தியே பரிச்சயமானது மாதிரி ஒரு உணர்ச்சி. என் காதுலயும் வினோதமான குரல்கள்!

சுருக்கமா சொல்லப்போனா எனக்கு ஒண்ணும் புரியல. ஒண்ணு மட்டும் நிச்சயம்-இங்க நான் தெரிஞ் சுக்கவும் புரிஞ்சுக்கவும் நிறைய விஷயங்கள் இருக்கு. என் உள் மனசும் அதை எல்லாம் விட்டுடாதேங்குது..."

-கணேஷ் தன் உணர்ச்சிகளை வார்த்தைப்படுத்தி முடித்தான்.

அவள் அகண்ட விழிகளும் ஆச்சரிய உணர்வுமாக அவனை வெறித்தாள். அப்படியே, "அப்ப நீங்க இன் னிக்கு உங்க ஊருக்கு திரும்பிப் போகப் போற தில்லையா?" என்றும் கேட்டாள்.

அவன் முகத்தில் மறுப்பாக ஒரு பாவனை!

"ஐயோ.. நீங்க இங்க எங்க இருப்பீங்க?"

"இங்கதான்... ஏன் என்னை இருக்க விடமாட் டீங்களா?"

"சேச்சே. நான் அந்த அர்த்தத்துல சொல்லலை. ஆனா, நீங்க தேவையில்லாம ரிஸ்க் எடுக்கறீங்க?"

"இல்லம்மா.. நான் தேவையான ரிஸ்க் தான் எடுக்க றேன். நல்லவேளையா 3 நாள் லீவு போட்டுட்டுதான்



வந்தேன். இப்ப அது எனக்கு வசதியா போச்சு..." என்றான் கணேஷ்.

வாசல்பக்கமாய் சிவஞானமும் திரும்பி வந் திருந்தார்.

வரும்போதே, "தம்பி! உங்கள நான் நல்லவிதமா பார்த்துக்கணுமாம்.. நீங்க எங்களுக்கு விமோசனம் தர வந்திருக்கற சாமியாம்.. தேனம்மா பாட்டி தேடிவந்து சொல்லிட்டுப் போனாங்க" என்றார்.

அவனும், "நானும் ஒரு நாலு நாள் இங்க இருந்து என்ன ஏதுன்னு பாக்காம போகப் போறதில்ல" என்றான்.

"நாலு நாள் என்ன.. இனி நீங்க காலம்பூரா எங்க ஊர்லதான் இருக்கப் போறீங்க. தேனம்மா பாட்டி சொல்லிட்டா. பாட்டி சொல்லிட்டா அந்த பாண்டி யம்மாளே சொன்ன மாதிரி" என்றவர், "பாண்டி யம்மாவும் புறப்பட்டுட்டா... வந்துகிட்டே இருக் கான்னாங்க... எந்த அர்த்தத்துல சொன்னாங்கன்னு தெரியல..." என்றபோது தேன்மொழி முகத்தில் ஒரு ஆச்சரிய அதிர்வு!

# 6

**'தன்னை ஒருவன் அறியும்போது அவன் முதலில் புரிந்துகொள்வது தனது குணப்பாடுகளை தான்.... அத்துடன் பரம்பரை பரம்பரையாக தொடர்ந்து வரும் சில புதிரான விஷயங்களை.... ஒருவரின் நடை உடை பாவனை எல்லாமே அவரது கொள்ளுத்தாத்தாவை போலவே இருந்ததாம். அந்த கொள்ளுத்தாத்தாவோடு பழகிய ஒருவர் பார்த்து**

வியந்து சொன்னபோது ஒவ்வொருவருக்குள்ளும் அவர்களது முன்னோர் தொடர்புகள் ஏதோ ஒரு விதத்தில் தொடர்வதை உணர முடிகிறது. உடல் ரீதியான தொடர்புகள் மட்டுமின்றி, செய்த கருமங்களோடும் நமக்கு தொடர்பு ஏற்பட்டுவிடும். அதை புரிந்துகொள்வதில்தான் நமது திறம் உள்ளது. கர்மங்களை ஒரு திடப் பொருளை இரு கண்களால் பார்ப்பது போல் எல்லாம் பார்த்து உணர முடியாது. அனுபவத்தில் உள்ளுணர்வால் மட்டுமே அறிய முடியும். ஒரு குடும்பத்தில் மிக்க இளம்வயதிலேயே ஒரு பெண் விதவையாகிவிட்டாள். பூவும் பொட்டுமின்றி அந்த பெண் காலமெல்லாம் அமங்கலியாக வாழ்ந்த விதம்கூட கரும வினை சார்ந்ததே! அதை பின்னோக்கி சென்று நம் முன்னோர்கள் வாழ்ந்த விதத்தை அறிவதும் தன்னையறிவதில் அடங்குகிறது.

நள்ளிரவு நேரம்!

அந்த ரயில்வண்டியில் இருந்து உதிர்ந்தாள் பாண்டிமாதேவி... பயணம் செய்யும்போது இலகுவாக இருப்பதற்காக ஜீன்ஸ் அணிந்து டி ஷர்ட் தரித்திருந்தாள். போனிடைல் ஹேர் ஸ்டைலோடு ஒரு லெதர் பேக் ஒன்றை தோளில் சுமந்தபடி பிளாட்பாரத்தை கடந்து வெளியே வந்தவள் முகத்தில் ஒரு வித ஏமாற்றம்.

இப்படி நள்ளிரவில் ரயில் வந்து சேரும் ஊராக இது இருக்கும் என்பதே அப்போதுதான் அவளுக்கு தெரிந்திருந்தது. வேகமாக முடிவெடுத்து புறப்பட்டதன் விளைவு... ரயில் டிக்கெட்டுகளை பொறுத்தவரை அதுவும் கல்லூரி ஸீட் போல மாறி விட்டது. ரிசர்வேஷன் கவுண்டர்கள் பத்து நிமிடங்களில் ஃபுல்லாகி மூடப்பட்டு



விடுகின்றன. எனவே, டிக்கெட் கிடைத்தால் அதை அதிசயமாக கருத வேண்டியுள்ளது.

இன்றைய காலம் அப்படி!

வெகு வேகமான மாற்றம்... யாரைப் பார், ஒரு காரோடுதான் வருகிறார்கள். குறைந்தபட்சம் ஒரு டூவீலர். எங்கே பார் ஏ.டி.எம். சென்டர்கள். எந்த ஒரு விஷயமும் அறியப்படுவதற்கு அரை நிமிட நேரம்கூட அதிகம். செல்போன், உலகின் எல்லா மூலையையும் இழுத்துக் கட்டி தொடர்பேர்ப்படுத்தி தந்துவிடுகிறதே!

ஐந்து ஆண்டுகளுக்கு முன்புகூட இப்படி ஒரு நிலைப்பாடு இல்லை. இது நல்ல மாற்றமா... தீய மாற்றமா? ஏதோ ஒன்று... மொத்தத்தில் மாற்றம்!

அதை அடிக்கடி நினைத்து அசை போடுவாள் பாண்டிமாதேவி. அப்போதும் நினைத்துக் கொண்டாள். ஸ்டேஷனுக்கு வெளியே வந்தவளை சில ஆட்டோக்காரர்கள் அதிசயமாக பார்த்தனர்.

ஒரு பெண் ஆண் போல தனியாக வந்திருப்பதே அவர்கள் வரையில் அதிசயம்தான்!

"எங்கம்மா போகணும்?"

"பாண்டியம்மா கோட்டைக்கு..."

இந்த நேரத்துலயா?"

"அந்த ஊருக்குப் போக அப்ப ஏதாவது நேரம் காலம் இருக்கா என்ன?"

"என்னம்மா அப்படிக் கேட்டுட்டீங்க... நீங்க இப்பதான் முதல் முதலா வர்றீங்களா?"

"ஆமாம்."

"அதான் இப்படிக் கேட்டுட்டீங்க.."

"அப்ப இப்ப போக முடியாதா?"

"போகலாம்.. ஆனா சார்ஜ் கொஞ்சம் கூட ஆகும்.."

"இங்க இருந்து அது எவ்வளவு தூரம்?"

"என்ன ஒரு பதினைஞ்சு இருபது கிலோ மீட்டர் இருக்கும்."

"கரெக்டா ஒன்பதரை கிலோ மீட்டர்னு மேப்ல பார்த்தேனே.."

"ஒன்பதரையா.. அது.... அது யார் சொன்னது? ரோடும் சரியில்ல, ஒண்ணும் சரியில்ல-சுத்திச் சுத்திப் போகணும்மா.."

"சரி, ரேட் எவ்வளவு?"

"ஐந்நூறு ரூவா கொடுங்க.."

"மை காட்... ஃபைவ் ஹண்ட்ரட்டா? எங்க சென்னை ஆட்டோக்காரங்கள ரொம்ப நல்லவங்க ளாக்கிடுவீங்க போல இருக்கே.."

"பெட்ரோல் எவ்வளவு விலை விக்குது தெரியு மாம்மா?"

"தெரியுமே.. நாற்பத்தி ஏழு ரூபா சில்லறை.. ஒரு லிட்டருக்கு மகா மோசமா ஓட்டினாலும் 20 கிலோ மீட்டர் நிச்சயம் தரும். போகவர ஒரு லிட்டர் பெட்ரோல் அம்பது ரூபாவே வெச்சுக்கோ.. வண்டி தேய்மானத்துக்கு ஒரு பத்து ரூபா. அதிகபட்சம் இரண்டு மணி நேரம் தான் ரன்னிங் டைம். அதுக்கு லேபர் காஸ்ட் ஒரு ஐம்பது ரூபாயே வை. ஐம்பது ஐம்பது நூறு+ ஒரு பத்து.... நூத்து



பத்து ரூபா... மீட்டர் போட்டு ஓட்டினா இதுல பாதிகூட வராது... ஆனா, நீங்க அஞ்சு மடங்கு கூட கேக்க றீங்க.. சபாஷ்! இப்படித்தான் இருக்கணும்."

-அவள் போட்ட போடில் அவர்கள் வாயைப் பிளந்தனர்.

ஒரு ஆட்டோக்காரன் அவள் அருகில் வந்து 'அம்மா.. உங்க புள்ளி விவரக்கணக்கெல்லாம் இருக் கட்டும். போகும் போதோ, இல்ல வரும் போதோ பேய் பிசாசுங்க போட்டு தாக்கினா என்ன பண்ணுவீங்க. எங்க புள்ள குட்டிங்கள யார் காப்பாத்துவா..."

"அப்படியா.. அப்ப இப்ப உங்களோட வந்தா பேய் பிசாசுங்கள பார்க்க முடியுமா... வெரிகுட்.. வெரிகுட்... புறப்படுங்க முதல்ல. நான் வந்துருக்கறதும் அந்த பேய் பிசாசுங்களை எல்லாம் பார்க்கணும், அவங்கள எல்லாம் என் பத்திரிகைக்காக பேட்டி எடுக்கணும்னுதான்.."

-பேச்சோடு பேச்சாக அவள் ஆட்டோவிலும் ஏறி அமர்ந்தாள்.

"மேடம்! நீங்க எந்த பத்திரிகை?"-ஆட்டோ காரன் கேட்டான்.

"வானதி வார இதழ்.."

"ஓ.. அந்த பத்திரிகையா... போன வாரம்கூட ஒரு கற்பழிப்பு கேஸை விலாவாரியா போட்டு, கற்பழிச்ச நபரையும் போட்டு வாங்கு வாங்குன்னு வாங்கியிருந் தீங்களே.."

"ஓ! நீங்க வானதியோட வாசகரா...?"

"ஆமாம் மேடம்! நீங்க காசே தரவேண்டாம். ஏறுங்க மேடம். நான் கூட்டிக்கிட்டுப் போறேன்..."

-அந்த ஆட்டோகாரர் ஆட்டோவில் பாய்ந்து ஏறிக் கொண்டார். ஆட்டோவும் புறப்பட்டது. அந்த ஆட்டோவை ஒரு அம்பாஸடர் காரும் பின்தொடரத் தொடங்கியதுதான் ஆச்சரியம்!

அம்பாஸடருக்குள் இரண்டு பேர்!

ஒருவன் செல்போனில் யாருடனோ பேசத் தொடங்கியிருந்தான்.

“தலைவா... அந்த பொண்ணு பாண்டியம்மா கோட்டைக்கு ஆட்டோவுல போய்க்கிட்டிருக்கா.. நாம எழுதுன லெட்டர் நல்லாவே வேலை செய்துருக்கு. அந்த பத்திரிகை ஆசிரியர் இந்த பொண்ணை இன்னிக்கே அனுப்பிட்டான். இன்னும் 10 நிமிஷத்துல ஆட்டோவை நடுவழியில மறிச்சு அந்த பொண்ணையும் கோட்டைக்கு தூக்கிட்டுப் போய் கழுத்தை நெரிச்சே கொன்னுட்டு உடனே உங்களுக்கு தகவல் தரோம்...”

“பாத்து... ஆட்டோக்காரன் மூலமா நாமதான் கொலை செய்தோம்கறது தெரிஞ்சிடப் போகுது...”

“நாங்க பேய் வேஷம் போட்டுக்கிட்டு ஆட்டோவை மறிக்கப் போறோம். அவன் எங்கள பாத்த உடனேயே துண்டக் காணோம், துணியக் காணோம்னுல்ல ஓடப் போறான்...”

“வெரிகுட்... காரியத்தை கச்சிதமா முடியுங்க. அந்த பத்திரிகையும் சரி, அந்த பொண்ணும் சரி, நம்ம விஷயத்துல வம்பு இழுத்துக்கிட்டே இருக்காங்க.. நாம எங்க யார்கிட்ட எவ்வளவு ஊழல் பண்றோம்னு நோட்டம் போடறதும் அதை பத்தி எழுதறதுமே அந்த பத்திரிகைக்கு வழக்கமா போச்சு. இந்த பொண்ணோட சாவு அந்த பத்திரிகை ஆசிரியரை அப்படியே சைலண்டாக்கிடணும்.”



“கவலையேபடாதீங்க.. அந்த பொண்ணோட சாவுக்கு பாண்டியம்மா கோட்டை பேயும் பிசாசும்தான் காரணம், பத்திரிகை ஆசிரியர் ஒரு பொம்பளைன்னும் பார்க்காம ரிஸ்க் எடுக்க வெச்சதுதான் காரணம்னும் நாளைக்கே இந்த தமிழ்நாடே பேச வைப்போம்.-ஆட்டோவை பின்தொடர்ந்தபடியே அந்த காருக்குள் அவன் பேசியபடியே வர, ஒரு கட்டத்தில் ஆட்டோவை கார் முந்திக் கொண்டு வேகமாக சென்று ஆட்டோவின் கண்களை விட்டும் மறைந்து விட்டது.

“இந்த ராத்திரி நேரத்துல எதுக்கு இவ்வளவு வேகமா போறாங்க இவங்க...” என்று பாண்டிமா தேவியும் கோபப்பட்டாள்.

ஆட்டோகாரனிடம் நல்ல உற்சாகம்.

“மேடம்! நீங்க எதுக்கு வந்துருக்கீங்க மேடம்?”

“எதுக்குன்னா... பாண்டியம்மா கோட்டைன்னாலே எல்லோரும் பயப்படறாங்களே... அதுக்கு என்ன காரணும்னு தெரிஞ்சுக்கதான்....”

“என்ன மேடம் நீங்க... பேய் பிசாசு நடமாட்டமுள்ள கோட்டைங்கறதுதான் காரணமே...”

“அப்ப பேய் பிசாசுன்னு அங்க நிறைய இருக்கு அப்படித்தானே?”

“ஆமாம் மேடம்.. அப்படித்தான் சொல்றாங்க.”

“ஓ.. மத்தவங்க சொன்னதை வெச்சுதான் என்கிட்ட சொல்றீங்களா... உங்களுக்கா நேரடி அனுபவமெல்லாம் கிடையாதுன்னு சொல்லுங்க.”

“நேரடி அனுபவமா... சரிதான்! உங்களுக்காகதான் நைட்டைம்னும் பாக்காம வரேன். நேத்து ராத்திரிகூட

ஒருத்தர் வந்தார். உங்கள மாதிரியே சின்ன வயசு, நாங்க யாரும் போகலையே. கடைசில அவர் குதிரை வண்டியில ஏறிக்கிட்டுப் போனாரு."

"ஓ... அப்படியா? யார் அவர்னு தெரியுமா? அவரும் எதாவது பத்திரிகைக்காரரா?"

"சேச்சே... அவரை பார்த்தா அப்படி எல்லாம் தெரியல. பாண்டியம்மா கோட்டைல ஏதோ விசேஷத்துக்கு வந்தவர் மாதிரி தெரிஞ்சது."

"அப்ப நேத்து இதே ரயில்ல இதே இடத்துக்கு ஒருத்தர் வந்து அவரும் பாண்டியம்மா கோட்டைக்கு போயிருக்காங்கன்னு சொல்லுங்க."

"ஆமாம் மேடம்... இருந்தாலும் மேடம்! உங்களுக்கு ரொம்பவே துணிச்சல் மேடம். நான் தெரியாமதான் கேட்கறேன். நிஜமாலுமே பேய் பிசாசுங்க இருந்தா நீங்க என்ன மேடம் பண்ணுவீங்க?"

-ஆட்டோகாரன் நியாயமான கேள்வியைத்தான் கேட்டான். பாண்டிமாதேவியும் குறுநகையோடு, "அப்படி மட்டும் இருந்துட்டா ஒரே அமுக்குதான் வர்ற வாரம் எங்க பத்திரிகை அட்டை படமே அவங்கதான்..." என்று சொல்லிட எதிரே இருட்டான தார் சாலையில் மயானத்துக்கும் சற்று முன்பான இடத்தில் எலும்புக்கூடு ஒன்று நின்றுகொண்டிருந்தது!

ஆட்டோகாரன் எலும்புக்கூட்டை பார்த்து அப்படியே விக்கித்துப் போய் வண்டியை படுவேகமாக பிரேக்கடித்து நிறுத்தினான். "மேடம்... எலும்புக்கூடு..."-என்று அவன் உதட்டிலும் ஒரு பயந்த அலறல். பாண்டிமாதேவியும் பார்த்தாள்! அவள் பார்த்திட, அந்த எலும்புக்கூட்டுக்கு நேர்மேலே ஒரு மரக்கிளை!



சரேல் என்று யாரோ கட்டி மேலே இழுத்தது போல அந்த எலும்புக்கூடு மேல் ஏறி மரக்கிளைக்குள் மறைந்தும் போனது.

"மேடம்... என்ன மேடம் இது! வாங்க மேடம் திரும்பிப் போயிடுவோம்..."-என்று வண்டியை ஒடித்துத் திருப்ப முனைந்தான் டிரைவர்.

"திருப்பாதீங்க... இருங்க வந்துடறேன்..." என்று பாண்டிமாதேவி ஆட்டோவை விட்டு இறங்கி எலும்புக்கூடு நின்றுகொண்டிருந்த இடம் நோக்கி நடந்தாள்.

"ஐயோ, மேடம்! வேண்டாம்..."-திரும்பவும் அலறினான் டிரைவர். அவள் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை.

கண் எதிரில் தெரிந்த எலும்புக்கூடு நேராக தன்னை நோக்கி வராமலும், பக்கவாட்டில் நடந்து போகாமலும் மேலே போனது அவளுக்கு யாரோ மேல் இருந்து கொண்டு கம்பியில் எலும்புக்கூட்டை கட்டி பூச்சாண்டி காட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நொடியில் புரியவைத்து விட்டது!

ஆட்டோகாரன் வெறித்தபடியேதான் இருந்தான்.

திடும்மென்று அவன் ஆட்டோவில் பின் ஸீட்டில் பாண்டிமாதேவி அமர்ந்த இடத்தில் ஒரு வெட்டப்பட்ட ஆட்டுத்தலை வந்து விழுந்தது. அதற்கு மேல் ஆட்டோகாரனுக்கு அங்கு நிற்க தைரியமில்லை. ஆட்டோவை புயல் வேகத்தில் கிளப்பிக் கொண்டு திரும்பிச் சென்றான். பாண்டிமாதேவியின் பேச்சில் இருந்து கேமிரா வரை எல்லாம் அத்தோடு போனது. பாண்டிமா

தேவியும் திரும்பிப் பார்த்து "ஏய்ய்..." என்று முடிந்த தூரத்துக்கு கத்திப் பார்த்தாள். அந்த ஆட்டோ இருளில் கரைந்தது போல மறைந்தே போய் விட்டது.

திடும்மென்று ஒரு கும்மிருட்டுக்குள் சிக்கிக் கொண்டது போல பாண்டிமாதேவி உணர்ந்தபோது மேலே சென்ற எலும்புக்கூடு அப்படியே அவள் மேல் கட்டிக் கொள்வது போல வந்து விழுந்தது. அவளும் என்னதான் தைரியமிக்கவளாக இருப்பினும் 'வீல்' என்கிற அலறலுடன் அந்த எலும்புக்கூட்டை ஒரு உதறு உதறித் தூக்கி எறிந்துவிட்டு அந்த சாலை மேல் ஓடத் தொடங்கினாள்.

எதிரில் பாண்டியம்மாள் கோட்டை!

கோட்டையின் கிழக்கு பாகத்தை நோக்கி சென்றது அந்த சாலை! அங்கிருந்து வலது பக்கம் திரும்பி அப் படியே மேற்கு நோக்கி சென்று பின் அங்கிருந்து திரும்பினால் ஊர் வரும்!

பாண்டிமா தேவியின் ஓட்டத்தை தொடர்ந்து மரத்தின் மேல் இருந்து கோரமான பிசாசு போன்ற வடிவமைப்பு கொண்ட மாஸ்க்கினை அணிந்த இருவர் தொப்பென்று சாலையில் குதித்தனர். உள்ளடக்கமாக அவர்கள் வந்த அம்பாஸடர் கார் பக்கவாட்டில் ஒரு மரத்தின் பின்னால் நின்றுகொண்டிருந்தது. அவர்கள் இருவரும் பாண்டிமாதேவியைக் கொன்று போட்டு விடும் வெறியோடு அவள் போன திசையில் துரத்திக் கொண்டு ஓடத் தொடங்கினர்!

பாண்டிமாதேவி கிழக்கு கோட்டையின் மையக் கதவின் மேல் முட்டிக் கொண்டு நின்றாள். கதவு கொஞ்சம் போல திறந்திருந்தது. ஒரு நபர் உள் நுழையலாம் என்னும் அளவு!



அவளுக்கும் அந்த இடைவெளி நுழைந்துவிடப் போதுமானதாக இருந்தது. சரேலென்று உள் நுழைந்தவள் கதவை இழுத்து மூட முயன்றாள். ஆனால், அவளுக்கிருக்கும் பலத்தின் முன்னால் அது முடியாமல் போனது. எதிரில் இருவர் அவளை நோக்கி ஓடிவரும் சப்தமும் கேட்டது. துளியும் விவேகமில்லாமல் தேடி வந்து ஆபத்தில் சிக்கிக் கொண்டது போல உணர்ந்தவளுக்குள் சட்டென்று ஒரு மின்னல்!

இலகுவாக அந்த கதவை சாத்தி மூட ஒட்டிய சுவரில் ஒரு சுக்கான் திருகாணி இருந்தது. கூட்டல் குறி போன்ற வடிவில் ஆன மரச்சட்டம்தான் அது. அது எப்படி நினைவுக்கு வந்தது என்று யோசிக்க எல்லாம் நேரமில்லை. அந்த சுக்கான் திருகாணி அருகே சென்று அதை சுழற்றத் தொடங்கினாள். இரண்டே சுழற்றில் கதவு முற்றாக மூடிக் கொண்டது. அதற்குள் வெளிப் புறமாக ஓடிவந்து பார்த்த அவர்கள் இருவரிடமும் ஏமாற்றம்.

"கோட்டைக் கதவு மூடியிருக்கு.. கண்ணுக்கு எட்டுன தூரம் பாதைலயும் யாரும் இல்லை. அவ எங்க போயிருப்பா?"

"சரி, வா... இப்படியே போய்ப் பார்ப்போம். அவ எங்க இருந்தாலும் சரி.. போட்டுத் தள்ளாம மட்டும் போகக் கூடாது."

- இருவரும் பேசிக் கொண்டது உள்ளே கதவின் பின்னால் நின்ற நிலையில் இருக்கும் அவள் காதில் விழவும், தொண்டைக் குழியில் விசுக்கென்று ஒரு விக்கல் ஏற்பட்டது. அப்போதுதான் தன்னைக் கொல்ல திட்டமிட்டு இருவர் வந்திருப்பதும் உறைத்தது!

பத்திரிகைப் பணியில் பகையும் கொலையும் சகஜமான விஷயம். அதிலும் நிகழ்காலத்தில் சமுதாயச் சீரழிவுகள் ஏராளம். அதை படம்பிடிக்க முயன்றாலே அது இப்படி ஆபத்தில்தான் முடிகிறது!

அவளுக்கு திரும்பவும் சுக்கான் திருகாணியைத் திருகி கதவைத் திறந்து கொண்டு வந்த வழியே வெளி யேறி ஆட்டோகாரனை பிடிக்க வேண்டும் என்றுதான் முதலில் தோன்றியது. அதற்காக திரும்ப அதனிடம் சென்றவளிடம் ஒரு இனம் புரியாத தடுமாற்றம். காதுக் குள்ளும் ஜல்ஜல்-என்று சீரான இடைவெளியில் ஒரு பெண் நடந்து வருவது போன்ற சப்தம்!

'ராஜாதி ராஜ...

ராஜ மார்த்தாண்ட

நாயக்கர் குலதிலக

நாயக்க பாளையாதிபதி பங்காரு நாயக்கர் பராக்... பராக்...!'

-என்று கட்டியக்காரன் குரலும் ஒலிப்பது போல இருந்தது. அவள் வரையில் பாண்டிமாதேவி என்கிற நினைப்பு முற்றாக ஒழிந்து அவள் மனதுக்குள் எண் ணங்கள் வெகுவெகு வேகமாக பின்னோக்கிச் செல்லத் தொடங்கின!

கொலுசுச் சப்தமுடன் வந்தது வேதவதி ராயம்மாள்!

செப்புச் சிலை போன்ற தேகம்-நெற்றியில் செந் தூரத்தில் ஸ்ரீ சூரணம், உச்சந்தலையில் சுட்டி- பின்பாகத்தில் சந்திரஹாரக் கொண்டை -அதில் தாழம்பூ மடல்களின் விசிறி போன்ற வடிவமைப்பு.



காதிலும் மூக்கிலும் வைரத்தின் ஜொலிப்பு கண்ணிரண்டிலும் கருந்திராட்சையின் உருளல்! பாண்டியம்மாள் கோட்டையின் அன்றைய பெயரான தேவிபுரத்தின் பாளையாதிபதி பங்காரு நாயக்கரின் மனைவி!

"பாண்டியம்மா.. என்னைப் பார்க்க வருவதில் உனக்கு ஏன் இவ்வளவு தாமதம்?"

"மன்னிக்க வேண்டும் ராணி-நான் சற்று முன்தான் ஏரிக்கரை சிவாலயத்துக்கு சென்றிருந்தேன். அங்கிருந்து வரத் தாமதமாகி விட்டது."

"என்னையும் அழைத்துக் கொண்டு சென்றிருக்க லாமே...?

"ஐயோடா...! நானோ தளவாயின் மகள்-நீங்களோ பாளையாதிபதியின் மனைவி! நீங்களும் நானும் சமமாக ஒன்றாக ஆலயத்திற்கு செல்வதை நமது கோட்டையின் பழக்க வழக்கங்கள் அனுமதிக்காது."

"நட்புக்கு முன்னால் கோட்டையாவது பழக்க வழக்கமாவது. சரி.... இப்போது நீ என்னுடன் அதே சிவாலயத்துக்கு என்னோடு வருகிறாய்... ஆட்சேபணை யில்லையே...?

"ராணி..."

"பாண்டியம்மா... ஏன் இப்படி அச்சப்படுகிறாய். என் கணவர் இதை எல்லாம் தவறாக கருத மாட்டார்... அவருக்கு எனது மகிழ்ச்சிதான் பிரதானம்..."

பாண்டியம்மாள் வேறுவழியின்றி வேதவதி ராயம்மாளின் விருப்பத்துக்கு கட்டுப்பட்டு அவ ளுடன் செல்லத் தயாரானாள். இரண்டு பல்லக்குகள் உடனேயே வந்தன!

"தேவையில்லை. இரட்டைக் குதிரை கோச்சு வண்டியைக் கொண்டு வாருங்கள்" -என்று வேதவதி கூறிட, கோச்சு வண்டி வந்தது. அந்த வண்டியின் கோச்சு ஓட்டி ஒரு முகம்மதியன். தாடையில் துண்டுத் தாடியும், தலையில் குல்லாவுமாய் காட்சி தந்தான். இருவரையும் பார்த்து சலாம் செய்து கதவை திறந்தும் விட்டான். முதலில் வேதவதி ஏறிக்கொள்ள, அடுத்து பாண்டியம்மாள் ஏற முனையும்போது ஒரு குதிரையின் பெருங்கனைப்புச் சப்தம் கேட்டது. அது கோச்சில் ஏறவிடாமல் அவளை திரும்பிப் பார்க்க வைத்தது.

அவள் பார்த்தபோது நேர்எதிரில் கோட்டை மையத்தில் வெண்ணிறப் புரவி ஒன்று அடங்காதபடி முன்னிரண்டு கால்களைத் தூக்கி சண்டித்தனம் செய்த படி இருக்க அதை அடக்கிவிட துடிப்போடு ஒருவன் முயன்று கொண்டிருந்தாள்.

குதிரை போட்ட கனைப்பு சப்தம் திரைச்சிலையை விலக்கிக் கொண்டு வேதவதி ராயம்மாளையும் பார்க்க வைத்தது. கேட்கவும் வைத்தது.

"அது தேவகணபதிதானே?"

"..................

"பாண்டியம்மா.. உன்னைத்தானடி-குதிரையோடு மல்லாடுபவன் தேவகணபதிதானே?"

"அ.. ஆம் ராணி...."

"தேவகணபதி உன் முறை மாமன் என்றும் கேள்விப்பட்டேனே.. உண்மையா?"

"அ... ஆமாம் ராணி..."-பாண்டியம்மாள் சொன்ன போது அவள் முகத்தில பெரிய அளவில் வெட்கம். தலையும் தாழ்ந்து கொண்டது.



"அடேயப்பா! என்னமாய் வெட்கப்படுகிறாய்... முறைமாமன் என்றதும் உன் முகத்தில் காதலும் சேர்ந்தே வெளிப்படுகிறதே..."

-வேதவதி கூறி முடிக்க, தேவகணபதியாகிய அந்த வீரனும் அந்த குதிரையை அடக்கி அதன் மேல் ஏறியவனாக கோச்சு வண்டியை நோக்கித்தான் குதிரையை செலுத்திக் கொண்டு வந்தான். வந்த வேகத்தில் இலகுவாக கோச்சை சுற்றிச் சுற்றி வட்டமடித்தான். பாண்டியம்மாள் அச்சப்பட்டு இரு கைகளாலும் கன்னங்களைப் பொத்திக் கொண்டாள்.அவன் விலகிச் சென்ற பிறகே கன்னத்திலிருந்தும் கைகளை விலக்கினாள்.

அப்பாடா என்றிருந்தது.

"உன் மாமன் வீரன் மட்டுமல்ல, சரியான குறும்புக்காரனும் கூட. உள்ளே நான் இருப்பது தெரியாமல் நீ மட்டும் இருப்பதாக நினைத்துக் கொண்டு வட்டமடித்துவிட்டு செல்வதில் இருந்து அவனுக்கு உன்மேல் இருக்கும் காதலும் புரிகிறது..."-என்றாள். பின் அவள் ஏறிக்கொள்ள, கோச்சானது ஏரிக்கரை சிவாலயம் நோக்கி ஓடத் தொடங்கியது. வழியில் ஊரே அந்த கோச்சு வண்டி வருவதைப் பார்த்து பாதை ஓரமாக ஒதுங்கி மரியாதையாக தலையைக் குனிந்துகொண்டு நின்று ராணியின் வண்டிக்கு மரியாதை காட்டியது.

அந்த கோச்சும் ஏரிக்கரை மேட்டை எட்டியது.

இருவரும் இறங்கி எதிரில் தெரிந்த சிவாலயத்துக்குள் நுழைந்தனர். சிவாலயத்து பட்டர் ராணியை கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை. பதறிப் போய் ஓடி வந்தார்.

"தகவல் தராமல் வந்து விட்டீர்களே... தெரிந் திருந்தால் பூர்ணகும்ப மரியாதையே அளித்திருப்பேன்" என்றார்.

"அப்படி எல்லாம் நீங்கள் எதுவும் செய்துவிடக் கூடாது என்றே நான் இப்படி வந்தேன்... ராணி என்கிற மதிப்பும் மரியாதையும் ஊருக்குள்தான்... ஆலயத்தில் இறைவன்தான் பெரியவன்-நானில்லை..." என்றாள்.

அவளது தன்னடக்கம், அந்தஸ்து பேதம் பாரா மல் பேசுவது பழகுவது எல்லாமே பாண்டியம்மாளை வெகுவாக கவர்ந்துவிட்டது. வைத்த கண் வாங்காமல் அவளைப் பார்த்தபடி இருந்தாள். ஆலயதரிசனமும் முடிந்து வெளியே வரும்போது ஏரிக்கரை மேட்டில் ஏராளமாய் குதிரைகள்... ஒரு படையே வருவது போல அப்படி ஒரு கூட்டம்! ராணியும் பாண்டியம்மாளும் பார்த்திட குதிரைவீரன் ஒருவன் கும்பினியாரின் கொடி ஒன்றைப் பிடித்தபடி வந்தான். அதைப் பார்க்கவும்தான் வெள்ளையர்கள் வரி வசூலுக்காக வந்திருக்கிறார்கள் என்பதே ராணிக்கும் புரிந்தது.

"ராணி, இவர்கள்....?"

"கும்பினிக் கூட்டம் பாண்டியம்மாள். ஆற்காட்டு நவாபும் வெள்ளையர்களில் கர்னல் ஹெரானும் தென் பகுதி பாளையங்களுக்கான வரிவசூலுக்காக வந்து கொண்டிருக்கின்றனர்..."

"நாம் மதுரை நாயக்க அரசருக்குதானே கட்டுப் பட்டவர்கள்?"

"அவரே இவர்களுக்கு கட்டுப்பட்டவர்தானே?"

- இருவரும் பேசிக் கொண்டிருக்க, கும்பினியாரில் கர்னல் ஹெரானின் அடிவருடிகளில் ஒருவனாக ஒரு



பூனைக்கண் வெள்ளையனின் கோச்சு வண்டி ராணியும் பாண்டியம்மாளும் ஏறி வந்த கோச்சு வண்டியின் அரு கில் நின்றது. அந்த வெள்ளையனும் திரைச்சீலையை விலக்கிக் கொண்டு வெளியே பார்த்தான்.

அவனது முதல் பார்வையிலேயே பாண்டியம்மாள் பளிச்சென்று விழுந்தாள். பாண்டியம்மாள் மேலே அவன் வைத்த விழிகளை அதன்பின் அவனால் எடுக் கவே முடியவில்லை.

"வாவ்! வாட் எ ஃபென்டாஸ்டிக் ஸ்ட்ரக்சர்...! வாட் எ பியூட்டிஃபுல் கலர்...!"-என்று அவளை எண்ணி வியக்க ஆரம்பித்து விட்டான். ராணிக்கு அவன் பார்வையின் பொருள் புரிந்தது. பாண்டியம்மாளுடன் வேகமாக தங்கள் கோச்சில் ஏற முனைந்தாள். அதற்குள் அந்த வெள்ளையன் சார்பில் வந்த ஒரு வீரன், "தாங்கள் தானே இந்த தேவிபுரம் பாளையத்தின் ராணி?" என்று கேட்டான்.

"ஆமாம்... அற்கென்ன இப்போது?"

"இந்தப் பெண்மணி தங்களின் சேடிப்பெண்ணா?"

-அவன் பாண்டியம்மாளைப் பார்த்துக் கேட்ட கேள்வி ராணி வேதவதி ராயம்மாளை கிள்ளியது.

"இவள் என் தோழி... உயிர் தோழி.... இந்த கேள்வி எல்லாம் உங்களுக்கு எதற்கு?"-கோபம் கொப்பளிக்கக் கேட்டாள் ராணி.

"கும்பினியார் உத்தரவை நான் செயல்படுத்தி னேன். எனக்கு வேறு எதுவும் தெரியாது..."

"இப்பொழுது நான் சொல்வதையும் தெளிவாக கேட்டுக் கொள். எதற்காக தேவிபுரம் வந்தீர்களோ அந்த

வேலையை முடித்துக் கொண்டு திரும்பிப் பார்க்காமல் செல்ல வேண்டும். அதை விட்டுவிட்டு இப்படி அநாவசிய நோட்டமும் கேள்விகளும் ஆபத்தில் முடிந்து விடும். நான் எச்சரித்தேன் என்று சொல்..."

-ராணியின் சிடுசிடுப்போடு கூடிய பேச்சு அவன் வரையில் கன்னத்தில் அறைந்தது போல இருந்தது. மௌனமாக அவன் திரும்பிச் செல்ல, அந்த பூனைக்கண் வெள்ளையன் குறுகுறுவென்று பாண்டியம்மாள் மேலேயே கண்ணாக இருந்தான். ராணியும் கோச்சு ஓட்டியை வெறிக்க, அவனும் கோச்சைக் கிளப்பி னான்.

அதனிடம் நல்ல வேகம்!

# 7

**'ஒரு மனிதனின் உடம்பும் சரி, மனதும் சரி, மிகமிக ஆச்சரியமூட்டக்கூடியது ஆகும். இதன் முன்னால் இந்த உலகில் எதுவுமே பெரியதில்லை. இன்றைய இன்ஜினீயரிங் தொழில்நுட்பங்கள் அவ்வளவும் ஒரு மனிதனின் உடம்புக்குள்ளேயே உள்ளது. பார்ப்பதற்குதான் இது ஐந்தரை அடியில் இருந்து ஆறடிக்குள் அடங்கும் உடம்பு. இதனுள் இதயம் இடைவிடாது துடித்துக் கொண்டிருக்கிறது. ரத்தமும் ஓடியபடியே உள்ளது. ரத்தக்குழாய்களின் நீளம் மட்டுமே பல ஆயிரம் மைல்கள். கண்கள் பார்ப்பதும், காதுகள் கேட்பதும், நாக்கு ருசிகளை உணர்வதும் எதன் அடிப்படையில், அவற்றை செயற்கையாக உருவாக்க முடியுமா என்பதெல்லாம் கற்பனைகூட செய்து பார்க்க முடியாத விஷயங்கள். உடம்பை அடுத்து மனம்!**



**இதன் சக்திக்கு ஒரு அளவே இல்லை. இதை அடக்குவதும். ஒரு மனிதனுக்கு எளிதில்லை. இந்த மனம்தான் அறிவோடு சேர்ந்து எண்ணங்களாய் செயல்படுகிறது. இந்த எண்ணங்களுக்குப் பின்னாலே எவ்வளவோ புதிர்கள் அடங்கியுள்ளன. எண்ணங் கள் அலை வடிவில் வெளிப்படுகின்றன. இன்றைய விஞ்ஞானமும் நமது பேச்சு சப்தத்தை அலை வடிவில்தான் கடத்துகிறது. அதற்கு தூரம் ஒரு பொருட்டே இல்லை. ஒரு கருவியை வைத்துக் கொண்டு செய்யும் இந்த செயலை, கருவி இல்லாமல் செய்யமுடியும் என்பது மனவியல் வல்லுனர்கள் கருத்து. அப்படி கருவி இல்லாமல் செய்யமுடியும் எனும்போது நமது எண்ணங்களை கடந்த காலத்துக்குள்ளும் திருப்பி விட முடியும். அப்போது அது அந்த நாளைய நினைவலை களோடு தொடர்பு கொள்ளும்போது அதுவே பூர்வ ஜென்மம் எனப்படுகிறது!'**

கோட்டைக்கு வெளிப்புறம் உள்ள தெருவில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் பாண்டியம்மாளின் தந்தையான தளவாய் ராமதேவனின் இல்லம் இருந்தது. அந்த இல்லத்துக்கு வெளியில் கோச்சை நிறுத்தி பாண்டியம்மாளை இறக்கி விட்டாள் வேதவதி ராயம்மாள்!

"பாண்டியம்மாள்! நீ கவனமாக வீட்டிலேயே இரு. கும்பினிக் கூட்டம் போன பிறகு நான் தகவல் அனுப்புகிறேன். அதன்பின் நீ அரண்மனைக்கு வந்தால் போதும்" -என்று எச்சரிக்கையாக அவளிடம் பேசி விட்டுப் புறப்பட்டாள் ராணி.

பாண்டியம்மாளுக்கு அது இதமாக இருந்தது.

மனதில் ஒரு நெகிழ்வோடு வீட்டினுள் நுழைந் தாள். உள்ளே அவளது தாயான செண்பகநாச்சி அவளை பெருமூச்சுடன் எதிர்கொண்டாள்.

"எதற்கம்மா இந்த பெருமூச்சு?"

"என்னவென்றம்மா சொல்வது... வரி வசூலிக்க கும்பினிக் கூட்டம் வரப்போகிறதாம். வரிப் பொன் னோடு ஐந்தாயிரம் மூடைநெல், ஐந்தாயிரம் மூட்டை நவதானியங்களையும் எதிர்பார்க்கிறார்களாம்.

ஆனால், களஞ்சியத்தில் மொத்தம் இருப்பதே அதில் பாதிதானாம்... அரசர் பங்காரு நாயக்கர் எப்படிச் சமாளிக்கப் போகிறார் என்று தெரியவில்லை என்ற படியே உன் தந்தை அரண்மனைக்குப் போயிருக்கிறார்..." என்றாள்.

கும்பினிக் கூட்டம் பற்றி அவளும் பேசவும் அந்த பூனைக்கண் வெள்ளையன் வெறித்துப் பார்த்ததுதான் பாண்டியம்மாளுக்கும் நினைவு வந்தது. கலங்கி நின்றாள்.

"உனக்கேன் கலக்கம்?"

"ஒன்றுமில்லையம்மா...?

"ராணியுடன் நெருங்கிப் பழகுவதில் ஏதேனும் சிக்கலா?"

"இல்லையில்லை.... ராணியார் ஒரு அற்புதமான பெண்மணி. என்வரையில் அவர் உங்களைவிடவும் பாச மும் நேசமும் காட்டுகிறார்."

"பிறகென்ன கவலை உனக்கு?"



"எனக்கு சொல்லத் தெரியவில்லையம்மா..." என்ற படியே அவள் விலகிச் சென்றாள்.

செண்பகநாச்சிக்கும் ஏதோ குழப்பம் என்பது மட்டும் விளங்கியது.

**அ**ரண்மனை முகப்பு!

குப்பினியாரின் படை ஆர்ப்பாட்டமாக அணி வகுத்து நின்றிட, நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட பெரும் ரதம் ஒன்று மட்டும் முன்னால் தர்பாராக வந்து நின்றது. அப்படி அது நின்ற இடத்தில் தேவிபுரம் பாளையாதிபதியாகிய பங்காரு நாயக்கரும் உடன் தளவாய் ராமதேவனும் நின்றிருந்தனர். இது போக அரண்மனை வைதீகரும் பெரும் வேதவித்துவானுமான வைத்யநாத சாஸ்திரிகளும் கையில் பூர்ணகும்பமுடன் உடன் இருந்தனர்.

ரதத்தை விட்டு இறங்கினான், அந்த பூனைக்கண் வெள்ளையன். பங்காரு நாயக்கர் முகத்தில் ஒரு சின்ன ஏமாற்றம். அவர் எதிர்பார்த்தது கர்னல் ஹெரானை! அத்தோடு எப்போதும் அவனோடு ஒட்டியபடியே வரும் மாபூஸ்கானையும் சேர்த்தே எதிர்பார்த்தவருக்கு ஏமாற்றமாக இருந்தது. சாஸ்திரிகளும் பூர்ணகும் பத்தை முன்காட்டி, "வெல்கம் எக்ஸெலன்ஸி! வெல்கம்..." என்றார்.

அவன் முகத்தில் ஒரு சுழித்த சிரிப்பு. பார்வையில் பங்காரு நாயக்கர் மேல் ஒரு ஊடுருவல். நாயக்கரும்,

"கர்னல் வரவில்லையா?" என்று கேட்டார்.

"கர்னல் இது போன்ற குட்டிப் பாளையங் களுக்கெல்லாம் இனி வர மாட்டார். நான்தான் இங்கே கர்னல்.."

- பூனைக் கண்ணனின் பதிலில் ஒரு கர்வச் செருக்கும், தேவிபுரத்தை அவன் மிக தாழ்வாக நினைப்பதும் புரிந்தது. மேற்கொண்டு எதுவும் பேசாமல் உள்ளே அழைத்துச் செல்லத் தொடங்கினார் பங்காரு நாயக்கர்.

அவனும் நாலாபுறமும் பார்த்தபடியே நடந்தான்.

"வெல்.. இட் ஈஸ் எ வெரி பிக் பேலஸ்... லைக் மதுரை"-என்றான்

"ஆமாம் துரை... எங்கள் நாயக்கரும் கட்டடக் கலையில் மிகுந்த ஈடுபாடுள்ளவர். மதுரைக்கு வெளியே எங்கள் கோட்டைதான் பெரிது- அதுமட்டுமல்ல-இந்த கோட்டையை வடிவமைத்தவரும் எங்கள் நாயக்கர் தான்..."-என்றார் ராமத்தேவர்

"என்றால் இந்த தேவிபுரம் பாளையம் நல்ல வரி வருமானமுள்ள பாளையம் என்று சொல்..."

-பூனைக்கண்ணன் மடக்கினான். அவனிடம் பெருமைப்பட்டுக் கொள்வதுகூட ஆபத்து என்பது அப்போதே புரிந்து விட்டது, ராமத் தேவனுக்கு...

அதற்குள் அவனுக்கான தங்கும் பாகமாக நந்தவன மண்டபப்பகுதி வந்துவிட, எல்லாரும் உள்ளடங்கினர்.

"துரை அவர்களே! நீங்கள் ஓய்வெடுங்கள்... ராஜ்ஜிய விஷயங்களை நாளை காலையில் பேசிக் கொள்ளலாம்."

- என்ற பங்காரு நாயக்கரும் அப்போதைக்கு ஒதுங்கிக் கொண்டார். அவனும் ஓய்வெடுக்கும் முன் ராமத்தேவனிடம்,



"எனது படையாட்களுக்கு இன்று இரவு விருந்துபசாரம் பலமாக இருக்க வேண்டும்"-என்று கட்டளையிட்டுவிட்டுத்தான் விலகினான்.

புறத்தில் அவனது படையாட்களுக்கு தென்னங் கள்ளுடன் பன்றிக்கறியும் ஆட்டிறைச்சி சோறும் சென்றபடி இருந்தது!

அந்தப்புரம்!

உள்ளடங்கிய பங்காரு நாயக்கர் முகத்தில் கவலை ரேகைகள். அப்போது செய்திப்புறாவும் சேதியோடு வந்து அவர் தோள் மேல் அமர்ந்தது. அதன் காலிலுள்ள குழலில் இருந்து செய்திக் குறிப்பை எடுத்து படித்தார்.

'நாயக்கரே-மன்னியுங்கள்!

நீங்கள் கேட்ட பொன்னை தரும் நிலையில் கன்னிவாடி பாளையம் இல்லை'-என்றிருந்தது

விடிந்தால் வெள்ளையன் கணக்கு கேட்பான்.

அவனுக்கு கப்பம் கட்ட பொன் வேண்டும். கையில் இருந்ததை வயலிலும், அணை கட்டவும் போட்டாயிற்று. இப்போது என்ன செய்வது...? தவணை கேட்போமா? வட்டியோடு மேற்கொண்டு எதையாவது கேட்பான்...

- நாயக்கர் குட்டிப் போட்ட பூனை போல நடக்கத் தொடங்கினார். சிறிது நேரத்தில எல்லாம் அவர் மிக ஆவலாக எதிர்பார்த்த தேவகணபதி கைவசம் ஒரு பெரும் பொன்மூட்டையுடன் வந்து சேர்ந்தான்.

"வா, கணபதி வா... பொன் கிடைத்துவிட்டது தானே?"

"கிடைத்தது அரசே.. ஆனால், இருபதாயிரம் பொன்தான் கிடைத்தது. பார்த்திபனூர் பாளையக்காரரிடமும் பொன் இல்லை. இதையே ஒரு மரைக்காயரிடம் இருந்து வட்டிக்குதான் வாங்கித் தந்தார்.."

"எப்படியோ கிடைத்ததே. அது போதும்.."

"அரசே... நான் ஒரு கருத்து கூறலாமா?"

-தேவகணபதி தயங்கியபடி கேட்டான்.

"தாராளமாக கூறு... நீ என் மெய்க்காப்பாளன். உனக்கு இல்லாத உரிமையா?

"தென்மேற்கில் உள்ள நாயக்கர்களும், நெற்கட்டும் சேவல் பாளையாதிபதியான பூலித்தேவனும் கப்பம் கட்டுவதில்லை என்று முடிவெடுத்துள்ளனராம். இது நமது தாய்நாடு. எங்கிருந்தோ வந்தவனுக்கு இங்கென்ன வேலை என்பதுதான் அவர்களின் கேள்வி..

ஏன் நாமும் அது போல நடந்து கொள்ளக் கூடாது..?"

- தேவகணபதியின் கேள்விமுன் வெகு நேரம் மௌனம் சாதித்தார் பங்காரு நாயக்கர்.

"என்ன யோசனை... நான் ஏதாவது தவறாக கூறிவிட்டேனா?"

"இல்லை... நீ சரியாகத்தான் கேட்டிருக்கிறாய்.. இங்கே நாயக்கர்கள் முகம்மதியர்கள் இஸ்லாமியர்கள் மராட்டியர்கள் என்று நமக்குள்ளேயேகூட பிரிவும் சண்டையும் நடக்கத்தான் செய்கின்றன. இது பரவாயில்லை. நாமெல்லாம் இந்த மண்ணில் பிறந்து வளர்ந்தவர்கள்.



ஆனால், வெள்ளையன் கடல்வழி வந்தவன். அவன் நம்மை ஆண்டு வருவதும் நாம் அவனுக்கு கப்பம் கட்டுவதும் நிஜத்தில் கேவலமான செயலே... எனக்கும் புரிகிறது. ஆனால், அவனது படைபலத்தை எண்ணிப்பார். அவனது ஒரு பீரங்கி போதும், நமது கோட்டையே தரைமட்டமாகி விடும்..."

"பெரிய பீரங்கி... நீங்கள் சரி என்று சொல்லுங்கள். இன்று அத்தனை பீரங்கிகளையும் குழி தோண்டி புதைத்து அந்த வெள்ளை வீரர்களையும் கொன்று உடல்களை வைகையாற்றில் வீசி எறிந்து விடுகிறோம்.."

"உனக்கு இளரத்தம்.. விபரீதம் தெரியாமல் பேசுகிறாய். கும்பினியார்களை அடக்கி ஒடுக்குவது அவ்வளவு சுலபமல்ல.."

"அப்படி என்றால் இப்படிக் கடன் வாங்கியாவது கப்பம் கட்டுவதுதான் நமக்கான வழியா?"

"வேறுவழியே இல்லை... நானும் ஒரு சிறு வழியாவது அகப்படாதா என்றுதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்.."

-பங்காரு நாயக்கரும் தேவகணபதியும் தீவிரமாக விவாதத்தில் இருந்தபோது அவர்கள் சற்றும் எதிர்பாராத நிலையில் அந்த பூனைக்கண் வெள்ளையன் அங்கு வந்ததுதான் ஆச்சரியம்.

"என்ன, இவன் எந்த அறிவிப்பும் இன்றி நேராக இங்கேயே வந்துவிட்டான்...?"-தேவகணபதி முணுமுணுத்திட, அவனோடு கூடவே மொழிபெயர்ப்பாளனான துபாஷ் ஒருவனும் வந்தான்.

"வாருங்கள் துரை.. இது என்ன அந்தப்புரத்துக்கே வந்துவிட்டீர்கள். சொல்லியிருந்தால் நானே வந்

திருப்பேனே?"-பங்காரு நாயக்கர் பண்பாடு காட்டத் தொடங்கினார்.

"நாயக்கரே... துரைக்கு நீங்கள் ஒதுக்கியிருக்கும் நந்தவன மண்டபம் பிடிக்கவில்லை. எனவேதான் இங்கேயே வந்துவிட்டார். நீங்கள் வேண்டுமானால் இன்று இரவு அங்கு சென்று தங்கிக் கொள்ளுங்கள்...."

-துபாஷின் பதிலில் தெரிந்த துடுக்குத்தனம் தேவ கணபதியைக் கிள்ளயது.

"துபாஷ்... நீ எங்கே யாருடன் பேசிக் கொண் டிருக்கிறாய் தெரியுமா?"-தேவகணபதி ஆவேசமானான்.

"நான் பாளையக்காரரிடம் பேசிக் கொண் டிருக்கிறேன். குறுக்கே புகுந்து ஊளையிடாதே. அப்புறம் இன்னொரு முக்கியமான விஷயம்..."-துபாஷ் பார்வை பங்காரு நாயக்கரை ஊடுருவியது. நாயக்கரும் ஒரு வித தவிப்போடு அவனைப் பார்த்திட, அந்த பூனைக்கண்ணன் அருகில் இருந்த சிம்மாசனம் போன்ற ஆசனத்தில் கால்மேல் கால் போட்டுக் கொண்டு உட்கார்ந்து விட்டான்.

நாயக்கரும் "என்ன அது?"-என்று கேட்டார்.

"முதலில் உங்கள் கைத்தடியை வெளியேற்றுங்கள். பிறகுதான் பேச்சு..."

-துபாஷின் குரலில் அதிக கண்டிப்பு. ஒரு மொழி பெயர்ப்பாளனுக்கு இவ்வளவு திமிரா என்று கோபம் வந்தபோதிலும் பங்காரு நாயக்கருக்கு வேறுவழி தெரியவில்லை.

கையில் தேவையான பொன்னும் நெல் மூட்டை களும் இருந்திருந்தால் நெஞ்சு நிமிர்த்தி முதலில்



கப்பத்தை வாங்கிக் கொண்டு போய்க் கொண்டே இரு க்கலாம்.... ஆனால், அதற்கும் சக்தியில்லை! எனவே, கூனிக் குறுகியவராக தேவகணபதியைப் பார்த்தார். அவனும் அரை மனதாக வெளியேறினான்.

துபாஷும் பேசத் தொடங்கினான்.

"நாயக்கரே... துரை அவர்கள் ஊருக்குள் நுழையும் போது உங்கள் மனைவியோடு அழகிய ஒரு பெண்ணைப் பார்த்திருக்கிறார். அவளை துரைக்கு மிக பிடித்துப் போய்விட்டது. இன்று இரவு அந்த பெண்ணை நீங்கள் துரையின் சந்தோஷ நிமித்தம் ஏற்பாடு செய்து தர வேண்டும்..."

-துபாஷ் சொல்லி வாய் மூடு முன் நாயக்கரின் வலது கரம் அவனது கன்னத்தில் விசையோடு அடித்து மீண்டது. அவனும் பொறி கலங்கியவனாக கீழே விழுந்தான். அதைப் பார்த்த அந்த பூனைக்கண் வெள்ளையனும்,

"ஏய் க்ரேஸி மேன்- வாட் ஆர் யூ டூயிங்..? டோண்ட் மீ ஆங்ரி" என்று குதித்துக் கொண்டு எழுந்தான்.

"போதும் நிறுத்து... என்னை பாளையாதிபதி என்று நினைத்தாயா, இல்லை கூட்டிக் கொடுக்கும் விபசாரகன் என்று நினைத்தாயா? பறங்கிப் பன்றியே... என் நாட்டில் என் மனையில் என்னை அதிகாரம் செய்வதோடு என் கௌரவத்தையே நீ வேரறுக்கப் பார்க்கிறாயா?"

-பங்காரு நாயக்கர் சீறினார். கண்களும் சிவந்தார். அதே சமயம் அங்கே வெளியேறுவது போல் பதுங்கி இருந்த தேவகணபதியும் சரேலென்று உள்ளே நுழைந்தான்.

"அடேய், வெள்ளைப் பன்றி... உனக்கு எவ்வளவு கொழுப்படா. கப்பம் வசூலிக்க வந்த இடத்தில் காமவலை

வீசிப் பார்க்கிறாயா? உன்னை என்ன செய்கிறேன் பார்..."

-தேவகணபதி முதலில் துபாஷ் மேல்தான் பாய்ந்தான். பாய்ந்த வேகத்தில் தன் இடுப்புக் கட்டாரியால் அவன் கழுத்தை சரசரவென்று அறுத்தான். அப்படியே தலை வேறு உடம்பு வேறாக கீழே விழுந்தது துபாஷின் சரீரம்.

பூனைக்கண் வெள்ளையன் முகத்தில் கோபத்திலும் பயத்திலும் ரத்தச் சிவப்பாகி விட்டது. தேவகணபதியின் அடுத்த குறியே அவன்தான். ஆனால், அவனோ அங்கிருந்து மின்னல் வேகத்தில் வெளியே ஓடினான். தேவகணபதியும் துரத்திக் கொண்டே ஓடினான்.

வெளியே எங்கு பார், அவனோடு வந்த படை வீரர்கள். அவ்வளவு பேரிடமும் துப்பாக்கி. ஓடிவந்த வெள்ளையன்,

"ஷூட் ஹிம்.. ஷூட் ஹிம்... கில் ஹிம்..." என்று கத்தவும், அவ்வளவு பேர்களும் துப்பாக்கியை நிமிர்த்தத் தொடங்கினார்கள். அடுத்த நொடியே தேவகணபதி பக்கவாட்டில் புகுந்து கோட்டை மதில் நோக்கி ஓடத் தொடங்கினான்.

கோட்டை மதிலின் வாயில் வழியாக பாண்டியம்மாளும் வந்துகொண்டிருந்ததுதான் விந்தை. தேவகணபதிக்கு அவளைப் பார்க்கவும் உயிர்ப் பொறியே கலங்கிப் போனது.

"பாண்டியம்மா! திரும்பிச் செல்... போ.."-என்று கத்திக் கொண்டே வந்தவன், அப்படியே அவளையும்



இழுத்துக் கொண்டு ஓடி கதவருகில் போய் மூச்சிளைக்க நின்றான்!

**அ**ன்று நடந்த சம்பவங்களின் அச்சு அசலான நிகழ்வுகள் அதே கதவருகில் இப்போது நின்றபடி இருக்கும் பாண்டிமாதேவிக்குள்ளேயும்....!

பொங்கல் பானை பொங்குவது போல பொங்கிய அவ்வளவு எண்ணங்களும் அன்று தேவகணபதியோடு நின்ற அதே கதவருகில் அவளுக்குள் பொங்கி எழுந்ததுதான் விந்தை!

இரவின் நிசப்தத்தில் இப்பொழுது சிறு சப்தமுமில்லை. கொலை வெறியோடு துரத்தி வந்த அந்த இரண்டு பேரும் எங்கே போனர்ர்கள் என்றே தெரியாத நிலையில் பாண்டிமாதேவிக்கு லேசாக தலையைச் சுற்றியது.

அப்படியே கதவை ஒட்டி அமர்ந்து விட்டாள்!

திரும்பவும் மனதுக்குள் அவள் கற்பனைகூட செய்து பார்த்திராத எண்ணங்களின் கொந்தளிப்பு! அதை அடக்குவது போல யாரோ வருவது போல ஒரு சப்தம்! பாண்டிமாதேவி விருட்டென்று நிமிர்ந்தாள்....

அந்த கொலைகாரர்களாகத்தான் இருக்க வேண்டும்.

அவள் உடம்பும் மனதும் நடுங்கத் தொடங்கியது. வாய்விட்டு கத்தினால் என்ன என்றும் தோன்றியது. ஒரு வேளை அவர்கள் கிட்டே வந்து கொலை செய்ய முயன்றால் அவர்களை விட்டுவிடவே கூடாது... போடுகிற கூச்சலில் எவ்வளவு தூரத்தில் ஊர் இருந்தாலும் அது விழித்துக் கொண்டுவிட வேண்டும் என்றெல்லாம்

எண்ணியவள், கதவுக்கு அப்பால் யாரோ வந்து நிற்பது போல உணர்ந்தாள். கதவுக்கு கீழ் உள்ள இடைவெளியில் இரண்டு கால்கள் அட்டைக் கருப்பாய் அசைவது தெரிந்தது.

அந்த திருடர்களில் ஒருவனாகத்தான் இருக்க வேண்டும் என்று வேகமாக யூகித்தவள், சட்டென்று இடுப்பைத் தடவி கட்டியிருந்த தோல் பெல்ட்டை அவிழ்த்தாள். இதனால் அவன் கிட்டே வந்தால் அவனை வளைத்துப் பிடித்து அவன் கழுத்தை நெரித்தே கொன்றுவிட வேண்டும். இது போன்ற ஆபத்தான தருணங்களில் இப்படி எல்லாம் நடந்து கொள்வதில் தவறே இல்லை என்று தனக்குத்தானே சமாதானமெல்லாம் சொல்லிக் கொண்டாள். அந்த கால்கள் அசைவதையே பார்த்து நின்றபோது அந்த உருவம் கதவை உந்தித் தள்ள முயல்வது நன்கு தெரிந்தது. கதவும் ஒரு ஆள் நுழைய முடியும் அளவு மெல்லிய சப்தமுடன் திறந்துகொண்டது. திறந்துகொண்ட கதவிடுக்கு வழியாக அந்த உருவமும் காலடியை வைத்தது. பாண்டிமாதேவி அதற்கு மேல் தாமதிக்காமல் கையில் பெல்ட்டுடன் அந்த உருவத்தின் கழுத்தை நெரிக்கத் தயாரானாள்.

முழு உருவமும் உள் பக்கம் வந்த நொடி அவ்வாறே செயல்பட்டு அந்த உருவத்தின் கழுத்தை பெல்ட்டாலேயே வளைத்து இறுக்கிப் பிடித்தாள். அந்த உருவமும் பதிலுக்கு அவளை பிடித்துத் தள்ளி தப்பிக்கப் பார்த்தது. அவளைப் அப்படியே முதுகோடு சேர்த்து தூக்கி முன்பக்கமாய் வீசியது... பாண்டிமாதேவியும் ஒரு எறிந்த கல்லைப் போல போய் விழுந்தாள். அடுத்த நொடி அந்த உருவம் அவள் முகத்தில் தன்வசம் உள்ள



டார்ச் லைட்டை அடித்தது. அதில் தென்பட்ட அவளது முகத்தைப் பார்த்து அந்த உருவத்திடம் ஒரு விதஸ்தம்பிப்பு. அவளும் கண்களை கசக்கிக் கொண்டாள்.

"ஏய், யார் நீ... எதுக்கு இங்க வந்துருக்கே... லைட்டை முகத்துக்கு நேரா அடிக்காதே..." என்று கத்தினாள். பதிலுக்கு அவனிடம் இருந்து அந்த டார்ச்லைட் சொத்தென்று கீழே விழுந்து இப்படியும் அப்படியும் ஆடியது.

அவனோ நின்றபடியே இருந்தான்! அவளுக்கு அதிசயமாக ஆச்சரியமாக அச்சமாக எல்லாமுமாக இருந்தது. மெல்ல அருகில் சென்று அந்த டார்ச் லைட்டை எடுத்து அவன் முகத்துக்கு நேராக அடித்தாள்.

அடித்த நொடியே தன்னையும் மறந்து 'தேவகணபதி' என்றாள்! அவனும் 'பாண்டியம்மா' என்றான்!

# 8

**'எவ்வளவு பேர் தங்கள் வாழ்க்கையைக் கூர்ந்து கவனிக்கிறார்கள் என்பது தெரியாது. அப்படிக் கவனிப்பவர்களுக்கெல்லாம் சில விஷயங்கள் புரியாத ஒரு புதிர் போல தொடர்ந்தபடியே இருப்பது ஆச்சரியத்தை தந்திருக்கும். குறிப்பிட்ட பெயருடையவர்கள் குறிப்பிட்ட எண்ணில் பிறந்தவர்கள் எப்பொழுதும் பெரிதும் உதவிகரமாகவே இல்லை உபத்திரவமாகவோதான் இருந்திருப்பார்கள். அதே போல குறிப்பிட்ட வண்ணம் கொண்ட ஆடைகள் அணிந்தபோதெல்லாம் சில நல்ல விஷயங்கள் நடந்திருக்கும்.**

சிலர் வாழ்வில் தாள முடியாத துயரம் என்று ஒன்று வந்தால் பின்னாலேயே அதற்கு நிகரான மகிழ்ச்சியும் வந்து நிற்கும். இதை எல்லாம் ஒரு நீண்ட வாழ்க்கைப் பாட்டில் தான் திரும்பிப் பார்த்து உணர முடியும்.

இவைகளுக்கு பின்னால் உள்ள லாஜிக்கை எவ்வளவு முயன்றாலும் புரிந்துகொள்ள முடியாது என்பதுதான் உண்மை. இப்படி அறிவுக்கு அகப் படாத அனுபவங்கள் மனித வாழ்வில் ஏராளம்.... ஏராளம்....!

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து வியந்த படியே நின்றபோது அந்த கோட்டைக்குள் வெகு தூரத்தில் யாரோ சிலர் ஓடுவது போல சப்தம் கேட்கவும், இருவரும் கலைந்தனர். அந்த பழைய நினைப்பும் கலைந்து போனது.

அவள், "அய்யோ! அந்த கொலைகாரங்க நான் இங்க இருக்கறத பாத்துட்டாங்க போல இருக்கு....." என்றவளாக அவன்பின் ஒளியப் பார்த்தாள்.

"கொலைகாரங்களா.... அப்ப நீ?"

"நான் இருக்கட்டும்.... நீங்க யார்?"

"இது பேசற நேரமில்ல...யார் நீ?"

"ஐ ஆம் பாண்டிமாதேவி.... வானதி வீக்லியோட சப் எடிட்டர்! ஒரு இன்வெஸ்டிகேஷனுக்காக வந்த இடத்துல திண்டாடிக்கிட்டு இருக்கேன்..."

"ஐ ஸீ- நான் கூட பொம்பள சாமியார் யாரோன்னு தான் நினைச்சேன். நோ பிராப்ளம்! நாம இரண்டு பேரும் சேர்ந்து அவங்கள சமாளிப்போம்...."



அவன் தன் கையை நீட்டி அவள் கையைப் பிடித்துக் கொண்டு அங்கிருந்து விலகிடக் கால் எடுத்த போது திரும்பவும் அன்றைய சம்பவங்களின் தாக்கமும் போக்கும் இருவருக்கு இடையிலும் நூலளவு பிசகலும் இன்றி ஓட ஆரம்பித்தது!

கோட்டைக் கதவை திறந்துகொண்டு பாண்டி யம்மாளோடு ஓடிய தேவகணபதியை துப்பாக்கியால் சுட்டுக் கொண்டே கும்பினிக் கூட்டம் பின்தொடர்ந் தது. இருந்தும் அவனது குதிரை காத்திருக்க, அதன் மேல் ஏறிக் கொண்டு பாண்டியம்மாளையும் ஏற்றிக் கொண்டு சிட்டாக பறக்க ஆரம்பித்தான்....

அந்தக் குதிரையும் முடிந்த தூரம் ஓடியது.

தேவிபுரத்தில் இருந்து மானாமதுரை செல்லும் மார்க்கத்தில் ஒரு சிறு கரடு- அந்த கரட்டுக்குள் நுழைந்து வாயில் நுரை ததும்பிட தேங்கி நின்றது. இருவரும் கீழே இறங்கினர். பாண்டியம்மாள் கலக்கத்தோடு அவனைப் பார்த்தாள்.

"என்ன நடந்தது... எதற்காக உங்களை கும்பினிக் கூட்டம் துரத்தியது?" என்று கேட்டாள்.

"அதை ஏன் கேட்கிறாய் பாண்டியம்மா... விஷயம் தலைக்கு மேல் போய்விட்டது. பாவம், நமது பாளையக் கார அரசர்..."

"அரசருக்கென்னாயிற்று...?"

"என்னாக வேண்டும். எல்லாமாகி விட்டது. அந்த சண்டாள பூனைக்கண்ணனை நான் உயிரோடு விட்டு விட்டு வந்ததுதான் பெரும்பிழை...."

"ஐயோ! புரியும் விதமாக கூறுங்கள். அந்த பூனைக் கண்ணன் என்னைப் பார்த்த பார்வையும் துளியும் சரியில்லை..."

"அவன் பார்வை மட்டுமா..? அவன் புத்தி, உணர்ச்சி எதுவும்தான் சரியில்லை. அவனிடமிருந்து நான் எப்படி உன்னைக் காப்பாற்றப் போகிறேனோ தெரியவில்லை...."

-அவன் சொன்ன நொடி பாண்டியம்மாள் தீப் பிடித்தது போலாகி, "என்ன சொல்கிறீர்கள் மாமா. என்னைக் காப்பாற்றுவது என்றால்..?"

"பாண்டியம்மாள்! நீ இனி கழிக்கும் ஒவ்வொரு நொடியும் எச்சரிக்கையோடு கழிக்க வேண்டும்...."

"இப்படிப் பீடிகை போட்டால் எப்படி? என்ன நடந்தது என்று சொல்லுங்கள்..."

"சொல்லுகிறேன்.... அந்த பூனைக் கண்ணன் ஒரு பெண்பித்தன். அவன் பார்வை உன்மேல் விழுந்து விட்டது."

"ஐயோ..."-கண்கள் அகண்டிட, வாயைப் பிளந் தாள் பாண்டியம்மாள்

"அவன் அரசரிடமே உன்னைப் பற்றி விசா ரித்தான். ஏறத்தாழ அவரை அவன் உன்வரையில் ஒரு பகடிக்காரர் (புரோக்கர்) ஆகவே மாற்ற முனைந்தான். அவராலும் பொறுமையைக் கட்டுப்படுத்த முடிய வில்லை. என்னை வெளியேறச் சொன்னபோதிலும் நான் ஒளிந்திருந்து நடந்தவைகளை கேட்டபடி இருந்தேன். உன்னைப் பற்றி அந்த காமுகன் பேசவும், உள்ளே நுழைந்து அந்த துபாஷின் தலையை இரண்டு



துண்டாக வெட்டிப் போட்டு விட்டேன். அந்த பூனைக் கண்ணன் எப்படியோ தப்பித்து விட்டான்..."

-தேவகணபதி நடந்து முடிந்ததைத்தான் சொல்லி முடித்திருந்தான். ஆனால், பாண்டியம்மாளிடம் துளி கூட பிரக்ஞையே இல்லை. அவள் ஸ்தம்பித்துப் போயிருந்தாள்.

"பாண்டியம்மா...."

"..............."

"உன்னைத்தான்... நான் சொன்னதைக் கேட்டு பயந்து விட்டாயா?"

"அச்சப்படாமல் எப்படி இருக்க முடியும்?"

"பைத்தியக்காரி... இந்த தேவிபுரத்தை அவன் உல்லாச விடுதி என்று நினைத்து விட்டான். அவனது காமக்களியாட்டங்களுக்கு இது இடமில்லை என்பதை யும் இது வீரமுள்ள பூமி. இங்கே வாலாட்டினால் ஒட்ட நறுக்கப்படும் என்பதையும் நான் அவர்களுக்குப் புரிய வைத்து விட்டேன்."

- தேவகணபதியிடம் ஆவேசம் நன்றாக வெளிப் பட்டது. ஆனாலும் பாண்டியம்மாளிடம் பயம் விலக வில்லை. அந்த வேளை பார்த்து திமுதிமுவென்று புரவிகள் ஓடிவரும் சப்தம்! இருவரும் அந்த கரட்டின் பாறை ஒன்றின் பின் ஒளிந்தபடி வருவது யார் என்று பார்த்தனர்.

கும்பினியர்களின் படைவீரர்கள்தான் தேடிக் கொண்டு வந்திருந்தனர். சரியாக நான்கு பேர். கரட்டில் ஓரிடத்தில் பாண்டியம்மாளும்,தேவகணபதியும் ஏறி

வந்திருந்த குதிரை நின்றபடி இருந்தது. அதைப் பார்த்துவிட்டு அந்த குதிரை அருகில் தங்களது குதிரைகளோடு வந்து ஆவேசம் குன்றாதபடி சுற்று முற்றும் பார்த்தனர். அவர்கள் ஒவ்வொருவரின் தோளிலும் நீண்ட இரட்டைக்குழல் துப்பாக்கி இருந்தது.

ஒளிந்திருந்த பாண்டியம்மாள் அவர்களைப் பார்த்து அச்சப்பட்டாள். அவர்களில் ஒருவன் துப்பாக்கியை ஏந்தியபடி மிகச்சரியாக தேவகணபதியும் பாண்டியம்மாளும் ஒளிந்திருக்கும் இடமாக பார்த்து வந்தபடி இருந்தான்.

பாண்டியம்மாள் வெகுவாக பயந்தாள். ஆனால், தேவகணபதி துளிகூட அச்சப்படவில்லை. அவனை எதிர்கொள்ளத் தயாராகி விட்டான். அவனாக தேவகணபதியைப் பார்க்கும் முன் தேவகணபதியே கை இரண்டையும் உயரத் தூக்கிக் கொண்டு சரணடையப் போகிறவன் போல அவனைப் பார்த்தான். அவன் பின்னே பாண்டியம்மாள் மருட்சியோடு ஒளிந்து கொள்ள, கும்பினி வீரன் தேவகணபதியின் சரணாகதி கோலத்தைப் பார்த்து அப்படியே புளகாங்கிதப்பட்டுப் போனான்.

"அகப்பட்டுக் கொண்டாயா... அவசரக்காரனே..." என்று கொக்கரித்தபடி தன் துப்பாக்கி முனையை தேவகணபதி மார்பில் அழுத்தியபடி அவன் சிரிக்க, அடுத்த நொடியே அந்த துப்பாக்கியைப் பிடித்து அந்த கும்பினி வீரனை ஒரே தள்ளாக தள்ளிய தேவகணபதி, விழுந்த வேகத்தில் துப்பாக்கியைப் பிடுங்கி அதன் பின்னால் உள்ள கைப்பிடிமரத்தால் அவன் தலையில் ஒரே அடி. அவன் அடிதாங்காமல் போட்ட சப்தம் மற்ற மூவர்



காதுகளிலும் விழுந்து அவர்கள் ஓடிவரத் தொடங்கினார்.

தேவகணபதி கொஞ்சம்கூட அசரவில்லை. ஓடிவருவோரை எல்லாம் தன் துப்பாக்கியாலேயே சுட்டான். இதற்கு முன் வரை துப்பாக்கியையே பார்த்திராதவன் ஏதோ ஒரு வேகத்தில் செயலாற்றியது கண்டு பாண்டியம்மாளே விக்கித்துப் போனாள். அவர்கள் மூவரும் கூட சுருண்டு விழுந்து உயிரை விட்டனர்.

தேவகணபதி கூட எக்காளமிடத் தொடங்கினான்.

அவன் கையில் ஒன்றுக்கு நான்கு துப்பாக்கிகள்!

இறந்துகிடந்த ஒன்றுக்கு நான்கு கும்பினி வீரர்களின் சடலங்களையும் அவர்கள் ஏறிவந்த புரவி மேலேயே ஏற்றி திருப்பியும் அனுப்பி வைத்தான்!

பாண்டியம்மாள் பொறி கலங்கிப் போயிருந்தாள்.

தேவகணபதியோ அவளை அணைத்து மகிழ்ந்தான்.

"பாண்டியம்மா... எனக்கு இப்போதுதான் மகிழ்ச்சியாக உள்ளது. அங்கே ஒருவனை தலை வேறு உடல் வேறாக்கினேன். இங்கே நான்கு பேரை பரலோகத்துக்கே அனுப்பி விட்டேன். இந்த சடலங்களைப் பார்த்து அந்த கும்பினிப் பூனைக்கண்ணன் பதைபதைத்து ஓடப் போகிறான் பார்..." என்று சிரித்தான்.

"இல்லை.... நீங்கள் அவசரப்பட்டு செயல்படுகிறீர்கள். தந்திரமாக இவர்களை கொன்றது ஒரு பெரிய விஷயம் இல்லை. உங்கள் ஒருவரால் கும்பினிப் படையை அழிக்க முடியுமா. யோசித்துப் பாருங்கள்..."

"இப்பொழுது எதற்கு அந்தப் பேச்சு பாண்டியம்மாள்?"

"என்ன கேள்வி இது... கும்பினிப் படை இதன் எதிர் விளைவுகளை ஊருக்குள் நம் மக்களிடமும் உங்கள் தாய் தந்தையரிடம் காட்டினால் என்ன செய்வீர்கள்?"

"நல்ல கேள்வி... என்னைப் போலவே நம் மக்களும் பதிலடி தராமலா போய்விடுவார்கள்?"

"என்றால் எல்லோரும் உங்களைப் போல வீரராகவே இருக்க வேண்டும் என்கிற கட்டாயமா?"

"பைத்தியம் போல பேசாதே... அப்படி எல்லாம் நடக்காது..."

"சரி, உங்களது அடுத்த கட்டம்....?"

"இருட்டப் போகிறது பார்... நாம் பின் வழியாக ஊருக்குள் நுழைவோம். உன்னை நான் பாதுகாப்பாக உன் வீட்டில் ஒப்படைக்க வேண்டும்."

"பிறகு....?"

"பிறகென்ன பிறகு... அந்த கும்பினியர்களை நான், என் நண்பர்கள் அவ்வளவு பேரையும் திரட்டிக் கொண்டு போய் நேருக்கு நேர் சந்திக்கப் போகிறேன்..."

"உங்கள் நண்பர்கள்.... அவர்களை இந்த நொடி கும்பினி ராணுவம் கைது செய்திருக்கும்..."

"அதையும் பார்த்துவிடுவோம்... புறப்படு..."

-பாண்டியம்மாளோடு தேவகணபதி புறப்பட்டான்!



# 9

'மறு ஜென்மம் குறித்து எவ்வளவோ செய்திகள். ஆனால், அவைகளை எல்லாம் விஞ்ஞான ஆய்வு செய்பவர்கள் மறுக்கிறார்கள், சாத்தியம் இல்லை என்கிறார்கள். குறிப்பாக ஒரு உடம்பு தாய் தந்தை இருவரின் உயிர் மூலத்தில் இருந்து அவர்களின் உடலமைப்பை ஒட்டியே உருவாகிறது. அப்படி இருக்க ஒரு முறை பிறந்து இறந்த ஒருவர் அதே உடலோடும் உள்ளத்தோடும் திரும்ப பிறந்து வருதல் சாத்தியமே இல்லை என்கிறார்கள். இதை நமது ஆன்மீகமும் மறுக்கவில்லை. ஆனால், உடம்பானது மட்டுமே அழிகிறது. ஆத்மாவானது அழிவதேயில்லை என்கிறது அது. அதற்கு சாட்சியாக அது பல உதாரணங்களையும் காட்டுகிறது. பிறந்த ஒரு குழந்தைக்கு பசியின் தேவையறிந்து முலைக்காம்பை பற்றி உறிஞ்ச யார் சொல்லிக் கொடுத்திருக்க முடியும்? மனித உயிர்களுக்காவது பரவாயில்லை- தாயானவள் பாலை வழங்க முனைப்பு காட்டுகிறாள். மிருகங்களுக்கு யார் கற்றுத் தந்தது. தாயின் வயிற்றை விட்டு வெளியே வந்த ஒரு யானைக்குட்டி முதல், ஆடு மாடுகள் வரை எப்படி பாலருந்துகின்றன? எல்லாமே முந்தைய ஜென்மவாசனைதானே? இல்லாவிட்டால் இது எப்படிச் சாத்தியமாகும் என்றும் கேட்கின்றனர். அந்த கருத்துகளை எல்லாம் உற்று நோக்க வேண்டியிருக்கிறது. நாமாக அதற்கொரு அர்த்தம் கற்பிக்க அங்கே இடமுமில்லை, வழியும் இல்லை.

**ஊ**ருக்குள் எங்கு பார்த்தாலும் தீப்பந்தங்களோடு கும்பினி வீரர்கள் திரிந்து கொண்டிருந்தனர். வீடுவீடாக

புகுந்து மிரட்டலோடு, எங்கே தேவகணபதி என்று தேடியது மட்டுமல்ல, தேடும் சாக்கில் வீடுகளில் உள்ள வர்களை எவ்வளவு துன்புறுத்த முடியுமோ அவ்வளவு துன்புறுத்தினர்.

கோட்டை மையத்தில் நான்கு கும்பினி வீரர்களின் உடம்பும் கிடத்தப்பட்டிருந்தது. அதைப் பார்த்துப் பார்த்து அனலாகிக் கொண்டிருந்தான் பூனைக் கண்ணன். அந்த உடல்களுக்கு நேர்எதிர் திசையில் தேவகணபதியின் உற்றார் உறவினர்கள் என்று அவ்வளவு பேரும் நிறுத்தப்பட்டிருந்தனர். எல்லோருடைய கைக ளையும் பின்பக்கமாக கட்டி தரதரவென்று இழுத்து வந்திருந்தனர். இழுத்து வந்த காயத்தில் தேவகண பதியின் தாயின் உடலில் எங்கு பார், ஒரே ரத்தப் பெருக்கு.

வேறுவழியே தெரியாத நிலையில் பங்காரு நாயக்கர், பூனைக்கண்ணன் அருகில் நின்றுகொண்டு "தேவகணபதி என்னும் ஒருவனுக்காக நீ இவ்வளவு பேரை இங்கே இப்படி நிறுத்தி வைத்து சித்ரவதை செய்ய நினைப்பது பெரிய பிழை..." என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்.

இதற்கு நடுவில் கடன் கேட்டிருந்த வராகன்கள் காசுகளாக இல்லாமல் தங்கப் பாளங்களாக நூறுநூறு தோலாக்களாக மான் தோலினால் ஆன பைகளில் வைத்து அனுப்பப்பட்டு அவைகளும் வந்து சேர்ந் திருந்தது. மொத்தமாக எட்டுப் பைகள்! எண்ணூறு தோலாக்கள் தங்கம்.

அவ்வளவு தங்கத்தையும் கடனாக கொடுத்த ராவுத்தர் புத்திசாலித்தனமாக ஒரு மாட்டுவண்டியில் வைக்கோர் பிரிகள் நடுவில் வைத்து பாதுகாப்பாக அனுப்பியிருந்தார். அந்த வண்டி கோட்டையில் சமையல் கொட்டாரம் அருகில் மாட்டுத் தொழுவத்தை ஒட்டி நின்றுகொண்டிருந்தது. பங்காரு நாயக்கர், அவைகளை பூனைக்கண்ணன் வசம் தருவதற்கு தயாரில்லை. எப்பொழுது இவ்வளவு தூரம் உயிர்ப்பலி வரை விஷயம் முற்றிவிட்டதோ அப்பொழுதே இது பெரிய யுத்தத்தில்தான் முடியப் போகிறது. அப்படி முடியப் போகும் ஒன்றிற்கு தங்கம் தருவது எதற்கு என்கிற முடிவிற்கு வந்து விட்டார். நடுவில் தனக்கு உதவுமாறு சுற்று வட்டாரத்தில் உள்ள அவ்வளவு பாளையாதி பதிகளுக்கும் மடல்களை புறாக்கள் மூலம் அனுப்பியும் விட்டார்.

ஆனால், எங்கேயிருந்தும் நல்ல பதில்தான் வர வில்லை.

தேவகணபதி அவசரப்பட்டு சர்வ காரியத்தையும் கெடுத்துக் குட்டிச் சுவராக்கிவிட்டதாகவே அவர் மனமும் நினைக்கத் தொடங்கி விட்டது.

மொத்தத்தில் ஒரே ஒரு பெண்ணுக்காக தன் தேவிபுரம் பாளையம் மொத்தமே கும்பினி வசம் சின்னா பின்னமாகப் போவதாகத்தான் அவரது மனமும் எண்ணத் தொடங்கி விட்டது. கடனாய் பெற்றிருக்கும் தங்கம் முதல் இந்த பாளையம் வரை சகலமும் காப் பாற்றப்பட என்னதான் வழி என்று தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தவரை பாளையத்து கோடாங்கியும், பங்காரு நாயக்கரின் குலதெய்வக் கோவிலின் பூசாரியு மான கொண்டைய்ய வீரனும் சேர்ந்து மாற்றத் தொடங் கினர். கூடவே ஏரிக்கரை சிவன் கோவில் பட்டரும் இருந்தார்.

"ராஜாவே... விஷயம் மிகவும் முற்றிக் கொண்டிருக்கிறது. தேவகணபதி, பாண்டியம்மாளுக்காக இவ்வளவு தூரம் சென்றிருக்கத் தேவையில்லை. ஊர் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக நமது குலத் தெய்வமான துர்காபவானியின் கோவிலில் எருமைகளை நாம் பலி கொடுப்பதில்லையா? அப்படி ஒரு பலியாக நினைத்து பாண்டியம்மாளை விட்டுக் கொடுத்திருக்கலாம். இப்போது பாருங்கள், அவள் ஒருத்திக்காக பாளையமே கை கட்டி நின்றுகொண்டிருக்கிறது. கும்பினி வீரர்கள் எட்டாயிரம் பேர். ஆனால், நமது பாளையத்தின் படையில் நான்காயிரம் பேர்கூட இல்லை. நம்மிடம் இருப்பது வெறும் வேல்கம்பும், சிலம்பக்கழிகளும்தான் ... ஆனால், கும்பினியிடம் துப்பாக்கிகளும் பீரங்கிகளும் ஏராளமாக உள்ளன... நாம் போரிடுவது என்று முடிவு செய்யக்கூட முடியாதவர்களாகத்தான் இப்போது இருக்கிறோம்..." என்று பங்காரு நாயக்கர் மனதை கலைத்துக்கொண்டேயிருந்தனர். இப்படி எல்லாம் உள்ளூர் இருக்கும் நிலையில்தான் தேவகணபதியும் பாண்டியம்மாளும் ஊர் எல்லையில் ஆட்டு மந்தை ஒன்றுக்குள் ஆடுகளோடு ஆடுகளாய் மண்டியிட்டு உள் புகுந்திருந்தனர். இரவு நேரம்... ஆடுகள் வித்தியாசமாக சப்தமிட்டதை வைத்து மந்தைக்காரன் தீப்பந்தத்தோடு வந்து இருவரையும் பார்த்து விட்டான்.

அப்போது அவர்கள் மூவருக்கும் கேட்டும்படியாக பறையொலியோடு செய்தி ஒன்றும் பங்காரு நாயக்கரால் அனுப்பப்பட்ட பாளையத் தகவல் சொல்லி மூலம் சொல்லப்பட்டுக் கொண்டிருந்தது.

"டும் டும் டும் டும்....



டும் டும் டும் டும்...

இதனால் தேவிபுரம் பாளையத்து ஜனக் கூட்டத்துக்கு பாளையாதிபதி நாயக்கரோட விண்ணப்பம் என்னன்னா, அரண்மனை தளவாய் குடும்பத்து தேவகணபதியும் அவன் முறைப் பெண்ணான பாண்டியம்மாளும் அரசாங்க குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டு அவங்களை யார் எங்க பார்த்தாலும் தகவல் சொல்ல உத்தரவு. அவங்கள பத்தின தகவல் தந்தா கும்பினியார் ஏழு காணி இடத்தை இனமா சாசனம் போட்டு தருவாங்க. அவங்களை பிடிச்சுத் தந்தா இருபது காணி நஞ்சை இடம். நூறு வருஷத்துக்கு வரி இல்லாதபடி வழங்கப்படும். இது கும்பினியோட கூட நாயக்கர் உத்தரவு..."

-தகவல் சொல்லி மூலம் காதில் விழுந்த செய்தி தேவகணபதியையும் பாண்டியம்மாளையும் அந்த இரவு வேளையில் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. மந்தைக்காரன் வேகமாக தன்வசம் இருந்த தீப்பந்தத்தை அணைத்துவிட்டு அவர்கள் இருவரையும் பார்த்தான். அவன் பார்த்த விதமே நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்பது போலத்தான் இருந்தது. தேவகணபதி கைகளை உதறிக் கொண்டு, "பாண்டியம்மா... அரசர் அந்த வெள்ளையனுக்கு பணிந்து விட்டார்... அவர் இவ்வளவு கோழையாக இருப்பார் என்று நான் எதிர்பார்க்கவில்லை" என்றான்.

"தம்பி... நீ தப்பா புரிஞ்சுகிட்டிருக்கே. அரசர் பணியவில்லை. பணியவைக்கப்பட்டிருக்கிறார். இந்த தகவல் சொல்லிகூட அவர் சொல்லி ஊரில் தமுக்கு போடவில்லை. எல்லாம் வெள்ளையர்கள் வேலை. ஏன் என்றால், உன் குடும்பமே இப்போது அவன் கையில்

பிணைக்கைதிகள் போல இருக்கின்றனர். உன் வீட்டுக்குள் புகுந்து கயிற்றால் கட்டி குதிரையின் பின் அது ஓட ஓட இழுத்துச் சென்றதில் உன் தாய் ரத்த வெள்ளத்தில் மூழ்கிப் போனாள் தம்பி! நான் அந்த கோரக் காட்சியை என் கண்ணாரக் கண்டேன்."

-மந்தைக்காரன் சொன்னவுடன் பாண்டியம்மாள் பதறத் தொடங்கி விட்டாள்.

"மாமா... என் யூகம் கொஞ்சம்கூட பொய்யாக வில்லை. அப்படியே எல்லாமே நடந்துவிட்டது. அவர்கள் நீங்கள் கிடைக்கும் வரை உங்கள் குடும்பத்தை சித்ரவதை செய்வார்கள்... என் குடும்பத்தையும் விட மாட்டார்கள்."

"பாண்டியம்மா... இது அநியாயம்-அக்கிரமம்!"

"கத்துவதால் பயனில்லை. எதிரியின் பலம் தெரிந்து நடக்காமல் போனது உங்கள் குற்றம்."

"நீ என்ன சொல்கிறாய்..."

"இனியாவது என் பேச்சைக் கேளுங்கள்..."

"என்ன சொல்லப் போகிறாய்?"

"வாருங்கள்... இருவருமாக சரணடைவோம். மற்றவர்களாவது நன்றாக இருக்கட்டும்."

"அதற்கு இங்கேயே நாம் உயிரை விட்டு விடலாமே...?"

"உண்மைதான்... உங்கள் குடும்பத்தையும், இந்த ஊரையும் எண்ணிப் பாருங்கள்."

"பாண்டியம்மா! நானும் நீயும் சரணடைவதால் எந்த குழப்பமும் தீராது. இதற்கு ஊரே ஒன்றுதிரண்டு



பதிலடி தர எண்ணுவதுதான் சரியான தீர்வு... வெள்ளையனுக்கு மண்டி போடுவது வீரமுள்ள தமிழர்களின் அழகில்லை..."

"தம்பி... இன்று தேவிபுரத்துக்கு வந்திருக்கும் சிக்கலை யாரும் தங்கள் ஊருக்கு நேர்ந்த ஒரு சிக்கலாக பார்க்கவில்லை. உன் சொந்த பிரச்சினையாக மட்டுமே பார்க்கிறது. அந்த வெள்ளைக்கார பூனைக் கண்ணன் புத்திசாலி..., 'எனக்கு இந்த முறை வரியே நீங்கள் கட்ட வேண்டாம். இறந்துவிட்ட எங்கள் வீரர்களுக்கு பதில் சொல்லுங்கள் போதும்' என்று பேச்சையே மாற்றி விட்டான். அது மட்டுமல்ல... பாண்டியம்மாளை அவன் அனுபவிக்க கேட்கவில்லையாம். அவளைப் பார்த்து ஓவியம் வரையத்தான் ஆசைப்பட்டானாம். நீதான் இடையில் புகுந்து எல்லா விஷயத்தையும் குழப்பிக் குட்டிச் சுவர் ஆக்கி விட்டாயாம்!"

-ஆட்டு மந்தைக்காரன் அடுத்தடுத்து சொன்ன செய்திகள் தேவகணபதியை நிலைகுலைய வைத்து விட்டன.

"தம்பி.. நீ அவசரப்பட்டு விட்டாய். இதில் எதுவும் உண்மையில்லை என்பது ஊருக்கும் தெரியும். ஆனால், அவன் அப்படியே பிரண்டு பேசும்போது யாரால் என்ன செய்ய முடியும். அவனுக்கு தேவை இப்போது நீ மட்டும் தான்..."

"ஐயா, மந்தைக்காரரே... அவன் நரித்தனம் செய்கிறான். எங்கே ஊர் ஒன்றுதிரண்டு எதிர்க்குமோ என்று அவ்வளவு செயலையும் திசை திருப்பி விட்டிருக்கிறான். அவன் வரி வேண்டாம் என்று சொன்னதெல்லாம் ஊரை ஏமாற்ற.... இதை நம்புவது நம் ஊருக்கு நல்லதல்ல..."

"அதை எல்லாம் இங்கே இருந்து கொண்டு பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. வேகமாக ஒரு முடிவுக்கு நீ வா... இல்லாவிட்டால் அங்கே உன் குடும்பத்தில் ஒவ்வொருவர் உயிராக போனபடியே இருக்கும். நீ துரதிர்ஷ்டசாலி. உனக்கு உதவ இப்பொழுது யாரும் தயாராக இல்லை..."

-மந்தைக்காரன் சொல்லிவிட்டு, "இங்கேயே ஒரு அரை மணி கால அவகாசத்தில் நல்லதொரு முடிவுக்கு வா... நான் மந்தைக்கு வெளியில் காவல் இருக்கிறேன்" - என்று கூறி விலகிக் கொண்டான்.

தேவகணபதி மௌனமானான். பாண்டியம்மாள் கண்ணீர் பெருக்கத் தொடங்கினாள். விசும்பி அழக்கூட பயந்தவளாக வாய் பொத்திக் கொண்டு அழுதாள்.

அரண்மனை!

குறுக்கும் நெடுக்கும் நடந்தபடி இருந்தார். பங்காரு நாயக்கர். அருகில் கோடாங்கி கொண்டைய்ய வீரனும், கோவில் பட்டரும் இருந்தார்கள்.

திரும்பின பக்கமெல்லாம் கும்பினி வீரர்கள்... அவர்கள் பார்வைகூட பங்காரு நாயக்கர் மேல்தான் இருந்தது.

"ஊர் முழுக்க தண்டோரா போட்டு செய்தி அறிவிக்கச் செய்தாகி விட்டது. இடத்துக்கு ஆசைப்பட்டு யாராவது காட்டிக் கொடுத்தால் தேவகணபதி வசப்படுவான். அப்படி அவன் அகப்பட்டால் அவனை கும்பினியார் வசம் ஒப்படைத்து விடுவோம். ஆற்காடு கோட்டைக்கு அழைத்துச் செல்லச் சொல்லி அங்கே



ஆயுள் காலம் முழுக்க சிறையில் வைத்துக் கொள்ளட்டும். இது ஒரு நல்ல தருணம்! வரியே வேண்டாம் என்று பூனைக்கண்ணன் சொன்னதையே ஓலையில் எழுதி வாங்கிக் கொண்டு விடுவோம்...

ராவுத்தர் அனுப்பியிருக்கும் எண்ணூறு தோலா தங்கத்தையும் அப்படியே வைக்கோர் போருக்குள்ளேயே வைத்திருக்கிறோம். அதை இப்பொழுது எடுத்துக் கொண்டு அரண்மனைக்குள் வந்தால் பூனைக் கண்ணன் புத்தி மாறினாலும் மாறி விடுவான். அவன் கண்களிலேயே அது பட்டு விடக் கூடாது.

அதை நாம் காப்பாற்றிக் கொள்வதும் மிக முக்கியம்..."

-என்று கொண்டைய வீரன் சொல்லச் சொல்ல, கோவில் பட்டரும் ஆமாம் சாமி போட்டார்.

தன் பங்கிற்கு அவரும் ஒரு வேளை தேவகணபதி வசப்பட காலதாமதம் ஆனால் வைக்கோற்போருடன் மாட்டு வண்டி ஒன்று நின்றபடியே இருப்பது வெள்ளையனுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தி விடும். எனவே, எவ்வளவு சீக்கிரம் அந்த தங்கத்தை நாம் வைக்கோர் போரில் இருந்து எடுத்து எங்காவது பதுக்குகிறோமோ அவ்வளவுக்கு அந்த தங்கம் நம்முடையதாகவே இருக்கும்... இல்லாவிட்டால் கடனாக பெற்ற அதை திருப்பி அனுப்பி விடலாம். நாளை ராவுத்தருக்கு தேவிபுரம் கடன்பட்டிருக்கிறது என்ற கெட்ட பெயராவது இல்லாமல் போகும்...." பட்டர் சொன்னதையும் கூட்டிக் கழித்து யோசித்த பங்காரு நாயக்கர், "வந்த செல்வத்தை திருப்பி அனுப்ப வேண்டாம். அதை நானே பத்திரப் படுத்திக் கொள்கிறேன்... எனக்கு தெரியும்" என்றார்.

அந்த பதில் அவர்கள் துளி கூட எதிர்பார்த்திராத பதில்.

அடுத்த ஒரு பத்து நிமிட கால அவகாசத்தில் பங்காரு நாயக்கர் அரண்மனை தூமாட்டி (தீப் பந்தம் பிடிப்பவன்) வேடத்துக்கு மாறிவிட்டார். அவரை கொண்டைய்ய வீரனுக்கும் பட்டருக்குமே அடையாளம் தெரியவில்லை.

கையில் ஒரு தூமாட்டியுடன் வழிநெடுக உள்ள எரியாத விளக்குகளை எல்லாம் எரிய வைத்துக் கொண்டே அரண்மனை சமையல்கட்டுப் பகுதியை எட்டி அங்கே தொழுவத்தை ஒட்டி நிற்கும் மாட்டு வண்டியிடமும் போய்ச் சேர்ந்தார்.

வண்டிக்காரன் வெற்றிலைக்காக கொட்டைப் பாக்கை இரும்புக் கல்லுக்குழிக்குள் வைத்து நசுக்கிக் கொண்டிருந்தான். நாயக்கர் வேகமாக கீழே இருக்கும் வைக்கோர் குப்பைகளை கூட்டி தீவைக்கவும் புகை மண்டத் தொடங்கியது. மொத்தமாய் புகை சூழ்ந்த அந்த வேளையில் மளமளவென்று தங்கத் தோலாக்களை வண்டியிலிருந்து எடுத்து எங்கே இடம் மாற்றினார் என்பதே தெரியவில்லை.

புகை அடங்கவும் அவர் பணியும் முற்று பெற் றிருந்தது. அப்படியே அருகில் உள்ள கிணற்றடிக்குச் சென்று நீண்ட புரிக்கயிற்றால் வாளி கொண்டு நீர் இறைத்து, இறைத்த நீரை மொண்டு குடித்துவிட்டு நகர முனையும் போது அந்த பூனைக் கண்ணனே நேரில் வந்து,

“பங்காரு நாயக்கரே.. இது என்ன வேடம்? இப்படி வேடம் போட்டால் எனக்குத் தெரியாதா.. இந்த வேடத் தோடு தப்பித்து போய் அந்த தேவகணபதியை பார்க்க



உத்தேசமா?”-என்று கூடவே வந்து நிற்கும் துபாஷின் வாயிலாக கேட்டான். நாயக்கருக்கும் அதிர்வாகத்தான் இருந்தது.

அவனை நீங்கள் தேடத் தேவையே இல்லை... ஒரு சந்தைக்காரன் அவன் இருக்கும் இடத்தை காட்டிக் கொடுத்து விட்டான். அவனை பிடித்து வர பெரும் படையும் சென்றிருக்கிறது. உங்கள் ஊர்க்காரர்களுக்கு நிறைய நாட்டுப்பற்று இருக்கும் என்று எங்கள் கர்னல் அவர்கள் எண்ணியது தப்பாகி விட்டது. 20 காணி இடத்துக்காக பெற்ற தாயைக்கூட காட்டித் தருபவர்கள் இங்கே இருக்கிறார்களோ என்று எண்ணத் தோன்று கிறது.”

-துபாஷ் பேசப் பேச பங்காரு நாயக்கருக்கு அப் படியே பற்றி எரிந்தது. நல்ல வேளையாக அவர் தங்கத் தோலாக்களை இடம் மாற்றம் செய்தது பற்றி பூனைக் கண்ணன் துளியும் சந்தேகப்படவோ கேள்வி கேட்கவோ இல்லை!

ஆனால், அவன் வேறு மாதிரி சந்தேகப்பட்டான்.

“பங்காரு நாயக்கரே... நீங்கள் இந்த வேடம் போட்டு ஏதோ துரோகம் செய்ய பார்த்திருக்கிறீர்கள்... உங்களுக்கு நான் வரி விதிக்க மாட்டேன் என்றதை வாபஸ் வாங்கிக் கொள்கிறேன். தேவிபுரம் பாளையம் இனி எங்களுக்கு இருமடங்கு வரி செலுத்த வேண்டும். அதுமட்டுமல்ல, அந்த தேவகணபதியை நான் தண் டிக்கும் விதம் பார்த்து இந்த ஊரே கும்பினியர்கள் என்றால் நடுங்க வேண்டும். எங்களை எதிர்க்கும் துணிவு இந்த ஊரில் ஒரு நாய்க்குகூட வரக் கூடாது.”

-என்று கொக்கரித்தான். அடுத்தடுத்து அவன் காட்டில்தான் மழை! மந்தைக்காரன் காட்டிக் கொடுக்க கைதியாக இழுத்து வரப் பெற்ற தேவகணபதி, பாண்டியம்மாள் மற்றும் பங்காரு நாயக்கர் எதிரில் ஊரே பார்க்க தலை வேறு கால் வேறாக வெட்டிக் கொல்லப்பட்டான்.

அப்போது பாண்டியம்மாள் அலறிய அலறலில் அந்த கோட்டையே நடுங்கிற்று.

வெட்டப்பட்ட தேவகணபதியின் உடல் பாகங்களை மொத்தம் எட்டு துண்டங்களாக்கி ஆளுக்கொரு துண்டுகளை எடுத்துக் கொண்டு தேவிபுரத்தின் தெருக்களில் ஊர்வலமாக வந்தது கும்பினிப்படை!

ஒரு வேல்கம்பின் கூரிய முனையில் தேவகணபதியின் சிரம் மட்டும் இருக்க, அந்த சிரம் கொண்ட கும்பினி வீரன்தான் முன்னால் நடந்தும் சென்றான். தெருவில் வந்த காட்சியை பார்த்து பலர் மயங்கி விழுந்தனர்.

சிலர் வீட்டுக் கதவுகளை அடைத்துக் கொண்டனர். சிலர் ஒரு அதிசயத்தை பார்க்கிற மாதிரி பார்த்தனர். பின் அந்த உடம்பின் பாகங்கள் அந்த கோட்டையை சுற்றியுள்ள எட்டு திசைகளின் மைய பாகங்களிலும் குழி தோண்டி புதைக்கப்பட்டது.

அந்த காட்சியை காணப் பொறுக்காத பாண்டியம்மாள், கும்பினிக்கார பூனைக் கண்ணனுக்கும் ஊருக்கும் சாபம் இட்டாள்.

கண்ணகி மதுரையை எரித்தது போல அவளும் தன் வார்த்தைகளாலேயே எரித்தாள்.

"என் காதலனை கொன்ற பூனைக் கண்ணனும் சரி, வேடிக்கை பார்த்த ஊரும் சரி, இனி எந்த நாளும்



நிம்மதியாக வாழாது. எனது சாபம் வாழவிடாது!" என்று சபித்தவள், ஏரிக்கரையோர ஆலமரக்கிளையில் தூக்கு மாட்டிக் கொண்டு உயிரையும் விட்டாள்.

அவளது பிணம் தொங்க ஆரம்பித்த நொடியில் இருந்து ஒரு பேய் மழை ஆரம்பமானது. அதன் பொருட்டு உருவான இடியானது மிகச் சரியாக பூனைக்கண்ணன் தலையில் விழவும், அவன் கருகிப் போனான். அதைப் பார்த்த கும்பினிப் படை இனி இந்த ஊரில் இருந்தால் தங்கள் உயிருக்கும் ஆபத்து நேரிடும் என்று கருதி வேகமாக வெளியேறத் தொடங்கியது.

அரசர் பங்காரு நாயக்கரோ தன்னைத் தானே ஒரு குற்றவாளியாக கருதியதில் சித்தபிரமைக்கு ஆளானார். ஊரும் மெல்ல தவறு செய்துவிட்டதை உணர ஆரம்பித்தது. தங்கள் தவறுக்கு பரிகாரமாக பாண்டியம்மாள் உயிர் விட்ட இடத்தில் கோவில் எழுப்பி வழிபடத் தொடங்கினர். தேவிபுரம் பெயரையும் பாண்டியம்மாள் கோட்டை என்று மாற்றியமைத்தனர்.

எட்டு நூறு தோலா தங்கத்தை கடனாக தந்த ராவுத்தர் அதை கேட்டு வந்து அரண்மனை கோட்டை என்று எல்லா இடங்களிலும் தேடிப் பார்த்துவிட்டு அது கிட்டாத ஏக்கத்திலும் கோபத்திலும் நிரந்தரமாக அங்கே சிலரை தங்க வைத்து தேடச் சொன்னார்.

கடைசி வரை எவராலும் தங்கத்தை கண்டுபிடிக்க முடியவில்லை. பாண்டியம்மாளின் ஆவியும் தேவகணபதியின் ஆவியும் அந்த கோட்டையின் எட்டு திசைகளிலும் வந்தவர்களை துரத்தியடித்தது ஒரு காரணம் என்றனர்.

பிற்காலத்தில் மாந்திரீகர்களும், தாந்திரீகர்களும் அந்த தங்கத்தை தேடிவருவது என்பது வழக்கமாகி

விட்டது. நடுவில் பேய் மழையாலும் காற்றாலும் வரக் கூடாத வியாதிகள் வந்து ஊரே கொத்துக் கொத்தாய் செத்து விழுந்தது. ஒரு குழிக்குள் நூறு பிணங்கள் என்று கணக்கிட்டு பல குழிகளில் பிணங்களை அள்ளிக் கொட்டி மூடினர். அதனாலேயே அந்த ஊரின் மயானமும் அல்ப ஆயுள் உள்ளவர்களின் இடு காடாகிப் போய் பெருமளவில் ஆத்மாக்கள் நிம்மதி யின்றி அலைகின்ற இடமாகவும் ஆகிப் போனது. மொத்தத்தில் சில காலத்திலேயே தேவிபுரம் முற்றாக அழிந்து பாண்டியம்மாள் கோட்டையாகவும் மாறியது. அன்று பாண்டியம்மாள் விட்ட சாபமும் எல்லோர் வீடுகளிலும் அந்த வீட்டுப் பெண்கள் நல்லபடி வாழ விடாதபடி தடுத்துக் கொண்டே வருகிறது.

எதற்கும் ஒரு முடிவு உண்டல்லவா?

இதோ கணேஷ், பாண்டிமாதேவி வடிவில் முடிவு நெருங்கி விட்டது.

இருவரும் அந்த கோட்டைக்குள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்ட நிலையில் யாரும் ஒரு வார்த்தை கூறாமலே பழைய சம்பவங்கள் அவ்வளவும் அவர்களுக்குள் எழும்பி அடங்கி விட்டது!

பொழுதிடமும் விடியல்!

பாண்டிமாதேவியை கொல்லும் நோக்கோடு வந்த அந்த இரண்டு பேரும் கோட்டையின் எமன் மூலை எனப்படும் தெற்கு மையத்தால் ஒரு நல்ல பாம்பு தீண்டிய நிலையில் நிலைப் பார்த்து இறந்தும் கிடந்தனர்!

அது ஒரு தற்செயல் சம்பவமா.. இல்லை இன்னமும் பாண்டியம்மாதேவியின் கோபத்துக்கும் சாபத்துக்கும் சக்தி இருக்கிறதா என்பது முதல் கேள்வி!



எட்டு நூறு தோலா தங்கத்தை மன்னர் பங்காரு நாயக்கர் அந்த கோட்டைக்குள் எங்கே தான் பதுக்கினார்?

இன்றைக்கு அந்த தங்கத்துக்கு தமிழகத்தின் தென் பாகத்தையே விலை பேசலாம்!

கணேஷும் பாண்டிமாதேவியும் தங்களை அறிந்து கொண்டு ஊரை எப்படி சாபத்தில் இருந்து விடுவிக்கப் போகின்றனர்?

# 10

'ராஜஸ்தானில் பதக்பூர் என்னும் ஊரில் ஒரு அதிசய சம்பவம் ஒன்று நடந்தது. அது மறு ஜென்மம் குறித்து ஆய்வு செய்தபடி இருக்கும் உலகத்தவர்கள் அவ்வளவு பேரையும் கவர்ந்து இழுக்கவும் செய்தது.

அந்த ஊரில் ஒரு பெண்ணுக்கு திடீர் என்று தனது முந்தைய ஜென்ம எண்ணம் ஏற்பட்டு தனது பாட்டி வீடு பக்கத்தில் உள்ள விலாஸ்புரி என்னும் ஊரில் இருப்பதாக கூறினாள். அப்படி எல்லாம் இல்லை என்று அவர்கள் எவ்வளவோ எடுத்துக் கூறியும் அந்த பாட்டி வீடு நோக்கிச் சென்ற அந்த பெண் வீட்டு வாசலில் நின்றபடி பாட்டியை பெயர் சொல்லி அழைத்தாள்.

உண்மையில் பேத்தியின் பிரிவால் படுத்த படுக்கையாக இருந்த அந்த பாட்டியும் எழுந்து வந்தது தான் ஆச்சரியம். இருந்தாலும் வேறு யாரோ ஒரு

பெண் இருப்பதை பார்த்த பாட்டிக்கு முதலில் திகைப்பு. ஆனால், அந்த பெண்ணோ பாட்டியைக் கட்டிக் கொண்டு, நான்தான் உன் பேத்தி தாதியம்மா என்று ஆரம்பித்து அந்த பாட்டிக்கும் தனக்குமான அந்தரங்க விஷயங்களை எல்லாம் அப்படியே பகிர்ந்து கொண்டபோது பாட்டி மட்டுமல்ல, எல்லோருமே அதிர்ந்து தான் போனார்கள்....சிலர் இது ஏதோ நாடகம் என்று கருதினர்.

அன்றைய பகல் பொழுது மெல்ல விடிய ஆரம்பித்தது! அந்த இடிந்த அரண்மனையின் ஒரு பாகத்தில் தங்களை மறந்து ஒருவரை ஒருவர் வெறித்தபடி கணேஷும் பாண்டிமாதேவியும் அமர்ந்திருந்தனர்.

விடிந்த பொழுதைத் தொடர்ந்து அந்த இளங்காலை வேளையில் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளும்போது ஒரு இனம்புரியாத பரவசம்!

பேச்சை எங்கே இருந்து ஆரம்பிப்பது.... எப்படி ஆரம்பிப்பது என்பதிலெல்லாமும் ஒரு சின்ன குழப்பம்.

கணேஷுக்கு பாண்டிமாதேவியை பாண்டியம்மா என்று அழைப்பதா, இல்லை இப்போதைய பேரில் அழைப்பதா என்று ஒரு தவிப்பு... அதே தவிப்பு அவள் வரையிலும் இருந்ததுதான் ஆச்சரியம்.

அப்படியே இருவருமே ஒரு பதினைந்து நிமிடம் வரை பார்த்துக் கொண்டே இருந்தனர். அவர்கள் அமர்ந்திருந்த இடத்துக்கு அருகில் ஒரு நொணா மரம் வளர்ந்திருக்க, அதன் கிளைகளில் அனேக காட்டுக் கொடிகள் மண்டியிருந்தன. அந்த கொடிகளில் எல்லாம்



நிறையவே பூக்கள்... அவை எந்த வகைப் பூக்கள் என்பதெல்லாம் சித்த வைத்தியர்களுக்குத்தான் தெரியும் அந்த பூக்கள் அவ்வளவும் பாண்டியம்மாளும், தேவ கணபதியும் உயிர்த்து எழுந்து வந்துவிட்டதாக கருதியது போல சூரியக்கதிர் பட்டு மெல்ல மொட்டவிழ்ந்து அப்படியே உதிர்ந்து அவர்கள் இருவரையும் அர்ச்சிப்பது போல சொரிந்து கொண்டிருந்தன!

காரை உதிர்ந்து போன அந்த நெடிய அரண்மனையின் கொடிமரக் கம்பத்தின் மேல் ஒரு மைனாவும் வந்து அமர்ந்து கொண்டு 'கூவு கூவு'.... என்று அகவ ஆரம்பித்தது. எல்லாமே நல்ல சகுனங்கள் போலத்தான் தோன்றின!

நாட்டாமை வீடு!

சூரியனுக்கு முன்பே விழித்துவிடுவதுதான் நாட்டாமை சிவஞானத்தின் வழக்கம். அப்படி விழித்துக் கொண்டவர் அருகில் இருந்த கயிற்றுக் கட்டில் காலியாக இருப்பதை பார்த்து அதிர்ந்தார்.

முதல் நாள் இரவில் அதில்தான் கணேஷ் அவரோடு சேர்ந்து படுத்திருந்தான்!

நாட்டாமை எழுந்த வேகத்தில் வீடு முழுக்க தேட ஆரம்பித்தார். வீட்டுக் கொல்லை-பாத்ரூம்-வீட்டு முகப்பு என்று ஒரு பார்வை பார்த்தவர் முகத்தில் மெல்லிய படபடப்பு.

இன்றைக்கும் அவர் உபயோகிப்பது வேலங் குச்சியைத் தான்.... ஒரு குச்சியை எடுத்து அதன் தலையை கட்டி பின் அதை தண்ணீரில் நன்றாக நனைத்துவிட்டு வாயில் வைத்து அதக்கத் தொடங்கினால் பின் ஒரு

அரை மணி நேரம் அது வாயை விட்டே இறங்காது. அப்படியே கண்மாய்க்கரை, தோட்டம், நாயக்கர் கடையில ஒரு தம் டீ அடித்துவிட்டு தினத்தந்தி பேப்பரை பார்த்துவிட்டு வருவதுதான் சிவஞானம் வழக்கம்.

தேன்மொழிதான் அவருக்கான அந்த வேலங்குச்சியை தட்டி எடுத்து வந்து தருவாள். அப்போதும் எடுத்து வந்தாள். அவளும் அவர் கணேஷைத் தேடு வதை புரிந்து கொண்டவளாக, "யாரப்பா தேடறீங்க.. நம்ம புது ஹீரோவையா?" -என்று கேட்டாள்.

"ஹீரோவா?" -சிவஞானம் அதிர்ந்து எதிர் கேள்வி கேட்டார்.

"ஆமாம்... வந்திருக்கறவர்தானே இந்த ஊரோட சாபத்தையே போக்கி எல்லாரையும் வாழவைக்கப் போறவர்... அப்ப அவர் ஹீரோதானே?"

-தேன்மொழி வேடிக்கையாக கேட்கிற மாதிரியும் இருந்தது. விநயமாக பேசுகிற மாதிரியும் இருந்தது.

"என்னம்மா நீ.. உனக்கு எப்படி இதெல்லாம் தெரியும்?"

"தேனம்மா கிழவி ஊர் பூரா சொல்லியிருக்கச்சே எனக்குதானாப்பா தெரியாது?"

"அப்படியா சங்கதி..."

"ஆமாப்பா... தேவகணபதி வந்துட்டான்.

பாண்டியம்மாளும் வந்துகிட்டிருக்கான்னு பாட்டி சொன்னதை கேட்டு எல்லாருக்கும் ஒரே சந்தோஷம்..."

"நெஜமாவா?"



"ஆமாப்பா..."

"இதென்ன முட்டாள்தனமா இந்த கிழவி ஏதோ உளர்றான்னு யாரும் சொல்லலியா?"

"ஒருத்தர் ரெண்டு பேர் சொன்னாங்க. ஆனா, தேனம்மா கிழவி சொன்னா சரியா இருக்கும்னு நம்பின வங்கதான் அதிகம்..."

"நானும் நம்பறேம்மா... ஆனா, இந்த புள்ளையை காணலியே... ஒரு வேளை தனியா கம்மாக்கரை பக்கம் போயிடிச்சா?"

"இருந்தாலும் இருக்கும். நீங்க போய் பாருங்க..."

-தேன்மொழி அவரை வழியனுப்ப முயல்கையிலே வீட்டு வாசலில் இரண்டு உருவங்கள்!

திரும்பினால் கணேஷ்-பாண்டிமாதேவி!

இருவரையும் பார்த்த மாத்திரத்தில் சொட்டேல் என்று முதுகில் யாரோ அடித்தது போல ஒரு உணர்வு. அவர்கள் இருவருமே சிவஞானம் கண்களுக்கு ஒரு இளவரசன், இளவரசி போல தெரிந்ததுதான் ஆச்சரியம்.

அப்படியே விக்கித்து நின்று விட்டார் சிவஞானம்!

தேன்மொழி அவர்களை உள்ளே அழைத்தாள்...

"வாங்க... வாங்க..."

இருவரும் வீட்டினுள் நுழைந்தனர்.

"தம்பி எங்க போய்டீங்க.... ஆமா இது யார்?-" சிவஞானத்திடம் படபடப்பு விலகவேயில்லை.

இவங்க... இவங்க..''- அவனிடமும் வார்த்தைகள் தெளிவாகவும் வேகமாயும் வர மறுத்தன. நல்ல வேளையாக பாண்டிமாதேவி சமாளிக்கத் தொடங்கினாள்.

"என் பேர் பாண்டிமாதேவி... வானதி பத்திரிகையோட சப் எடிட்டர் நான். வணக்கம்..." என்றாள்.

"பாண்டிமாதேவியா?"

"ஆமாம். அதான் என் பேர்!"

"இந்தக் காலத்துல இப்படி ஒரு பேரா...?"

"அஃப்கோர்ஸ்... எங்கப்பா ஒரு தொல்பொருள் ஆராய்ச்சியாளர். சரித்திரத்துல ரொம்ப ஈடுபாடு உடையவர். அதனால இப்படி ஒரு பேரை வெச்சுட்டார்..."

"ஓ... உக்காருங்க... நின்னுகிட்டே இருக்கீங்களே..."

-இருவரும் அமர்ந்தனர். கிராமத்து வீட்டின் மரப்பெஞ்சுகளில் அமர்வதில் ஒரு ஜில்லிப்பு உண்டு. மேலே உத்தரத்து மரக்கட்டை மேல் கைப்பருமனில் எலி ஒன்று குடுகுடுவென்று ஓடி மறைந்தது.

"கிராமத்து வீடு... நெல்லு, கடலை எல்லாம் எப்பவும் இருக்கும். அதனால எங்க இருந்தாவது எலிங்க வந்துடுதுங்க."

-சிவஞானம் எலி ஓடியதற்கு காரணம் சொன்னார். பாண்டிமாதேவி வீட்டை வெறிக்க வெறிக்கப் பார்த்தாள். பின் ஏதோ யோசித்தாள்.

"என்னம்மா யோசனை?"

"இல்ல... இங்க இதுக்கு முந்தி நான் பல தடவை வந்த மாதிரியே ஒரு உணர்வு!"



"அப்படியா...?"-சிவஞானம் பதிலுக்கு திருப்பி கேட்ட விதத்தில் ஒரு அலாதித்தன்மை இருந்தது.

"இவங்களுக்கு மட்டுமா.... நானும் இந்த வீட்டுக்கு பலமுறை வந்திருக்கேன். இந்த ஊர்ல ஒரு நந்திக் கிணறு இருந்து அதுல நீந்திக் குளிச்ச மாதிரி எல்லாமும் எனக்குள்ள எண்ணங்கள்!"

-கணேஷ் சேர்ந்து கொண்டான். பதிலுக்கு சிவஞானம் பரவசமாகி கைகளைக் கூப்பிக் கொண்டு அந்த வீட்டு ஹாலில் மாட்டப்பட்டிருக்கும் பாண்டியம்மாளின் சமாதி புகைப்படத்தைப் பார்த்தார்.

அவர் பார்க்கவும் பாண்டிமாதேவியும் பார்த்தாள்.

மெல்ல அருகில் சென்று உற்றுப் பார்க்கத் தொடங்கினாள்.

அவள் முகம் மாறத் தொடங்கியது. நெற்றி சுருங்கி வரிகள் விழ ஆரம்பித்தன. அப்படியே மயக்கம் வர ஆரம்பித்தது. மயங்கியும் விழுந்தாள்.

பதறிப்போன தேன்மொழி "என்னப்பா இது?" என்றவளாக ஓடிப்போய் தண்ணீர் கொண்டு வந்து தெளித்தாள். பாண்டிமாதேவியும் மெல்ல மயக்கம் நீங்கி கண் விழித்தாள்.

கணேஷ் குழம்பியிருந்தான்.

சிவஞானம் தவித்துக் கொண்டிருந்தார்.

தேன்மொழி மட்டும் கேட்டாள்.

"என்னங்க இப்படிப் பொசுக்குன்னு மயங்கிட்டீங்க. இது எங்க ஊர் பாண்டியம்மாள் கோவில் போட்டோங்க..."

"பாண்டியம்மாள் கோயில் போட்டோவா?"

"ஆமாம்-நீங்க எதுக்கு இதை பார்த்து மயங்கினீங்க?"

"அது வந்து..."

"என்னம்மா... சும்மா சொல்லு..."

"இல்ல... இந்த போட்டோவை பார்த்தப்போ அந்த மரக்கிளைல நானே தூக்குல தொங்கற மாதிரி ஒரு எண்ணம். என்னை நானே பிணமா பாக்கவும், அதிர்ச்சில மயக்கம் வந்துடுச்சி..."-என்றாள் பாண்டிமாதேவி!

அடுத்த நொடியே சிவஞானத்திடம் ஒரு திடீர் உற்சாகம். "தேனம்மா கெழவி சொன்னது அப்படியே பலிச்சிடிச்சு..." என்றபடியே கைகளைக் கூப்பினார். பின் "தாயி... நீ யாரோ இல்லம்மா எங்க ஊர் குலதெய்வம். வரவேண்டிய இடத்துக்கு சரியா வந்து சேர்ந்துட்டே. நீ எப்ப வருவே-எங்க ஊர் பெண்டு பிள்ளைகளுக்கெல்லாம் எப்ப விமோசனம் பொறக்கும்னுதான் இந்த ஊரே காத்துக்கிட்டிருக்கு..." என்று அவர் கூறியபோது அவர் கண்கள் கலங்கிவிட்டிருந்தன. பதிலுக்கு பாண்டிமா தேவி, கணேஷைத்தான் பார்த்தாள். கணேஷும் சிவ ஞானத்திடம், "ஐயா... முதல்ல இவங்க குளிச்சு ஃப்ரெஷ் ஷாகட்டும். அப்புறமா நாம ஒவ்வொரு விஷயமா பேசலாம். எனக்கும் உங்ககிட்ட பேச நிறைய விஷயங்கள் இருக்கு..." என்றான்.

"ஆஹா... அம்மாடி! நீ முதல்ல குளிச்சு முடி... கண்ணு தேன்மொழி, நல்லா சூடா இவங்க சாப்பிட பலகாரம் தயார்பண்ணு... நான் இதோ வந்துடறேன்..."-என்று சிவஞானம் தெருவில் இறங்கினார்.



அவர் கால்கள் நேராக பாண்டியம்மாள் கோவில் நோக்கித்தான் நடக்கத் தொடங்கின!

# 11

'அந்த பெண் தன் பாட்டியிடம் பல அந்தரங்க மான விஷயங்களை கூறி நான்தான் உன் பேத்தி என்றதை பலர் நம்பியபோதும் சிலர் நம்ப மறுத்து இது ஏதோ திட்டமிட்ட சதி என்று பேசினர். வயதில் மிகச்சிறிய ஒரு பெண் ஊர்விட்டு ஊர் வந்து ஒரு கிழவியைப் பார்த்து, நீ என் பாட்டி-நான் உன் பேத்தி என்று கூறுவதில் என்ன பெரிய சதி இருக்க முடியும் என்று சிலர் திருப்பிக் கேட்டனர். ஆனால், அந்த பாட்டிக்கென கொஞ்சம் நிலபுலன்கள் இருந்தன. பேத்தி என்று உரிமை கொண்டாடி அதில் பங்கு கேட்க ஆசைப்பட்டிருக்கலாம் என்று அதற்கொரு பதில் கூறப்பட்டது.!

இதற்குள் அந்த பெண்ணைப் பெற்றவர்கள் தேடிக்கொண்டும் வந்து விட்டனர். அவர்கள் வந்த பிறகே எதுவும் நாடகமில்லை எல்லாம் உண்மையான தாக்கம் என்பது புரிந்தது. ஒரு வேளை பைத்தியமாக இருக்குமோ என்று எண்ணியவர்கள்கூட கூர்ந்து கவனிக்கத் தொடங்கினார்.

கூடவே ஒரு கேள்வியும் எழும்பியது! இப்படி ஒருவருக்கு தன் பூர்வ ஜென்மம் பற்றிய எண்ணம் எப்படி வரமுடியும்! வரமுடியும் என்றால் ஏன் எல்லோ ருக்கும் வருவதில்லை?

இந்த பெண்வரையில் அந்த எண்ணங்கள் வந் திருப்பதற்கு காரணம் என்ன?"

- இப்படி பலப்பல கேள்விகள் வரத்தானே செய்யும்?

கண்மாய் கரை மேல் கூதைக் காற்று குளிர் கலந்து வீசிக் கொண்டிருந்தது. ஆலமரத்து இலைகளும், விழுதுகளும் இடவலமாய் ஆடியபடி இருந்தன. ஓடோடி வந்திருந்த சிவஞானம் பெருமூச்சு சிறு மூச்சுமாக தேனம்மாள் எங்கே என்று தேடினார். தேனம்மாளும் கண்மாயில் குளித்து முடித்த நிலையில் ஈரச்சேலை காற்றில் பறக்க சற்று தடுமாறியபடி வருவது தெரிந்தது.

"தேனம்மா..."

"யாரு... சிவஞானமா?"

"நானேதான்... கொஞ்சம் வேகமா வாங்க..."

"இந்த வயசுக்கு என்னால இவ்வளவுதான்பா முடியும் புதுசா ஏதாவது சங்கதியா?"

"ஆமாம் தேனம்மா... நேத்துதான் நீ ஒரு நல்ல வாக்கு சொன்னே. அது இந்த விடியக்கருக்கல்ல நடந்துடிச்சு..."

"என்னன்னு விவரமா சொல்லுப்பா..."

"தேனம்மா! உன் வாக்கு தெய்வவாக்குதான்.. நம்ம ஊருக்கும் நல்ல காலம் பொறக்கற நேரம் வந்துடுச்சி..."

"என்ன சிவஞானம் ரொம்பவே பொங்கி வழியறே.. என்னம்மோ இந்த பாண்டியம்மாளே வந்து நின்னுட்ட மாதிரி..?

"வந்து நின்னுட்டா மாதிரி இல்ல! தேனம்மா, பாண்டியம்மா வந்துட்டா!"



-சிவஞானம் சொன்ன நொடி தேனம்மாளும் ஸ்தம்பித்தாள். பேச்சே வரவில்லை அவளுக்கு...

"தேனம்மா, தேனம்மா... என்ன வாய பொளந்துட்டே-நம்பமுடியலியா? இப்பதான் வந்துருக்கா... என் வீட்லதான் இருக்கா! வந்ததும் வராததுமா சமாதி போட்டோவை பார்த்து அப்படியே மயங்கி விழுந்தா? ஏன் தாயின்னு கேட்டேன்... நான் தூக்குல தொங்கற மாதிரி இருந்தது. என் பொணத்தை நானே எப்படிப் பாக்க முடியும்? அந்த அதிர்ச்சியில் மயங்கிட்டேன்னா. இதைவிட அவதான் பாண்டியம்மாங்கறதுக்கு வேற சாட்சி என்ன வேணும் தேனம்மா?"

தேனம்மாள் கண்களிரண்டும் சரசரவென்று கண்ணீரை சிந்தத் தொடங்கின.

"ஒரு ஆச்சரியம் பார்... இந்த ஜென்மத்துலயும் அவ பேர் பாண்டியம்மாதான்... கொஞ்சம் போல மாற்றமா பாண்டிமாதேவின்னு பேரு..."

"சிவஞானம்! நீ சொல்லச் சொல்ல எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா?"

"ஆமாம் தேனம்மா... நீதான் துணிஞ்சு நிச்சயதார்த்தத்தை எல்லாருக்கும் தெரியற மாதிரி நடத்துன்னே.. இந்த நிச்சயதார்த்ததுல இருந்துதான் ஊரே நல்லவிதமா மாறும்னே... நானும் சம்மதிச்சு ஊருக்கே தெரியற மாதிரி பந்தல் போட்டு தடபுடலா அதை நடத்த ஆசைப்பட்டேன்.

ஆனா, நிச்சயதார்த்தம் நடக்காம போனப்போ, ஐயோ! தப்பு பண்ணிட்டோமேன்னு நினைச்சேன். ஆனாலும் அந்த கணேஷ் தம்பி வரவும் ஒரு நம்பிக்கை ஏற்பட்டது. இப்ப எனக்கு முழு நம்பிக்கை வந்துடுச்சி..."

-என்று சிவஞானம் பெரிதும் உணர்ச்சி வசப்பட்ட போது ஒரு அதிசயம் போல உள்ளே பாண்டியம் மாளின் சமாதி மேடை உள்ளுக்குள் குண்டு வைத்து தகர்க்கப்பட்டது போல பிளந்து கொண்டிருந்தது.

அதை தற்செயலாக பார்த்த சிவஞானத்துக்கு பகீர் என்றது.

"தேனம்மா! இது என்ன சமாதி மேடை இடிஞ்சு கிடக்கு?"

- என்று கேட்டார். தேனம்மாளும் பார்த்துவிட்டு, "நீ சொன்னது உண்மைதான்னு இந்த கோவிலே சொல்லிடுச்சு சிவஞானம். உயிரோடு வரவேண்டிய வள் வந்துட்டா அப்புறம் என்ன கோவிலும் சமாதியும்? அதான் அதுவே பிளந்துகிச்சு..."

"அப்ப நல்லதுதான்னு சொல்லு..."

"நல்லதுதான்... ஆனா, இனிதான் நிறைய சோதனைகளும் இருக்கு.."

-தேனம்மாள் நல்லதுதான் என்று கூறிவிட்டு சோதனைகளும் இருப்பதாக கூறவும், சிவஞானத்துக்கு சற்று அதிர்ச்சியாகியது.

"சோதனைங்கன்னா?"

"சோதனைங்கன்னா சோதனைங்கதான்..."

"அப்ப கெட்ட நேரம் இன்னும் முழுசா தொலைய லியா?"

"அது முழுசா தொலையற நேரம்தான் இது... கூடவே சோதனைகளையும் சந்திக்கணும்..."

"நல்லதை சொல்லிட்டு இப்படி கூடவே சோத னைன்னு பீதியைக் கிளப்பறியே தேனம்மா...."



"அச்சப்படாதே... படாதபாடெல்லாம்தான் பட்டுட்டோமே. கடைசி கடைசி... கொஞ்சம் போல தானே சோதனைங்க.. பட்டுட்டா போச்சு."

- தேனம்மாள் சொல்லி நிறுத்த, ஒருவன் சைக்கி ளில் படுவேகமாய் வந்து நின்றான். அவனிடம் மூச்சு இளைத்தது.

"என்ன சுப்ரமணி.... எங்க இவ்வளவு தூரம்?"

"ஐயா! ஊருக்குள்ள போலீஸ் வந்துருக்குதுங்க. உங்களை தேடிக்கிட்டிருக்காங்க...."

"போலீஸா... யார் என்ன தப்பு பண்ணாங்க?"

"இல்லீங்க.. நம்ம கோட்டையோட தெக்கு பாகத் துல இரண்டு பேர் பாம்பு கடிச்சு செத்துக் கெடந் துருக்காங்க. காலைல அந்த பக்கமா நம்ம மாரி முத்துவோட மாடு ஒண்ணு கயித்தை அவுத்துக்கிட்டு ஓடிப்போகவும் மாரிமுத்து போய் பொணத்த பார்த் துருக்கான். அவன் போலீஸுக்கு போன் பண்ணி சொல்லவும் போலீஸ் வந்துருக்குங்க..."

"அடக் கெரகமே.. ஆமா யார் அந்த ரெண்டு பேர்- நம்ம ஊரா வெளியூரா-இல்ல மந்திரவாதிங்களா?"

"பேண்ட் சட்டை போட்டுக்கிட்டு இருக்காங்க. உடம்பு நீலம் பூத்து கிடக்கு. பாம்பு கடிச்ச தடயமும் இருக்கு."

"கோட்டையை நோட்டம் போட வந்து பாம்பு கடிச்சு செத்துட்டாங்களா?"

"இருக்கலாம்யா... நீங்க கொஞ்சம் சீக்கிரமா வாங்க..." அவன் தான் வந்த சைக்கிளிலேயே அவரை

அழைத்துச் செல்ல தயாரானான். சிவஞானம் பதிலுக்கு தேனம்மாளை பார்த்தார். பார்வையே, இதைதான் சோதனை என்றாயா என்பது போல் இருந்தது. தேனம் மாளும் முகபாவனைகளாலேயே ஆமோதித்து அனுப்பி வைத்தாள்!

அந்த இரு உடம்புகளும் ஊரின் பஞ்சாயத்து அலுவலக கட்டடத்துக்கு வெளியில் ஒரு மரத்தடி யில் கிடந்தன. பழைய புடவை ஒன்றை யாரோ தந் திருக்க, அதால் உடம்பை மூடி காற்றில் பறக்காமல் இருக்க கல்லும் வைக்கப்பட்டிருந்தது. அருகில் சில போலீஸ்காரர்கள்!

சைக்கிளில் வவ்வால் போல் தொற்றிக் கொண்டு வந்த சிவஞானம், பஞ்சாயத்து கட்டடம் வரவும் இறங்கிக் கொண்டார்.

சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் முன்னால் வந்தார்.

"வாங்கய்யா... வணக்கம்!"

"வணக்கம்.... வணக்கம்... எங்கய்யா காலைல போய்ட்டீங்க?"

"நான் பாண்டியம்மா கோவிலுக்குதான் போயிருந்தேன். ஆமா என்னங்க இது?"

"என்னங்க இதுன்னு எங்கள கேட்டா எப்படி நாட்டாமை? உங்க ஊர் விசயம்னாலே எங்களுக்கு மண்டைக்காச்சல்தான்..."

"ஆமா... பொணமா கெடக்கறது யாரு?"

"நிச்சயம் இந்த ஊர் இல்லைன்னு தெரியும் பாத்தா ரவுடிப் பயலுங்க மாதிரிதான் தெரியுது. உடம்



புல அங்க அங்க வெட்டுத் தழும்புங்க. போட்டோவை மெயில் பண்ணா அதிகபட்சம் இரண்டு நாள்ல இவ னுங்க யாருன்னு எங்களுக்கு தெரிஞ்சிடும். எங்க டிபார்ட் மெண்ட் கிரிமினலுங்க ஃபைல்ல மட்டும் தமிழ்நாடு முழுக்க கணக்கெடுத்ததுல ஒம்பதாயிரம் பேர் இருக் காங்க. அவங்கல இந்த இரண்டு பேர் இருக்கறது இனிதான் தெரியவரும்..."

"நல்லதுங்க. கண்டுபிடியுங்க-நாங்களும் தெரிஞ் சுக்கிறோம்."

"தெரிஞ்சி என்ன புண்ணியம்-போன உசுரு வரவா போகுது?"

"அதுவும் வாஸ்தவம்தாங்க..."

"இப்படி நாங்க சொன்னதை கேட்டு ஆமாம் சாமி போடவா வந்தீங்க?"

"வேற நான் என்னத்தங்க பண்ணணும்?"

"உங்க ஊர் கோட்டைல அப்படி என்னதான்யா இருக்கு. மாசாமாசம் இப்படி ஒண்ணு ரெண்டுன்னு பொணங்க விழுந்துகிட்டே இருக்குதே..."

"ஆமாங்க... இதான் சாபம் புடிச்ச ஊராச்சுங்களே..."

"இப்படி எல்லாம் சொன்னா நாங்க விட்ற மாட்டோம். ஸ்டேஷனுக்கும் புது இன்ஸ்பெக்டர் வந்துருக்காரு. வந்தவர் பாண்டியம்மா கோட்டை பத்தி தான் முதல்ல கேட்டார்..."

"எல்லாரும் கேப்பாங்க... ஆனா எங்க ஊருக்கு ஒரு போலீஸ் ஸ்டேஷனை கொண்டு வரமாட்டேங்கறீங்க. கேட்டா அதுக்கான ஜனத்தொகை இல்லீங்கறீங்க. போவட்டும். ராத்திரி கோட்டையை சுத்தி போலீஸ்

காவலாவது போடுங்கன்னா அதுக்கும் ஒத்து வர மாட்டேங்கறீங்க..."

"ஆமா, இது பெரிய புதையல் கோட்டை. உள்ள கோடி கோடியா இருக்கு பாரு. பேயும் பிசாசும் ஒரு பக்கம்னா பாம்பு தேளுங்க மறுபக்கம். இதுக்கு எதுக்குய்யா காவல்?"

"அப்ப இப்படிதாங்க பொணங்க விழுந்துகிட்டே இருக்கும்."

"ஆக கூடி இந்த ஊர் நல்லவிதமா மாறி நாலு பேர் சந்தோஷமா வந்து போற இடமா ஆகவே ஆகாதுங்கறீங்க?"

-ஒரு போலீஸ்காரர் கேட்டது கொஞ்சம் வலியை ஏற்படுத்தியது. கோபமாக கூட வந்தது.

"இல்லையா... எல்லாம் இன்னும் கொஞ்ச நாள் தான்! எங்க ஊர் நிச்சயமா நல்லவிதமா மாறத்தான் போகுது. நீங்க வேணா பாருங்க... எங்க ஊர் கோட்டையை அரசாங்கமே எடுத்துக்கிட்டு இதை புதுப்பிச்சு நாலு பேர் வந்து சுத்திப் பாக்கிற மாதிரி எல்லாம் செய்யத்தான் போகுது..."

"அது எப்படி நாட்டாமை... எப்பவும் இல்லாதபடி உங்க பேச்சுலயும் ஒரு வேகம் தெரியுதே..."

"ஆமாங்க. நல்லதுங்க நடக்கப்போகுது-அது மட்டும் நிச்சயங்க. நீங்க இந்த உடம்புங்கள எடுத்துக்கிட்டுப் போய் உங்க கடமையைச் செய்யுங்க. நான் எதுலயாவது கையெழுத்து போடணுமா?"

"பின்ன... அதுக்குதானே இங்க பொணத்த போட்டுக்கிட்டு காத்துக்கிட்டிருக்கோம்..."



-அவர்களும் ஒரு லெட்ஜர் நோட்டை நீட்டினார். அதில் குறிப்பிட்ட இடத்தில் சிவஞானமும் கையெழுத்து போட்டு முடித்தார். பின் வந்து நின்ற ஆம்புலன்ஸில் அவர்கள் உடம்பு ஏறத் தொடங்கியது. தொட்டுத் தூக்கி ஆம்புலன்ஸுக்குள் கிடத்த முற்பட்ட போது ஊரே சுற்றி திரண்டு வேடிக்கை பார்த்தபடி இருக்க, ஒரு பிணத்தின் சட்டை பாக்கெட்டில் இருந்து ஒரு பாக்கெட் டைரி ஒன்று பொத்தென்று கீழே விழவும், அதை கவனிக்காமல் ஆம்புலன்ஸில் போலீஸாரும் ஏறிக் கொள்ள, அதுவும் புறப்பட்டது.

சிவஞானம் அந்த டைரி அருகில் வந்து குனிந்து அதை எடுத்து விரித்துப் பார்த்தார். உள்ளே வரிசையாக பலரது பெயர்கள்-அவர்களது போன் நம்பர்கள்! அந்த குட்டி பாக்கெட் டைரியில் பாண்டிமாதேவி பெயரும் எழுதப்பட்டு இருந்ததுதான் ஆச்சரியம். சிவஞானம் அதைப் பார்த்து திடுக்கிட்டார்.

அப்படியே வீடு நோக்கி நடக்கத் தொடங்கினார்.

## 12

**'ஒருவருக்கு பூர்வ ஜென்ம தாக்கம் எதனால் ஏற்படுகிறது? இந்த தாக்கம் எப்படி ஏற்படுகிறது....? விஞ்ஞானரீதியாக இதை அறிந்து கொள்ள வாய்ப்பே இல்லை. ஏன் என்றால், முந்தைய ஜென்மத்தில் நமது உடம்பே வேறு.. அது அந்த தாய் தந்தையர் தந்த சுரோணிதத்தால் ஆனது. இந்த ஜென்மத்தில் நமக்கு வாய்த்திருக்கும் உடம்பு இப்போதைய தாய் தந்தையரின் சுரோணிதத்தால் ஆனது. ஒருவர் அப்படியே முன்பெடுத்த அதே**

தோற்றத்துடன் பிறந்து வருவதற்கு வாய்ப்பே கிடையாது. ஆனால், அந்த ஆத்மாதான் அழியாது மறுபிறப்பிலும் தொடர்கிறது என்றால் ஆத்மாவிற்கு நினைவாற்றல் என்னும் ஒரு அம்சம் இருப்பதாக கருத வேண்டியுள்ளது. அந்த நினைவாற்றலுக்கும் அடிப்படையே மூளைதான். மூளை இல்லாமல் உருவமே இல்லாத அருவமான ஆத்மா எந்த வகையில் நினைவுகளை தன்னுள் வைத்துக் கொண்டிருக்கும் என்னும் கேள்வி எழுகிறது! ஒரு வேளை கண்ணுக்கு புலனாகாத அலை வடிவில் எண்ணங்கள் ஆத்ம உடம்போடு இருக்குமோ என்னும் கேள்வி எழுகிறது. இப்படி இருக்கும் அது இந்த ஜென்மத்தின் ஏதோ ஒரு நாளில் ஒரு பொழுதில் தாக்கம் ஏற்பட்டு செயல்படுகிறதோ? இது செயல்படவும் ஒரு குறிப்பிட்ட காலநேரம் இருக்கிறதோ? இப்படி பல கேள்விகள் எழும்பியபடியே இருக்கின்றன.

ஆம்.. கால நேரம்தான் பூர்வ ஜென்ம விஷயத்தில் முக்கிய காரணி என்கின்றனர் சில ஜோதிடர்கள். 'மனிதன் என்பவன் மட்டுமல்ல.. எல்லா உயிரினங்களுமே கால நேரத்துக்கும் அதன் பின் அமைந்திருக்கும் கோள்களின் கதிர்வீச்சுக்கும் கட்டுப்பட்டவையே...!' என்பது இவர்கள் அடித்துச் சொல்லும் வாதம்... எந்த வகையில்?

சிவஞானம் வீட்டிற்குள் நுழைந்தபோது கணேஷும், பாண்டிமாதேவியும் குளித்து முடித்து பார்ப்பதற்கே புதுப் பொலிவோடு அமர்ந்து கொண்டிருந்தார்கள். சமையல்கட்டில் தேன்மொழி அவர்களுக்கான பலகாரம் சமைப்பதில் மும்முரத்தில் இருந்தாள். சிவஞானத்தை பார்க்கவும், இருவரும் ஒன்று



போல இணக்கமாக சிரித்தனர். சிவஞானம் கைகளில் அந்த பாக்கெட் டைரி!

"என்னங்க கைல டைரி?"-கணேஷ் ஆரம்பித்தான்.

"இது ஒரு கதை தம்பி... அம்மாடி! நீ செல்போன் வெச்சிருக்கேதானே?"-அவர் கேள்வி பாண்டிமாதேவி நோக்கி சென்றது.

"கட்டாயமா... ஏன் சார்...?"-பாண்டிமாதேவியும் திருப்பினாள்.

"கொஞ்சம் நம்பர் சொல்லேன்..."

-அவளும் சொன்னாள். அவரும் டைரியைத் திறந்து அவள் சொன்ன எண்களை சரிபார்த்தார். மிகச் சரியாக இருந்தன. முகத்தில் உடனே ஒரு மாறுதல்.

"என்னங்க, என்ன விஷயம்?"

"நேற்றைய இரவு யாரோ இரண்டு பேர் கோட்டைக்கு வெளியே நடமாடி பாம்பு கடிச்சு இறந்தும் போய்ட்டாங்க. எங்க ஊர் கோட்டைக்கு அடிக்கடி யாராவது வர்றதும் அவங்கள்லாம் அநியாயமா செத்துப் போறதும் ரொம்ப சகஜமான விஷயம்தான். ஆனா, இன்னிக்கு செத்துப்போயிருந்த அந்த இரண்டு பேர் கைல இருந்ததுதான் இந்த பாக்கெட் டைரி. இதுல உன் பேரும் நம்பரும் இருக்குன்னா செத்துப் போனவங்கள உனக்கு தெரிஞ்சிருக்கணும். இல்ல, அவங்களுக்கு நீ ஏதோ வகைல தேவைப்பட்டிருக்கணும்னு தோணுது எனக்கு..."

சிவஞானம் சொன்ன மறு நொடி பாண்டிமாதேவி அவர் கையில் இருந்த அந்த டைரியை பிடுங்கிப் பார்த்தாள். அவள் கண்களில் ஒரு படபடப்பு. பர

பரவென்று பக்கங்களைப் புரட்டி முடித்தவள், "ஸ்கௌண்ட்ரல்ஸ்... இவங்கதான் ராத்திரி என்னை துரத்திக்கிட்டு வந்தவங்க..." என்றாள்.

"துரத்திக்கிட்டா... ஏம்மா-எதுக்கு?"

"அது எனக்கு சரியா தெரியல. ஆனா, இந்த டைரி அழகர்சாமிங்கறவனோடது. இதுல இருக்கற பல பேர் என் பத்திரிகைல விமர்சனங்களுக்கு உள்ளானவங்க..."

"அப்ப அந்த பகை காரணமா இருக்குமோ?"-கணேஷ் கச்சிதமாக கேட்டான்.

"அப்படித்தான் இருக்கணும். நான் இப்பவே என் எடிட்டருக்கு தகவல் தரேன். இவங்க யார் அனுப்பி என்னை தொடர்ந்து வந்தாங்கங்கறது தெரிஞ்சிடும். அதே சமயம் நான் நேத்து ராத்திரி வர்ற வழியில ஒரு எலும்புக் கூடு ஒண்ணையும் பார்த்தேன். என்னைக் கூட்டிக்கிட்டு வந்த ஆட்டோ டிரைவர் என்னை அப்படியே விட்டுட்டு திரும்பி ஓடிட்டான். நானும் அங்க இருந்து ஓடி வந்து பக்கத்துல இருந்த கோட்டைக்குள்ள ஒளிஞ்சு தப்பிச்சுக்க பார்த்தேன். அப்பதான் இவரையும் சந்திச்சேன்."

"ஐயா.. தம்பி! அப்ப நீங்க ராத்திரி கோட்டை பக்கம் போனீங்களா என்ன?"

"ஆமாங்கய்யா..." -கணேஷ் சற்று அசடு வழிந்தான்.

"தப்பு பண்றீங்களே தம்பி.. ஏம்மா நீங்க இந்த ஊருக்கு பகல் பொழுதுல வராம இப்படி நடுராத்திரில வந்தீங்க?"

"ஐயா.. நான் வந்த ரயில் நடுராத்திரிக்கு வரும் கறதெல்லாம் எனக்கு தெரியாதுங்க. ஆமா, இதுக்கு முந்தி நீங்க பேசும்போது இந்த ஊருக்கு பலரும்



வர்றதும் செத்துப் போறதும் சகஜம்னீங்க. அவங்க அவங்க எல்லாருமே பாம்பு கடிச்சுதான் செத்துப் போனாங்களா! அவங்க எதை எதிர்பார்த்து கோட்டை பக்கம் வந்தாங்க..." பாண்டிமாதேவி தன் பத்திரிகைப் பணியைத் தொடங்கி விட்டாள்.

சிவஞானம் அவளை அப்படியே வெறித்துப் பார்த்தார்.

"இப்படிப் பார்த்தா எப்படி?"

"இல்ல... இந்த கேள்விக்கு மட்டும் இல்லாம இன்னும் பல விடை தெரியாத கேள்விக்கெல்லாமும் விடை உனக்கே தெரியுமேம்மா.... நீயே என் கிட்ட கேட்டா எப்படி...?"

-அவர் பதில் அவளை குழப்பியது.

"என்ன சொல்றீங்க நீங்க.. எனக்கு எப்படித் தெரியும். நானே எல்லாத்தையும் புரிஞ்சுக்கவும் தெரிஞ்சிக்கவும் தானே இந்த ஊருக்கே வந்துருக்கேன்..."

-பாண்டிமாதேவியின் கேள்விக்கு கணேஷ் பதில் தரத் தொடங்கினான்.

"மிஸ் பாண்டிமாதேவி... ஐயா சொல்ற அர்த்தம் வேற-நீங்க கேக்கற தொனியே வேற... பை த பை! ஐயா எனக்கு இதுக்கு மட்டும் பதில் சொல்லுங்க. இப்பவும் பாண்டியம்மாள் கோட்டைக்கு மந்திரவாதிகளும், மாந்திரீகர்களும் எதுக்கு வர்றாங்க? கோட்டைல அப்படி என்ன இருக்கு?"

"என்ன தம்பி நீங்க... அவங்களுக்கு சரியான பதிலை சொல்லிட்டு ஒண்ணும் தெரியாத மாதிரி என்கிட்ட கேட்கறீங்க..."

"தெரிஞ்சா ஏங்க கேக்கப் போறேன்..."

"தெரியும் தம்பி... உங்களுக்குத் தெரியும்... இப்ப இல்லேன்னாலும் போகப் போக தெரிஞ்சே தீரும். ஆனா, ஒண்ணு. நீங்க ரொம்ப கவனமா இருக்கணும். உங்களுக்கு ஆபத்து இருக்கறதா தேனம்மா கிழவி சொன்னிச்சு. ஆகையால கவனமா இருங்க."

"ஓ! நேத்து நாம பார்த்த அந்த கெழவியா?"

"அவங்களேதான்... அவங்க சொன்ன மாதிரியே பாண்டியம்மா வந்துட்டாங்கல்ல...?"

-சிவஞானம் பதிலோடு பாண்டிமாதேவியைப் பார்த்திட, கணேஷ் மௌனம் கொண்டான்.

"மிஸ்டர் கணேஷ்... இவர் ஏன் இப்படி பூடகமாகவே பேசறார்?" -பாண்டிமாதேவி குழம்பினாள். இடையில் வாயில்புறமிருந்து யாரோ ஒருவர் வந்து சிவஞானத்தை அழைக்க, அவர் கவனம் தற்காலிகமாய் அந்த பக்கம் திரும்ப, டிபன் ரெடி என்றபடி வந்தாள் தேன்மொழி.

இருவரும் மௌனமாய் அந்த பழங்கால வீட்டின் சமையல்கட்டை ஒட்டியுள்ள வராண்டா பக்கம் சென்றனர். பலகை போடப்பட்டு அதன் முன்னாலே இரண்டு தையல் இலை போடப்பட்டிருந்தது. அருகில் வெண்கலச் செம்பில் தண்ணீர்.

பார்க்கவே பரவசமாக இருந்தது.

இருவரும் சென்று அமர்ந்தனர்.

தேன்மொழி இட்லி, ஆப்பம், தேங்காய்ப் பால், வெங்காய சட்னி என்று வரிசையை தொடங்கினாள்.

சாப்பிடச் சாப்பிட தேவாமிர்தமாக இருந்தது.



பாண்டிமாதேவி சாதாரணமாக காலை வேளைகளில் பேருக்குத்தான் சாப்பிடுவாள். அதுவும் இரண்டு இட்லிகள்! இன்று அந்த லிமிட்டெல்லாம் மீறப்பட்டு விட்டிருந்தது. காரணம் சுவை!

சுவை எப்பேர்ப்பட்ட கட்டுப்பாட்டையும் உளி கொண்டு உடைக்கும. சாப்பாட்டு வேகத்தில் பாண்டிமாதேவி தன்னை மறந்து, "வெல்லச் சேவும் சுக்குத் தண்ணியும் இல்லையா?" என்று கேட்டாள். சற்று ஆச்சரியத்தோடு பார்த்தாள் தேன்மொழி.

கணேஷும்.. பாண்டிமாதேவிக்கே தான் அப்படிக் கேட்டது. ஆச்சரியமாக அமைந்து திருதிருவென விழித்தாள்.

"ஏங்க... நீங்க இந்த ஊருக்கு இதுக்கு முந்தி வந்திருக்கீங்கதானே?"

"இல்லம்மா.... ஆமா எதுக்கு கேக்கறே?"

"காலைல பலகாரத்துல எங்க ஒரு ஊரிலதான் வெல்லச் சேவும் சுக்குத் தண்ணியும் சாப்பிடுவாங்க.. அதெல்லாம் எங்க பாட்டி காலத்தோட போயிடிச்சு. ஆனா, உங்களுக்கு தெரிஞ்சிருக்கே?"

"இல்ல தேன்மொழி! நான் ஏதோ மனசுல தோணிச்சு. கேட்டேன், நிஜமா சொல்றேன். அதுதான் இந்த ஊர் வழக்கம்கறது எனக்கு தெரியாது...."

"பாண்டிமாதேவி.. இப்படி நானும் நேத்துல இருந்து பல அனுபவங்களுக்கு ஆளாகிட்டுதான் வரேன். ராத்திரி பொழுது மட்டும் விடியாம போயிருந்தா நமக்கு இன்னும் பல புதுப்புது அனுபவங்கள் சிந்தனைகள் ஏற்பட்டிருக்குமோ என்னவோ?"

-அவன் பதில் அவளையும் ஆமோதிக்க வைத்தது. சாப்பிட்டு முடித்து ஒரு வழியாக கை கழுவினார்கள்.

"ஆமாம். அப்பாகிட்ட ஏதோ பேசிக்கிட்டிருந்தீங்களே... அப்பா எங்க ஊர் பத்தி ஏதாவது சொன்னாரா?"

"எங்க சொன்னார்... எதைக் கேட்டாலும் உங்களுக்கு தெரியாத பதிலான்னு எங்களையே திருப்பறார். எங்களுக்கு தெரிஞ்சிருந்தா நாங்க ஏன் கேக்கறோம்..."

"சரி, இப்போ உங்களுக்கு என்ன தெரியணும்?"

-தேன்மொழி முன்வந்ததை பாண்டிமாதேவி கெட்டியாக பிடித்துக் கொண்டபோது கணேஷ் செல்போனில் சிணுங்கல். திரையைப் பார்த்தான். பார்த்திபன்! நிமிர்ந்து தேன்மொழியைப் பார்த்தவன் "உன் ஆளுதான் போன்ல..." -என்றபடியே ஆன் செய்து காதைக் கொடுத்தான்.

"கணேஷ்! இப்ப நீ எங்க இருக்கே?"

"உன் மாமனார் வீட்லதான் பார்த்தி..."

"என்னடா உளர்றே...?"

"ஸாரி! ஸாரி... மாமனாரா வரப்போற சிவஞானம் வீட்ல. உன் பெண்டாட்டியா வரப்போற தேன்மொழி கையால மூக்கு முட்ட டிபன் சாப்பிட்டுட்டு அரட்டை அடிச்சுக்கிட்டிருக்கேன்..."

"கணேஷ்... என்னடா இது கூத்து! அங்க என்னடா உனக்கு வேலை?"

"கரெக்டா கேட்டே பார்த்தி... எனக்கென்னவோ இங்குதான் நான் இனி எப்பவும் இருக்கப் போறேன்னு தோணுது."



"உளறாம உடனே புறப்படு. உன் வீட்ல தேடிக்கிட்டு இருப்பாங்க."

"அது எனக்கு தெரியும். அவங்களுக்கெல்லாம் நான் சொல்லிக்கிறேன். நீ வர்ற வெள்ளிக்கிழமை இங்க வர்ற வழியைப் பார்..."

"வேண்டாம் கணேஷ். எனக்காக நீ அங்க இருந்து அதை ஆராயறேன்-இதை ஆராயறேன்னு கஷ்டப்படாதே. அது ஆபத்துல முடிஞ்சிடப் போகுது..."

"ஆபத்தெல்லாம் எப்பவோ வந்தாச்சு. இப்ப நாங்க அதுக்குள்ளதான் இருக்கோம்."

"நாங்களா... அது யார்ரா கூட?"

"ஓ! உனக்கு பாண்டிமாதேவியை பத்தி தெரியாதுல்ல...? வானதி பத்திரிகைல வேலை பாக்கற ரொம்ப தைரியமான பொண்ணு..."

"மை காட்! விஷயம் பத்திரிகை வரை போய் அவங்கள்லாம் வந்துருக்காங்களா?"

"ஆமாம் பார்த்தி... இன்னும் சில நாள்ல பாண்டியம்மாள் கோட்டை பத்தின எல்லா மர்மங்களும் விலகி, அது ஒரு க்ளீன் வில்லேஜ் ஆயிடும். நீ தைரியமா இருடா!"

-போனை கட் செய்துவிட்டு திரும்பியவனை தேன்மொழி வைத்த கண் வாங்காமல் பார்த்தாள்.

"என்னம்மா பாக்கறே... சொல்லு. எங்களுக்கு இந்த ஊர் பத்தின எல்லா உண்மைகளும் தெரியணும். எல்லா பொய்களும்கூட தெரியணும்..."

"எனக்கு ஏதோ என் காதுல விழுந்ததுதான் தெரியும். தேனம்மா பாட்டிக்குத்தான் முழு விவரமும் தெரியும்!''

"தேனம்மா பாட்டி... வித்தியா சமான பேர்! ரைட்... கணேஷ்! அது யார் தேனம்மா?"

"நாம அவங்கள கட்டாயம் சந்திக்கிறோம் பாண்டிமாதேவி... ஸாரி... நான் இனி தேவின்னே கூப்பிடறேனே... பாண்டிமாதேவின்னு ஒவ்வொரு முறை கூப்பிடும்போதும் நான் ஏதோ ஒரு பள்ளத்தாக்குள்ள கிடக்கற மாதிரி ஒரு உணர்ச்சி எனக்குள்ளே..."

"வித் ப்ளெஷர் கணேஷ். எங்க ஆபீஸ்லயே எல்லாரும் தேவின்னுதான் கூப்பிடுவாங்க...."

-இருவரும் வெகு சகஜமாகிவிட தேன்மொழி அதை ரசித்தவளாக, "தேனம்மாவை பாக்கணும்னா சாயந்திரமா போங்க... அப்பதான் பாட்டிய பாக்க முடியும்" என்றாள்.

"ஏன்... இப்ப போனா?"

"பாட்டி பாண்டியம்மா கோவில்ல தியானத்துல உக்காந்துடும்..."

"ஐ... ஸீ..."

"ஆமாம்... வேணும்னா அப்படியே கோவில் பக்கம் போய்ப் பாருங்க. பாட்டி சில சமயம் பேசும். உங்களுக்கு அதிர்ஷ்டமிருந்தா பேசட்டுமே."

-தேன்மொழி எடுத்துத் தர, இருவரும் அப்பொழுதே கிளம்பி விட்டனர்.



# 13

'பூர்வ ஜென்ம ஆராய்ச்சியில் பல சிக்கலான கேள்விகளுக்கு ஜோதிடர்களிடம் இருந்துதான் ஓரளவு சரியான விடை கிடைத்தது. ஒரு உயிர் எப்பொழுது பிரிகிறதோ அப்பொழுது உள்ள நட்சத்திர நிலை, திதியின் அமைப்புக்குள்தான் எல்லாம் இருக்கிறது. உடம்பை விட்டு இறப்பின் நிமித்தம் பிரியும் ஆத்மாக்களில் லட்சத்தில் ஒரு ஆத்மாதான் மீண்டும் பிறவாத ஒரு நிலையோடு முக்திக்கு செல்கிறது. மற்ற அவ்வளவு ஆத்மாக்களும் தங்களின் பாவ புண்ணிய கர்மங்களுக்கு ஏற்ப திரும்ப பிறக்கவே செய்கின்றன. சரியான அலை வரிசைப் போக்கில் கருவறைகளில் புகுந்து கருவறைக்குள் வளரும் உடம்பின் ஆத்ம வடிவமாகி விடுகின்றன. இவைகளில் லட்சத்தில் ஒன்றிரண்டு ஆத்மாக்களுக்கு லயப்படும் உடம்புக்குள் ஒரு ஒன்ற முடியாத நிலை ஏற்படும். அந்த ஒன்ற முடியாத நிலைதான் அவர்கள் வளரும் ஒரு நாளில் மனதுக்குள் எண்ணக் கசிவை உருவாக்கி அவர்களை தவிக்க விடும். இப்படிப்பட்டவர்கள் முந்தைய ஜென்மத்தில் உயிர் விட்ட திதி வேளை வரும்போது அவ்வேளையில் நிலவும் மின் காந்த அலை வரிசை தொடர்போடு இவர்களுக்கான தொடர்பும் ஏற்பட்டுவிட, ஒரு செல்போனில் இருந்து இன்னொரு செல்போனுக்கு பேசுவது போல அந்த வேளைத் தொடர்பு இவர்களின் அடங்கி கிடக்கும் எண்ணங்களோடு முட்டி மோதி ஒரு தாக்கத்தை ஏற்படுத்திட, மனத்துக்குள் அது நினைப்பு போல கசிந்து பரவும் என்கின்றனர்.

பாண்டியம்மாள் கோட்டை சுடுகாடு! உள்ளே குடிசை முகப்பில் கட்டில் மேல் உட்கார்ந்து கொண்டு பக்கத்து குட்டி டிரான்சிஸ்டரில் எஃப். எம். கேட்டபடி இருந்தான் புலையன் சவரிமுத்து!

சுடுகாட்டு முன்னால் ஜீப் ஒன்று நின்றது! பின்னாலேயே ஒரு வேன். வேனில் இருந்து இரண்டு உடம்புகள் இருந்தன. முகம்கூட தெரியாதபடி ஐந்தரை அடி நீளத்துக்கு ஒரு மூட்டை போல கட்டியிருந்தனர். அந்த இரு உடம்பையும் தூக்கிக் கொண்டு சுடுகாட்டுக்குள் நுழையும் போலீஸைப் பார்த்துவிட்டு எழுந்தான் சவரிமுத்து.

பிணங்கள் உள் நுழைந்தன!

அவன் முன் அழுக்கு மூட்டையை போல போட்டார்கள். "ரெண்டு பாடியையும் பொதச்சிடு. ரவுடிப் பசங்க. உடம்பு பாம்பு கடிச்சு செத்துட்டாங்க. போஸ்ட் மார்ட்டம் ஆயிடிச்சு. எவனாவது மந்திரவாதீங்க வந்து காசுக்கு உடம்பு கேட்டாங்க. தூக்கிக் கொடுத்துட்டேன்னு கதை சொல்லக் கூடாது. ஆமா..." என்றார் ஒரு போலீஸ்காரர்.

"சரிங்கய்யா... ஒரே குழில போட்டு மூடிடட்டுங்களா- இல்ல தனித்தனியா..."

"தனித்தனியாவே மூடு.... ஆமா, நேத்து இங்க ராத்திரி பூஜை ஏதாவது நடந்துச்சா?"

"நான் ராத்திரி நேரம் இங்க தங்கறது கிடையாதுங்களே..."

"அப்ப உன்னை எதுக்குய்யா இந்த சுடுகாட்டுக்கு போட்ருக்கு."



"அது சரி... நீங்க ராத்திரில இருந்து பார்த்தா தெரியும்க."

"என்ன கண்றாவியோ... எப்பதான் இந்த ஊர் திருந்தி இப்படி தினம் தினம் பொணம் உழுவறது நிக்கப் போவுதோ?"

-போலீஸ்காரர் அலுத்துக்கொண்டே இருநூறு ரூபாயை புலையனிடம் தந்தார்.

"என்னங்க இரு நூறு ரூபாய் தர்றீங்க...?"

"அநாதைப் பொணம் மாதிரிதானே இது... காசு தர சொந்தக்காரங்களா இருக்காங்க...."

"கவர்மெண்ட் எப்படியும் ஐந்நூறு ரூவாய்க்கு குறையாம தருங்களே..."

"என்ன ரூல்ஸ் பேசறியா. இதை வண்டில போட்டு தூக்கிட்டு வர்றதுக்கெல்லாம் யார் காசு கொடுக்கறதாம்."

"இல்லீங்கய்யா... இந்தாங்க ரூவா. நீங்களே தோண்டி புதைச்சுக்குங்க..."

-புலையன் சற்று ரோஷம் காட்டவும், வேறு வழியின்றி மேற்கொண்டு ஒரு இரு நூறை தந்துவிட்டு முறைத்தபடியே அவர்கள் சென்றனர்.

அவர்கள் தலை மறையவும் உள்ளே ஒரு மரத்தின் பின்னால் இருந்து ஒரு மாந்திரீகன் வரத் தொடங்கினான். புலையனுக்கு பகீர் என்றது.

"என்னா சாமி இது. இவ்வளவு நேரமா உள்றயா இருந்தே?" என்று பதற ஆரம்பித்தான்

"ஆமாம் சவரிமுத்து.. உள்ளே சமாதில யோகத்துல இருந்தேன்"-என்றான் அந்த மாந்திரீகனும்...

சவரிமுத்து அதைக் கேட்டு ஒரு தினுசாக சிரித்தான். அதில் ஒருவித கேலி ஒளிந்திருந்தது. அது மாந்திரீகனுக்கும் புரிந்தது.

"என்னய்யா சிரிக்கறே.. அதுவும் இளக்காரமா?"

"சிரிக்காம என்ன பண்றது... சமாதியோகம், ராத்திரி பூசை அந்த பூசை இந்த பூசைன்னு நீங்களும் விடாம ஏதாவது பண்ணிக்கிட்டேதான் இருக்கீங்க. ஆனா, என்ன பிரயோஜனம்...? இதோ பாருங்க.... இரண்டு பொணம்! உங்களைப்போலவேதான் பாண்டியம்மா கோட்டைல தங்கத்தை தேடிப் போய் பாம்பு கடிச்சு செத்தே போயிட்டாங்க.. இப்படிப் பாம்பு கடிச்சு செத்தவங்க மட்டும் எனக்கு தெரிஞ்சு அறுவத்தஞ்சு வயசுல இதுவரை இருவத்தி நாலுபேர்.. அந்த தங்கம் கிட்ட யாராலயுமே நெருங்க முடியலியே..?

-சவரிமுத்து கேட்டுக் கொண்டே அந்த இரண்டு டெட் பாடிகளையும் கால் மாட்டில் பற்றி தரதரவென்று இழுத்துக் கொண்டு அந்த சுடுகாட்டின் ஒரு அமைதியான நிலப்பரப்பு நோக்கி நடந்தான்.

அவனது கேள்வி மாந்திரீகன் முகத்தில் பெரிய சஞ்சலத்தை உருவாக்கி விட்டிருந்தது. அவன் கேள்வியில் இருந்த நியாயம் நெஞ்சை அழுத்தியது.

அவனோ மண்வெட்டி கொண்டு குழியை வெட்டத் தொடங்கி விட்டான்.

"நாசமாப் போனவங்க.. பேராசை பிடிச்சு ஏண்டா இப்படி வந்து சாவறீங்க. உங்கள எல்லாம் நாறுக்கும் அம்பதுக்கும் குழி தோண்டிப் புதைக்கற கூலிக்கு செத்த வெட்டியானா என்னையும் ஆக்கிட்டீங்களேடா.."



-குழியைத் தோண்டும்போது அவனிடம் புலம்பல் பெருகியது. நெற்றியில் வியர்வை சொதசொதக்கவும், அப்படியே வழித்து விட்டான்.

மாந்திரீகன் முகத்திலோ சவரிமுத்துவின் பேச்சாலே புதிது புதிதாக எண்ணங்கள். அந்த மயானத்தின் கன்னி மூலை நோக்கி நிதானமாக நடக்கத் தொடங்கினான்.

'ஒருவேளை தங்கம்கற ஒண்ணே இல்லையோ என்னவோ.. ஒருத்தருக்கு நூறு பேர் தேடியும் கிடைக்கலேன்னா இல்லேன்னுதானே அர்த்தம்?'

-சவரிமுத்துவின் புலம்பல் தொடர்ந்து காதில் விழுந்தது. அந்த மாந்திரீகன் வரையில் அதைக் கேட்டு அன்றைக்கு ஒரு முடிவை எடுத்தே தீருவது என்கிற உறுதிக்கு மாறிப்போனது.

கன்னி மூலை!

புடைத்துக் கொண்டு வளர்ந்திருந்தது புங்க மரம் ஒன்று. அடித்தண்டு பாகத்தில் இயற்கையாகவே சாத்தானின் முகம் போல் அமைந்த ஒரு பாகம் இருக்க, அதன்மேல் மஞ்சளும் குங்குமமும் கொட்டிக் கிடந்தன. நாலாபுறமும் முட்டை ஓடுகள், அறுத்துப் போட்ட கோழியின் தலை, ஆடுகளின் கால்குளம்பு பாகம். இது போக தோரணம் போல பச்சை ஓணான்கள் அடித்து தொங்கவிடப்பட்டிருந்தன.

அந்த சூழலே வித்தியாசமாக மட்டுமின்றி பயங்கரமாகவும் காட்சியளித்தது. 'வாமாச்சாரம்' என்னும் மாந்திரீக மர்மக்கலை கற்பவர்கள் வந்து போகின்ற இடங்கள் இப்படித்தான் இருக்கும்.

தாங்கள் வசியப்படுத்த நினைக்கும் பிசாசுகளின் தேவைக்கு ஏற்ப பலிகளைக் கொடுத்து அவைகளோடு பேசிவிட்டுப் போவார்கள்.

அந்த மரத்தின் முன்னால் மேடை போல் ஒரு இடம் காணப்பட்டது. அந்த மேடைக்கும் முன்னால் ஒரு சாண் அளவு அகலத்தில் குழி ஒன்று! அதில் ரத்தம் தேங்கி உறைந்து கறுத்துப் போயிருந்தது.

மாந்திரீகன் அந்த மேடை மேல் போய் அமர்ந்தான். இடையில் இருந்து ஒரு சிறிய கத்தியை எடுத்துக் கொண்டான். தன் இடது கையை நீட்டியபோது அந்த ரத்தக் குழிக்கு நேர் மேலே கையின் மணிக்கட்டு பாகம் அமைந்தது. கத்தியால் மணிக்கட்டை அறுத்துக் கொள்ளும் முன் ஒரு முத்திரை வணக்கத்தை உட்கார்ந்த நிலையில் செய்து முடித்தான். பின் மனதை குவித்து ஏதோ மந்திரங்களைச் சொல்லத் தொடங்கினான். உச்சபட்சமாக 'க்ரூதகி.... க்ரூதகி... க்ரூதகி' என்று முணு முணுத்தான்.

திரும்பவும் கையை வளைத்து விரல்களை அபிநயித்து முத்திரை வழிபாடு செய்தான். அப்படியே எழுந்து நின்றான். கத்தியால் மணிக்கட்டை அறுத்து ரத்தத்தை குழிக்குள் விழுமாறு பார்த்துக் கொண்டான்.

கண்ணிரண்டும் இடுங்கிக் கொள்ள, "க்ரூதகி வா... க்ரூதகி வா... வந்து வழிகாட்டு... உனது உபாசகனை கைவிட்டு விடாதே... வா க்ரூதகி! வா...." என்று உணர்வு பூர்வமாக அழைக்க ஆரம்பித்தான். ரத்தம் அந்த குழியை நிரப்பி வழிந்து எல்லா புறங்களிலும் செல்லத் தொடங்கியது.



சவரிமுத்து குழியை முழுவதுமாக வெட்டி அதற்குள் அந்த பிணங்களை போட்டு மூடியபடி இருந்தான். மண்ணை இழுத்து விடும்போது கன்னி மூலையை நின்ற இடத்தில் இருந்து கொண்டே பார்த்தான். மாந்திரீகனின் குருதி பல பூஜையை அவனால் அங்கிருந்தே பார்க்க முடிந்தது.

"ஆரம்பிச்சுட்டான் இந்த ஆள்... ரத்தம் குடிக்க இப்ப எது எது வரப் போகுதோ தெரியலியே..." என்றும் முணு முணுக்க, விசுக்கென்று ஒரு சப்தம். புஷ்டியான கறுப்புப் பூனை ஒன்று அவனுக்கு சற்று முன்னாலே சமாதிகளை தாண்டிக் குதித்துக் கொண்டு மயானத்தின் குருதி பூஜை நடக்கும் அந்த கன்னி மூலை நோக்கி ஓடியபடி இருந்தது.

சவரிமுத்துவுக்கு சற்று நெஞ்சையடைத்தது. அந்த பூனையோ மாந்திரீகன் முன்னால் போய் நின்றது.

பின் அந்த குழியில் பெருகிய ரத்தத்தை சப்பிக் குடிக்கத் தொடங்கியது. மாந்திரீகனும் அதைப் பார்த்து தனது பிரார்த்தனை ஈடேறிவிட்டதைப் போல சந்தோஷப் பட்டான்.

"க்ரூதகி! வந்துட்டியா.... சந்தோஷம்... ரொம்ப சந்தோஷம்..." -என்று உணர்ச்சி வயப்பட்டான்.

அந்த கறுப்புப் பூனை அவ்வளவு ரத்தத்தையும் குடித்துவிட்டு அவனைப் பார்த்து 'மியாவ்' என்றது. பின் வந்தது போலவே திரும்பி ஓடி கண்ணை விட்டு மறைந்து போனது. அது மறையவும், அவன் காதுகளுக்கு மட்டும் கேட்கும்படி க்ரூதகி என்று அவன் கூப்பிட்ட துர் தேவதையின் குரல் ஒலிக்கத் தொடங்கியது.

"உலகநாதத் தேவா...உன் பூஜைக்கு சந்தோஷம். அழைத்த விஷயம் பேசு..." என்றது. அந்த மாந்திரீகனுக்கு உலகநாதத் தேவன் என்பதுதான் பெயர் என்பதே புலையன் சவரிமுத்துக்கு அப்போதுதான் தெரியும்.

"க்ரூதகி! நான் இந்த மயானமே பழியாகக் கிடக்கறது எதுக்குன்னு உனக்குத் தெரியாதா?"- அவனும் பேசத் தொடங்கினான்.

"தெரியும். பாண்டியம்மாள் கோட்டை சொர்ணம் தான் உன் லட்சியம்.."

"அந்த தங்கம் எனக்கு கிடைக்கணும் தேவி..."

"அது உனக்கு சாத்தியம் இல்லை. உனக்கு மட்டும் இல்லை, யாருக்குமே சாத்தியம் இல்லை...."

"அது எப்படி க்ரூதகி.. ஏன் சாத்தியமில்லை?"

"என்னைவிட பலசாலியான நாகாயி எனும் தேவதை அதை பாதுகாத்து வருகிறாள். அதை புதைத்தவனோ, இல்லை புதைக்க காரணமாக இருந்தவனோ வரும் வரை பாதுகாக்க வேண்டியது நாகாயியின் கடமை. காரணமாக இருந்தவனும் வந்துவிட்டான். எனவே, இனி நீ அதைப் பற்றி நினைக்காதே.."

"யார் க்ரூதகி அது?"

"பாண்டியம்மாள் கோட்டை இன்று இப்படி இருக்கவே காரணமான தேவகணபதியும், ஊருக்கே சாபம் விட்ட பாண்டியம்மாளும் திரும்ப ஜென்மம் கண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் வசம் அது சென்று சேர்ந்து விடும்..."

"கூடாது க்ரூதகி... இங்கே நான் செய்த பூஜைகள் வீண்போக நீ விடலாமா?"



"நான் ஒன்றும் செய்வதற்கில்லை. அந்த நாளில் இருந்தே நாகாயிதான் நாயக்க வம்சத்துக்கு குல தெய்வம். பங்காரு நாயக்கனும் நாகாயியை வேண்டிக் கொண்டுதான் தங்கத்தை ஒளித்தான். அதனால்தான் நாகாயி அதை காவல் காத்து வருகிறது.... தேடி வருவோர்கள் என்றால் புதையல் இருக்கும் பாகத்துக்கு செல்லும்போது நாகாயியால் அவர்கள் உயிர் போகிறது."

"க்ரூதகி... எனக்கு தங்கம் கிடைத்தே தீர வேண்டும். அப்படி மட்டும் கிடைத்துவிட்டால் உனக்கு தங்கத்தாலேயே பிரதிமை(உருவம்) செய்து தினமும் தங்க நாணயங்களாலேயே அர்ச்சனை செய்வேன். எனக்கு நாகாயியை அடக்கும் வழியைக் கூறு..."

"அவளை அடக்க வழியே கிடையாது. வேண்டுமானால் ஒரு தந்திரம் செய்து பார்..."

"என்ன தந்திரம்?"

"தேவகணபதியின் உடம்பை கோட்டையின் எட்டு திசையிலும் கோட்டைச் சுவருக்கு 21 அடி நேர் நேர் திசையில் பத்தடி ஆழ குழிக்குள் போட்டு அந்த நாளில் புதைத்தார்கள். அவைகளை தோண்டி எடுத்து அதை உன் உடம்போடு கட்டிக் கொண்டு கோட்டை கிணற்றுக்குள் குதி.. நாகாயியால் அப்போது உன்னை தீண்ட முடியாது. கிணற்றுக்குள் உனக்கு தங்கம் இருக்கும் இடம் தானாக தெரியவரும். தங்கத்தை எடுத்துக் கொண்டு ஊர் எல்லையைத் தாண்டும் வரை தேவகணபதியின் எந்த ஒரு எலும்பும் உன்னை விட்டு விலகி கீழே விழுந்துவிடக்கூடாது. ஊர் எல்லை தாண்டிவிட்டால் நாகாயியால் உன்னை எதுவும் செய்ய முடியாது. இதில் எது மாறினாலும் உனக்கு ஆபத்துதான்."

-க்ருதகி மாந்திரீகனுக்கு அவனுக்கான பதிலைக் கூறிவிட்டு விசுக்கென்று விலகிக் கொண்டது. காலே அரைக்கால் நாழிகை அரைக்கால் நாழிகை என்று அவை பிரசன்னமாகவும், ஆருடம் கூறவும் கட்டுப் பாடுகள் உண்டு. அந்த காலகதி முடிந்துவிட்டால் யாராக இருந்தாலும் சரி-அவை நில்லாது.

மாந்திரீகனுக்கோ நெடுநாட்களுக்கு பிறகு ஒரு வழி கிடைத்துவிட்ட மகிழ்ச்சி அவன் முகத்தில் தாண்டவ மாடியது. அறுபட்ட மணிக்கட்டு பாகத்தை முத்த மிட்டுக் கொண்டே திரும்பினான். எதிரில் சவரிமுத்து.

"என்ன சாமி... குருதி பூசையா.. வழக்கம் போல உனக்கு நீயே பேசிக்கிட்டியா?"

"அட போடா பைத்தியக்காரா... இத்தனை வருஷத்துல இன்னிக்குதாண்டா எனக்கு உருப்படியா எது தெரியணுமோ அது தெரியவந்துருக்கு..."

"அப்படின்னா?"

"தங்கம் இருக்குடா... உறுதியா இருக்கு. க்ருதகி சொல்லிட்டா."

"இருக்கு சரி... எங்க இருக்குது-எப்படி இருக்குது? அது தெரியணுமே..."

தெரிஞ்சு போச்சு அதுவும்..."

"நிஜமாவா?"

"ஆமாம். எல்லாத்துக்கும் நீயும் ஒரு வகைல காரணம்."

"நானா...?"



"நீயேதான்... நீ என்னை கேலியா பார்த்தே பாரு.. அதுதான் எனக்குள்ள ரோஷத்தை மூட்டிச்சு. ஒரு ஆவேசம் பிறந்தது..."

"சாமி.. இப்படி இங்க நிறைய பேர் உணர்ச்சி வசப் பட்டுப் பேசியிருக்காங்க என்கிட்ட அப்படிப் பேசின யாரும் இப்ப உயிரோடு இல்ல. அதை ஞாபகத்துல வெச்சுக்குங்க.."

"அவங்கள்லாம் செத்ததுல எனக்கு சந்தோஷம் தான். ஏன்னா, எனக்கு போட்டியா வரமாட்டாங்க பாரு.."

"அவங்க இல்லாட்டி என்ன? கேரளாவுல இருந்தே அப்பப்ப உங்கள மாதிரி பல மாந்திரீகர்களும் சாமி யாருங்களும் வந்துகிட்டேதானே இருக்காங்க.."

"இனி யாரும் வர மாட்டாங்க.... பாண்டியம்மாள் கோட்டையே மாறப் போகுது."

"எப்படி.. நீங்கதான் அதை மாத்தப் போறீங்களா?

"பைத்தியக்காரா... பாண்டியம்மாள் கோட்டை உருவாகக் காரணமான ஜீவன்கள் ரெண்டு பேரும் மறு ஜென்மம் கண்டு வந்துட்டாங்க... அவங்க தங்கத்தை எடுக்கறதுக்கு முந்தி நான் அதை எடுக்கணும்."

"மறு ஜென்மம் கண்டு வந்துட்டாங்களா.. இது என்ன புதுக்கதை."

"கதை இல்ல.. க்ருதகி சொன்ன சத்தியம்..."

"சத்தியம்னு எப்படி நம்பறது.. அவங்க செத்துப் போய் முந்நூறு வருஷத்துக்கு மேல இருக்கும். இவ்வளவு வருஷமா பிறந்து வராதவங்க இப்பதான் வர்றாங்களா?"

"எதையாவது பேசி என்னைக் குழப்ப முயற்சிக் காதே.. அவங்க மறு ஜென்மம் எப்ப நிகழணும்கறதுக்கு பின்னால ஏதாவது ஒரு கணக்கு இருக்கும்..."

"சரி... இப்ப நான் என்ன செய்யணும்?"

"இன்னிக்கு ராத்திரி இருட்ட ஆரம்பிச்ச உட னேயே நாம கிளம்பிடணும். அந்த தேவகணபதியோட எலும்புகளைத் தோண்டி எடுக்கற முக்கியமான வேலை இருக்கு.."

"என்னங்க நீங்க... ஏதோ எலும்புகளைத் தோண்டி எடுக்கணும்னு புதுசா என்னத்தையோ சொல்றீங்க?"

"ஆமாம். அந்த எலும்புகளை எடுக்கறதுலதான் என் வெற்றியே இருக்கு. இதுக்கு மேல எதுவும் பேசாதே. நீ இன்னிக்கு இரவு கடப்பாரை, மண்வெட்டி, ஒரு கறுப்பு வஸ்திரம், ஒரு பானை இவைகளோட என் கூட வரே.."

"சாமி... என்னை சிக்கல்ல விட்றமாட்டீங்களே...?"

"பைத்தியக்காரா.. இந்த தங்கவேட்டைல நீ என் பாகஸ்தன். எத்தனை தோலா தங்கம் எனக்கு கிடைச் சாலும் சரி. அதுல நூத்துக்கு பத்து பாகம் உனக்கு..."

"பத்து பாகம்தானா?"

"பத்து பாகம்தானாவா... அதோட மதிப்பு எவ் வளவு தெரியுமா உனக்கு...?"

"என்ன ஒரு பத்தாயிரம் இருவதாயிரம் இருக்குமா?"

"பத்து கோடிக்கு குறையாது..."

"என்னது.. பத்து கோடி ரூபாயா-எனக்கா?"



"ஆமாம். சரித்திர குறிப்புப்படி 800 தோலா தங்கம். ஒரு மாட்டு வண்டில ஏற்றிவரப்பட்டதாம். மண் தாழிக்குள்ளதான் இருக்கணும். ஒரு தாழிக்கு மூணு தாழி இருக்கலாம்."

"சாமி... இப்படி எல்லாம் எனக்கு ஆசை காட் டாதே. நான் இன்னும் முழுசா 1000 ரூபா நோட்ட பார்த்தது இல்ல. என் மூச்சு நின்னுடப் போகுது...."

"போதும் சவரிமுத்து, நீ பேசினது. இந்த நிமிஷத் துல இருந்து நீ பேசக் கூடாது. இந்த சுடுகாட்டுலயும் இனி இருக்காதே. இந்த தொழிலுக்கே நீ முழுக்கு போடற நேரம் வந்துடுச்சுன்னு நினைச்சுக்கோ..."

"எல்லாம் சரி... ஒரே ஒரு சந்தேகத்தை மட்டும் நான் கேட்டுடட்டுமா?"

"என்ன?"

"தோண்டி எடுக்கப் போற எலும்புங்க யாரோ டது...?"

"அதுதான் தேவகணபதியோட எலும்புகள்...."

"இல்ல... அந்த எலும்புகள் மக்காம இருக்குமா? ஒரு சுடுகாட்டுப் புலையன்கற முறைல என் அனுபவத்துல சொல்றேன், ஒரு மனுஷ எலும்பு உப்பில்லாத மண்ணுல அதிகபட்சம் அம்பது அறுபது வருஷம் அப்படியே இருக்கும். முந்நூறு வருஷத்துக்கு முந்திய ஒரு உடம் போட எலும்பு கிடைக்கறது சாத்தியமே இல்லை."

"நீ சொல்றது சரியா இருக்கலாம். ஆனா, தேவ கணபதி விஷயம் சராசரி மனுஷங்க விஷயம் மாதிரி கிடையாது. எப்ப அவன் ஜென்மம் கண்டு திரும்ப வந்துட்டானோ அப்பவே அவன் அசாதாரணமான

வனா இருக்கணும். அவனுடைய எலும்புகள் மண்ணாகி யிருக்க வாய்ப்பு இல்லை. அப்படி இருந்துருந்தா க்ருதகி வந்து எனக்கு அந்த விஷயம் பத்தி சொல்லி இருக்கவே மாட்டா!"

-மந்திரீகன் உலகநாதத் தேவனின் பதிலிலும் அசைக்க முடியாத ஒரு உறுதி தொனித்தது. அதற்குப் பின் சவரிமுத்து வாயையே திறக்க வில்லை!

# 14

'**உ**லகில் உள்ள உயிரினங்களின் வாழ்க்கை யில் மனித வாழ்க்கை மட்டும் மிக வேறுபட்டது. மனிதன் ஒருவனால்தான் தனது உயிரின் மூலத்தை உணரமுடியும். அதற்கான ஆரம்பம், நான் யார் என்று கேட்டுக் கொள்வதில் தொடங்குகிறது. இந்த கேள்வியை ஒரு விஞ்ஞானி கேட்டுக்கொள்வ தற்கும், ஆன்மீக மெய்ஞானி கேட்டுக்கொள்வ தற்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. விஞ்ஞானி இம்மட்டில் உடம்புக்குள் புகுந்து பார்த்து உறுப்பு களுக்கு பெயர் வைத்தான் - உடம்பு இயங்குவதற்கு இதயம் துடிப்பதும், ரத்தம் ஓடுவதும் காரணம் என்று கண்டுபிடித்தான். அதோடு சுவாசத்தால்தான் உயிர் வாழ்கிறோம் என்பதையும் கண்டறிந்து சுவசிக்கும் காற்றில் உள்ள வாயுக்கூறுகளை எல்லாம் கண்டு பிடித்தான். ஆனாலும் மரணத்தை வென்று என்றும் உயிர் வாழும் ஒரு வழிமுறையை, உடம்பில் முதுமை வராமல் இருப்பதற்கான ஒரு வழிமுறையை அவன் இதுவரை கண்டுபிடிக்கவில்லை.

இவன் வரையில் உயிர் பிரிவது என்பது சுவாசம் நின்றுபோகிற ஒரு நிகழ்வு. அவ்வளவுதான். ஆத்மா



என்ற ஒன்றை இவன் ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால், மெய்ஞானிகள் உயிர் பிரிவதை, உடம்பை விட்டு அது இடம் மாறுவதாக உணர்ந்தார்கள். காற்றை எப்படி கண்ணால் காணாது அது இருப்பதை சுவாசத்தால் உணர்கிறோமோ அப்படி ஆன்மாவை பார்க்க இயலாது - உணரலாம் என்பது இவர்கள் கருத்து. அது அழிக்க முடியாதது. அழியாதது. அது உடம்பில் இருக்கும்போது புரிந்த வினைகளுக்கு ஏற்ப மறுபிறப்பை எடுக்கிறது என்றனர். அப்படிப் பிறப்பு எடுக்கும்போது முந்தைய பிறப்பின் எந்த ஒரு நினைவுகளும் இல்லாது போய் - செய்த கருமத்துக்கு ஏற்ப கால நேரமாகிய ஒரு புள்ளிக்குள் அவ்வேளை யில் புக முடிந்த கருப்பிண்டத்துக்குள் ஆத்மா புகுந்து அந்த உடம்போடு ஒட்டி வளர ஆரம் பிக்கிறது. லட்சத்தில் ஒரு ஆத்மா முன்ஜென்ம நினைவுகளுடன் கருப்பிண்டத்துக்குள் புகுந்து நினைவுகளை அப்போதே கருப்பிண்ட மூளைக்குள் புகுத்தி வைத்து விடுகிறது. பின் உடல் வளர்ந்த நிலையில் ஒரு சரியான கால நேரத்தில் அந்த புகுத்தப்பட்ட நினைவு கசியத் தொடங்கி அதை பூர்வஜென்ம நினைவாக அது உணர்கிறது என்பது ஆன்ம ஞானிகளின் கருத்தாகும்!

*ஏரிக்கரை!*

*பாண்டியம்மாள் கோவில்...*

*பாண்டிமாதேவியும், கணேஷும் கோவில் பக்கம் போனபோது கோவில் சுவர்கூட இடிந்து விழுந் திருந்தது. அதை பார்க்க ஊரே திரண்டிருந்தது. கிழவி தேனம்மாளோ எந்த சஞ்சலமும் இன்றி ஒரு இடத்தில் கண் மூடி அமர்ந்தபடி இருந்தாள்.*

பாண்டிமாதேவிக்கு அந்த இடத்துக்கு வந்த நொடியே தன் நினைவு மறந்து விட்டது. இடிந்த கோவிலின் நேர் மேல் உள்ள மரக்கிளையை வெறித்து பார்த்தபடி நின்றாள்.

அவள் நின்ற விதம் - பார்த்தவிதம் எல்லாமே அலாதியாக இருந்தது. ஊர்க்காரர்களும் கவனித்தனர். தங்களுக்குள் சலசலத்துக் கொள்ள, கிழவி அந்த சலசலப்பால் கண் திறந்தாள்.

கணேஷைப் பார்த்த மாத்திரத்தில் வேகமாக எழுந்து நின்றாள். கையையும் கூப்பிக் கொண்டாள். கண்கள் பனிக்கத் தொடங்கி விட்டது. அருகே வந்தவள் வெறித்தபடி நிற்கும் பாண்டியம்மாளை பார்த்தவுடன் "தாயே வந்துட்டியா?" என்றுதான் கேட்டாள். ஆனால், அது பாண்டிமாதேவி காதில் விழுந்தது போலவே தெரியவில்லை. அவள் ஸ்தம்பிப்பின் உச்சத்தில் இருந்தாள். அலங்கோலமாய் கண்ணீர் மல்க அந்த மரத்தடி நோக்கி வந்து தன் சேலை முகப்பினாலேயே மரக் கிளையில் தூக்கு முடிந்து கொண்ட அந்த நாளைய சம்பவம் அவளுக்குள் ஒரு ஒட்டிப் பார்க்க முடிந்த திரைப்படம் போல ஓடிக்கொண்டிருந்தது. கண்ணிரண்டிலும் ஆறாகக் கண்ணீர்... எல்லாம் சில நொடிகள்தான்!

அப்படியே கண்கள் செருக அப்படியே விழுந்து விட்டாள். கணேஷ் தொட்டுத் தூக்கி மடி மீது போட்டுக் கொண்டான். கன்னத்தில் தட்டி மயக்கம் தெளிவிக்க பார்த்தான். கூட்டத்தில் இருந்த ஒரு பெண் ஓடிப்போய் தன் புடவை முந்தியை ஏரி நீரில் நனைத்து வந்தவளாக பாண்டிமாதேவி முகத்தின் மீது தெளித்தாள். பாண்டிமாதேவியும் கண் விழித்தாள். புதிய



உலகம், புதிய வானத்தை பார்க்கிற மாதிரி ஒரு பிரமை தட்டியது அவளுக்கு-

கணேஷ் மடி மீது கிடப்பதில் ஒரு இனம் புரியாத சுகம் இருப்பது போலவும் உணர்ந்தாள். அது எல்லாம் கூடி சில நொடிகள்தான். தானொரு பத்திரிகை ஆசிரியர் - நிகழ்காலப் பிரதிநிதி - ஊருக்கு ஆய்வு நிமித்தம் வந்திருப்பவள் போன்ற எண்ணங்கள் அடுத்தடுத்து தோன்ற, வெட்கத்துடன் எழுந்து அமர்ந்தாள். சுற்றிலும் ஊர் மக்கள். நெகிழ்வுடன் தேனம்மாள்...

அமர்ந்து கொண்ட பாண்டிமாதேவி எழுந்தும் நின்றாள். ஏறத்தாழ அவளது மனநிலையில்தான் கணேஷும் இருந்தான். தேனம்மா ஒரு பார்வை பார்த்தவள், சூழ்ந்து நிற்கும் ஊர்க்காரர்களைப் பார்த்தாள். பின் நொறுங்கி விழுந்துகிடக்கும் கோவிலையும் ஒரு பார்வை பார்த்தவள், "யாரும் வருத்தப்பட வேண்டாம். இந்த சமாதி கோவில் என்னிக்கு இடியுதோ அன்னிக்கு ஊருக்கு நல்ல காலம்னு நான் ரொம்ப காலமா சொல்லிக்கிட்டு வரேன். இது ஒரு அநியாயத்தோட அடையாளம். எப்பவோ நடந்த ஒரு அநியாயத்துக்கு நாமளும் 320 வருஷமா பரிகாரம் செய்யற மாதிரி பூஜை செய்துகிட்டு வந்திருக்கோம்... நாம செய்த பரிகாரம் ஒரு முடிவுக்கு வந்துடுச்சி... இதோ இவங்க இரண்டு பேரும் நமக்கு நல்லது பண்ணத்தான் வந்துருக்காங்க. எல்லாரும் அமைதியா அவங்கவங்க வீட்டுக்குப் போய் வேலையைப் பாருங்க. போற யாரும் சும்மா போக வேண்டாம். இடிஞ்சுகிடக்கற இந்த இடிபாடுகளை அள்ளி கைல எடுத்துக்கிட்டுப் போறவழில ஏரிக்குள்ள தண்ணில போட்டுட்டுப் போங்க..." என்றாள்.

மக்களும் அவள் பேச்சுக்கு மறுபேச்சு பேசா தவர்களாக ஆளுக்கு ஆள் அள்ளிக் கொண்டு கலைய ஆரம்பித்தனர்.

தேனம்மாள் இருவருக்கும் அருகில் வந்தவளாக, "உங்களுக்கு என்கிட்ட எதுவும் கேட்கணும்னு தோணுதா?" என்றாள்.

"ஆமாம் பாட்டி... உங்ககூட நான் நிறைய பேசணும்..."

"அப்படின்னா இங்க வேண்டாம். நீங்க இரண்டு பேரும் கோட்டைல வடக்கு பாகத்துக்கு போங்க. நானும் வரேன். அங்க நின்னு பேசுவோம்..."

"அங்க எதுக்கு பாட்டி...?"

"அதுதான் நீங்க போக வேண்டிய இடம்... அங்க நின்னு பேசும்போது நான் சொல்லாமலே உங்களுக்கு பல விஷயங்கள் தெரிய வரும். அதுதான் எனக்கு வேணும்..."

- தேனம்மாளின் முடிவான பதிலைத் தொடர்ந்து இருவரும் அங்கிருந்து கோட்டை நோக்கி நடக்கத் தொடங்கினர்.

**வா**னதி பத்திரிகை அலுவலகம்!

தனது ஸீட்டில் அமர்ந்திருந்த பிரம்மராஜன் முன் னால் அன்றைய தினசரி பேப்பர்கள் கிடந்தன. அதில் ஒரு கால் பத்தி செய்தி அவரைக் கிள்ளியது.

'பாண்டியம்மாள் கோட்டையில் இருவர் பரிதாப மரணம்! தொடரும் மர்மங்கள்...' என்று செய்தி விரிந்து கொண்டே போனது. வேகமாக எடுத்துப் படித்தவர்



மெல்ல சலனப்படத் தொடங்கினார். கச்சிதமாய், எக்ஸ்யூஸ்மீ சார் என்றபடி வந்தார் உதவி ஆசிரியரான ராஜபாண்டியன்.

தொடக்கம் முதலே பாண்டியம்மாள் கோட்டை விஷயத்தில் ஏதோ பித்தலாட்டம் மட்டுமே இருக்கிறது என்று கூறும் நபர்!

பிரம்மராஜன் அவர் முன் பேப்பரை தூக்கிப் போட்டார்.

அவரும் பார்த்துவிட்டு, "இது வழக்கமா நடக்கறது தானே சார்... இப்படி எல்லாம் நடக்கறதாலேதானே நாம பாண்டிமாதேவியை அனுப்பியிருக்கோம்..."

"அஃப்கோர்ஸ்... பாண்டிமாதேவியை தனியா அனுப்பினது தப்போன்னு தோணுது ராஜபாண்டியன்..."

"அட, எதுக்கு சார் இப்ப அநாவசிய கவலை. பாண்டிமாதேவி ரொம்ப போல்டானவங்க. அவங்க போயிருக்கும்போது இப்படி இரண்டு பேர் கோட்டைக் குள்ள நுழைஞ்சு பாம்பு கடிச்சு செத்துருக்கறது ஒரு நல்ல விஷயம்தான்! இவங்க ஆராயறதுக்கு நிறைய ஸ்கோப் இருக்கும்னு தோணுது."

"ராஜபாண்டியன்! எதுக்கும் பாண்டிமாதேவிக்கு ஒரு போன் பண்ணி பேசிடுவோமா?" - கேள்வியோடு அவர் அவளுக்கான எண்களுக்கு முயற்சி செய்தார். 'நாட் ரீச்சபிள்' என்கிற பெண் குரல் திரும்பத் திரும்ப ஒலித்து வெறுப்பேற்றியது. அப்போது இன்னொரு உதவி ஆசிரியரான பூபாலனும் உள்ளே நுழைந்தார்.

"வாங்க பூபாலன்! நல்ல நேரத்துலதான் வந் துருக்கீங்க..."

"என்ன சார் விஷயம்?"

"பாண்டிமாதேவி போயிருக்கற பாண்டியம்மாள் கோட்டைல நேத்து இரண்டு பேர் செத்துப் போயிருக்காங்க. பாம்பு கடிச்சு இறந்திருக்காங்க. அந்த இரண்டு பேரை சேர்த்து இதுவரை பாம்பு கடிச்சு இறந்தவங்க மட்டுமே ஒரு அம்பது பேராவது இருக்கும்னு செய்தி போட்டுருக்காங்க.

இந்த மாதிரி எவ்வளவு பேர் போய் இறந்தாலும் அதைப் பார்த்து யாரும் பெருசா பயப்படறதில்ல... தொடர்ந்து அங்க போய்க்கிட்டே இருக்காங்கன்னா அதுக்கு காரணம், அங்க இருக்கற தங்கப் புதையல் தான். தொல்பொருள் இலாகாவோ தங்கப் புதையல் விஷயத்தை பெருசா எடுத்துக்காம அது ஒரு பொய்யான நம்பிக்கைன்னு நினைச்சுகிட்டு அந்த கோட்டையையும் சீர்திருத்தாம அப்படியே போட்டு வெச்சிருக்குன்னு எழுதியிருக்காங்க..."

- பேச்சோடு பேச்சாக பேப்பர் செய்தியை காட்டியவர், "பூபாலன்! எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா?" என்று கேட்டார்.

"சொல்லுங்க சார்! நான் என்ன செய்யட்டும்?"

"தயவுசெய்து இன்னிக்கே இப்பவே நீங்களும் பாண்டியம்மா கோட்டைக்குப் புறப்படறீங்க. கிளம்ப றீங்களா!"

"சார்! நானே உங்க கிட்ட சொல்லிட்டு கிளம்பற எண்ணத்துலதான் இப்ப உங்கள பாக்க வந்தேன். வசதியா நீங்களே சொல்லிட்டீங்க"

"அப்ப உடனே கிளம்புங்க..."

- பூபாலன் புறப்படத் தயாராகவும், ராஜ பாண்டியன் முகத்தில் ஒரு சின்ன சிரிப்பு.



"என்ன ராஜபாண்டியன்?"

"ஒண்ணும் இல்ல சார். பூபாலன் சார் அந்த கோட்டை பத்தின விஷயங்கள் உண்மைன்னு நம்பறவர். ஆகையால இவர் எந்த அளவு பாண்டிமாதேவிக்கு உதவியா இருப்பார்னு நினைச்சேன். உடனே சிரிப்பு வந்துடுச்சி..."

"அதுவும் சரிதான். அப்ப நீங்க போங்க. இங்க டேபிள் ஒர்க்கை பூபாலன் பார்த்துக்கட்டும்..."

"இப்ப நீங்க சொன்னதுதான் சரி..."

"அதுக்காக அங்க போய் ஹீரோத்தனமா எசகு பிசகா நடந்துக்காதீங்க. விவேகம் ரொம்ப முக்கியம்."

"நிச்சயமா சார்! அந்த கோட்டைக்கு பின்னால எந்த புதிரும் கிடையாது. தங்கப்புதையலும் ஒரு கற்பனை. அசட்டுத்தனமா அங்க போறவங்களை பாம்புங்க கடிக்கத்தான் செய்யும். ஏன்னா, இப்ப அதுங்களோட வீடு அது. அங்க போய் நாம அதையும் ஆக்கிரமிக்க பார்த்தா சும்மாவா இருக்கும்? இவ்வளவு தான் விஷயம் தீயணைப்பு படைவீரர்கள் ஒரு பத்து பதினைஞ்சு பேர் கோட்டையை சுத்தப்படுத்தி இடிஞ்ச பாகங்களை பூசி வெள்ளையடிச்சுட்டாலே போதும். அது ஒரு பிக்னிக் ஸ்பாட் ஆகிடும். பயந்து நடுங்க வைக்கற இடம் பார்த்து ரசிக்கற இடமா மாறிடும்."

- ராஜபாண்டியனிடம் உற்சாகம் பீறிட்டது. "ரைட்... நீங்க புறப்படுங்க. பாண்டிமாதேவிக்கு எல்லா வகைலயும் பாதுகாப்பா இருங்க. செல் ரீச் ஆகலைன்னா லேண்ட் லைன்ல தொடர்பு கொள்ளுங்க. நாளைக்கு இதே நேரம் உங்ககிட்ட இருந்து போனை எதிர் பார்த்துக்கிட்டே இருப்பேன்."

- ஆசிரியர் பிரம்மராஜன் கைகுலுக்கி ராஜ பாண்டியனை வழியனுப்பு விட்டுத்தான் திரும்பினார்.

இப்போது பூபாலன் முகத்தில் சிரிப்பு.

"என்ன பூபாலன்.. இப்ப நீங்க எதுக்கு சிரிக்கறீங்க?"

"இல்ல சார்... அந்த கோட்டைல திரியற ஆவிங்க கிட்டே நல்லா மாட்டப் போறார் சார். நீங்க வேணா பாருங்க, வரும்போது தலைகீழா மாறியிருப்பார்..."

"இது உங்க விருப்பமா.. இல்லை கணிப்பா?"

"இரண்டும்தான் சார்..."

- இந்த முறை பிரம்மராஜன் சிரித்தார்!

**அ**து ஒரு மாந்தோப்பு!

அதில் ஒரு வலை ஊஞ்சல்!

ஊஞ்சலில் மது அருந்தியபடி ஒரு பெரிய மனிதர் படுத்திருந்தார். காதில் செல்போன் ஹியர் இன்ஸ்ட்ரு மெண்ட். யாராவது பார்த்தால் தனக்குத் தானே பேசிக் கொள்கிற மாதிரி இருக்கும்.

"ஸாரி தல... நம்ம பயலுங்க இப்படிப் பாம்பு கடிச்சு பரலோகம் போவாங்கன்னு கொஞ்சம்கூட எதிர் பார்க்கல..."

"இதை சொல்லத்தான் போன் பண்ணியா?"

"வேற நான் என்ன தல பண்ண.. அந்த பொண்ணு இவங்க துரத்துன துரத்துல கோட்டைக்குள்ள நுழைஞ் சிருக்கணும். இவங்க துரத்திக்கிட்டு உள்ள போன இடத்துல பாம்பு கடிச்சு போய்ச் சேர்ந்துட்டாங்க."

"அது எப்படிடா ஒரே சமயத்துல இரண்டு பேரை பாம்பு கடிக்கும்? எனக்கு எங்கேயோ இடிக்குதே..."



"எனக்கும் அப்படிதான் தல ஆரம்பத்துல தோணிச்சு. நானே காரை எடுத்துக்கிட்டு அந்த ஊருக்கு போய்ட்டேன். போன பிறகுதான் தெரிஞ்சிச்சு. அந்த ஊரே ஒரு டைப்பான ஊருன்னு..."

"டைப்பான ஊருன்னா?"

"டைப்பான ஊருன்னா... அத என்னத்த தல சொல்றது... அந்த ஊருல ஒரு பாழடைஞ்ச கோட்டை ஒண்ணு இருக்கு. அந்த கோட்டைல மூட்டை மூட்டையா தங்கம் இருக்குதாம்... அந்த கோட்டைல பேயுங்க வேற நடமாடிக்கிட்டு இருக்குதாம்..."

"இதென்னடா டுபாக்கூர் கதை..."

"நீங்க டுபாக்கூர்னு சொல்றீங்க... ஆனா, நம் மாளுங்கள பாம்புங்கள்ள தீண்டியிருக்கு."

"இவனுங்க பாம்புங்கள இருட்டுல மிதிச்சிருப் பாங்க. அதுங்க கடிச்சிருக்கும்..."

"அப்படியும் இருக்கலாம். ஆனாலும் நான் போய் பார்த்த வரைல அந்த கோட்டை மிரட்டலா இருக் குது. அந்த ஊர் சுடுகாட்லயும் நிறைய மந்திரவாதிங்க கண்ணுல பட்டாங்க."

"போகட்டும்.. செத்த நம்ம ஆளுங்க நான் அனுப்பி தான் அங்க போனாங்கன்னோ அவங்க அந்த பாண்டிமாதேவியை குறிவெச்சுதான் அலைஞ் சாங்கன்னோ யாருக்கும் தெரியாதுதானே?"

"தெரியாது தல... செத்துப்போன நம்மாளுங்க அந்த கோட்டைல இருக்கற தங்கத்த தேடி வந்தவங் களாதான் போலீஸ்ல இருந்து எல்லாரும் நினைக் கறாங்க. பாம்பு கடிச்ச உடம்பு பாதுகாப்பா வைக்கறதும்

நல்லதில்லன்னுதான் அநாதைப் பொணம் லிஸ்ட்ல வெச்சுப் புதைச்சுட்டாங்க..."

"போகட்டும்... அந்த பொண்ணு இன்னும் அங்க தானே இருக்கா?"

ஆமாம்... அவ அங்கதான் இருக்கா ஊரோட நாட்டாமை வீட்ல தங்கியிருக்கா."

"அவளை எப்படியாவது போட்டு தள்ளிருங்க. அவ அந்த ஊரை விட்டு உயிரோட வரவே கூடாது..."

"சரி, தல... நானே திரும்ப போறேன். காரியத்தையும் கச்சிதமா முடிக்கறேன்..."

"நீயும் பாம்புங்கள மிதிச்சு மேல போய்டாதே. அவளை முடிச்சிட்டு பழியை அந்த கோட்டை பேயுங்க மேல விழற மாதிரி பண்ணிட்டு என்னை வந்து பார். உனக்காக 2 லட்ச ரூபாய் சில்லறையா புது சூட்கேஸ்ல ரெடியா இருக்கு..."

"தல... இன்னிக்கெல்லாம் 2 லட்சங்கறது பிசாத்து தல. கொஞ்சம் பார்த்து போட்டு கொடுங்க..."

"பார்த்து போட்டு கொடுங்கன்னா... 2 லட்சத்து ஒண்ணு தந்தா ஓகேயா?"

"தல..."

"எவ்வளவுன்னு நீயே கேளு..."

"இவளை போட்டு தள்ளுனா எவ்வளவு தல உங்களுக்கு வரும்?"

"அதெல்லாம் உனக்கு எதுக்கு... இவ என்னைப் பத்தின ரகசியங்கள் தெரிஞ்சவ. என்னோட சில ரகசிய தொடர்புகள போட்டோ படமா வேற எடுத்து வெச்சுக்கிட்டிருக்கா. எப்ப அதை எல்லாம் பத்திரிகைல வெளியிடுவாளோன்னு நான் செத்து செத்துப் பிழைச்சுக்கிட்டிருக்கேன்."

"மொத்தத்துல அரசியல்லயும், உங்க தொழில் சாம்ராஜ்யத்துலயும் உங்க எதிர்காலமே இவ சாகறதுல தானே இருக்கு?"

"ஆமா... அதுல என்ன சந்தேகம்?"

"அவ்வளவு பெரிய விஷயத்துக்கு விலை வெறும் 2 லட்சம்கறது உங்களுக்கே சிப்பா தெரியல..."

"சரிடா... 5 லட்சம்! ஒரே ரேட் - இதுக்கு மேல பேசாதே..."

'ஓகே. தல... 2-க்கு அஞ்சு தேவலை. இனி இந்த இருசனா அவளான்னு பாத்துட்றேன்..."

"உனக்கு எத்தன பேருடா. என் கூட பேசும் போது ஒரு பேர்ல பேசிட்டு இப்ப இருசன்கறே..."

"பல பேர் இருந்தாதானே போலீஸை குழப்ப முடியும்?"

"சரி... புத்திசாலி மாதிரி பேசிட்டு முட்டாள் மாதிரி நடந்துக்காதே..."

"நல்லது தல..."

"எக்காரணம் கொண்டும் என் பேர் வெளி வந்துடக் கூடாது...."

"வரவே வராது. இப்பவே ராஜேந்திர பாபுங்கற உங்க பேரை நானே என் மனசுல இருந்து எடுத்துடறேன். போதுமா?"

- அவன் பேச்சில் இருந்து அவனோடு பேசிய அந்த தல ராஜேந்திர பாபு என்பது அர்த்தமாகியது.

அவனும் செல்போனை சட்டைப் பையில் போட்டுக் கொண்டு பாண்டியம்மாள் கோட்டைக்கு கிளம்பி விட்டான்!

# 15

'மறு ஜென்மம் குறித்த ஆராய்வுக்கு ஜோதிடத்தில்தான் ஓரளவு விடை இருப்பது போல தோன்றினாலும் அதனாலும் அதனை துல்லியமாக விளங்கிக் கொள்ள முடியவில்லை. பூர்வஜென்ம ஆய்வுகளில் இருந்து ஒரு விஷயம் தெளிவாய் புரிகிறது. இறந்த பின் உடம்பை விட்டுப் பிரியும் உயிரின் வடிவம் அழியாத அல்லது அழிக்க முடியாத மின்னலைகளாக இருக்க வேண்டும். இந்த அலைகளுக்குள் எண்ணங்கள் பதிந்து கிடக்கின்றன. இந்த அலைகள் ஏதோ ஒரு கருப்பிண்டத்துக்குள் புகுந்து உயிர் இயக்கமாகி கருப்பிண்டத்தோடு சேர்ந்து வளர்ந்து ஒரு கட்டத்தில் தன் எண்ணங்களை வெளிப்படுத்த ஆரம்பிக்கின்றன என்பதே அது!

இப்போது நாம் விளங்கிக் கொள்ள வேண்டியது ஒன்றுதான். ஆன்மா என்பது மின்னலை போன்றதா? என்றால், சாக இருக்கும் ஒரு மனிதன் இருக்கும் இடத்தில் இந்த மின்னலைகளை நாம் கவர்ந்திழுக்க முயன்றால் அப்போது ஆத்மா வசப் பட்டு விடுமா?

பூர்வ ஜென்ம ஆய்வில் இந்த கேள்வியே இறுதியில் மிஞ்சுகிறது!'

பாண்டியம்மாள் கோட்டை!



உச்சி சூரியனின் தகிப்புக்கு நடுவில் பளிச்சென்று கண்ணில் பட்டு வழிந்தது. ஒரு அதிசயம் போல கோட்டை மதில்களிலோ சருக்கங்களிலோ ஒரு காக்கை குருவி கூட இல்லை.

அதுவே யோசிக்க வைத்தது. பறவைகள்கூட தங்க அச்சப்படும் ஒரு நிலைப்பாடு அங்கு இருப்பது எதனால் என்கிற கேள்வி எழும்பியது.

கோட்டைமுன் மார்பில் தன் டிஜிடல் கேமிரா தொங்கியபடி இருக்க பாண்டிமாதேவி நின்றுகொண்டிருந்தாள். அருகில் கணேஷ். அவர்கள் இருவருக்குமே அந்த கோட்டை ஒரு பழகியிராத இடமாகவே இல்லை. இருவருக்குள்ளும் இருவர் தொடர்பான எண்ணங்களும் பொங்கி வழிந்து கொண்டிருந்தன.

கணேஷ் ஒரு குதிரை மேல் தேவகணபதியாய் கோட்டை நடுவில் இருக்கும் மைதானத்தில் சுற்றிச் சுற்றி வருகிறான். பாண்டியம்மாளோ சுற்று மண்டபம் ஒன்றில் இருந்து அவனது வேகமான குதிரைச் சவாரியை பார்த்து வெட்கப்பட்டுக் கொண்டும், பிரமிப்போடும் பார்த்தபடி இருக்கிறாள்.

அவர்களின் இந்த எண்ணப் போக்கை கத்தரித்தது போல இருந்தது கிழவி தேனம்மாளின் வருகை.

"வந்துட்டீங்களா?" - குரல் கேட்டு இருவருமே திரும்பினார்கள். தேனம்மாள் ஒரு கறுப்பு உடை உடுத்திக் கொண்டு வந்திருந்தாள்.

"பாட்டி..."

"இப்ப உங்களுக்கு நான் பாட்டி... உண்மைல நான் யார் தெரியுமா?"

"யார் பாட்டி நீங்க?"

"நான் யார்னு பிறகு சொல்றேன். உங்கள இப்ப உங்களால உணர முடியுதா...?"

- அந்த கேள்வி முன் இருவரும் மௌனித்தனர்.

"என்ன யோசனை?"

"இதுக்கு எந்த பதில் சொல்றதுன்னு தெரியல பாட்டி..."

"அப்ப உங்களுக்குள்ள குழப்பம் இருக்குன்னு சொல்லுங்க..."

"ஆமாம் பாட்டி..."

"நான் சொல்றேன்... தம்பி கணேஷ்! நீதான் வீரன் தேவகணபதி. அம்மாடி! நீதான் பாண்டியம்மா!"

"இதை எதை வெச்சு பாட்டி நம்பறது?"

"உங்களை வெச்சுதான்... உங்களுக்குள்ள பொங்கி வழியற அந்த நாளைய எண்ணங்கள வெச்சுதான்."

"நீங்க சொல்றது சரிதான் பாட்டி. அதன்படி பார்த்தா எல்லாம் சரிதான். கூடவே இந்த ஜென்மத்துல எதையும் விஞ்ஞானபூர்வமா பார்க்க பழகிட்ட புத்தி இந்த பூர்வ ஜென்மம்கற விஷயத்தை ஏற்கறதுக்கு மறுக்குது பாட்டி..."

"புத்தியே எப்பவும் அப்படிதான்பா.... ஒரு கிணத்து தவளையா உன்னை நீ நினைச்சுக்கோ– இப்ப நீ ஒரு கிணத்துக்குள்ள இருக்கே. உன் வரைல அந்த கிணறும் தண்ணீரும்தானே உலகம்!"

"ஆமாம் - அதுல என்ன சந்தேகம்!"

"அண்ணாந்து பாத்தா அந்த கிணறோட வட்டமான அளவுக்கு வானம் தெரியுது. ஆகக் கூடி அந்த தவளை வரைல வானம்கறது கிணறு அளவுதான். பூமிங்கறதும் கிணறு அளவுதான். அதைக் கடந்து இந்த உலகம் இருக்கறத அந்த கிணத்தை விட்டு வெளிய வர முடியாத நிலைல அந்த தவளையாலே உணர முடியுமா?"



"முடியாது..."

"இந்த நிலைல அது நினைச்சுக்கிட்டிருக்கறத தப்புன்னு சொல்ல முடியுமா?"

"அதுவும் முடியாது..."

"அப்போ நமக்கான அறிவு சுற்றுப்புற சூழலால கட்டுப்படுத்தப்பட்டிருக்குங்கறதுதானே உண்மை..."

"நிச்சயமா?"

"அந்த கட்டுப்பாட்டை உடைச்சு புரிஞ்சுக்க முயற்சி செய். அப்படிச் செய்ததாலதான் விஞ்ஞானம் வளர்ந்தது. அப்படிச் செய்ததாலதான் ஆன்மீகத்துலயும் பலரால கடவுள் நிலையை அடைய முடிஞ்சது."

"எங்க விஷயத்தை புரிஞ்சுக்க தடையா இருக்கறது ஒரே ஒரு கேள்விதான்..."

"தெரியும்... நீங்க என்ன கேப்பீங்கன்னு எனக்கு நல்லா தெரியும்."

"தெரிஞ்சா சொல்லுங்களேன்!"

"சொல்றேன். உங்களை உங்களுக்கு காட்டத்தானே இந்த இடத்துக்கே வரச் சொன்னேன். உங்களுக்குள்ள ஒரு கேள்விதான் இருக்கு. பூர்வஜென்மம் உண்மைன்னா, இல்லை சாத்தியம்னா ஏன் அது எல்லாருக்கும் ஏற்படறதில்லை. குறிப்பிட்ட சிலர் வரைல அது நடக்க காரணம் என்ன... இதுதானே உங்க கேள்வி?"

"சரியான கேள்வி பாட்டி... அதேதான்..."

"ஜென்மம் எடுத்து கடமைகளை முடிக்கற விதிப் பாடுன்னு ஒண்ணு.. அதற்கு இடமில்லா விதிப்பாடுன்னு ஒண்ணு. இதுதான் காரணம்."

"இவ்வளவு சுலபமான பதிலா?"

'சுலபமான பதில் இல்ல.. சரியான பதில் இது கொஞ்சம் விளக்கமாவே சொல்றேன். மனிதர்கள் அவ்வளவு பேருமே இறந்த உடனே சொர்க்கத்துக்கு போறதில்ல. அவங்கவங்க பாவ புண்ணியத்துக்கு ஏற்ப பிறப்பெடுக்கறாங்கங்கறதுதான் நம்ம மதத்தோட கருத்து. அதுதான் உண்மைங்கறத நடுநிலையோட யோசிச்சா புரியும். பாவம் புண்ணியம்னு ஒண்ணு இல்லவே இல்லைன்னா எல்லா உயிர்களுமே இந்த உலகத்துல சமமான அந்தஸ்து, ஆரோக்கியமான உடம்பு, பாரபட்சமில்லாத அழகுன்னுதான் பிறப் பெடுத்திருப்போம். ஏன்னா, கடவுள் நம்மை படைக்கும் போதே எதுக்கு ஏழையா, பணக்காரனா, வெள்ளையா, கறுப்பால்லாம் படைக்கணும்? அவருக்கு அதனால என்ன கிடைக்கப் போகுது... எனவே, அவர் எல்லா உயிர்களையும் சமமாதான் படைச்சிருப்பார். ஆனா, அவங்கதான் வளர வளர பாவங்கள் செய்து தங்களை கெடுத்துக்கிட்டிருப்பாங்க. அல்லது புண்ணியங்கள் செய்து பலப்படுத்திக்கிட்டிருப்பாங்க.

தன்னை பாவத்தால கெடுத்துக்கிட்டவன் தண்டனை அனுபவிக்கணும், புண்ணியத்தால பலப்படுத்தி கிட்டவன் சந்தோஷத்தை அனுபவிக்க வேண்டாமா? அதுக்கு ஒரு பிறவி போதாத நிலைல திரும்ப பிறந்து தானே கணக்குகளை தீர்த்துக்க வேண்டி உள்ளது..."



- தேனம்மாள் கிழவி அந்த மிரட்டலான அரண்மனைக் கோட்டைக்குள் ஒரு வேதாந்தி போல பேசினாலும் அந்த பேச்சு அவர்களுக்கு தேவையாக இருந்தது.

"பாட்டி... பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப நாம பிறப்பெடுக்கறோம்கறத ஓரளவு ஒத்துக்கறோம். ஆனா, எல்லோருக்கும் ஏன் பூர்வஜென்ம நினைப்பு ஏற்படுவதில்லை."

"ஏற்படக்கூடாதுங்கறதுதான் அடிப்படை. ஏற்பட முடியாதுங்கறதும் ஒரு அடிப்படையான உண்மை. ஆனா, எதுலயும் விதிவிலக்குகள் உண்டுதானே?"

"அப்ப நாங்க விதிவிலக்கா?"

"நீங்க மட்டுமில்லை... நானும்தான்."

"நீங்கன்னா...?"

"பாண்டியம்மா... தேவகணபதி... நான்தான் வேத வதி ராயம்மாள்!"

- பாட்டி சொன்ன பதில் அவர்களை உலுக்கியது.

"பாளையக்காரர் பங்காரு நாயக்கரோட பத்தினி வேதவதி ராயம்மாவா?"

"ஆமாம்... நான் ராணியா இருந்தப்பதானே தேவகணபதியான உன்னைக் கண்ட துண்டமாக்கி, பாண்டியம்மாளும் தூக்குல தொங்கின சம்பவம் நடந்தது."

"அதனால...?"

"என் அருமைத் தோழியான பாண்டியம்மாளுக்கு நான் உதவ முடியலியே... நான் ராணியா இருந்த ஊரும்

பெண்கள் நல்ல விதமா வாழ முடியாத ஊரா போயி டிச்சே..."

"அதனாலதான் தேனம்மாளா பிறந்து வந் தீங்களோ?"

"தேனம்மாளா பிறந்த பிறகே இதை உணர்ந்தேன். அதனாலேயே ஒரு துறவியைப் போல வாழ்ந்தேன். பூஜை தவம்னு வாழ்ந்ததால புரியாத ரகசியங்கல்லாமும் புரிஞ்சது. ஜென்மங்களையும் எட்டிப் பார்க்க முடிஞ்சது. ஊர்லயும் பெண்டு பிள்ளைகள் தவறுக்குப் பிராயச் சித்தமா நடந்துக்க ஆரம்பிச்சாங்க. அப்பதான் ஒரு மாசிப் பௌர்ணமி நாள் வந்தது. ஆகாயத்துல இருந்து இரண்டு நட்சத்திரங்கள் உதிர்ந்து விழறத அன்னிக்கு பார்த்தேன். அது நீங்க இரண்டு பேர்தான். உங்க பிறந்த நாள் மாசி மாத பௌணர்மிதானே?"

- பாட்டி கேட்கவும், இருவருமே திகைத்துப் போய் அந்த உண்மையை ஆம் என்கிற ஆமோதிப்புடன் ஏற்றுக் கொண்டனர்.

"இன்னொரு உண்மையையும் தெரிஞ்சுக்குங்க... தேவகணபதி கண்டதுண்டமா வெட்டிக் கொல்லப் பட்டதும், பாண்டியம்மாளான நீ தூக்குல தொங் கினதும்கூட இதே மாசி மாத பௌர்ணமியிலதான்."

- பாட்டியின் அடுத்த பதிலில் அடுத்த கட்ட பிர மிப்பு இருவரிடமும் ஏற்பட்டது.

"அன்னியில இருந்து நான் உங்க வருகைக்காக காத்திருக்க ஆரம்பிச்சேன். மிகச் சரியா 27 வருடங்கள்! நீங்களும் வந்துட்டீங்க. ஒரு ஆச்சரியம் பாரு, நாளைக்கு மாசி பௌர்ணமி!"



- பாட்டி சொன்ன நொடி அவர்கள் இருவர் கண்களுக்கும் வேதவதி ராயம்மாள் ஆகவே அவள் ஒரு வினாடி காட்சி தந்தாள்.

"பாட்டி... மன்னிக்கணும்... ராணி, இனியும் நாங்க உங்கள சந்தேகத்தோட கேள்விகள் கேட்டு கஷ்டப் படுத்தப் போறதில்ல. இயற்கையோட சக்தியை நான் பலமுறை பார்த்து வியந்திருக்கேன். அதிகபட்சம் பத்து நிமிஷத்துல ஒரு பெரிய மழை வந்து உஷ்ணமெல்லாம் விலகி சூழ்நிலையே குளிர்ந்து போகக் கண்டிருக்கேன். வறண்டு கிடந்த ஆத்துல வெள்ளம் பாய பார்த் துருக்கேன். என்னதான் பூமியில நீரா ஓடினாலும் ஆகாயத்துல அதோட வடிவம் மேகம் தான். ஒவ்வொரு மேகமும் ஆயிரம் ஆயிரம் தண்ணி லாரிக்கு சமம். இதை எங்க இருந்து யார் அனுப்பி வைக்கறாங்கன்னு மழை பெய்யும்போதெல்லாம் கேள்வியா கேட்டுப் பிர மிச்சிருக்கேன். நூறு அடுக்கு மாடில இருந்து விழுந்து பிழைச்சவனும் உண்டு, கால் தடுக்கி விழுந்து செத்தவனும் உண்டு. இதுக்கெல்லாம் விடை அறிவு கிட்ட இல்லவே இல்லை. அப்படி ஒரு விஷயம்தான் எங்க விஷயமும்... ராணி! நாங்க திரும்ப பொறந்து இங்க வந்திருக்கறது எதுக்காக..நாங்க இப்ப என்ன செய்யணும்?"

- பாண்டிமாதேவி வெகு அழகான வியாக் யானங்களோடு பாட்டியிடம் கேள்வியைக் கேட்டாள். கணேஷும், "சொல்லுங்க ராணி... நான் இப்ப என்ன செய்யணும்?"

- அவர்கள் கேட்டதை தொடர்ந்து இருவரையும் கண்கலங்கப் பார்த்தாள் தேனம்மாள்.

அப்படியே இருவரையும் தரதரவென்று கைகளைப் பற்றி இழுத்துக் கொண்டு ஒரு குறிப்பிட்ட இடம் நோக்கி நடந்தாள்.

அது அரண்மனை மைதானத்தின் மையம்!

அங்கே நின்றுகொண்டு வட்டம் கட்டி பார்த்த போது அரண்மனை கோட்டை சுவர், அதன் மேல் காவற் சாவடிகள் என்று ஒவ்வொன்றுமே சம தூரத்தில் தெரிந்தது.

"தேவகணபதி... இந்த இடத்துல உச்சில சூரியன் நிக்கற இந்த நேரத்துல முதல்ல நீங்க இரண்டு பேரும் மானசீகமா கணவன் மனைவியாகணும். அதுக்கு குறைந்தபட்சம் உங்க இரண்டு பேர் கைலயும் இருக்கற மோதிரம் போதுமானது. மோதிரம் மாத்திக்கிட்டு நீங்க தம்பதியாகுங்க முதல்ல..."

"ராணி..."

"தயங்க வேண்டாம். நீங்க சேர்ந்தாதான் அந்த சாபம் நீங்கும். ஊர்ப் பெண்களுக்கு இனியாவது விடிவு ஏற்படணுமா வேண்டாமா?"

"நிச்சயமா..."

"அப்ப நான் சொன்னதை செய்யுங்க. உச்சிப் பொழுது ஒரு உயர்வான காலம். சீக்கிரம்."

- தேனம்மாள் தூண்ட, கணேஷ் தன் விரல் மோதிரத்தை அவிழ்த்து பாண்டிமாதேவிக்கு அணிவிக்க, அவளும் தன் மோதிரத்தை அவனுக்கு அணிவித் தாள். அந்த நொடி மாடத்தில் இரண்டு கிளிகள் கத்திக் கொண்டே வந்து அமர்ந்தன. அவைகளின் சப்தம் கேட்டு திரும்பிப் பார்த்த தேனம்மாளுக்கு ஆனந்தக் கண்ணீர் துளிர்த்தது.



"தேவகணபதி - பாண்டியம்மா... 'உங்க காதல் - உங்க பிரிவு - இப்ப உங்க கல்யாணம்' இந்த மூணுமே தனித்த சிறப்பு உடையது. மனித மனங்களோட சக்திக்கு சாட்சியா இருக்கற விஷயம் உங்க விஷயம். எப்பவோ நேரிட்ட அநீதிக்கு இப்ப நான் ஒரு நல்ல நீதியை வழங் கிட்டேன். அன்னிக்கு சேர முடியாத உங்களை நான் இன்னிக்கு சேர்த்துட்டேன். இனி இந்த ஊர் மக்களும் எந்த குறையும் இல்லாம வாழுவாங்க... அதுல இனி எனக்கு சந்தேகமேயில்லை."

தேனம்மாள் உருவில் வேதவதி ராயம்மாள் வானத்தை பார்த்து கண்ணீர் மல்கினாள்.

கணவன் மனைவியாகிவிட்ட கணேஷும், பாண்டிமாதேவியும் அங்கேயே அப்போதே அவள் காலிலும் விழுந்து எழுந்தனர். இருவரையும் கட்டிக் கொண்டவள், சில நிமிடங்கள் வரை அப்படியே ஸ்தம் பித்து நின்றாள். பின் அவர்களையும் தன் பிடியில் இருந்து விடுவித்தாள்.

கணேஷ் கேட்க வேண்டிய ஒரு கேள்வியாக வாயைத் திறந்தான்.

"ராணி... உங்களைப் போலவே ராஜா ஏன் பிறந்து வரலை?"

- அந்தக் கேள்வி அவளை வெகுவாக தாக்கியது. சற்று கலக்கமுடன் பார்த்து மௌனம் சாதித்தாள்.

"நான் தப்பா ஏதாவது கேட்டுட்டேனா ராணி..."

"இல்ல தேவகணபதி... சரியான கேள்வியை தான் கேட்டே. அன்னிக்கே என் மனசு உன்னையும் பாண்டியம்மாவையும் நினைச்சு துடிச்சது. அந்த துடிப்பு நாளாக நாளாக அதிகம் ஆச்சு. ஆனா, அவர் வரைல

உங்களுக்கு நேரிட்ட கொடுமையை தலைவிதின்னு அவர் எடுத்துக்கிட்டார். அதுதான் உண்மைன்னாலும் மனசு சமாதானம் அடைஞ்சதால அவருக்குள் கொதிப்பு அடங்கிப் போச்சு. இன்னொரு ஜென்மம் எடுத்தாவது வந்து தப்பை சரிசெய்வேன்னு ஆக்ரோஷமா நினைக்கறதுலதான் நம்ம அடுத்த பிறப்போட அமைப்பே இருக்கு. அவர் வரைல அப்படி ஒரு ஆக்ரோஷ எண்ணம் அவருக்கு ஏற்படலேன்னு நான் நினைக்கறேன்."

- தேனம்மாளின் பதிலில் ஒரு சரியான காரண காரியம் இருந்தது. அவர்களுக்கும் புரிந்தது.

"ராணி! எங்களோட அடுத்த செயல்பாடு?" - என்று பாண்டிமாதேவி வாயெடுத்தாள்.

தேனம்மாளும் ராணி தோரணையோடு, "இனிதான் உங்களுக்கு பெரிய கட்டுப்பாடே இருக்கு. காலம் காலமா நாகாயியோட காவல்ல இருக்கற ராவுத்தர் தங்கத்தை நீங்க எடுக்கப் போறீங்க..." என்றாள்.

இருவரிடமும் ஒரு புது பிரகாசம். அப்படியே "ராவுத்தர் தங்கமா?" என்றும் ஒரு கேள்வி.

தேனம்மாள், கணேஷுக்கு சற்று அவகாசம் தந்தாள்.

கணேஷ் தீவிரமாக யோசிக்கத் தொடங்கினான்.

"நல்லா யோசி தேவகணபதி- நல்லா யோசி. அந்த நாளைய உன்னுடைய நினைவுக்குள்ள எவ்வளவு தூரம் போக முடியுமோ அவ்வளவு தூரம் போ. அப்ப நான் உனக்கு எந்த தூண்டலும் அளிக்காமலே அந்த தங்கம் பற்றிய ஞாபகங்கள் உனக்கு வரும். வரணும்..."

- தேனம்மாள் வடிவில் வேதவதி ராயம்மாள் கட்டளை பிறப்பிப்பது போல பேசினாள்.



கணேஷும் மெல்ல நடந்தபடியே யோசிக்க ஆரம்பித்தான்.

அவனுக்குள் பங்காரு நாயக்கர் அவன் எதிரிலேயே ராமநாதபுரம் ராவுத்தருக்கு ஓலை போக்கியதும், பதிலுக்கு அவர் மறுத்துவிட்டு பின்னாலேயே தங்கத்தை வைக்கோல் போருக்குள் ஒளித்து வைத்து சாதாரணமாய் அனுப்பியதும், ஆனால் அதை தான் பார்ப்பதற்கு முன்பே நாயக்கரே அதை வெகு சாமர்த்தியமாக எங்கோ ஒளித்துவிட்டதும் நினைவுக்கு வந்தது.

"ராணி... எனக்கு இப்ப ஞாபகம் வந்துடுச்சி... நாயக்கர் கடனா கேட்ட பொன், எண்ணூறு தோலா தங்கம்... வைக்கோல் வண்டியில வந்ததே..."

"சபாஷ்- நீ சந்தேகத்துக்கே இடமில்லாம தேவகணபதிங்கறத என்கிட்ட இப்பதான் நிரூபிச்சிருக்கே. அன்னிக்கு வெள்ளையன் கொண்டு போயிடாம என் கணவர் தடுத்த ஒரு பெரிய சொத்து, இன்னி வரை எங்க குலதெய்வமான நாகவல்லிதேவி நாகாயியா அதை காவல் காத்துக்கிட்டு வரா. அதை நீ வெளிய எடுக்கணும்..."

"வெளிய எடுக்கணும்னா அது புதைஞ்சா இருக்கு..."

"அதை நான் பிறகு சொல்றேன். அதுக்கு முந்தி நீ செய்ய வேண்டிய இன்னொரு முக்கியமான கடமையும் இருக்கு."

"என்ன ராணி அது...?'

"சொல்றேன்- இந்த கோட்டை இன்னிக்கு இப்படி இருக்க காரணமான அந்த கொடிய சம்பவத்தை சொல்றேன். அதனாலதான் இதுக்குள்ள இந்த நொடி வரை

ஒரு பறவைகூட வந்து கூடு கட்டலை. பாம்புக்கும் தேளுக்கும்னு இந்த இடம் மாறிப் போக காரணமே இதோட எட்டு திசையிலேயும் குறிப்பாக நான்கு வாசல்கள்லயும் தேவகணபதி உன் உடலோட உறுப்புகளை வெட்டிப் புதைச்ச அந்த அநீதியான செயல்தான்...!"

- தேனம்மாள் சொல்லச் சொல்ல பாண்டிமாதேவிக்கு அன்றைய சம்பவம் ஒரு காட்சியாகவே மனதில் விரியத் தொடங்கியது. அவள் கண் எதிரில்தான் அந்த சம்பவம் அரங்கேறியது. அவள் எதிரில் மட்டுமா... ஊரே பார்த்ததே...! பலர் மயங்கியும் விழுந்தார்களே...!

உடம்பை எட்டு கூறாக்கி தலையை ஒருவன் வேல் கம்பில் குத்திப் பிடித்துக் கொண்டு முன்னால் நடக்க கைகள் இரண்டு மட்டும் ஒருவனிடம், கால்கள் இரண்டும் இன்னொருவனிடம் கழுத்துக்கு கீழே தொடைக்கு மேலே வயிறும் மார்புமான பாகத்தை அப்படியே நான்கு துண்டுகளாக்கி அதை ஒரு பித்தளைத் தாம்பாளத்தில் பிடித்து தலைக்கு மேல் வைத்துக் கொண்டு அன்றைய தேவிபுரம் தெருக்களில் நடந்தார்களே...!

- அதை நினைத்தபடியே அப்படியே கண்கள் செருக மயங்கினாள் பாண்டியம்மாளாகிய பாண்டிமாதேவி. கணேஷ் அவளை தாங்கிப் பிடித்தான்.

"அவளை விடு... அதோ பார் மண்வெட்டி - கடப்பாரை... அவைகளை கைல எடு... நான் இடத்தை காட்டறேன்... அந்த எட்டு இடங்களையும் தோண்டு. மிகச் சரியா பத்தாவது அடியில அன்றைய உன் உடம்போட பாகங்களைப் போட்டு மூடினாங்க. என் யூகம் சரியா இருந்தா சதைப் பாகம் மண்ணாகியிருந்தாலும் மற்ற எலும்புகள் எல்லாமும் மண்ணாகியிருந்தாலும்



உன் முதுகெலும்பு நிச்சயம் மட்கி இருக்காது. அதை எல்லாம் தோண்டி எடு. தோண்டி எடுத்தபின் அந்தக் குழிக்குள் உன் கையாலயே பாலை விட்டு பிறகு மூடு. தோண்டி எடுத்தவைகளை ஒரு மூட்டையா கட்டு அதை என்ன செய்யறதுன்னு நான் பிறகு சொல்றேன்..."

- அவளது கட்டளையை நிறைவேற்ற தயாரானான் கணேஷ்!

சிவஞானம் வீட்டு வாசலில் ஒரு காரின் தேக்கம். உள்ளிருந்து இறங்கிக் கொண்டிருந்தான் பார்த்திபன். அவனைப் பார்க்கவும் பாய்ச்சலுடன் ஓடிவந்தார் சிவஞானம்.

"மாப்பிள்ளை தம்பியா... வாங்க... வாங்க..." - என்று ஓடி வந்தார். சப்தம் கேட்டு எட்டிப் பார்த்த தேன்மொழி முகத்திலும் ஒரு திகைப்பு.

பார்த்திபன் மட்டும்தான் வந்திருந்தான்.

"என்ன மாப்ளை... கூட அம்மா அப்பால்லாம் வரலையா?"

"இல்ல... நான்தான் வந்தேன். ஆமா, கணேஷ் ஊருக்குப் போய்ட்டானா இருக்கானா?"

"உள்ள வாங்க மாப்ளை... அவர் இங்கதான் இருக்கார்..."

- சிவஞானம் அழைக்கவும், அரை மனதாக உள்ளே நுழைந்தான். ஒரு தூண் மறைவில் உடம்பை ஒளித்துக் கொண்டு முகத்தை மட்டும் வெளியில் நீட்டி பார்த்த தேன்மொழியை பார்த்திபனும் கவனித்தபடியே உட்கார்ந்தான்.

"என்ன மாப்ளை! நீங்க அவசர வேலையா வெளிநாட்டுக்குப் போயிட்டீங்கன்னாரு உங்க சிநேகிதர்...

ஆனா, நீங்க இப்படிப் பொசுக்குன்னு வந்து நிக்கறீங்க..."

- அவர் கேட்கவும், கணேஷ் பொய் சொல்லி சமாளித்திருப்பது புரிந்தது.

"அ.. ஆமாம்.. திடீர்னு அந்தப் பயணம் தள்ளிப் போயிடிச்சு. அதான் உடனே புறப்பட்டு வந்தேன்...."

"ஒண்ணும் பாதகமில்ல மாப்ள... நாளைக்கு வெள்ளிக்கிழமை! இந்த வெள்ளிக்கிழமைல நிச்சயத்தை வெச்சுக்கலாம்னு நானும் ஊர்க்காரங்களுக்கு சொல்லிட்டேன். நாளைக்கு பௌர்ணமி வேற - நீங்க இன்னிக்கே வந்ததுல ரொம்ப சந்தோஷம். ஆமா, அப்பா அம்மா மத்த உறவுக்காரங்கள்லாம் பின்னால வர்றாங்களோ?"

- சிவஞானத்தின் ஒவ்வொரு கேள்வியுமே பார்த்திபனை கொஞ்சம் படுத்தியது.

"முதல்ல நான் கணேஷை பார்க்கணும்..."

"பார்க்கலாம்... அவரும் பாண்டிமாதேவியும் தேனம்மா பாட்டியோட கோட்டைக்குப் போயிருக்காங்க. பாட்டி யாரையும் கோட்டை பக்கம் வர வேண்டாம்னு சொல்லிட்டுப் போயிருக்கு..."

"அது யார் பாண்டிமாதேவி... தேனம்மா பாட்டி...? அப்புறம் ஏன் கோட்டைக்குப் போகக் கூடாது. எனக்கு எதுவும் புரியலியே..."

"அது ஒரு பெரிய கதை மாப்ளை... கதைன்னாகூட கற்பனைன்னு ஒரு எண்ணம் தோணும். இது கதை இல்லை. ரத்தமும் சதையுமான ஒரு சரித்திரம். ஒரு அதிசயம்... இதைப் பார்த்து ஊர் உலகமே வாயை பிளக்கப் போகுது..."



"கொஞ்சம் புரியற மாதிரி சொல்றீங்களா....? வாஸ்தவத்துல உங்க ஊரை பத்தி வாயைத் திறந்தாலே எல்லாருக்கும் முதல்ல பயம்தான் ஏற்படுது. நம்ப முடியாத விஷயங்களாதான் காதுல விழுவுது..."

"இல்ல மாப்ள... அதெல்லாம் நேத்து வரை! என் ஊருக்கு விடிவுகாலம் பொறந்தாச்சு மாப்ளே. எப்ப நீங்க உங்க நண்பர்னு எங்க ஊர் தளபதியை அனுப்பி வெச்சீங்களோ, அன்னிக்கே எங்க ஊருக்கு நல்ல காலம் தொடங்கிடிச்சு...."

"என் நண்பன் உங்க ஊர் தளபதியா?"

"ஆமாம் மாப்ளை... அன்னிக்கு வெள்ளக்காரனை எதிர்த்துப் போராடி கண்டதுண்டமா வெட்டிக் கொல்லப்பட்ட தேவகணபதிதான் இன்னிக்கு கணேஷ். அதைப் பார்த்து ஊருக்கே சாபம் கொடுத்த பாண்டியம்மாதான் இன்னிக்கு வந்துருக்கற பாண்டிமா தேவி..."

"என்னங்க, உங்களுக்கெல்லாம் மறைகிரை கழண்டுடிச்சா, என்னை என்ன கேனப்பயன்னு நினைச்சீங்களா?"

"நீங்க இப்படிதான் தம்பி பேசுவீங்க. பேசுங்க. அதுல ஒண்ணும் தப்பு இல்லை. ஏன்னா, நீங்க இப்ப வாழ்ந்துகிட்டு இருக்கற உலகம் அப்படி. டெலிவிஷன், செல்போனு, காரு, ஏரோப்ளேனுன்னு விஞ்ஞானம் அதோட வீர்யத்தை காட்டிக்கிட்டிருக்கற ஒரு கால கட்டத்துல இந்த பழங்கதை எல்லாம் முதல் முதலா காதுல விழும்போது இப்படித்தான் பேச வைக்கும். ஆனா, எப்பவுமே அனுபவம்தான் எதையும் அழுத்தமா

நம்ப வைக்கும். நாங்க அனுபவிச்சுகிட்டு இருக்கற கூட்டம்..."

"தயவுசெய்து எனக்குப் புரியற மாதிரி பேச நீங்களா?"

- அவன் கேள்விக்கு காபியோடு வந்த தேன்மொழி, "அப்பா! நீங்க கொஞ்சம் கடை வரை போய்ட்டு வர்றீங்களா. மதியம் சமைக்க பச்சை காய்கறிகளே இல்ல..நான் இவருக்கு சொல்ல வேண்டியதை எல்லாம் சொல்றேன்..."

"அம்மாடி! ஆதியோட அந்தம் எனக்கே சரியா தெரியாதே. நீ எப்படி?"

"உங்களுக்குதாம்ப்பா தெரியாது. ஆனா, எனக்கு தெரியும். தேனம்மா பாட்டி எனக்கு எவ்வளவோ சொல்லியிருக்குப்பா..."

- தேன்மொழி, தேனம்மாள் பெயரைச் சொல்லவும், சிவஞானம் அதற்கு மேல் பேசாமல், "சரிம்மா... நான் போய் காய்கறியோட வரேன். மாப்ளை! தேன்மொழியே சொல்றதும் ஒரு விதத்துல நல்லதுதான். எங்க ஊர் பெண்கள் எவ்வளவு பாவம்னு அப்பதான் உங்களுக்கும் புரியும்..." - என்றபடியே சிவஞானம் விலகத் தொடங்கினார். அவளும் சொல்ல ஆரம்பித்தாள்!

## 16

**'ஜோ**திட உலகில் நாடி ஜோதிடத்துக்கு ஒரு தனியிடம் உண்டு. பனை ஓலைகளில் காணப்படும் பாடல் வரிகளை வைத்து ஜோதிடம் சொல்லப்படுவதாகும். அந்த ஓலைகளைத்தான் நாடி என்பர்.



நாடியைப் பல விதமாக நாம் அர்த்தப்படுத்திக் கொள்ளலாம். அது ஆளுக்கு ஆள் மாறும். ஒருவர் நாடி ஜோதிடரை நாடி வருவதால் அதற்கு நாடி என்று பெயர் என்பார்கள். நாம் நாடியை நாடவே கூடாது. அதுவே நம்மை நாடி வரும்... அதனால்தான் அதற்கு அந்த பெயர் என்போரும் உண்டு.

எது எப்படியோ இந்த நாடிகளில் 'ஜென்ம காண்ட சுவடிகள்' என்று ஒரு பிரிவு உண்டு. இவைகளில்தான் ஒருவர் முந்தைய ஜென்மத்தில் யாராக அல்லது எதுவாக இருந்தார் போன்ற விவரங்கள் இருக்கும். ஒரு ஆச்சரியம் என்னவென்றால், இந்த விவரங்கள் தனி ஒருவருக்கானது மட்டுமல்ல... ஒரு கூட்டத்துக்கே இது பொருந்தும். அதாவது ஒரு நாடி ஏடானது ஆயிரம் பேருக்குகூட பயன்படும். அதன்படி பார்த்தால் ஒரு உண்மை தெளிவாகிறது. குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட லக்னம் மற்றும் நட்சத்திர கதியில் பிறப்பவர்கள் எல்லோருமே அவர்களின் முந்தைய ஜென்மத்தில் ஒன்றே போல பாவ புண்ணியங்கள் செய்தவர்களாக இருந்திருக்கின்றனர் என்பதுதான் அது. இது ஆச்சரியமான ஒரு சிந்தனையை நமக்கு ஏற்படுத்துகிறது. ஒரு ஆச்சரியம் போல அவர்களுக்கான பெயர் - தாய் தந்தையர் பெயர் என்று எல்லாமே இந்த பூவுலகில் ஒத்துப் போவதுதான் ஆச்சரியம். இதை ஆராயத் தொடங்கினால் இதற்கு பின்னாலே ஒரு அற்புதமான கணக்கு இருப்பது தெரியவருகிறது!'

***பா**ண்டியம்மாள் கோட்டை!*

தேனம்மாளாகிய வேதவதி ராயம்மாள் காட்டிய இடங்களில் எல்லாம் குழியைத் தோண்டிய, கணேஷ்

அவள் சொன்னது போலவே ஒரே ஒரு குழியில் முது கெலும்பு மட்டும் மட்கியிராமல் இருப்பதை பார்த்து அதிசயித்தான். மற்ற இடத்தில் மட்கிப் போன மண்ணை மட்டும் எடுத்து மூட்டை போல கட்டி எடுத்துக் கொண்டு வியர்வை வழிய நிமிர்ந்தவன், முன்னால் ஒரு மண் குவளை நிறைய பாலைக் கொடுத்தாள் தேனம்மாள்.

"போப்பா... போய் இதை தோண்டின குழிங்கள்ல விட்டு குழியை மூடிட்டு வா" - என்றாள். அவனும் அவ்வாறே செய்ய விலகினான்.

- அந்த துணிமூட்டை பாண்டிமாதேவியை வெறித்துப் பார்க்கச் செய்தது.

"என்னம்மா... நடக்கறதெல்லாம் ஏதோ கனவு மாதிரி இருக்கா...?"

"ஆமாம் ராணி... ஒரு பத்திரிகையாளப் பெண்ணா பகுத்தறிவுப் பார்வையோட புறப்பட்ட நான் இப்ப இங்க என்னையே ஒரு அதிசயமா நினைச்சுகிட்டு இருக்கறத என்னன்னு சொல்ல?"

"அதுக்குப் பேர்தாம்மா காலத்தோட விளை யாட்டுங்கறது. அது விளையாடத் தொடங்கிட்டா அது முன்னால நாமெல்லாம் உதை பந்துங்கதான்..."

"உண்மைதான் ராணி. ஆனா, இதை ஊர் உலகம் நம்புமா ராணி..."

"ஏன் நம்பணும் பாண்டியம்மா..."

"அப்படின்னா..."

"இதை எதுக்கு நீ ஊர் உலகத்துக்குச் சொல்ல ணும்? சொல்லாதே! இது நீ உன் கணவனோட படுத்து



பிள்ளை பெத்துக்கற மாதிரி ஒரு பவித்ரமான பிரத்தி யேக விஷயம்."

"சொன்னா என்ன தப்பு ராணி..."

"நிறைய கேள்விகள் எழும்பும். சரியா புரிஞ்சுகிட்டு நம்பறவங்களவிட நம்பாதவங்க எண்ணிக்கைதான் அதிகமாயிருக்கும். சரியா புரிஞ்சுகிட்டவங்ககூட முழுசா சரியா புரிஞ்சுகிட்டதா சொல்ல முடியாது..."

"இன்னிக்கு இல்லை நாளைக்கு - இல்ல வேற எப்பவாவது இதை ஒருத்தர் சரியா புரிஞ்சுக்கலாம் தானே?"

"ராமாயணம், மகாபாரதத்தையே இன்னும் யாரும் சரியா புரிஞ்சுக்கலையே. அதுல பல விஷயங்கள வெறும் மாய மந்திரமாதானே பார்க்கறாங்க?"

"அதுக்கும் இதுக்கும்...?"

"அந்த மாதிரிதான் இதுவும்... இந்த பூமி எவ் வளவோ கோடி பேர் வாழ்க்கைகளைப் பார்த்துடிச்சி. எல்லாத்தையும் எல்லாரும் துல்லியமா புரிஞ்சுகிட்டதா சொல்லவே முடியாது. அதுக்குள்ள ஏற்ற இறக்கம் நிச்சயமா இருக்கும்..."

"ஆகையால இந்த பாண்டியம்மாள் கோட்டை அனுபவங்கள நான் என் மனசுக்குள்ளேயே வெச்சு பூட்டிக்கறதுதான் சரியா?"

"இதுல சரி தவறுக்கெல்லாம் இடமே இல்லை. ஒரே மண்ணுலதான் மலர்ச் செடியும் இருக்கு. முட் செடியும் இருக்கு. அதுக்காக பூச்செடிக்கு பூஜையையும் முட்செடிக்கு கண்டனமுமா நாம தெரிவிக்கிறோம். அவைகளை அப்படி அப்படியே ஏத்துக்கறதில்லையா?"

- தேனம்மாளின் கேள்விக்குள் ஆழமான உட்பொருள். கணேஷும் எல்லாக் குழிக்கும் பாலை விட்டு விட்டு மூடிக் கொண்டிருக்க, கணேஷ் என்கிற குரலோடு அங்கே பார்த்திபன் வந்ததுதான் அடுத்த கட்ட ஆச்சரியம்.

"பார்த்திபா, நீயா... நீ எப்ப வந்தே?" - கணேஷின் கேள்வியை பார்த்திபன் காதில் வாங்கிக் கொள்ளாமல் அவனையே உற்றுப் பார்த்தான்.

"என்னடா இப்படிப் பாக்கறே...?"

"என்னால நம்பவே முடியலடா..."

"எதை?"

"நீ... நீ... நீ இந்த ஊரோட தளபதிங்கறத..."

"உனக்குதான் நான் அதுக்காக நன்றி சொல்லணும். உன்னாலதானே நான் இந்த ஊருக்கு வந்தேன். என் முந்தைய ஜென்மத்தையும் தெரிஞ்சிகிட்டேன்..."

"கணேஷ்... இதெல்லாம் எதுவும் கனவோ, இல்லை ஏமாத்து வேலையோ இல்லையே...?"

"அது நீ எங்கள எங்க இருந்து எப்படிப் பாக்கறேங்கறத பொறுத்தது."

"தேன்மொழி எல்லாம் சொன்னா... ஏதோ ஒரு மர்மக்கதை படிச்ச மாதிரியே இருந்தது."

"மர்மக்கதைதான்... நீ அப்படியே நினைச்சுக்கோ. அதே சமயம் தேன்மொழியை மட்டும் கல்யாணம் பண்ணிக்காம விட்டுடாதே..."

"ஆமா... இங்க என்ன பண்ணிக்கிட்டிருக்கே... இது என்ன கைல கலயம்?"



- அவன் கேள்விக்கு பதில் தேனம்மாளிடம் இருந்து வந்தது. "அது பால் கலயம்... தனக்கு தானே சாந்தியை தேடிக்கற ஒரு சம்பவத்தோட கடைசி விஷயம் அது." - பார்த்திபன் அதைக் கேட்டு தேனம்மாளை ஆச்சரியத்துடன் பார்த்தான். தொலைவில் சிவஞானமும் அவனைத் தேடி வந்து கொண்டிருப்பது தெரியவும், அவளிடம் ஒரு மாற்றம் அந்த துணிமூட்டையை எடுத்துக் கொண்டு அந்த கோட்டையின் ஒரு இருண்ட பாகத்துக்கு சென்றவள், அதை அங்கு ஒரு ஓரமாக வைத்துவிட்டு நிமிர்ந்தாள். எதிரில் தெரிந்த மாடம் ஒன்றின் மையத்தில் இருந்து 'ஸ்ஸ்ஸ்...' என்கிற சப்தம்!

'நாகாயி' என்று தேனம்மாளாகிய வேதவதி ராயம்மாள் குறிப்பிட்ட நாகம்தான் அவளைப் பார்த்தபடி படம் விரித்துக் கொண்டிருந்தது. அதைப் பார்த்தவள் கை குவித்தாள்.

"தாயே! இதையும் உன் காவல்ல விடறேன். நாளைல இருந்து உனக்கும் விடுதலை கிடைச்சிடும் அதுவரை இப்படியே உன் காவல் தொடரட்டும்..." என்று பிரார்த்தித்துக கொண்டவள் வேகமாக திரும்பி, வந்து அவர்களையும் அழைத்துக் கொண்டு கோட்டைக்கு வெளியே செல்ல, சிவஞானமும் வந்து சேர்ந்திட சுச்சிதமாக இருந்தது.

"மன்னிச்சுக்குங்க பாட்டி... என் மாப்ளை என் மககிட்ட எல்லா விஷயங்களையும் கேட்டுட்டு ஒரு உணர்ச்சில இங்க ஓடிவந்துட்டாரு. அவரைக் கூட்டிக்கிட்டுப் போகத்தான் நான் வந்தேன்..." என்றார். ராயம்மாள் சிரித்தவளாக, "இவன் வந்ததும் ஒரு விதத்துல நல்லதுதான் சிவஞானம். எல்லாமே நல்லபடியா

முடிஞ்சது. ஆனா, முக்கியமான விஷயமே இனிதான் இருக்கு" என்று அந்த தங்கத்தை மனதில் வைத்துக் கொண்டு சொன்னாள்.

கோட்டை முகப்பில் அவர்கள் கூட்டமாக நின்று பேசியபடி இருக்க, கோட்டைக்குள் பல விதமான பறவைகளும் நுழைந்தபடி இருந்தன. அதுவே காலகால மாக அங்கே இருந்து வந்த ஒரு திய கட்டுப்பாடு விலகி விட்டது என்பதை சொல்வது போல் இருந்தது.

பார்த்திபன் முதல் முறையாக கோட்டைப் பகுதிக் குள் வந்திருப்பதால் அதை மலைப்போடு பார்த்துக் கொண்டிருந்தான். கோட்டையை ஒரு பார்வையும், கணேஷை மறுபார்வையும் பார்த்துப் பார்த்து செருமாந்தான். அவ்வப்போது பாண்டிமாதேவியையும் பார்த்தான்.

"மேடம்... இங்க வர்றதுக்கு முந்தி வரை உங்க ளுக்கும் உங்க பூர்வ ஜென்மம் பத்தி எதுவும் தெரி யாதா?" என்று கேட்கவும் செய்தான்.

"தெரியாது மிஸ்டர் பார்த்திபன்... இன்ஸ்பாக்ட் நான் இந்த ஆவி, பேய் பிசாசு, பூர்வ ஜென்ம விஷயங் களை எல்லாம் துளிகூட நம்பாத ஒருத்தி. இவைகளை கடுமையா விமரிசனம் செய்தவ... இங்க நான் வந்ததே இந்த ஊர் பத்தின விஷயங்கள் அவ்வளவும் கட்டுக் கதைன்னு தமிழக மக்களுக்கு எடுத்துச் சொல்ல ணும்கறதுக்காகதான்..."

"இப்ப என்ன சொல்லப் போறீங்க...?"

"தெரியல... அதுமட்டுல எனக்குள்ள இன்னமும் சில குழப்பங்கள் இருக்கு..."



- அவள் பதில் வேதவதி ராயம்மாளான தேனம் மாளை திருப்பியது. கணேஷும் இப்படித்தான் சொன்னான். அப்போது அவனுக்கு சொன்ன அதே பதில் அவளுக்குள் திரும்ப அலையடித்தது.

'இதை எதற்கு ஊருக்கு சொல்ல வேண்டும்? ஊர் ஏன் நம்ப வேண்டும்?'

அந்தக் கேள்வி இரண்டும் தேனம்மாளின் முகத்தில் தேங்கிக் கிடப்பதை கணேஷும் உணரவே செய்தான்.

"ராணி... பாண்டியம்மா இப்ப ஒரு பத்திரிகை யாளப் பெண்மணி. அவளுக்குன்னு கடமை இருக்கு. இந்த விஷயத்துல எது உண்மையோ அதை அவ எழுதட்டுமே... அதுல என்ன தப்பு இருக்கு?" என்றும் கேட்டான்.

தேனம்மாள் சிரித்தவளாக, "நாளைக்கு இன் னேரம் உங்க இரண்டு பேர்கிட்டயும் ஒட்டிக்கிட்டிருக்கற கொஞ்ச நஞ்ச குழப்பங்களும் தெளிவாகிடும். கால காலமா நம்ப முடிஞ்சா நம்புங்க, இல்லாட்டி போங் கன்னு சொல்ற ரகமா பல விஷயங்கள் இந்த ஊர் உலகத்துல நடந்துகிட்டுதான் இருக்கு. இதுவும் அந்த பட்டியல்ல சேரப் போற ஒரு விஷயம்தான். நாம இப்ப புறப்படுவோம். நாளைக்கு காலைல திரும்ப வருவோம். அப்ப நாம மட்டும் இங்க இருக்கப் போறதில்ல... இந்த மாவட்ட கலெக்டர்ல இருந்து பெரிய பெரிய போலீஸ் அதிகாரிகளும் இங்க இருப்பாங்க..."

சிவஞானம் அதுக்கு நீ ஏற்பாடு செய்துடு!

அவங்கல்லாம் எதுக்கு கூப்பிடறீங்கன்னு கேட்டா அந்த காலத்து தங்கத்தை தோண்டி எடுக்கப் போறோம்.

அதையும் உங்க எதிர்ல எடுக்கப் போறோம். அது அரசாங்க சொத்து. அதுல ஒரு குந்துமணி அளவுகூட யாரும் திருடியிருப்பாங்களோன்னு யாரும் சொல்லிடக் கூடாதுன்னு சொல்..." என்றாள்.

சிவஞானம் விக்கித்துப் போய் பார்த்தார்.

"என்ன வாயைப் பொளந்துட்டே..."

"இல்ல தாயி... தங்கம் விஷயத்தை நான்கூட பொய்யா இருக்குமோன்னு நினைச்சிருக்கேன். ஆனா, இப்ப நீங்க உறுதியா சொல்றத பார்த்தா..."

"என்ன பார்த்தா... முழுசா பேசி முடி!"

"இல்ல... நாளைக்கு அவங்கல்லாம் வரும்போது ஒரு வேளை தங்கம் கிடைக்காம போயிட்டா...?"

"அப்படின்னா இன்னுமா உனக்கு சந்தேகம்?"

"இல்ல... நான் என்ன சொல்ல வர்றேன்னா..."

"சொல்லு... சொல்லு..."

"நான் பார்க்க தங்கம் தேடி வந்தே ஐம்பது அறுபது பேர் வரை செத்துருக்காங்க. போதாததுக்கு கேரளாவுல இருந்து எல்லாம் மந்திரவாதிங்க வந்து தலைகீழா நின்னு பார்த்துருக்காங்க. இவங்க யாருக்கும் கிடைக்காத அந்த தங்கம் நமக்கு மட்டும் எப்படி உறுதியா கிடைக்கும்னு நீங்க நம்பறீங்கம்மா..."

"அவங்க யாரும் தேவகணபதியோ, இல்ல பாண்டியம்மாவோ இல்ல... இதை சொல்ற நான் யாருன்னு உனக்கு தெரியுமா?"

- தேனம்மாள் கேட்ட விதமே உச்ச ஸ்தாயியில்தான் இருந்தது.



"சொல்லுங்கம்மா, கேட்டுக்கறேன்..."

"கேட்டுக்கறதோட நிறுத்திக்கோ... அதையும் சந்தேகப்படாதே..."

"ஐயோ! உங்களை நான் சந்தேகப்படுவேனா....? உங்களாலதானே இப்ப எல்லாமே நடந்துகிட்டிருக்கு..."

"முதல்ல நான் யாருங்கறத தெரிஞ்சிக்கோ... நான் தான் இந்த தேவிபுரத்து பாளையாதிபதி பங்காரு நாயக்கரோட தர்மபத்தினியான வேதவதி ராயம்மா!"

- அந்த பதில் சிவஞானத்தை மட்டுமல்ல, பார்த்திபனையும் வாயடைக்க வைத்துவிட்டது. அவளே தொடர்ந்தாள்.

"இங்க தங்கம் எங்க இருக்குன்னு தெரிஞ்ச ஒரே ஆத்மா நான்தான். ஏன்னா, சாகறதுக்கு முந்திதான் அதை எங்க வெச்சிருக்கேங்கற உண்மையை என்கிட்ட சொல்லிட்டுதான் என் கணவர் உயிரை விட்டார். அதை நான் எப்பவோ உணர்ந்துதான் இந்த நாளுக்காக ஒரு சந்நியாசியா இந்த ஊர்ல காத்துக்கிட்டே இருந்தேன்.

அந்த நாள்தான் நாளைய மாசி பௌர்ணமி நாள்!

முந்நூறு முந்நூத்தி ஐம்பது வருசத்துக்கு முந்தி நடந்த ஒரு அநியாயத்துக்கு இவ்வளவு நாள் கழிச்சு தானா நல்ல நியாயம் கிடைக்கணும். இது ஏன் இதுக்கு முந்தி நடக்கலைன்னு ஒரு கேள்வி நமக்குள்ள எழும்பலாம். அதுல தப்பு இல்லை.

ஆனா, இதுக்கு விடை பாண்டியம்மா விட்ட சாபத்துலயே இருக்கு... ஒரு தலைமுறை இல்ல... ஏழு தலைமுறைக்கு இந்த ஊர்ல பெண்கள் யாரும் நல்லபடியா வாழக்கூடாதுன்னு அவ போட்ட சாபம்தான்

இவ்வளவு நாளா இந்த விஷயம் நடக்காம இருக்க காரணம்.

இந்த ஊர்ல இப்ப வாழற பெண்கள்ல எட்டாவது தலைமுறை தோன்றியாச்சு. சிவஞானம் தலைமுறையோட ஏழு தலைமுறை கழிஞ்சது. எட்டாவது தலைமுறை வரவும் இவங்களும் ஜென்மம் எடுத்து வந்தாங்க. நான் ஆறாவது தலைமுறைலயே வந்து ஏழாவது தலைமுறைல எல்லா உண்மைகளையும் தெரிஞ்சுகிட்டு பொறுமையா காத்திருந்தேன். இப்ப எனக்கு 98 வயசு.

அப்ப நடந்த அநியாயத்துல பங்கு எடுத்துக்கிட்ட பலர் திரும்ப ஜென்மம் கண்டு தங்கம் தேடியும் இங்க வந்து உயிரை விட்டு தண்டனைகளை அனுபவிச்சு முடிச்சுட்டாங்க. இதே இந்த சிவஞானம்கூட அப்ப இருந்த ஒரு நபர்தான். 20 காணி நிலத்துக்காக அன்னிக்கு ஒரு மாட்டுக்காரன் காட்டிக் கொடுத்தான். அந்த மாட்டுக்காரன்தான் இப்ப இந்த சிவஞானம்! இதையும் உங்க வீட்டு சொத்தான 20 காணி இடத்தை வெச்சுதான் உணர்ந்தறிஞ்சேன். ஒரு நாள் இதை சிவஞானத்து கிட்டயும் சொல்லியிருக்கேன். அன்னியில இருந்துதான் பாண்டியம்மா கோவிலுக்கு வந்து அவளை தினசரி கும்பிடறதுங்கறதுல ஒரு வேகம் சிவஞானத்துக்கும் வந்தது.

அன்னிக்கு காட்டிக் கொடுத்த தப்புக்கு பிராயச் சித்தமாதான் என் கூடவே இருந்து நான் சொன்னபடி எல்லாம் இவனும் நடந்துகிட்டு வரான்.

இப்ப எல்லாத்தையும் முடிக்கப் போறான்.''

- பாட்டி விலாவரியாக சொன்ன அவ்வளவு விஷயத்துக்குள்ளேயும் அப்படி ஒரு செறிவு. காலம் என்பது இப்படிக்கூடவா உயிர்கள் வரையில் திட்டமிட்டு செயல்படும் என்கிற ஒரு ஆச்சரியம்... எல்லாமே அங்கே அவர்கள் வரையில் எழும்பி நின்றது.



“பாட்டியம்மா! அந்த தங்கத்தை நாளைக்குதான் எடுக்கணுமா... நீங்க சொல்ற இதெல்லாம் உண்மைன்னா அதை இப்பவே எடுக்கலாமே...?” - என்று தனக்குள் தோன்றிய ஒரு கேள்வியை பார்த்திபனும் கேட்டான்.

“ஒரு பொதுச் சொத்தை - அரசாங்கத்துக்காக சுடன் வாங்கினதை அரசாங்கம் பார்க்க எடுக்கறதுதான் நியாயம். அதுக்கு ஏற்பாடு செய்ய ஒரு நாளாவது அவகாசம் வேண்டாமா தம்பி?”

- என்று தேனம்மாள் திருப்பிக் கேட்டபின் யாரும் அதன்பின் ஒரு வார்த்தை பேசவில்லை.

“பேசினது போதும். புறப்படுவோம்... அடுத்து ஆக வேண்டிய வேலைய பாருங்க. அம்மாடி! நீ டிவி- க்காரங் களுக்குகூட சொல்லு. எல்லாரும் வரட்டும். இது உலகம் பூரா தெரியணும். அப்பதான் இந்த பாண்டியம்மா கோட்டை இனிமே சாபம் புடிச்ச ஊர் இல்லங்கற விஷயமும் எல்லாருக்கும் போய்ச் சேர்ந்து இந்த ஊர்ப் பெண்கள் எல்லாருக்கும் விடிவும் பிறக்கும்...”

- தேனம்மாள், பாண்டிமாதேவிக்கு அவள் எதிர் பார்த்த விஷயத்துக்கும் அவள் கேட்குமுன்பே வழி காட்டினாள்.

பாண்டிமாதேவியும், “தேங்க்ஸ் பாட்டியம்மா” - என்றாள். பின் நாக்கை கடித்துக் கொண்டு, “மன்னிச்சிக் குங்க ராணி” என்றாள்.

# 17

**"பூர்வ ஜென்ம விஷயத்தில் உலகத்திலேயே மிகுந்த ஆதாரங்களும் வழிகாட்டல்களும் இந்திய மண்ணில்தான் இருக்கின்றன. அதில் ஒன்றுதான் சுவடிகளாகிய நாடிகள். அடுத்து புராண இதிகாசங் களில் காணக் கிடைக்கும் சில உதாரணங்கள்! அதன்படி ராமாவதாரத்தில் ராமனின் தம்பியாக வரும் லட்சுமணன் ஆதிசேஷனின் மறுபிறப்பாகும்... அதே போல நரசிம்மாவதாரத்தின் நாயகனான பிரகலாதனே ஸ்வாமி ராகவேந்திரராக பிறப்பெடுத்தார் என்பார்கள். இது போல நிறைய உதாரணங்கள் இதிகாச புராணங்களில் கொட்டிக் கிடக்கின்றன. ஆனால், இவைகளை நம்புவதற்கில்லை என்று கூறு வோரும் உண்டு. பூர்வ ஜென்மத்தை விஞ்ஞான அடிப்படையில் ஏற்க வழியே கிடையாது. அதே சமயம் விஞ்ஞான அடிப்படையில் ஏற்க முடியாத எவ்வளவோ விஷயங்கள் மனித வாழ்வில் இறைந்து கிடக்கின்றன. அதை உணர்வுகளின் அடித்தளத் திலும் நம்பிக்கையின் அடிப்படையிலும் மனித சமுதாயம் ஏற்காமல் இல்லை. இவைகளை எல்லாம் விஞ்ஞானப் பார்வை பார்க்கத் தொடங்கினால் யேசு நாதர் உயிர்த்தெழுந்ததைகூட சந்தேகப்படவேண்டி வந்து விடும். நபிகளுக்கு இறைவன் அருளியது தான் அவர்களின் வேதமான குர்ஆன் என்பதையும் சந்தேகிக்க வேண்டி வரும்.**

**இந்த மனித சமுதாயம் சில விஷயங்களில் இட மில்லாதபடி பார்த்துக் கொள்கிறது. ஏன் என்றால், ஒரு உண்மை நமக்கு நன்கு தெரியும். எதையும் கேள்விகள் கேட்டு சந்தேகப்படும் ஒருவர் வரையில் அவரே அவரது பிறப்பையோ அல்லது இறப்பையோ அவர் கைவசம் வைத்துக் கொண்டிராதவர் என்பது தான் அது!"**



*மானாமதுரை!*

*பஸ்ஸில் இருந்து உதிர்ந்த ராஜபாண்டியனை வழக்கம் போல ஆட்டோகாரர்கள் சூழ்ந்து கொண்டபோது மணி மாலை ஆறு! பாண்டியம் மாள் கோட்டைக்குப் போக வேண்டும் என்று சொன்ன மாத்திரத்தில் அவர்களிடம் ஒரு மாற்றம். கூலியிலும் ஒரு ஏற்றம்!*

*மறுநாள் முகூர்த்த நாளாக வேறு இருந்ததால் பலரும் ஒதுங்கிக் கொள்ள, ஒரே ஒருவன் மட்டும் ஐந்நூறு ரூபாய் தருவதாக இருந்தால் வருவதாக சொன்னான்.*

*ராஜபாண்டியனும் வெறுப்புடன், "நான் யார் தெரியுமா? பத்திரிகைக்காரன்... நாளைக்கே எங்க பத்திரிகைல '10 கிலோ மீட்டருக்கு 500 ரூபாய் கூலி - இது அநியாயம்'னு எழுத வேண்டி வரும்" என்றான். ஆட்டோ டிரைவர் முகத்தில் வேகமாய் ஒரு மாறுதல்.*

*"சார்! நான் வரவே இல்லை.. நீங்க நடந்து போங்க, இல்ல பறந்து போங்க.. இரண்டு நாளைக்கு முந்தி கூட ரெண்டு பேர் செத்துப்போயிருக்காங்க சார். ஒரு ஆட்டோகாரர் நடு ரோட்டுல எலும்புக்கூட்டை பார்த்துட்டு தலைதெறிக்க ஓடி வந்துருக்காரு. அந்த ஆட்டோவுல போன பொண்ணும் என்ன ஆச்சுன்னே தெரியல" என்றான்.*

ராஜபாண்டியனுக்கு அந்த ஆட்டோகாரன் பாண்டிமாதேவியைதான் குறிப்பிடுகிறான் என்பது புரிந்து விட்டது. அவளது அடையாளங்களை சொல்லி கேட்கவும், அவனும் ஆமோதித்தான்.

"அப்ப அந்த பொண்ணு பயந்து போய் ஓடிட்டாளா..."

"அதான் சார் நாங்க கேள்விப்பட்ட விஷயம்?"

"சரி, அந்த ஆட்டோ டிரைவர் யாரு..?"

"அந்த ஆள் காச்சல்ல விழுந்து வீட்ல கிடக்கறார் சார்."

"ஆமா, இந்த காலத்துலயுமா பேய் பிசாசு.. அதை நீங்களுமா நம்பறீங்க?"

"அதான் போகப் போறீங்கல்ல.. போய் நேர்லயே பார்த்து தெரிஞ்சிக்குங்க."

"ஒன் மினிட்..." - ராஜபாண்டியன் தன் செல் போனில் பாண்டிமாதேவிக்கு தொடர்பு கொள்ளப் பார்த்தார். ஆனால், தொடர்புதான் கிடைக்கவில்லை.

"அந்த ஊர்ல செல்போன் டவரே எடுக்காது சார்.. லேண்ட் லைன் இருந்தா பேசிப் பாருங்க..."

"லேண்ட் லைன்ல பேசணும்னா அங்க யாரை யாவது தெரிஞ்சிருக்கணுமே... எனக்கோ ஒருத்தரையும் தெரியாதே.."

- ராஜபாண்டியன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அந்த ஆட்டோ டிரைவரை நோக்கி பார்த்திபன் வந்து நின்றதுதான் ஆச்சரியம்.

"ஆட்டோ! பாண்டியம்மாள் கோட்டைக்கு போகணும். ஆட்டோ வருமா?"



"வாங்க.. இப்பதான் இவர்கூட பஞ்சாயத்து நடந்துகிட்டிருக்கு அடுத்து நீங்களா?"

- ஆட்டோகாரன், ராஜபாண்டியனை காட்ட பார்த்திபனும் பார்த்தான்.

"நீங்களும் பாண்டியம்மாள் கோட்டைக்குதான் போகணுமா?"

"ஆமாங்க... நீங்க அந்த ஊரா?"

"இல்லை. நான் விழுப்புரம். ஆமா, நீங்க அங்க யாரைப் பார்க்கணும் - உங்களப் பார்த்தா ஒரு பத்திரிகை யாளர் லுக் இருக்கு..."

"அட.... நான் பத்திரிகையாளனேதாங்க. பரவால்லியே.. கரெக்டா கண்டுபிடிச்சிட்டீங்களே..."

"ஒரு யூகத்துல கேட்டேன். சரியாக இருந்துருக்கு. அது சரி, நீங்க என்ன பாண்டிமாதேவி அழைச்சு பொறப்பட்டு வந்துருக்கீங்களா?"

"அட... பாண்டிமாதேவியை உங்களுக்குத் தெரியுமா?"

"அப்ப நீங்க.."

"நான் வானதி பத்திரிகையோட சப் எடிட்டர். என் பேர் ராஜபாண்டியன். பாண்டிமாதேவிக்கு உதவி செய்யத்தான் என் ஆசிரியர் அனுப்பியிருக்கார். ஏன்னா, அவங்க இந்த ஊருக்கு வந்ததுல இருந்து போனே பண்ணல."

"வெரிகுட்... அவங்க பண்ணாங்க. ஆனா, லைன் கிடைக்கல. அதே சமயம் அவங்க இப்ப பாண்டிமா தேவி இல்லை, பாண்டியம்மாள்!"

"என்ன சார் சொல்றீங்க?"

"சொல்றேன் சார்! எல்லாத்தையும் சொல்றேன். இப்பதான் கலெக்டர்ல இருந்து டி.எஸ்.பி. வரை எல்லா ரையும் பார்த்துட்டு வரேன். நான் வந்த கார் திடீர்னு பிரேக் டவுனாயிடிச்சு. அதனாலதான் ஆட்டோ தேடி வந்தேன். அதுவும் நன்மைக்கே... இல்லேன்னா, உங்கள பார்க்க முடியுமா?"

"ஆமா, பாண்டிமாதேவி நல்லா இருக்காங்கல்ல... அவங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லையே..."

"அவங்களுக்கு என்ன சார் ஆபத்து. அவங்களால மத்தவங்களுக்கு ஆபத்து இல்லாம இருந்தா சரி. அவங்க இன்னிக்கு வரைக்கும்தான் சார் பாண்டிமாதேவி... நாளைல இருந்து அவங்க பாண்டியம்மா. இந்த உலகமே அவங்கள ஒரு அதிசயமா பார்க்கப் போகுது.."

"நீங்க பேசறதே புறியலியே..."

"வாங்க போய்க்கிட்டே பேசுவோம். ஆட்டோ வண்டிய எடுப்பா..."

"சார்! ஐந்நூறு ரூபா சார்..."

"ஆயிரம் கூட தரேன். முதல்ல ஆட்டோவை எடு.. நீ எல்லாம் நாளைல இருந்து நிறைய சம்பாதிக்கப் போறேய்யா. ஆயிரமாயிரம் பேர் பாண்டியம்மாள் கோட்டையைச் சுத்திப் பார்க்க இனி வரப் போறாங்க. உங்க ஊரே இனி சுபிட்சமாகப் போகுதுய்யா..."

"சார்! அது பேய்ப் பய ஊர் சார்! அதை பாக்கவா எல்லாரும் வரப் போறாங்க?"

"அதெல்லாம் இன்னியோட சரி! நாளைக்கு அந்த ஊர்ல இருந்துதான் 500 கோடி ரூபா மதிப்புள்ள தங்கம் கிடைக்கப் போகுது. பல நம்ப முடியாத விஷயங்கள்



பத்தி டி.வி, பத்திரிகை எல்லாம் எழுதித் தள்ளப் போறாங்க..."

- பார்த்திபனிடம் உற்சாகம் கொப்பளித்தது. ராஜபாண்டியனுக்கும் ஒரே மிரட்சியாக இருந்தது. ஆட்டோகாரனும் வண்டியை ஸ்டார்ட் செய்தான். வண்டிக்குள் ராஜபாண்டியிடம் பாண்டிமாதேவி பற்றிய பூர்வ ஜென்ம விஷயங்களை அப்படியே சொல்லத் தொடங்கிவிட்டிருந்தான் பார்த்திபன்!

## 20

"உயிரின் ரகசியத்தையே இந்த உலகம் இது வரை அறிந்திருக்கவில்லை. அப்படியிருக்க பூர்வ ஜென்ம ரகசியங்களை அறிவதெல்லாம் சாத்தியமே கிடையாது என்பது ஒரு சாரார் கருத்து.

இன்றைய விஞ்ஞான உலகம் மூளை செய லிழந்து இதயம் இயங்கினாலும் மூளை செயல் இழப்பை அது உயிர்போனதாகவே கருதுகிறது. அதனால்தான் கோமாவில் கிடப்பவர்களை உயிர்ப் பிணங்கள் என்கிறோம்.

மூளை செயல்பாடு எனும்போதே நினைவு படுத்திக் கொள்வது, பேசுவது போன்றவற்றுக்கான எண்ணங்களையே இங்கு உயிராக கருத வேண்டி யுள்ளது. எண்ணங்களே உயிர் எனும்போது அதையே ஆத்மாவாக கருதுவதில் பிழை இல்லை. எண்ணங்கள் எனும்போதே அது ஒலி வடிவம் என்பதும் ஒலி வடிவம் என்பது காடு மலையை கூட கடந்து செல்லும் வல்லமை உடையது என்பதையும் நாமறிவோம். அதனால்தான் நிலவுக்கு சென்றவர்

கள்கூட அங்கிருந்து பேசி இங்கிருப்பவர்களால் கேட்க முடிந்தது.

இன்று உடம்பை பேணிப் பாதுகாக்க முடியவில்லை. ஆனால், ஒருவர் குரலை பதிவு செய்துவிட்டால் அது அழியாமல் உலகு உள்ள அளவும் மின் தொகுப்புக்குள் வாழ்ந்தபடியே உள்ளன.

மின் தொகுப்பாலேயே அதைப் பெற்றுக் கொண்டு பாதுகாக்க முடியும் எனும்போது மின் வடிவத்தில் உயிர் இருக்கக்கூடுமோ என்று ஒரு ஆராய்ச்சி எண்ணம் தோன்றுகிறது!"

**ம**யானம்!

நிஷ்டையில் உட்கார்ந்துவிட்ட உலகநாத தேவன் முன் படுவேகமாய் வந்து நின்றான் புலையன் சவரிமுத்து. நிஷ்டையையும் கலைத்தான்.

"என்ன சவரிமுத்து...?"

"எல்லாம் முடியப் போகுதுங்க... பாண்டியம்மா கோட்டைல தங்கம் இருக்கறது நிஜம்தான். அதை நாளைக்கு டி.வி., பத்திரிகைக்காரங்க முன்னால வெளிய எடுக்கப் போறாங்களாம. ஊருக்குள் ஒரே பேச்சா இருக்கு..."

- சவரிமுத்து சொன்னது உலகநாத தேவனின் கன்னத்தில் அறைந்தது போல் இருந்தது. திடுக்கிட்டான்.

"நான் சொல்றதுல சந்தேகம் இருந்தா உங்க ஏவல் தேவதை கிட்ட கேட்டுப் பாருங்க..."

"கேக்கறேன்... எனக்கு இன்னிக்கு பகல்ல வழி காட்டின என் க்ருதகி என்னை கைவிட மாட்டா சவரிமுத்து."



"உங்க விருப்பப்படி நடந்தா சந்தோஷம்தான். எனக்கும் இந்த சுடுகாட்டை விட்டுப் போனா போதுங்க. முதல்ல ஏவல் தேவதைகிட்ட பேசுங்க. மணி இப்ப எட்டு! நாம இப்பவே புறப்பட்டுப் போனாதான் எட்டு குழியை மொத்தமா எண்பது அடிக்கு தோண்டி எலும்பை எடுக்க முடியும். அதுக்கே விடிஞ்சிடும்..."

- சவரிமுத்துவின் பேச்சு கன்னிமூலை மரத்தடி நோக்கி உலகநாத தேவனை செலுத்தியது. ரத்தக்குழி முன் நின்றுகொண்டு மணிக்கட்டை கீறிக் கொள்ளவும் ரத்தம் பெருகி குழி நிரம்பியது.

அவனும், "க்ருதகி... வா... வா க்ருதகி... வந்து வழி காட்டு..." - என்று துடிக்கத் தொடங்கினான். அதுவும் ஒரு காற்றுச் சலனமாய் அவன் முன் தோன்றி, "எதற்கு அழைத்தாய்?" என்றது.

"க்ருதகி... நாளைக்கு கோட்டை புதையலை எடுக்கப் போவதாக ஊருக்குள் ஒரு பேச்சு... அது எந்த அளவு நிஜம்?" - உலகநாத தேவன் மண்டியிட்டு கேட்டான்.

"சர்வ சாத்தியம் அது..."

"என்றால் இன்றைய என் முயற்சி...?"

"இந்த நொடி நீ எட்டு திசைகளிலும் நான்கு வாசல்களிலும் அன்று வெட்டிப் புதைக்கப்பட்ட தேவ கணபதியின் எலும்பையும் மண்ணையும் நீ எடுக்க முடியாது. அது எடுக்கப்பட்டு விட்டது."

"என்ன இது அநியாயம்...?"

"முட்டாளே... ஊர் கிழவி தேனம்மாள் முந்திக் கொண்டிருக்கிறாள். அவ்வளவுதான் விஷயம்..."

"அவளுக்கு எப்படி உனக்குத் தெரிந்த ரகசியம் தெரியும்."

"அவள் யாரோ அல்ல... அவள்தான் இந்த ஊருக்கே ராணியாக இருந்த வேதவதி ராயம்மாள்..."

"அவள் ராணியா?"

"அதுமட்டுமல்ல... அன்று கொல்லப்பட்ட தேவகணபதி, அன்று சாபமிட்ட பாண்டியம்மா, அன்று காட்டிக் கொடுத்த மாட்டுக்காரன் என்று எல்லோருமே இப்போது ஜென்மம் கண்டு ஊருக்குள்தான் இருக்கிறார்கள்..."

"க்ருதகி... என்ன இது? இத்தனை வருடங்கள் இல்லாமல் இவர்கள் எப்படி இப்பொழுது மட்டும் வந்தார்கள்?"

"வேளை வந்தது. வந்துவிட்டார்கள்..."

"இதுவா பதில்?"

"முட்டாளே... பேசுவதற்கு இது நேரமல்ல. உனக்கு இருப்பது சில மணி நேரங்கள்தான். அதை பயன்படுத்தி முடிந்தால் அந்த தங்கத்தை நீ அடையப் பார்..."

"அது எப்படி முடியும்? நாகாயியைக் கட்டுப் படுத்தும் எலும்பும் மண்ணும்தான் எடுக்கப்பட்டு விட்டதே...?"

"உனக்கு இப்பொழுதும் சிறிய அளவில் வாய்ப்பு உள்ளது. அந்த எலும்பும் மண்ணும் ஒரு துணி மூட்டையாக கோட்டையின் கன்னி மூலையில் உள்ள புளிய மரத்துப் பொந்துக்குள்தான் உள்ளது... அதை எடுத்துக் கொண்டு நாகாயியை வந்தனம் செய்து கிணற்றுக்குள் இறங்கு. பக்கவாட்டுச் சுவரில் எட்டாவது படிக்கல்லை



அசைத்தால் சுரங்கம் போல வழி பிறக்கும். உள்ளே போனால் மூன்று தாழிப் பானைக்குள் பத்திரமாக அந்த தங்கங்கள் 320 வருடங்களுக்கும் மேலாக காத்துக் கொண்டிருக்கின்றன..."

"சந்தோஷம் க்ருதகி... இப்பொழுதே புறப் படுகிறேன். வெற்றிக்கு வாழ்த்து கூறு..."

"என் வாழ்த்து உனக்கு எப்பொழுதும் உண்டு. கவனமாக செயல்படு."

"எதற்கிந்த திடீர் எச்சரிக்கை..."

"முட்டாளே... சொன்னால் கேட்டுக் கொள். எதிர் கேள்வி கேட்காதே. உன்வரையில் உயிருக்கு கண்டம் இருப்பதால் எச்சரித்தேன்..."

"நல்லது க்ருகதி... உனக்கு என் கோடி வந்தனங்கள்!"

- உலகநாத தேவன் பேசி முடித்து திரும்பினான். மண்வெட்டியும் கடப்பாரையுமாக பின்னாலேயே சவரிமுத்து.

"இதுங்க வேண்டாம் - தூக்கி எறி. புறப்படு என் கூட..."

- இருவரும் புறப்பட்டனர். மயானத்துக்கு வெளியே வந்து கோட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தனர்.

அதே சாலையின் தொடக்கத்தில் ஆட்டோவில் பார்த்திபனும் ராஜபாண்டியனும் சிறிது தொலைவில் வந்தபடி இருந்தனர். அவர்களை இருசனும் பின் தொடர்ந்து கொண்டிருந்தான்.

இவர்களை தொடர்ந்து சென்றால் பாண்டிமாதேவி இருக்கும் இடத்துக்கு சென்று அவளைக் கண்டுபிடித்து

விடலாம். பிறகு சூழ்நிலைக்கு ஏற்ப போட்டுத் தள்ள வேண்டியதுதான் என்பது அவனது திட்டம்!

கோட்டை முகப்பு வந்தபோது வானில் நிலவின் ஒளி. மறுநாள் பௌர்ணமியாதலால் கோட்டை பளிச் சென்று தெரிந்தது. நின்று வெறித்த உலகநாத தேவன் கன்னி மூலையைக் குறிவைத்து நடக்க ஆரம்பித்தான். ஆளுயரத்துக்கெல்லாம் புதர்கள்! வீசும் காற்றில் ஆட்டம் வேறு. சில் வண்டுகளின் ரீங்காரம் ஒரு பக்கம்.

கச்சிதமாய் ஆட்டோவில் வந்த பார்த்திபனும், ராஜபாண்டியனும் இரண்டு பேர் கோட்டைக்குள் நுழைவதைப் பார்த்துவிடவும், ஆட்டோ நின்றது.

இருவருமே இறங்கினார்கள்.

"என்ன பார்த்திபன் சார்... ஏன் இங்க இறங்கறோம்?"

"யாரோ ரெண்டு பேர் கோட்டைக்குள்ள போறாங்க."

"அன்றாடம் தங்கம் தேடி வர்ற மாதிரி இன்னும் இரண்டு பேரோ?"

"அப்படிதான் இருக்கணும். ஆனா, இவங்க போனா நிச்சயம் காவல் நாகத்தால செத்து வைப்பாங்க... ஆகையால அவங்கள தடுக்கணும்... நாளைக்கு ஒரு பெரிய அதிசயம் நடக்கும்போது இந்த சாவு அப்ப திருஷ்டி போல பேசப்படக் கூடாது..."

"அப்ப வாங்க போய் தடுக்கப் பார்ப்போம். எனக்கும் நீங்க சொன்ன விஷயம் - இந்த காவல் நாகம் இதெல்லாம் எவ்வளவு உண்மைன்னு தெரிஞ்சிடும்..."

"இன்னுமா உங்களுக்கு சந்தேகம்?"



"நான் பத்திரிகைக்காரன் - அதிலும் பகுத்தறிவுள்ள பத்திரிகைக்காரன். எனக்கு கண்ணால பார்த்து காதால கேட்டு தீர விசாரிச்சு அறியற விஷயங்கள்தான் உண்மையானது."

'ரைட்... வாங்க போவோம்..."

- அங்கேயே ஆட்டோகாரனை வெட்டி விட்டுவிட்டு இருவரும் உலகநாத தேவனை பின்தொடர்ந்தனர்.

ஆட்டோகாரன் முகத்தில் பீதி!

சில நிமிடங்கள் நின்றுவிட்டு திரும்பியவன் இருசன் வருவதைப் பார்த்தான்.

"என்னய்யா இங்க நின்னுட்டே?"

"அதை கேக்க நீ யாருய்யா?"

"உன் ஆட்டோல வந்தவங்க எங்க?"

"யார் அந்த பத்திரிகைக்காரரா...?"

"என்னது உன் ஆட்டோல வந்தத் பத்திரிகை காரரா...?"

"ஆமாம்... வானதி பத்திரிகை - நீ யாருய்யா?"

"சபாஷ். இந்த ராத்திரியிலேயே கதையை முடிக்க வாய்ப்பு வருதே... விடக் கூடாது.."

- இருசனும் அங்கிருந்து கோட்டைக்குள் வேகமாக புகுந்தான். கையில் ஒரு நாட்டுத் துப்பாக்கியுடன் அவன் ஓடியது ஆட்டோகாரனை அதிர வைத்தது.

"நாம இனி இங்க நின்னா கொலைக்கு சாட்சியாகி போலீஸ் ஸ்டேஷன், கோர்ட்டுன்னு நடந்தே சாகணும். ஓடிடுவோம்டா சாமி.." - என்று திரும்பத் தொடங் கினான்.

கோட்டைக்குள்...

மெல்லிய இருள் - ஆனாலும் நிலவொளியில் உலகநாத தேவன் கன்னிமூலை புளிய மரத்தருகே செல்வது தெரிந்தது. கூடவே சவரிமுத்து.

பார்த்திபனுக்கு புரிந்து விட்டது!

"ஏய் யாருடா அது?" - கத்தினான்.

சப்தம் உலகநாத தேவனை திடுக்கிட வைத்து திருப்பியது.

"அங்க போகாதே. பாம்பு இருக்கு - கடிச்சிடும்..."

- பார்த்திபனின் அலறலை காதில் வாங்காமல் புளியமரப் பொந்துக்குள் கையை விட்டவன் துணி மூட்டையை அப்படியே வெளியே எடுத்தான்.

அதற்குள் அங்கு வந்துவிட்ட இருசன் உலகநாத தேவன் பொந்துக்குள் இருந்து எடுத்த துணிமூட்டை தான் தங்கம் என்று நினைத்துக் கொண்டான். நேராக உலகநாத தேவனின் மார்புக்குத்தான் குறி வைத்தான். தோட்டாவும் சீறிக் கொண்டு பறந்தது. உலகநாத தேவன் அப்படியே மூட்டையை நழுவ விட்டபடி கீழே சரிந்தான். தப்பி ஓடப் பார்த்த சவரிமுத்துவுக்கு அடுத்த குண்டு.

பார்த்திபனும், ராஜபாண்டியனும் அப்படியே தரையோடு தரையாக படுத்துக் கொண்டனர். கோரைப் புதர் அவர்களை நன்றாகவே ஒளித்துக் கொண்டது.

இருசன், விழுந்து கிடக்கும் உலகநாத தேவன் அருகில் சென்று அந்த மூட்டையை தூக்கிப் பார்க்கவும் ஏமாற்றமாகியது.

"ச்சே! மண்ணும் எலும்புமால்ல இருக்கு... இதைப் போய் தங்கம்னு நினைச்சோமே...?"



- என்றபடி தூக்கி எறிந்தான். அடுத்த நொடி அவன் காலில் வெடுக்கென்று ஒரு கடி!

குனிந்தபோது நாகாயி படம் விரித்திருந்தாள். வாயிலும் நுரை ததும்பத் தொடங்கி சுருண்டு விழுந்தான். நாகாயி ஊர்ந்து போய் கிணற்றுத் திட்டின் மேல் ஏறி படம் விரித்துக் கொண்டு நின்றாள்.

நிலவொளியில் அந்த காட்சியே ஒரு அபூர்வ காட்சியாக இருந்தது!

எழுந்து நின்று பார்த்த ராஜபாண்டியனுக்குள் பிரமிப்பு - ஸ்தம்பிப்பு - என்று எல்லாம்!

விடிந்து விட்டது!

தாரை தப்பட்டை முழங்க ஒரு கூட்டம் கோட்டை நோக்கி செல்லத் தொடங்கியது. அவர்களோடு ஊர்க் காரர்களும் தொடர்ந்தனர்.

வேகவேகமாக வந்து நின்ற கார்களில் இருந்து பத்திரிகையாளர்களும், டி.வி. கேமராமேன்களும் இறங்கி அந்த தப்பட்டை கூட்டத்தை படம்பிடித்த படியே தொடர்ந்தனர்.

சிவஞானம் வீட்டு முன் ஊர்ப் பெரியவர்கள் திரண்டிருக்க, கலெக்டரும், டி.எஸ்.பி-யும் வந்து சேர்ந்தனர். கணேஷும், பாண்டிமாதேவியும் அறிமுகப் படுத்தப்பட்டனர். தேனம்மாளை விசேஷமாக அறி முகம் செய்தார் சிவஞானம். அப்படியே அவர்களோடு கோட்டை நோக்கிப் புறப்பட்டனர். வழி நெடுக பத்திரிகையாளர்களும், டி.வி. நிருபர்களும் பலவித மான கேள்விகளை கேட்டதற்கு தேன்மொழிதான் பொறுமையாக பதில் சொல்லிக் கொண்டு வந்தாள். அவளுக்கு பார்த்திபன் இல்லாதது வருத்தமாக

இருந்தது. முதல் நாள் சென்றவன் வரவேயில்லையே... ஊருக்குப் போய் விட்டானோ? குடும்பத்தார்களோடு வருவானோ? அவளுக்குள் பலவிதமான கேள்விகள்!

கோட்டைக்குள் நுழைந்து கன்னிமூலை கடந்து அக்னி பாகம் நோக்கி சென்று அப்படியே ஈசான்யம் பக்கமாய் திரும்பியபோது கிணற்றுக்குப் பக்கத்தில் பார்த்திபனும் ராஜபாண்டியனும் அமர்ந்திருக்க சவரிமுத்து, உலகநாத தேவன், இருசன் ஆகிய மூவரின் சடலங்களும் அங்கங்கே கிடந்தன.

பார்த்திபனை பார்த்த தேன்மொழிக்கு ஒரு இன்ப அதிர்வு. ராஜபாண்டியனைப் பார்த்த பாண்டிமா தேவிக்கும் இன்ப அதிர்வு.

"ஐயா... நேத்து ராத்திரிகூட பாருங்க மூணு பேர் வந்து உயிரை விட்ருக்காங்க..." - என்று சிவஞானம் எஸ்.பி-யிடம் கூறினார். அப்படியே இன்னியோட இந்த சாவுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வெக்கப் போறோங்க" என்றவர், தேனம்மாளைப் பார்த்தார்.

அவள் கீழே கிடந்த துணி மூட்டையை எடுத்து அந்த எலும்பையும் மண்ணையும் கிணற்றில் கரைக்கச் சொன்னாள். பிறகு எட்டாவது கல் அருகே சுரங்கம் இருப்பதை கூறிட, கணேஷ் இறங்க ஆரம்பித்தான். காமிராக்கள் முட்டி மோதிக் கொண்டு படம்பிடிக்கத் தொடங்கின.

கோட்டை மதில் மேல் எல்லாம் ஜனக்கூட்டம் நின்று வெறித்துப் பார்த்தபடி இருந்தது. கிணற்றுக்கு நேர் மேலே கருட வட்டம் வேறு!

தேனம்மாள் கன்னத்தில் போட்டுக் கொள்ள, கணேஷ், எட்டாவது படிக்கல் அருகே சென்று பக்க



வாட்டு சுவற்றுக் கல்லை ஒரு அழுத்து அழுத்த, அது சரிந்து விழுந்து அதனுள் ஒரு சுரங்கம் போல வழி தெரிந்தது. கும்மிருட்டை பின்தொடர்ந்து இறங்கிய ஒரு டிவி.கேமிராமேன் ஃபோகஸ் லைட் வெளிச்சம் நீக்கியது. எஸ்.பி-யிடமும், கலெக்டரிடமும் கண்ணிரண்டும் பிதுங்கிவிடும் அளவுக்கு பிரமிப்பும் - வெறிப்பும்... உள்ளே ஊர்ந்து சென்ற கணேஷ் குகை போன்ற ஒரு சமதளப் பரப்பை பார்த்தான். பின்னால் வந்த டிவி. காரரின் ஃபோகஸ் லைட் வெளிச்சம் உள்பாகம் முழுக்க பரவி அந்த மூன்று தாழிப் பானைகளையும் காட்டியது. அதன் வாயைத் தொட்டு மேல் மூடியை விலக்கவும் உள்ளே பாளம் பாளமாய் தங்கம்!

கேமிரா அந்த காட்சியை அப்படியே உள்ள வெளியே மானிடரில் தெரிந்த அந்த காட்சி ஜனக் கூட்டத்தை ஹோவென்று கத்தச் செய்தது!

"வாட் எ மிராகிள்... என்ன ஒரு அதிசயம்..." - கலெக்டர் சிலிர்த்தார்.

"இது அதிசயத்துக்கும் மேல் சார்... அசலான தேச பக்தியை யாரும் ஜெயிக்க முடியாதுங்கறதுக்கு இந்த சம்பவம் ஒரு சாட்சி..." என்றார் எஸ்.பி.

கணேஷ் ஒரு தங்கப் பாளமுடன் மெல்ல மேலே வந்து கலெக்டர் கையில் அதை ஒப்படைத்தான். அவர் பிரமிப்புடன் பார்த்து அவனை மார்போடு அணைத்து கொண்டார். அருகில் வெட்கத்துடன் பாண்டிமாதேவி! ராஜபாண்டியன் அவர் அருகில் வந்தவராக, "பாண்டியம்மா .. நான் இப்பவும் பிரமிப்புலயும் அதிர்ச்சியிலயும் இருக்கேன். உனக்கு என் வாழ்த்துகள்" என்றார்.

அந்த கூட்டம் பரவசத்தில் உறைந்து கிடக்க, ஃப்ளாஷ் வெளிச்சத்தில் கணேஷும் பாண்டிமா தேவியும் மூழ்கிக் கொண்டிருக்க, பார்த்திபன் தேன்மொழியோடு ஓரம் கட்டியவனாக, "எல்லாம் என்னாலதான்... நான் மட்டும் என் நண்பனை நிச்சய தார்த்தத்துக்கு கூப்பிடலேன்னா இன்னிக்கு இப்படி எல்லாம் நடந்துருக்குமா?" என்று கேட்டு அவளை அணைத்துக் கொண்டான். அதை கவனித்த சிவஞானம் கண்களில் ஆனந்தக் கண்ணீர்.

தேனம்மாள் அருகில் வந்து, "சிவஞானம்! நீ உன் பரிகாரத்தை நல்லவிதமா முடிச்சுட்டே இனி இந்த ஊர் நல்லவிதமா வாழும்..." என்றபோது பொத்தென்று அவள் காலிலேயே விழுந்துவிட்டார் சிவஞானம்.

தேனம்மாள் 320 வருடங்களாக காவல் காத்த நாகாயிக்கு நன்றி சொல்வதற்காக அதை தேடத் தொடங்கினாள்.

அதுவோ அந்த கோட்டைக்கு வெளியே ஒரு வயல் வெளியில் தன் நீண்ட கடமை முடிந்த மகிழ்ச்சியில் எங்கோ போய்க் கொண்டிருந்தது!

**- முற்றும் -**

8/10 8/7